Koviloor Digital Library

பி. ஸ்ரீ.

ஆழ்வார்கள் வரலாறு

8

Acc No 26738

Koviloor Digital Library

Koviloor Digital Library

4-2

ஆழ்வார்கள் வரலாறு

எட்டாம் பாகம்

ஆண்டாள்

ஆசிரியர்

பி.ஸ்ரீ.

KOVILOOR ANDAVAR LIBRARY, KOVILOOR
A. No. 26138

ஜெனரல் பப்ளிஷர்ஸ்
244, ராமகிருஷ்ணா மடம் சாலை
மயிலாப்பூர், சென்னை - 600 004

Koviloor Digital Library

உரிமைப் பதிவு
முதற் பதிப்பு - 2002
இரண்டாம் பதிப்பு - 2010

© பதிப்பாளர்

விலை: ரூ. 90-00

Typesetting : Amaravathi Graphics, Chennai-33
Printed by : Logha offset Printers, Chennai-5

Koviloor Digital Library

4-2

ஸ்ரீ:

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:
ஸ்ரீமத்யை கோதாயை நம:

முன்னுரை

கோதா தேவியின், 'காதல் வெள்ளத்' தில் நெடு நாளாகத் திளைத்து இன்புற்று வந்த ஸ்ரீ பி.ஸ்ரீ., அந்த இன்பத்தைப் பலருடன் பகிர்ந்துகொள்ள எண்ணி இந்த அழகிய புத்தகத்தை இப்பொழுது வெளியிடுகிறார். இது அறிஞர்களுக்கு ஒரு நல் விருந்து, அனைவருக்கும் அன்புப் பொக்கிஷம்.

தமிழ்க் கலாசாரமும் வைணவப் பண்பாடும் ஒருங்கே காட்சியளிக்கின்றன, ஆழ்வார்களது அருளிச் செயல்களில். அவ் வாழ்வார்கள் பதின்மரது பக்தியையும் தான் ஒருத்தியே ஸ்ரீதனமாகப் பெற்றுப் பொலிபவள், அவர்கள் அனைவரது திருமகளாரெனவும் பாராட்டப் பெற்றுவரும் பூங்கோதை. எனவே தமிழ்நாட்டுச் செல்வியாகவும் ஸ்ரீ வைஷ்ணவச் செல்வியாகவும் அவள் இந்நாட்டில் பல நூற்றாண்டுகளாகக் கருதப்பெற்று வருவதில் வியப்பில்லை. அவள் பாடிய திருப்பாவையை உபநிடதமென்றே உத்தம ஆசாரியர்கள் போற்றியிருக்கிறார்கள்.

Koviloor Digital Library

ஆண்டாளது அழகிய சரித்திரமும் அவள் பாடி வைத்த அரும் பெரும் பிரபந்தங்களான திருப்பாவையும் நாச்சியார் திருமொழியும் வெகு அழகான முறையில் இந்த நூலில் காணப்படுகின்றன. வேறு எங்கும் காண இயலாத பல நுட்பமான பொருள்களை இங்கே காணலாம். பி.ஸ்ரீ. அவர்களது விஸ்தாரமான படிப்பும், பல நூல்களில் ஆராய்ச்சியும், குறிப்பாக வைணவ வியாக்கியானங்களிலுள்ள ஆழ்ந்த பரிச்சயமும் பக்கந்தோறும் காணப் படுகின்றன. 'நோன்பா, நாடகமா?', 'காவியமோ ஓவியமோ?' என்றெல்லாம் பகுதிகளுக்குத் தலைப்பிட்டுப் படிப்பவரை ஈடுபடுத்தும் திறன் மிகவும் பாராட்டத்தக்கது. தமிழ் ஆர்வத்தையும், பக்திப் பெருக்கையும் வளர்க்க வல்ல இந்நூல் முழுவதையும் படித்துக் கோதையின் இன்னரு ளுக்கும் அவள் மணாளனாம் 'செங்கண் - திருமுகத்துச் செல்வத் திருமாலுமான ஸ்ரீயப்பதி' யின் திருவருளுக்கும் அனைவரும் இலக்காக வேண்டும் என்பதே என் வேண்டுகோள்.

D.ராமஸ்வாமி
அட்வொகேட்

Koviloor Digital Library

பதிப்புரை

பி. ஸ்ரீ. அவர்களை அறியாத தமிழர்கள் இருக்க முடியாது. விகடனில் அவர் வாரந் தவறாமல் எழுதி வந்த ராமாயணக் கட்டுரை களை எல்லோரும் ரஸித்துப் படித்திருப்பார்கள். இலக்கியச் சுவை கெடாமல் பக்திச் சுவையையும் அதனுள் கலந்து ஊட்டி, தம் இனிய சரளமான நடையால் ரஸிகர்களை இன்பத்தில் ஆழ்த்தும் சக்தி இவர் பேனாவுக்கு உண்டு. ஆண்டாள், பெரியாழ்வார், திவ்யப் பிரபந்த சாரம், சிவநேசச் செல்வர் முதலிய பல பக்தி இலக்கியங்களுக்கு இவர் ஆசிரியர். சிவ-விஷ்ணு பேதம் இல்லாமல் சமரச நோக்கத்துடன் ஆழ்வார்கள், நாயன்மார்கள் ஆகியவர்களுடைய வாழ்க்கையில் திகழ்ந்த அருமையான சம்பவங்களையும் அவர்களுடைய கவிதைகளைப்பற்றிய விமர்சனங்களையும் ரசமாக எழுதுவதில் இவருக்கு ஒப்பு இவரே. பி. ஸ்ரீ.யின் ஆழ்ந்த அறிவு, அவர் எழுத்து ஒவ்வொன்றிலும் சுவையை மிகுத்துக் காட்டுகிறது.

பன்னிரு ஆழ்வார்களின் வரலாறுகள், பல இனிய அரிய விஷயங்களோடு ஒன்பது புத்தகங் களாக வெளி வருகின்றன.

'ஆண்டாள்' இந்த வரிசையில் எட்டாவது நூல்.

பதிப்பாளர்

Koviloor Digital Library

பொருளடக்கம்

1.	லட்சியக் காதல்	...	7
2.	நந்தவனத்தில் ஞானக் கொழுந்து	...	16
3.	காதலும் கல்யாணமும்	...	34
4.	ஆண்டாள் சொல்லும் என் சரிதம்	...	46
5.	நோன்பா, நாடகமா?	...	73
6.	காவியமோ ஓவியமோ?	...	100
7.	தேசிகர் துதிக்கும் கோதை	...	115
8.	கோதை தமிழ்	...	123
9.	பாவைப் பாட்டு	...	135
10.	திருப்பாவையும் திருவெம்பாவையும்	...	147

Koviloor Digital Library

1

லட்சியக் காதல்

கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கியவர்; அறிவைப் போல் நேர்மையும் அவரிடம் அமைந்திருந்தது. கலாசாலைப் படிப்பில் முதன்மையாகத் தேர்ச்சிபெற்றுப் பரீட்சைகளில் தேறிப் பரிசுகளும் சர்வகலாசாலைப் பட்டங்களும் பெற்றிருந்தார். வழக்கறிஞராக அமர்ந்து தொழில் புரிந்து வந்தார்.

நுண்ணறிவுடன் வழக்குகளை ஆராய்ந்து சிக்கல்களைக் கண்டுபிடித்துக் காரண காரிய விதிக்கு இணங்க விஷயங் களைத் தெளிவுபடுத்தி வாதாடுவதிலும் திறமையுள்ளவராக இருந்தார். சொற்பொழிவுத் திறனுக்கும் குறைவில்லை. வழக்கறிஞர்கள் பலரும் அவர் உதவியால் ஐயம் திரிபுகளைப் போக்கிக் கொண்டு தங்கள் கட்சிகளை நீதிமன்றங்களில் எடுத்துரைத்து வெற்றிபெற்று வந்து நன்றி செலுத்துவதுண்டு. பேச்சாளர்களும் தர்க்க நுண்ணறிஞர்களும் அவர் உதவியால் பிரசங்க மேடைகளிலும் தர்க்க மேடைகளிலும் ஒளிவீசி வெற்றி சூடியதும் உண்டு.

எனினும், அந்த மனிதர் வாழ்க்கையில் வெற்றி பெற்றாரா? பொருளாதார நிலையில் முற்றும் தோல்விதான். 'ஏன் அப்படி?' என்பதை ஒரு நண்பர் அவர் வாயிலாகவே தெரிந்துகொள்ள விரும்பினார்.

Koviloor Digital Library

உலகில் இல்லாத கன்னி

ஒரு திருமணப் பந்தலில் அவரைச் சந்தித்தவர், 'தாங்கள் ஏன் இப்படி வாழ்க்கையில் துன்பம் அநுபவிக்கவேண்டும்?' என்று கேட்டார். அதற்கு அவர் கவிதையில் பதில் சொன்னார். ஆம்; அவருக்குக் கவித் திறனும் உண்டு.

திருமணம் நடந்துகொண்டிருக்கிறது. மணமகள் மாலை சூட்டப்போகிறாள் மணமகனுக்கு. கவிதை உதயமாகிறது, வினாவுக்கு விடையாக:

உலகில் இல்லதோர்
கன்னியை உளத்திடை
மணந்தேன்;
அலகில் துன்பமாம்
அலங்கலை எனக்(கு) அவள்
அணிந்தாள்.

[*உளத்திடை - மனத்திலே. அலகில் - அளவில்லாத. அலங்கல் - மாலை.*]

தமது லட்சியத்தை 'உலகில் இல்லதோர் கன்னி' என்று குறிப்பிட்டார் அந்த லட்சியவாதி. 'சாதாரணமாக உலகத்தாரைப் பின்பற்றி ஒரு பெண்ணைக் காதலித்து மணம் புரிந்து கொள்ளாமல் உலகத்திலேயே இல்லாத ஒரு கன்னியை மணந்து கொண்டேன். அப்போது எனக்கு அவள் சூட்டிய மணமாலை துன்பமாலைதான்! முடிவு இல்லாத துன்பமாலை அது!' என்ற இவர் விடையில், லட்சியத்திற்கே உரிமையாக்கப் பெற்ற ஒரு வாழ்க்கை துன்பமயமாகித்தான் லட்சியமயமாக வேண்டும் என்ற ஓர் ஆழ்ந்த தத்துவத்தைக் காண்கிறோம்.

லட்சியம் எவ்வளவு உயர்வாக இருக்கிறதோ, அவ்வளவு துன்பமயமாக வாழ்க்கையும் அமையக்கூடும். ஏனென்றால் துன்ப நெருப்பில் சுடப்பெற்ற குணாதிசயந்தான் சுத்தமான மாற்றுயர்ந்த தங்கமாக ஒளிவீசக் கூடும்.

Koviloor Digital Library

உண்மையான லட்சியவாதிக்கு இது தெரியும். எனவே, துன்பத்தையும் அவன் இன்பமாகவே அநுபவிக்கிறான்.

'உலகில் இல்லதோர் கன்னி தமக்களித்த துன்பமாலையே முடிவில்லாத இன்பமாலையாகவும் தம் கழுத்தை அணி செய்ததாக அந்த லட்சியவாதக் கவி தன் கவிதையை முடித்திருக்கிறார். அவருக்குக் கோதை என்ற ஆண்டாளின் கதையிலும் கவிதையிலும் விசேஷ விருப்பம் உண்டு. உலகில் இல்லாத புருஷோத்தமனைக் காதலித்த தனிப்பெருங் கதைதானே ஆண்டாளின் வாழ்க்கை!

உலகில் இல்லாத புருஷோத்தமன்

'மானிடவர்க்கு என்று பேச்சுப்படில் வாழகில்லேன் கண்டாய், மன்மதனே!' என்று வாழ்க்கை நடத்தியவள் ஆண்டாள். ஓங்கி உலகளந்த உத்தமனைக் கண்ணன் என்ற வடிவில் மணந்துகொள்ள விரும்பினாள். கடல்வண்ணன்மீது காதலும் கடலாகப் பெருகியது. கண்ணனை மணஞ் செய்துகொண்டதாகக் கனாக்கண்டாள். அந்த அழகனை எங்கும் கண்டாள்; எனினும், அவனைப் பிரிந்திருக்கும் தலைவி நிலையில் மனம்பொறாது வருந்தினாள். 'அல்லல் விளைத்த' அழகு, உண்மையான ஆனந்தமும் விளைக்கக் கண்டாள்.

ஆண்டாள் தன் உளத்திடை மணந்த உத்தமன் ஆயர்பாடிக்கு அணிவிளக்கு; உலகத்திற்கெல்லாம் ஒரு ஞானப் பெருவிளக்கு; எண்ணிறந்த அறிஞர்களுக்கும் அன்பர் களுக்கும் அன்றும் இன்றும் வாழ்வுப் பாதையில் வழி காட்டிக் கொண்டிருக்கும் ஜோதி மணிவிளக்கு.

அல்லல் விளைத்த பெருமானை
ஆயர் பாடிக்(கு) அணிவிளக்கை

என்று ஆண்டாளே தன் காதலனைக் குறிப்பிடுகிறாள்.

Koviloor Digital Library

லட்சியக்காதல் அதிகரிக்க அதிகரிக்க, ஆண்டாளின் துன்பமும் அதிகரித்தது.

கதிஎன்றும் தான்ஆவான்
கருதா(து)ஓர் பெண்கொடியை
வதைசெய்தான் என்னும்சொல்
வையகத்தார் மதியாரே

[*வையகத்தார் - உலகத்தில் உள்ளவர்கள்.*]

என்று இவள் கூறுவதில் துன்பத்தின் உச்சநிலையைக் காண்கிறோமல்லவா?

'நான் தொழுதாலும் உருக்காட்டவில்லை; அழுதாலும் உருக்காட்டவில்லை' என்கிறார். 'அஞ்சாதே!' என்று அபயமும் தரவில்லையே என்கிறாள். லட்சியத்திற்குத்தான் எத்தகைய பயங்கரமான சோதனை, பாருங்கள்! லட்சிய புருஷனே இல்லையா?

எனினும், அந்த லட்சியபுருஷன் தன்னைச் சுற்றிச் சுழன்று நீங்காமல் இருக்கிறானாம். இந்த உணர்ச்சி எத்தகைய பயங்கரமான சோதனைகளிலும் லட்சியத்தின்மீது நம்பிக்கையை வளர்த்த வண்ணமாக இருக்கிறது; ஏன் துன்பத்தையும் வளர்த்தவண்ணமாகவே இருக்கிறது.

'உள்ளே உருகி நைந்துகொண்டிருக்கிறேனே; ''இவள் ஒருத்தி இருக்கிறாளோ? - தீர்ந்தே போனாளோ?'' என்றுகூட விசாரிக்கவில்லையே!' என்றாள். 'என்ன குறும்பு!' என்கிறாள், தன் உள்ளம் கவர்ந்த கள்வனை,

கொள்ளை கொள்ளிக்
குறும்பன்

என்று குறிப்பிடுகிறாள்.

பயனைக் கருதாத காதல் - காதலிக்கப் பெறவேண்டும் என்ற பயனையும் கருதாத காதல் - லட்சியத்தின்மீது ஏற்படவேண்டும் என்பது குறிப்பு. 'நான் காதலிக்கப்படு

Koviloor Digital Library

கிறேனா? அப்படியானால்தானே நானும் காதலிக்கவேணும்?' என்ற வாணிப முறைக் காதலை விட்டு ஒரு வழியே காதலிப்பதுதான் லட்சியக் காதல் என்பதையும் இங்கே தெரிந்து கொள்கிறோம். இது ஆண்டாள் துணிந்த துணிவு.

'பெண்ணின் வருத்தம் அறியாத பெருமான்' என்றுகூடச் சொல்லுகிறாள். எனினும், காதலித்த வண்ணமாகவே இருக்கிறாள். ஏன்? 'மாதவன் என்பதோர் அன்பு' - அதாவது, தன் புருஷோத்தமன் அன்பு மயமானவன் - என்ற நம்பிக்கை ஒழிக்க ஒழியாத நிலையில் இவள் உள்ளத்தின் ஆழத்திலே இடம் பெற்றிருக்கிறது. உயர்ந்த லட்சியத்தின் உண்மை நிலை இது.

அன்பானது தன்னை உகப்பாரைத்தான் உகக்கும் என்பது ஒரு சூட்சும இயற்கை விதி. அன்புமயமான இறைவன் தன்னை உகப்பாரைத் தானும் உகக்கின்றான் என்பது பக்தர்களுக்கிடையே ஒரு மெய்ம்மைப் பெருவார்த்தை. இந்த வார்த்தையும் இந்த விதியுங்கூடப் பொய்த்துப் போயினவோ? என்றும் தோன்றுகிறது ஆண்டாளுக்கு.

> தம்மை உகப்பாரைத்
> தாம்உகப்பர் என்னும்சொல்
> தம்மிடையே பொய்யானால்,
> சாதிப்பார் ஆர்இனியே?

என்று ஆண்டாள் கேட்பதைப் பாருங்கள். லட்சிய வாழ்க்கையில் மிகவும் நெருக்கடியான ஒரு நிலை இது.

'தெய்வம் பொய்த்துப்போனால், வசைமாரி பொழிந்துவிட்டுச் சாகவேண்டியதுதான்!' என்ற மன நிலையைச் சில மக்களிடையே காண்கிறோம். வேறு சிலர் இந்த நிலையில் நாஸ்திகராகி, 'கண்டதே காட்சி, கொண்டதே கோலம்' என்று வாழ்க்கை நடத்தக் காண்கிறோம். இத்தகைய நிலையிலும் ஆண்டாளின் மகா விசுவாசம் தோணியாகிப்

Koviloor Digital Library

பாதுகாப்பாகிறது. இதய அன்பு லட்சியக் காதலை நோக்கிச் சென்றுகொண்டேயிருக்க உதவுகிறது.

'காதலன் வார்த்தை பொய்யானால் நான் பிறந்ததும் பொய்தான்!' என்கிறாள். 'புருஷோத்தமனுக்கும் எனக்கும் உள்ள உறவு ஒழிக்க ஒழியாதது!' என்ற உறுதியுடன் இருக்கிறாள். 'எந்நாளும் ஒழிக்க முடியாது; அவன் நினைத்தாலும் ஒழிக்க முடியாது!' என்ற மனஉறுதி லட்சிய யாத்திரையில் வெற்றிபெறுவது திண்ணம்.

'சிரீதரன் (கண்ணன்) என்பதோர் பாசத்து அகப் பட்டிருந்தேன்' என்பது ஆண்டாள் வாக்கு. 'இந்தப் பாசமே விடுதலை அளிக்கும்; இப்பாசமே விடுதலை' என்ற குறிப்பையும் ஆண்டாள் வாக்கில் காண்கிறோம். ஆண்டாளைப்போல் லட்சியம் என்ற பாசத்தில் அகப்பட்டுக் கொண்டவர்களுக்கெல்லாம் முடிவில் வெற்றி நிச்சயம்.

இத்தகைய பாசத்தால் லட்சியத்தோடு பிரிவின்றி ஒன்றுபடுவதுதான் வெற்றியின் ரகசியம். இப்பாசம் வாழ்க்கைக்கு ஒளிகாட்டி, நெறிகாட்டி லட்சிய விளக்குடன் எப்படியாவது சேர்த்துவிட வேண்டும் என்பது ஆண்டாளைப் போன்ற லட்சியக் காதலர்களின் பூர்ண நம்பிக்கையோடு கூடிய பிரார்த்தனை.

வித்தக வேங்கட வாணன் என்னும்
விளக்கினில் புகஎன்னை விதிக்கிற்றியே!

[*வித்தகன்* - *(இங்கே)* *ஆச்சரியப்படத்தக்க திறமை யுள்ளவன். வேங்கடவாணன் - திருவேங்கட முடையான். விதிக்கிற்றியே - என்னை நீ விதிக்க வேண்டும்.*]

என்ற வாக்கிலே ஆண்டாள் வாழ்க்கை முழுதும் பேசுகிறது; பிரார்த்திக்கிறது.

துன்பநெருப்பானது சுடச்சுட ஆயிரத்தெட்டு மாற்றுத் தங்கமாகத் தெய்வஒளி வீசிய ஆண்டாளின் குணாதிசயத்திற்கு

 Koviloor Digital Library

இசைந்த பிரார்த்தனைதான், 'திருவேங்கடம் மேய (மேவிய) விளக்கு' என்றும், 'ஆயர்பாடிக்கு அணிவிளக்கு' என்றும் குறிக்கப் பெறும் லட்சியப் பிரார்த்தனை மனமெய் மொழிகளை ஆட்கொள்ளும்போது எந்த லட்சியத்தையும் அடைவது அரிதன்று; எந்த லட்சியக் காதலையும் நிறைவேற்றிக் கொள்வது எளிது.

பெயர்ப் பொருத்தம்

இப்படி லட்சியத்துடன் லயித்துவிடுவது ஆண்டாள் கதையின் உட்பொருள். இவள் வாழ்க்கையிலும் ஊடுருவிக் கிடக்கும் உண்மை, ஆண்டாளைச் 'சூடிக்கொடுத்த சுடர்க்கொடி' என்றும், சூடிக்கொடுத்த நாச்சியார்' என்றும் சொல்வதுண்டு. இவளுக்குப் பெரியாழ்வார் முதலில் இட்ட பெயர் கோதை. தம்மையும் ஆட்கொண்டாள் என்று கருதி, 'ஆண்டாள்' என்றும் அழைக்கலானார் என்பர்.

சாதாரணமாகப் பூமாலையையும் கூந்தலையும் குறிக்கும் பெயர் கோதை என்பர். இச்சொல் ஆகுபெயராகப் பெண்ணை உணர்த்துகிறது. இதை இருமொழியில் ஒரு சொல் என்று கூறுவோரும் உண்டு. அவர்கள் கோதா என்பதை வடசொல்லாகக்கொண்டு சில பொருள்களை வெளியிடு கிறார்கள். வேதாந்த தேசிகரும் பட்டரும் கோதையைக் கோதா என்று வடமொழியில் கூறியுள்ளார்.

பூமாலையைக் கோதை இறைவனுக்கே சூடிக்கொடுத்த கதை பிரசித்தமானது. இன்னிசைப் பாமாலைகளையும் இவள் பாடிக்கொடுத்த கதையும் பிரசித்தம். எனினும், கோதை என்ற பெயர் காரணப் பெயராக ஏற்பட்டது என்று கருதுவதைக் காட்டிலும், பெரியாழ்வார் தம் அருமை மகளுக்கு இட்ட இடுகுறிப் பெயர் என்று கருதுவதே பொருத்தமாகும்.

சிலருக்கு முதலில் இடுகுறிப்பெயரும், பின்பு அவர்கள் குணம், தொழில் முதலான காரணங்களை ஒட்டிக் காரணப்

Koviloor Digital Library

பெயரும் ஏற்படுவதுண்டு. கோதைக்கோ பச்சைப் பசுங் குழந்தைப் பருவத்தில் பெரியாழ்வார் இட்ட இடுகுறிப் பெயரே காரணப்பெயராகவும் அமைந்துவிடுகிறது. 'சூடிக்கொடுத்த சுடர்க்கொடி' என்ற பெயரைப் போல் ஆண்டாள் என்ற பெயரும் காரணப் பெயர்தான். இடு குறியாகவும் காரணக்குறியாகவும் ஒருங்கே அமைந்திருக்கும் கோதை என்ற பெயரோ ஆண்டாளின் காரண இடுகுறிப் பெயராக அமைந்துவிட்டதே பக்தி யுலகில் ஓர் அதிசயம் என்பர்.

கோதையின் தந்தையாகிய பெரியாழ்வாருக்கும் இத்தகைய பெயர்ப் பொருத்தம் வாய்த்திருப்பது குறிப்பிடத் தக்கது. அவரது பிள்ளைப் பெயர் விஷ்ணு சித்தர். இந்தச் சொல்லின் பொருள் 'விஷ்ணுவைச் சித்தத்தில் வைத்துக் கொண்டிருப்பவர்' என்பது. கண்ணனைச் சித்தத்தில் வைத்துத் தாலாட்டிச் சீராட்டி வளர்த்துவிட்ட பெரியாருக்கு இடுகுறிப் பெயரே எவ்வளவு பொருத்தமாக ஒரு முற்குறிபோல் அமைந்துவிட்டது, பாருங்கள்!

'விட்டுசித்தன் (விஷ்ணுசித்தன்) மனத்தே கோயில் கொண்ட கோவலன்' என்று பாராட்டப் பெறுவது ஜகன்மோகன பாலகோபாலனாகிய கண்ணபிரானுக்கும் ஒரு சிறப்பு என்று பக்தர்கள் கருதுவர். கோதை 'விட்டு சித்தன் மனத்தே கோயில்கொண்ட கோவல'னைக் காதலனாகக் கொள்கிறாள். இவளுடைய லட்சியக் காதலை உருவாக்கியவை பெரியாழ்வாரின் வாக்கும் வாழ்க்கையும்.

ஒரு வகையில், பெரியாழ்வாரின் வாழ்க்கையும் லட்சியமும்கூட ஆண்டாளின் வாழ்க்கையிலும் வாக்கிலும் பூர்த்தியாகின்றன என்று சொல்லலாம். கோதையின் லட்சியக்காதல் பக்தி உலகிலேயே ஒரு புது மலர்ச்சி. நந்தவனத்தினில் ஒரு தெய்வமலராகப் பெரியாழ்வார் இவளைக் கண்டுபிடித்ததாகவும், இம்மலரைத் தெய்வத்திற்கே

Koviloor Digital Library

அர்ப்பணம் செய்ததாகவும், இவளைச் சூடிக்கொடுத்த சுடர்க்கொடியாகக் கண்டுகொண்ட நிலையில் ஆச்சரியப் பட்டு, 'நமக்கு இன்னும் இவ்வளவு பரிபக்குவம் வரவில்லையே!' என்று கருதி, 'இவள் என்னை ஆண்டாள்!' என்று பூரித்துப் போனதாகவும் வழங்கும் கதைகள் கூர்ந்து நோக்கத்தக்கவை!

ஆண்டாள் என்ற இந்த லட்சியக்காதலை நன்கு உணர்ந்து கொள்வதற்காக இவளைப்பற்றி வழங்கும் செவிவழிச் செய்திகளான கதைகளையும் தெரிந்துகொள்ள வேண்டும்; கவி வழிச் செய்திகளான உண்மைகளையும் நன்கு தெரிந்துகொள்ள வேண்டும். ஆராய்ச்சிக் கண்கொண்டு பார்க்கவேண்டும்; பக்தி விசுவாசம் என்ற கண்கொண்டு பார்க்கவேண்டும்; அப்போதுதான் கோதை என்ற காதல் வெள்ளத்தை உள்ளவாறு அறிந்துகொள்ள இயலும்.

★

Koviloor Digital Library

2

நந்தவனத்தில் ஞானக்கொழுந்து

பெரியாழ்வார் கோதையை நந்தவனத்தில் கண்டெடுத்துத் தமது புதல்வியாக வளர்த்தார் என்று குருபரம்பரைக் கதைகள் தெரிவிக்கின்றன. கோதையைப் பூமிப் பிராட்டியின் அவதாரம் என்றும் சொல்லுகிறார்கள்.

விஷ்ணுசித்தர் என்ற பெரியாழ்வார் நந்தவனத்தில் களை கொத்திக்கொண்டிருந்தபோது ஆடி மாதம் பூர நட்சத்திரத்தில் (திருவாடிப் பூரத்தில்) நல்ல முகூர்த்தத்தில் அங்கொரு துளசிச் செடிக்கருகே மண்ணில் பொன்னிறமுள்ள பசுங்குழந்தையாகப் பூமிதேவியின் அம்சமான கோதையைக் கண்ணுற்று ஆச்சரியமடைந்தார் என்று திவ்ய சூரிய சரிதை சொல்லுகிறது. இக்குழந்தையைத் தனக்குப் புதல்வியாக எடுத்துக்கொண்டு கோதை என்று பெயரிட்டுத் திருமகள் போல் வளர்த்து வந்தார் என்பர்.

பூமாலையும் பாமாலையும்

நிலமகள் ஒரு சமயம் திருமாலை நோக்கி, 'இறைவனே! உலக மக்களில் எவரிடம் உமக்கு அன்பு சிறப்பாக ஏற்படும்?' என்று பணிவுடன் கேட்டாளாம். பெருமாள் பரிவுடன், 'நம்மிடம் அன்பும் பணிவும் கொண்டு பணிபுரியும் பக்தர்களிடமெல்லாம் நமக்கு அன்பு உண்டு; எனினும் பூமாலைகளோடு பாமாலைகளும் சூட்டிப் பணிபுரியும் பக்தர்களிடம் நமக்குச் சிறப்பான அன்பு உண்டு' என்று பதில் சொன்னாராம்.

Koviloor Digital Library

தன் முகத்தைக் குளிர நோக்கி இளநகை அரும்பி இறைவன் இவ்வாறு கூறியதும், நிலமாமகள் அதுகுறித்துச் சிந்தனை செய்யத் தொடங்கினாள். ஆழ்வார்கள் முதலான பக்த மணிகள் என்றும் வாடாத பாமாலைகளைச் சூட்டி இறைவனை அணிசெய்து வருவது நினைவிற்கு வந்தது. அவர்களில் சிலர் நந்தவன கைங்கரியம் செய்து இன்புறுவதும் தெரிய வந்தது.

ஸ்ரீவில்லிபுத்தூரில் பெரியாழ்வாரின் நந்தவனப் பணியை நினைத்துப் பார்த்ததும், தானும் ஒரு மானிடப் பெண்ணாகத் தோன்றிப் பாமாலையும் பூமாலையும் கட்டி இறைவனை அணிசெய்து தன் மக்களுக்கெல்லாம் வழி காட்டவேண்டும் என்ற ஆசை அதிரித்தது. பெரியாழ்வாருக்கே பெண்ணாக இருந்தால் தனது நோக்கம் இனிது நிறைவேறும் என்ற எண்ணமும் உதித்தது.

எனவே, ஸ்ரீதேவியின் அவதாரமாகச் சீதாதேவி தோன்றியதுபோல், பூதேவியின் அம்சமாகக் கோதாதேவியும் ஒரு பெண்ணின் கர்ப்பத்தில் தோன்றாமல் பூமியின் கர்ப்பத்தில் தோன்றினாள் என்று ஸ்ரீவைஷ்ணவர்கள் நம்புகிறார்கள். கோதை தோன்றிய வில்லிபுத்தூரை, ஸ்தல புராணம் வராக க்ஷேத்திரம் என்று சொல்லுகிறது. இங்கே இறைவன் வராக அவதாரம் செய்து ஹிரண்யாக்ஷன் என்ற லோக பயங்கரனை வதைத்துப் பூமிக்குப் பாவச் சுமையைக் குறைத்தான் என்பது பிற்காலத் தமிழ்ப் பௌராணிகரின் மனோபாவம்.

மல்லி என்ற வேட்டுவப் பெண்ணரசியின் பெயரால் இந்தப் பிரதேசத்திற்கு மல்லி நாடு என்ற தமிழ்ப் பெயரும் உண்டு. அல்லிராணி என்ற பெயரைத் தமிழ் மக்கள் நாடோடிப் புகழேந்திகள் வாயிலாக நன்கறிவர். மல்லி நாட்டை மல்லிராணி ஆண்டு வந்தாள் என்றும், மல்லி ராணியின் மூத்த புதல்வனான வில்லி, புதுப்பித்ததால் இப்பிரதேசத்தின்

Koviloor Digital Library

முக்கியமான ஊர் ஸ்ரீவில்லிபுத்தூர் எனப் பெயர் பெற்றது என்றும் சொல்லுகிறார்கள். மல்லி நாட்டிலே பணி புரிந்து அருளாட்சி நடத்திய கோதையை 'மல்லிநாடு ஆண்ட மடமயில்' என்றும் சொல்லுகிறார்கள்.

கோதையாகத் தோன்றுவதற்கு முன்பே பூமிதேவிக்குப் பெரியாழ்வாரின் அருமை பெருமைகளைப் பகவான் தெரிவித்ததாகவும் கதை வழங்குகிறது.

அஞ்சு வயதில், அளவிறந்த பூம்பொழில்கள்,
கஞ்சம் கழுநீர் கலித்(து)இலங்கும் ஓடைபல,
நெஞ்சு நெகிழ்ந்த நினைவோடும் கண்(டு) எமையே
தஞ்சம் எனநின்று, பூமாலை சமைத்(து) அளித்தான்

[கஞ்சம் - தாமரை. கழுநீர் - ஒரு வகைப்பூ. கண்டு - (இங்கே) செய்து. சமைத்து - தயாரித்து.]

என்று வடிவழகிய நம்பிதாசர் இயற்றிய 'சூடிக்கொடுத்த நாச்சியார் பிரபந்த'த்தில் பகவானே பெரியாழ்வாரின் பிஞ்சிலே பழுத்த பக்தியையும் கைங்கரிய விருப்பத்தையும் பாராட்டுகிறான். இந்தப் பிரபந்தத்தைத் தழுவிப் பிஞ்சிலே பழுத்த கோதையின் கதை இங்கே விவரிக்கப்படுகிறது.

பெரியாழ்வார் பாண்டியனைச் சீடனாக்கிப் பொற்கிழி பெற்றுப் பல்லாண்டு பாடி மறுபடியும் வில்லிபுத்தூரில் நந்தவன கைங்கரியத்தைத் தொடர்ந்து புரிந்ததையும், பூமாலைகளோடு பாமாலைகள் கட்டி வழிபாடு செய்ததையும் பெருமான் பூமிப்பிராட்டிக்கு எடுத்துரைத்தானாம். எனவே, பெரியாழ்வார் மதுரையில் பக்திக் கொடியைப் பறக்கவிட்டுப் பிரசித்தராகித் திரும்பி வந்து பெரும் பணிவுடன் வில்லிபுத்தூரில் நந்தவனப்பணி புரிந்துகொண்டிருக்கும் போதுதான் கோதையின் தோற்றம் நிகழ்ந்தது என்பர்.

திருவரங்கமும் திருவேங்கடமும் திருமாலிருஞ்சோலை என்ற அழகர்மலையும் வைஷ்ணவம் என்ற பக்தி மதத்தின்

Koviloor Digital Library

மூன்று வளர்ப்புப் பண்ணைகளாக நீண்டகாலமாகப் பிரசித்தி பெற்றிருந்தன. அந்தத் தலங்களுடன் ஸ்ரீவில்லிபுத்தூரும் நான்காவது வளர்ப்புப் பண்ணை ஆயிற்று என்று சொல்லும்படி வில்லிபுத்தூரர் என்ற பெரியாழ்வார் பணி புரிந்துவந்த காலம் அது. 'பரமபதத்தைக் காட்டிலும் பட்டர்பிரான் என்ற பெரியாழ்வாரின் உள்ளமே நமக்கு உகந்த உறைவிடம்' என்று பகவானே அபிமானித்ததாகப் பக்தர்கள் நம்புவாராயினர்.

இந்த நிலையில் பகவானுக்குப் பாமாலையும் பூமாலையும் சூட்ட வந்த கோதை, பட்டர்பிரான் குலம் வாழத் தமிழகம் வாழப் பக்திநெறி வாழத் தோன்றினாள் என்பர் வடிவழகிய நம்பிதாசர். தாமரைப் பொய்கையில் செந்தாமரை, பொன்விளக்கு ஏந்துவதுபோல மலர்ந்திருக்கிறது. மயில்கள் ஆடுகின்றன. மலர்களிடையே வண்டுகள் பாடுகின்றன. நீலமலர்கள் கண் விழித்து நோக்கக் குயில்கள் தாலாட்ட, மரங்கள் மலர்சொரிய,

தேவியும் தன்னை ஈன்ற
திருத்துழாய் மடியில் வாழ்ந்தாள்

என்பது சூடிக்கொடுத்த நாச்சியார் பிரபந்தம்.

அன்னம் சிறகால் குழந்தையை வந்து அணைத்தது என்றும், கிளிகள் மழலை கற்பித்தன என்றும், மலர்கள் மதுவைச் சிந்தின என்றும், கனி மரங்கள் கனிகளைச் சிந்தின என்றும் கூறி, வடிவழகிய நம்பிதாசர் கோதையின் தோற்றத்தை ஒரு தெய்விகத் தோற்றமாகச் சித்திரித்துக் காட்டுகிறார். பகவானுக்குப் பூமாலையும் பாமாலையும் சூட்டப் பிறந்த, சூடிக்கொடுக்கும் தனிப் பெரும்பேறும் பெற்றவள் அல்லவா!

கருணைமுகிலுக்குக் காணிக்கை

பெரியாழ்வார் வழக்கம்போல் மலர் கொய்து, மாலை கட்டுவதற்காக, அந்தத் திருவாடிப் பூர நாளிலும்

Koviloor Digital Library

விடிவதன்முன் தமது பூங்காவை அடைந்தார். சூரியோதயத்திற்குப் பின்பும் இருளின் உறையுள் என்று சொல்லத்தக்க அந்தச் சோலைப்பகுதியில்,

> **சோதிமேல் சோதி யாகித்**
> **துலங்குதல் தொண்டர் கண்டார்!**

அந்த ஒளி வளர்வது கண்டு, 'இதன் மூலந்தான் என்ன?' என்று அங்கும் இங்கும் நோக்கினார்.

> **புதுமதுப் பொங்கும் பச்சைப்**
> **பசுந்துழாய்ப் பூட்டி னூடே,**
> **கதும்என விழியால் நோக்கிக்**
> **கருணையின் கொழுந்தைக் கண்டார்!**

அந்தத் துளசிவனப் பகுதியில் தாம் வழக்கமாய்ப் பார்க்கும் துளசிக் கொழுந்தை அல்ல அவர் இப்போது காண்பது; கருணையே செழித்து வளர்ந்து கொழுந்து விடுவது போன்ற ஓர் அதிசயத் தோற்றம் கண்களையும் உள்ளத்தையும் பரவசமாக்கியது.

'பெண்மையின் கொழுந்து' என்பதை விரைவில் உணர்ந்து கொண்டார். எனினும், அதிசய உணர்ச்சி மேலும் அதிகரிக்கிறது.

> ***செந்தா மரைமலரில் தோன்றிச் செகம்எல்லாம்***
> ***தந்தாள வந்த திருமகளோ? தாரணிசேர்***
> ***நந்தா விளக்கோ? ஞானத்தின் நற்கொழுந்தோ?***
> ***சிந்தா மணியோ? திருப்பாற் கடல்அமுதோ?***

[*தாரணிசேர்* - பூமியை வந்தடைந்த. *நந்தாவிளக்கோ* - அணையாத ஒரு திருவிளக்கோ. *சிந்தாமணி* - சிந்தித்ததையெல்லாம் கொடுக்கிற ஒரு தெய்விக ரத்தினம்.]

என்று தம்மைத்தாமே வினவுகிறார்.

அந்தப் பெண் குழந்தையைப் பார்த்ததும், 'கலைமகளே குழந்தை வடிவாய்க் காணப்படுகிறாளோ?' என்ற எண்ணமும்

Koviloor Digital Library

உதிக்கிறது. 'கற்றவர்கள் கண்மணியோ? அன்பர்கள் ஆருயிரோ? உயிர்த்துணையோ?' என்றும் அதிசயிக்கிறார்.

முற்றப் புவனம் முழுதும் முறையாலே
பெற்று வளர்க்கும் பெரும்பார் மடமகளோ?

[புவனம் - உலகம். பார் மடமகள் - பூமிதேவி.]

என்ற சந்தேகமும் இவர் உள்ளத்தில் எழத்தான் எழுகிறது.

மறுபடியும் தாம் கண்ட கருணைக் கொழுந்து சாராம்சத்தில் ஞானக்கொழுந்துதான் என்ற எண்ணம் உறுதிப்படுகிறது. 'புண்ணியமோ? வேதப் பொருளோ?' என்கிறார் ஒரு சமயம்; 'கலைப் பொருளோ? நீதிக் கொழுந்தோ?' என்கிறார் ஒரு சமயம்.

'இளந்தளிரோ? செழுங்கனியோ?' என்று கொஞ்சவும் தோன்றுகிறது. 'பாலோ? தேனோ?' என்கிறார் ஒரு கணம். அடுத்த கணமே, 'பாகவதர் நூலோ? அதன் பயனோ? என்னை ஆண்ட திருமாலோ? வேத முதலோ இப்படி உருக் காட்டுகிறது!' என்று பிரமிக்கிறார்.

குழந்தையின் வரலாறு ஒன்றும் தெரியவில்லை. 'எல்லாம் அறிவித்து என் இன்னுயிர்க்கு வாழ்வு அருளும் இறைவன் திருமுன்பு இக்குழந்தையைக் கொண்டு போவேன்; அவனுக்கு இன்று நான் அர்ப்பணம் செய்யக்கூடிய மலர் இது! கருணை முகிலுக்குக் காணிக்கை இந்தக் கருணைக் கொழுந்து, ஞானக் கொழுந்து!' என்று தமக்குத் தாமே சொல்லிக்கொண்டு குழந்தையுடன் புறப்படுகிறார், வடபத்திரசாயி கோயிலை நோக்கி.

காலைக் கதிரொளியில் கோயில் ஏதோ ஒரு புதிய அழகுடன் பொலிவது போலத் தோன்றுகிறது. குழந்தை யுடன் வருகிற பெரியாழ்வாரைக் கண்டு தொண்டர் குழாம் அதிசயப்படுகிறது. எல்லாரும் அவரைச் சூழ்ந்து கொள்கிறார்கள்.

Koviloor Digital Library

பெரியாழ்வார் குழந்தையைப் பெருமக்களுக்குமுன் கிடத்தித் தொழுது ஏத்துகிறார். 'இவள் வரலாற்றை நீர் பின் தெரிந்து கொள்வீர். இப்போது இவளை அகத்திற்குக் கொண்டுபோய் உமது அருமைத் திருமகளாகப் பேணி வளர்க்கவேணும்' என்று அர்ச்சகர் மூலமாக இறைவன் தன் திருவுள்ளத்தை வெளியிட்டருளுகிறானாம்.

பெருமாள் ஏறும் சிவிகையில் குழந்தையை ஏற்றிக் கொண்டு பெரியாழ்வாரும் கோவிலில் உள்ள பக்தர்களும் சென்றார்கள்.

ஆணிப்பொற் பல்லக்கில்
ஆழ்வார் திருமகளை

உற்று நோக்கிய பெண்கள் மனமார மகிழ்ந்து வாயார வாழ்த்தினார்கள். பேரிகை, எக்காளம், கொம்பு முதலிய மங்களவாத்தியங்கள் முழங்கின.

வல்லபதேவ பாண்டிய மன்னனின் குருவாகிய பெரியாழ்வாருக்கு அவ்வரசன் ஒரு திருமாளிகை அமைத்துக் கொடுத்திருந்தான். அம்மாளிகைக்குக் குழந்தையுடன் பெரியாழ்வார் வந்து சேர்ந்ததும் அங்கே கூடியிருந்த மக்கள் வைத்த கண் வாங்காமல் குழந்தையை நோக்கிய வண்ணம், 'அமுதைத் திரட்டிச் செய்ததோ மேனி! அல்லது அழகைத் திரட்டியதோ!' என்றெல்லாம் அதிசயிக்கத் தொடங்கினர்.

அவர்கள் தங்களை அறியாமலே விரைவில் பக்தி மயமாயினர். 'ஜானகிதான் பின்னும் இப்பூமியில் வந்து தோன்றினாளோ?' என்றனர் சிலர். வேறு சிலர்,

உலகிருள் அகற்ற வந்த
ஒண்சுடர் விளக்கி தென்பார்.

இன்னும் சிலர், 'இந்தக் குழந்தைக்கு அன்னையும் உண்டோ? ஆழ்வாரின் தவமே திரண்டு இவ்வுருவாக வந்ததோ?' என்றார்கள். இனி இவர் அகத்துக்குத் திரியும்

Koviloor Digital Library

நெய்யும் தேடவேண்டாம்; இவளே திருவிளக்கு!' என்று பெண்கள் பேசிக்கொண்டார்கள்.

'சிற்றடியைப் பாருங்கள்; சிறு விரல்களைப் பாருங்கள்!' என்றார் சில பெண்கள். 'தோளைப் பாருங்கள்; கழுத்தைப் பாருங்கள்' என்றார் சிலர். சிலர் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

பெரியாழ்வார், குழந்தையைச் சீராட்டிப் பாராட்டி வளர்த்து வந்தார். நந்தவனத்திலேயே பூங்கொடிகளைப் பேணி வளர்த்த பணியுடன் இப்பெண்கொடியை ஒரு ஞானப் பூங்கொடியாக வளர்த்துவிடும் பணியையும் பணிவுடன் ஏற்றுக்கொண்டது இந்தத் தொண்டர் உள்ளம்.

பரம பாகவதராக இருந்தும், 'கோதை' என்று தாம் பெயரிட்டு வளர்த்த குழந்தையை அழகு செய்து பார்ப்பதில் பெரியாழ்வாருக்கு விசேஷ திருப்தி. கோதையும் பெரியாழ்வார் மடியிலும் தோளிலும் தொட்டிலிலும் வளர்ந்து சிறுமியானாள். சிற்றாடை கட்டிக்கொண்டு ஓடி ஆடும் சிறுமிக்கு,

எண்ணிய நூபுரங்கள் மீதே இசைந்திலங்கப்
பண்ணிய பாடகமும் பைம்பொன் ஒளிவீச
நண்ணி அதன்மேலே தண்டை நலம்திகழப்
புண்ணிய மாதின்நல்லார் பூட்டி உவந்தனரால்.

[*நூபுரம், பாடகம் - காலணிகள். மாதின் நல்லார் - அழகிய பெண்கள்.*]

வேறு நகைகளையும் பூட்டி நாளுக்கொரு கோலம் செய்து பார்த்தார்கள், அழகுக்கொழுந்தாக வளர்ந்து வந்த கோதைப் பெண்ணுக்கு. பெரியாழ்வாரின் திருமகளோ தந்தையாருடன் பழகிப் பழகிப் புற அழகு செய்யும் நகைகளைக் காட்டிலும் அகத்தை அழகு செய்யும் பொறுமை, கருணை முதலான குணங்களையே பெரிதும் விரும்பியவளாய்,

Koviloor Digital Library

தோழியர்க ளோடுவிளை
யாடத் தொடங்கினாள்.

கோதையின் விளையாட்டுப் புத்தியிலும் பக்தி இடம் பெற்றிருந்தது. பெரியாழ்வார் செய்துவரும் பக்திப் பணிகளைச் சிறுமியான கோதையும் தன் தோழிகளுடன் விளையாட்டிலே செய்து காட்டுவாள். நன்றாக நடை பயின்றபின் தந்தையாருடன் நந்தவனத்திற்கும் போகத் தொடங்கினாள்.

இடுப்பில் சிறிய குடம் ஒன்றை வைத்துக்கொண்டு தண்ணீர்மொண்டு வந்து, துளசிச்செடிகளுக்கும் பூஞ்செடி களுக்கும் பரிமாறுவாள். தம் அருமை மகளுக்கு இசைந்த சிறு பொற்குடம் ஒன்று வாங்கிக் கொடுத்திருந்தார் பெரியாழ்வார். கோதை, மகிழ்ச்சியுடனும் பெருமையுடனும் அதில் தண்ணீர் எடுத்து ஒவ்வொரு பூஞ்செடிக்கும் பூங்கொடிக்கும் பூமரத்திற்கும் துளசிச் செடிக்கும் அன்போடு பரிமாறுவதைக் கண்டு பெரியாழ்வார் பூரித்துப் போவார்.

இப்படிக் காலம் கழிந்தது. பெரியாழ்வார் பூக்கொய்து மாலை சேர்த்து வைத்துவிட்டு உபாதானத்திற்குப் போவார். பாண்டிய சக்கரவர்த்தியின் குருமூர்த்தியாகிப் பாண்டியன் கொண்டாடும் பட்டர்பிரான் என்று பேரும் புகழும் பெற்ற பின்பும், பெரியாழ்வார் தமது திருமாளிகையைப் பாகவதர் களுக்கெல்லாம் பொதுவான பஜனைக் கூடமாக்கிவிட்டு உபாதானம் பண்ணித்தான் வாழ்க்கை நடத்தி வந்தார். ஏற்கெனவே இருந்த சொத்துக்களையும் பாண்டியன் கொடுத்த செல்வங்களையும் தம் நந்தவனத்தைப் பூங்காவனமாக்கு வதற்கே பயன்படுத்திக்கொண்டார்.

இந்தப் பூங்காவனமும் ஒரு பக்திப் பண்ணையாகப் பொலிந்தது; ஒரு ஞானப் பூங்காவாக விளங்கியது. இத்தகைய சூழ்நிலையில் வளர்ந்த கோதை, பெரியர்ழ்வாரின் ஆனந்தக் கனவுகளுக்கு இணங்க ஓர் அருட்பூங்கோதையாக வளர்ந்து,

Koviloor Digital Library

பெரியாழ்வாரின் பெருமாளுக்கு உரிய காணிக்கையாகத் தன் உடல், பொருள் ஆவியைப் பக்குவப்படுத்தி வந்தாள்.

பெரியாழ்வார் பூங்கொய்வதையும், மாலை கட்டுவதையும் கூர்ந்து கவனிப்பாள். அவர் உபாதானத்திற்கு வெளியே போனதும் பூக்கூடையை ஜாக்கிரதையாகப் பாதுகாப்பாள். தம் தந்தையாரின் பக்திச் சிறப்பால் அந்தப் பூக்களும் மாலைகளும் விசேஷ அழகு பெற்றிருந்ததாக எண்ணினாள்.

சூடிக்கொடுத்த சுடர்க்கொடி

'புதிய அழகு பெற்றிருப்பதுபோல் இம்மாலைகள் பெரியாழ்வாரின் பக்தி மணத்தால் ஒரு புது மணமும் பெற்றிருக்குமோ?' என்றும் எண்ணமிடலானாள். தெய்வ மணங்கமழும் மாலைகள் அல்லவா அன்புருவாகிய அழகனுக்கு அர்ப்பணம் ஆகவேண்டும்?

இந்த நினைப்புடன் கூடையிலுள்ள ஒரு மாலையைக் கையில் எடுத்துப் பார்த்தாள். மூக்கில் வைத்தும் மோந்து பார்த்துவிட்டாள். 'ஒஹோ, என்ன அதிசய நறுமணம்! நம் தந்தையார் கைராசி!' என்று குதூகலமடைந்தாள்.

நாளடையில் இந்த மணமும் போதாதென்று தோன்றியது, தன் அன்பனாகிய அழகனுக்கு. மேலும் மணம் ஊட்டுவதற்கு வழி உண்டோ? என்று சிந்தித்தாள். 'என் அழகனுக்கு இசைந்த மாலைகளோ இவையெல்லாம்?' என்றும் சோதித்துப் பார்க்க விரும்பினாள்.

திடீரென்று ஓர் ஆலோசனை உதித்தது. பளிச்சென்று தன் கூந்தலில் ஒரு மாலையைச் சூட்டிக்கொண்டாள். தெளிந்த நீரில் தன் நிழலைப் பார்த்துக்கொண்டாள். பிறகு கண்ணாடியிலும் அழகு பார்த்தாள். ஒவ்வொரு மாலையையும் இப்படியே சூட்டிச் சூட்டி அழகு பார்த்தாள்.

Koviloor Digital Library

பிறகு மாலைகளையெல்லாம் கூடையில் ஒழுங்காக அடுக்கி வைத்தாள். இவ்வளவு காரியத்தையும் பெரியாழ்வார் திரும்பி வருவதற்குமுன் செய்து முடித்தாள். இதைத் தெரிந்துகொள்ளாமலே பெரியாழ்வார் மாலைகளை வடபத்திர சாயிக்கு வழக்கம்போல் உரிமையாக்கி வந்தார்.

கோதைக்கோ தான் செய்த காரியம் ஒரு பணியென்றே தோன்றியது. 'இந்த அன்புப் பணியை நான் எப்போதும் என் அமுதனாகிய பெருமானுக்குச் செய்து வருவேன்!' என்று தீர்மானித்தாள். இப்படிச் சில தினங்கள் கழிந்தன.

இந்தப் புதுமைப் பணி கோதைக்குப் புதியதோர் உவகை அளித்தது. இந்தப் பணி செய்வதற்குமுன் கோதை தன்னை அழகு செய்துகொள்வாள். கூந்தலை வாரிச் சிக்கெடுத்துப் பின்னிக்கொண்டு பூமாலைகளைச் சூட்டிச் சூட்டிக் கண்ணாடியில் மைதீட்டிய கண்களால் நோக்கி நோக்கி மனமகிழ்வாள்.

இம்மாலைகளால் அலங்கரிக்கப்பெற்ற வடபெருங் கோயிலுடையானும் (வடபத்திரசாயியும்) மனமகிழ்ந்தது போல் பக்தர்களுக்குக் காட்சியளித்தான். பக்தர்களும் தரிசனத்தால் புதியதோர் இன்பம் அடைந்து அகமகிழ்ந்தனர்.

ஒருநாள் ஆழ்வார் பூமாலைகளைப் பெருமாளுக்குச் சாத்தும்படி அர்ச்சகர் கையில் கொடுத்தபோது அந்த வயது முதிர்ந்த அர்ச்சகர் அம்மாலைகளோடு ஒரு ரோமம் இருப்பதைப் பார்த்துவிட்டார். உடனே மனங்கலங்கி, ஆழ்வாரை நோக்கி, ''விஷ்ணு சித்தரே! உம்முடைய பணியில் பிழை காணவும் என்னுடைய நெஞ்சு துணியுமோ?'' என்று சொல்லி அந்த ரோமத்தை எடுத்துக் காட்டினார்.

பெரியாழ்வார் திகைத்தார்; திகிலடைந்தார்! அப்போது அர்ச்சகர், ''நல்லவேளை, பெருமாளுக்குச் சாத்துவதற்குமுன் இந்தப் பிழை தென்பட்டது; இந்த மாலைகளைக்

Koviloor Digital Library

கூடையோடு கொண்டுபோய்ப் புதுமாலைகள் தொடுத்துக் கொண்டு விரைந்து வருவீர்'' என்று சொன்னார்.

இப்படிச் சொன்ன அர்ச்சகர் பிறகு அந்த மாலைகளைக் கூடையோடு கோவில் வாசலில் கொண்டு வந்து போட்டதையும் பட்டர்பிரான் கண்டு பதைத்து நின்றார்; விம்மி ஏங்கினார். பிறகு மனத்தைத் திடப்படுத்திக்கொண்டு உடனே நந்தவனத்துக்குப் போனார்; பூக் கொய்தார்; புது மாலைக் கட்டிக்கொண்டு வந்தார்.

அர்ச்சகரிடம் அம்மாலைகளைக் கொடுக்கும்போது ஆழ்வார், ''பட்டரே! இன்று என் பெரும் பிழையைப் பொறுத்துக் கொள்ளவேணும்'' என்று பணிவாகச் சொன்னார். அர்ச்சகரோ, ''விஷ்ணு சித்தரே! நானும் எத்தனையோ நாளாக நீர் கொண்டு வரும் மாலைகளை வாங்கி வாங்கிப் பெருமாளுக்குச் சாத்தியிருக்கிறேன். ஆனால் சில தினங்களாக மாலைகள் வாடி, நிறம் குலைந்திருப்பது என் ஒளி மங்கிய கண்களுக்கும் தெரிந்துவிட்டன. ஆனால் நமது சக்கரவர்த்தியின் ஞான குருவும் பெரியாருமாகிய தாங்கள் கட்டிவந்த மாலைக்கும் மறு உண்டாக்கிப் பேசுவது சரியன்று என்றே கூசி இருந்துவிட்டேன். ரோமத்தையும் கண்ட பின்புதான் துணிந்து கூறினேன்'' என்று விரிவாகத் தம் உள்ளக் கருத்தை வெளியிட்டார்.

பெரியாழ்வாருக்கு ஒன்றுமே பதில் சொல்லத் தோன்றவில்லை. மறுபடியும் அர்ச்சகர், ''கோதிலாத குணப் பெருங் குன்று நீர்; உம்முடைய பெருமாளுக்கு நீர் சூட்டும் மாலையில் அப்பிழை ஏற்பட்டதற்குக் காரணந்தான் என்னவோ?'' என்று கேட்டார். அதற்குப் பெரியாழ்வார், ''நான் அறியேன்; என்றும்போல் மலர்ந்த பூக்களைத் தெரிந்தெடுத்துக் கட்டிய மாலைகளைத்தானே கொண்டு வந்தேன்'' என்று பதில் சொல்லித் தொழுது நின்றார்.

Koviloor Digital Library

அர்ச்சகரும் மனம் உருகி, ''விஷ்ணு சித்தரே, மனம் வருந்த வேண்டாம்; வழக்கம்போல் இக் கைங்கரியத்தைத் தொடர்ந்து நீரே செய்து வருவீர். அறியாமல் நாம் செய்யும் குற்றங்களையெல்லாம் இறைவன் மன்னித்தருள்வான்'' என்று சொல்லிவிட்டு, ஆழ்வார் கொண்டு வந்த புதிய மாலைகளைச் சாத்தினார். 'பெருமாளுக்கு இந்தப் புதுமாலைகள் பொருத்தமாக அணி செய்யவில்லையே? என்ன மாயமோ!' என்று பக்தர்கள் பேசிக் கொண்டார்கள்.

பெரியாழ்வார், கோவிலிலிருந்து திரும்பிவரும் வழியெல்லாம், 'அந்தப் பிழை எப்படி நேர்ந்ததோ?' என்று ஆலோசித்துக் கொண்டே வந்தார். 'எவ்வளவு ஜாக்கிரதையாக மாலை சேர்த்துக் கூடையில் வைக்கிறோம்! ஒரு வேளை உபாதானத்திற்குப் போயிருக்கும்போது... இதை நாளையே காண்போம்' என்ற முடிவிற்கு வந்தார்.

மறுநாள் நீராடி, நிர்மலராய்ப் மலர்கள் எடுத்துக் கூடை நிறையப் பெய்து மாலை தொடுத்து வைத்தார். தொடுக்கும் நார்களை ஆராய்ந்து பார்த்துப் பூக்களையும் வகை தெரிந்து எடுத்து, மாலைகளைக் கட்டியபின், கூடையில் ஜாக்கிரதை யாக வைத்தார். பிறகு உபாதானத்திற்குப் போய்விடாமல் ஒருபுறமாக ஒளிந்து நின்றார்.

அப்பொழுது கோதை, தந்தை இல்லையென்று எண்ணிக் கூடை இருக்குமிடத்திற்கு வந்து ஒவ்வொரு மாலையாக எடுத்துப் பார்த்தாள். பெரியாழ்வாரின் நெஞ்சு படபடவென்று அடித்தது. கோதை மாலையைச் சூட்டிக் கொண்டு கண்ணாடி முன் சென்று அழகு பார்த்ததும், பெரியாழ்வார் திடுக்கிட்டார்; கோபம் கொண்டார்.

தன் எதிரே நின்ற தந்தையாரைத் திரும்பிப் பார்த்ததும் கோதை பதறி மாலைகளைக் கூடையில் வைத்துவிட்டுக் கண்ணீர் பெருக விம்மி விம்மி அழுதாள். அந்தக் கண்ணீரில் கரைந்து போயிற்று ஆழ்வாரின் கோபம்.

மகளை அணைத்துக்கொண்டு, ''குழந்தாய்! நீ ஒன்றும் அறியாய் போலும்! உலகத்தில் இப்படி நீ இன்று செய்ததை வேறு எவரே செய்யத் துணிவர்?'' என்றார். மேலும், ''அம்மா, என்னுடன் பழகி நீ இந்த விஷயங்களையெல்லாம் நன்று அறிந்தவள் என்றே நம்பியிருந்தேன். தெய்வத்தின் பெருமை என்ன? சிறு மானிடராகிய நமது நிலை என்ன?'' என்று தொடர்ந்து பேசினார்.

பிறகு திருமாலின் ஏற்றத்தையெல்லாம் சாஸ்திர ரீதியாகப் புராண ரீதியாகத் தத்துவப் பொருள்களுடன் எடுத்துரைத்தார். எவ்வளவோ பெருமை வாய்ந்த பரம்பொருளுக்கும் எளிமை என்ற கல்யாண குணம் இருப்பதால் கோதையின் பிழையும் மன்னிக்கப்படும் என்று ஆறுதல் கூறினார். கடைசியாக, ''நீ பயப்படாதே! இனி இப்படிச் செய்யாதே'' என்று சொல்லிவிட்டு விரைந்து போய் வேறு மாலைகள் தொடுத்தார்.

இந்த மாலைகளை விரைந்து கொண்டுபோய் இறைவனுக்கு அளித்து, 'அடியேன் பிழையையும், சிறு பெண்ணாகிய கோதையின் பிழையையும் பொறுத்தருள வேணும்' என்று பிரார்த்தித்துக் கொண்டார். திரும்பி வரும் வழியெல்லாம், 'கோதையைக் கோபித்துக் கொண்டோமே' என்று பெரிதும் வருந்தினார்.

தம் மாளிகையில் பெரியாழ்வார் பெண்ணைத் தம் அருகில் அமரச் செய்து, கருணை கூர்ந்து தருமோபதேசமும் ஞானோபதேசமும் செய்தார். பக்த சரித்திரங்களையும் ஞானிகளின் கதைகளையும் சொல்லிக் கோதையை மகிழ்வித்தார். இரவில் வெகுநேரம் வரை அருமை மகளுடன் உரையாடிக்கொண்டிருந்தபின், பெரியாழ்வார் உறங்க முயன்றார்.

கொஞ்ச நேரம் உறக்கம் வரவில்லை. சிந்தனை அலைகள் ஓய்ந்தபின் உள்ளம் அமைதியுற்றது; உறக்கமும்

Koviloor Digital Library

வந்தது... 'உம்முடைய புதல்வியாக அபிமானிக் கிறீரே, அவள் யார் தெரியுமா?' என்ற குரல் கேட்டு ஆழ்வார் திரும்பிப் பார்க்கிறார்.

''எம்மிடத்தில் பாங்காய்
இனிதமரும் பூமடந்தை
உம்மிடத்தில் புத்திரியாய்
உற்பவித்தாள்!''

என்று பெருமாள் கூறியதும், பெரியாழ்வார், ''இப்படி நானும் குழந்தை கோதையை நோக்கி நோக்கி ஆனந்தக் கண்ணீர் சொரிந்தது உண்டு என்று பதில் சொன்னார்.

''பாமாலையும் பூமாலையும் நமக்குக் கொடுக்கவே கோதை தோன்றியிருக்கிறாள்'' என்றார் பகவான். பெரியாழ்வார், ''உள்ளம் பூரிக்கிறது; உடலும் பூரிக்கப் பெறுகின்றேன்'' என்றார் கண்ணீர் பெருக.

''பாமாலை பாடித்தரப் பிறந்தாள்; பூமாலை சூடிக்கொடுக்கவும் பிறந்தாள்' என்று பெருமாள் கூறியதும், பட்டர் பிரானுக்கு ஒரே ஆச்சரியமாகிவிட்டது. பகவான் தொடர்ந்து, ''நேற்றும் இன்றும் ரோமம் கிடந்ததென்றும் மாசுபட்டதென்றும் களைந்த மாலைகள் எங்கே? அவற்றைக் கொண்டுவந்து தந்தால் நாம் அணிவோம்! உம்முடைய புது மாலைகளுக்கு அந்த மணம் இல்லை, அந்தப் பொலிவும் இல்லையே!'' என்றார்.

பெரியாழ்வார் திடுக்கிட்டுக் கண்விழித்தார். 'இது என்ன, விநோதக் கனவா? விபரீத நினைவா?' என்று எண்ணமிட்டார். சூரியோதயமானதும், 'கோயிலுக்குப் போய் வந்தால் உள்ளம் தெளிவடையும்; அறியாமை இருள் நீங்கும்' என்று நினைத்து அப்படியே போய் அர்ச்சகரைச் சந்தித்தார். தமது கனவைக் குறித்து அவருடன் சம்பாஷிக்கவும் விரும்பினார்.

Koviloor Digital Library

ஆழ்வாரைக் கண்டதுமே அர்ச்சகர் திருவடி தொழுது, ''மன்னிக்கவேணும்; அபசாரப்பட்டேன், உம்முடைய திருமகளின் பெருமையை அறியாமல்!'' என்றார். பெரியாழ்வாருக்கோ ஆச்சரியத்தின்மேல் ஆச்சரியமாகி விட்டது.

அர்ச்சகர் சொன்னார் : ''உம்முடைய புது மாலைகளைச் சூட்டிக்கொண்ட பெருமாள் வழக்கம்போல் காட்சியளிக்க வில்லை'' என்பதை நானும் கண்ணாரக் கண்டேன்; பக்தர்களும் அப்படியே அபிப்பிராயப்பட்டார்கள். வாடியவைபோல் இருந்த மாலைகளைச் சூட்டியபோது பெருமாளின் முகப்பொலிவு என் கிழக்கண்களுக்கும் தெளிவாகத் தெரிந்தது! எனினும், என்னுடைய சிற்றறிவு அதை உம்மிடத்திலும் ஒப்புக்கொள்ள இசையவில்லை. நேற்று இரவு சொப்பனத்தில் உம்முடைய திருமகளைப் பூமிதேவியாகவே பெருமாளுடன் தரிசிக்கும் பேறு பெற்றேன். அவள் பாமாலை பாடிக் கொடுக்கவும் பூமாலை சூடிக் கொடுக்கவும் இவ்வுலகில் பிறவியெடுத்து வந்திருக்கிறாள் என்பதையும் தெரிந்து கொண்டேன்.''

அர்ச்சகர் மறுபடியும் பெரியாழ்வாரைத் தொழுது, ''இனி நீர் தொடுக்கும் மாலைகளைக் கோதை சூட்டிக் கொண்ட மணத்துடன் கொண்டுவர வேண்டும். இது இறைவன் திருவுள்ளம்'' என்றார். இறைவனுடைய பெருமையைக் காட்டிலும் அவன் அருளே அற்புதமானது என்பதை அந்த இரண்டு பக்தர்களும் அன்று தெரிந்து கொண்டார்கள்.

எவ்வளவு வயதானாலும், எத்தகைய அறிவு முதிர்ச்சி ஏற்பட்டிருந்தாலும், புதிய புதிய உண்மைகளை இறையருள் உணர்த்திவர, நாம் உணர்ந்துகொண்டு பேறு பெற வேண்டும்; இது பக்தியின் பரம ரகசியங்களில் ஒன்று என்று

Koviloor Digital Library

தெரிந்துகொண்டு பெரியாழ்வார் மாளிகைக்குத் திரும்பினார். 'என் அருமைத் திருமகளால் நான் பெற்ற பேறு பெரும் பேறு!' என்று தமக்குத் தாமே சொல்லிக்கொண்டு மாளிகைக்குள் புகுந்ததும், கோதை முன் வந்து நின்றாள். 'என்னை ஆண்டாள் இவள்!' என்று ஆழ்வார் தம் திருமகளை அணைத்துக்கொண்டு ஆனந்த பரவசமானார்.

அன்று கட்டிய மாலைகளைப் பெரியாழ்வார் கோதை முன்வைத்து, ''அம்மா, நீ சில தினங்களாகச் சூடிக் கொடுத்ததுபோல் இன்றும் கண்ணாடி முன் நின்று சூட்டிக் கொண்டு அழகு பார்த்துக் கொடுக்கவேணும்!'' என்றார். கோதை ஆச்சரியமும் ஆனந்தமும் ஒருங்கே அடைந்தாள். அவர் சொன்னபடியே சூட்டிக்கொண்டு நாணித் தலைகுனிந்து நின்றாள்.

'காதலனுக்கு உரிய மாலை காதலிக்கும் உரியதுதானே!' என்ற எண்ணம் உள்மனத்தில் அரும்பியதால்தான் கோதை மாலைகளை முதல் முதல் சூட்டிக்கொள்ளத் துணிந்தாள். அவளையும் அறியாமலே உதித்திருந்த இந்த எண்ணம் இப்போது அவளை முற்றும் ஆட்கொண்டது.

அன்று கோதை சூடிக்கொடுத்த மாலைகளைச் சூட்டிக்கொண்ட பெருமாளுடைய தரிசனம் அற்புதமாக இருந்தது. ஆழ்வாருக்குத் தாம் சொப்பனத்திலே கண்ட வசீகரமான தெய்வ ஒளி வடபத்திர சாயியின் முகத்தில் அப்போது தவழ்வதுபோலத் தோன்றியது.

'சூடிக் கொடுத்த சுடர்க்கொடியின் மாலைகள் இப்படிப் பொலிந்து பெருமாளையும் அழகு செய்கின்றன!' என்று அர்ச்சகரும் வேறு பக்தர்களும் ஒருமுகமாகப் பேசிக் கொண்டது பெரியாழ்வார் காதில் விழுந்தது. அப்போது கோதையும் ஆழ்வார் பக்கத்திலிருந்து பெருமாளைச் சேவித்துக் கொண்டிருந்தாள்.

Kamban Digital Library

அன்று முதல் கோதைக்குச் 'சூடிக் கொடுத்தாள்', 'சூடிக்கொடுத்த சுடர்க்கொடி', 'ஆண்டாள்' என்ற பெயர்களும் வழங்கி வரலாயின. பூமாலையையும் கூந்தலையும் ஒருங்கே குறிக்கும் கோதை என்ற பெயரை இவளுக்குச் சூட்டியதே பெரியாழ்வாரின் தீர்க்க தரிசனத்தைக் காட்டுகிறது என்றும் பக்தர்கள் பேசிக் கொண்டார்கள்.

ஆழ்வாரே தமக்கு இன்னும் அவ்வளவு பக்குவம் வரவில்லையே என்று நினைத்தார் ஒருகணம். எனினும், 'என் அருமைத் திருமகளால் நான் பெற்ற பேறு கொஞ்சமோ!' என்ற நினைப்பில் உள்ளம் விசேஷ திருப்தியடைந்தது. நந்தவனத்தில் தாம் கண்ட ஞானக்கொழுந்தின் பக்தி வளர்ச்சியில் சிறப்பாகப் பெருமிதம் கொண்டது பெரியாழ்வார் உள்ளம்.

★

Koviloor Digital Library

தெரிந்துகொண்டு பெரியாழ்வார் மாளிகைக்குத் திரும்பினார். 'என் அருமைத் திருமகளால் நான் பெற்ற பேறு பெரும் பேறு!' என்று தமக்குத் தாமே சொல்லிக்கொண்டு மாளிகைக்குள் புகுந்ததும், கோதை முன் வந்து நின்றாள். 'என்னை ஆண்டாள் இவள்!' என்று ஆழ்வார் தம் திருமகளை அணைத்துக்கொண்டு ஆனந்த பரவசமானார்.

அன்று கட்டிய மாலைகளைப் பெரியாழ்வார் கோதை முன்வைத்து, ''அம்மா, நீ சில தினங்களாகச் சூடிக் கொடுத்ததுபோல் இன்றும் கண்ணாடி முன் நின்று சூட்டிக் கொண்டு அழகு பார்த்துக் கொடுக்கவேணும்!'' என்றார். கோதை ஆச்சரியமும் ஆனந்தமும் ஒருங்கே அடைந்தாள். அவர் சொன்னபடியே சூட்டிக்கொண்டு நாணித் தலைகுனிந்து நின்றாள்.

'காதலனுக்கு உரிய மாலை காதலிக்கும் உரியதுதானே!' என்ற எண்ணம் உள்மனத்தில் அரும்பியதால்தான் கோதை மாலைகளை முதல் முதல் சூட்டிக்கொள்ளத் துணிந்தாள். அவளையும் அறியாமலே உதித்திருந்த இந்த எண்ணம் இப்போது அவளை முற்றும் ஆட்கொண்டது.

அன்று கோதை சூடிக்கொடுத்த மாலைகளைச் சூட்டிக்கொண்ட பெருமாளுடைய தரிசனம் அற்புதமாக இருந்தது. ஆழ்வாருக்குத் தாம் சொப்பனத்திலே கண்ட வசீகரமான தெய்வ ஒளி வடபத்திர சாயியின் முகத்தில் அப்போது தவழ்வதுபோலத் தோன்றியது.

'சூடிக் கொடுத்த சுடர்க்கொடியின் மாலைகள் இப்படிப் பொலிந்து பெருமாளையும் அழகு செய்கின்றன!' என்று அர்ச்சகரும் வேறு பக்தர்களும் ஒருமுகமாகப் பேசிக் கொண்டது பெரியாழ்வார் காதில் விழுந்தது. அப்போது கோதையும் ஆழ்வார் பக்கத்திலிருந்து பெருமாளைச் சேவித்துக் கொண்டிருந்தாள்.

Koviloor Digital Library

அன்று முதல் கோதைக்குச் 'சூடிக் கொடுத்தாள்', 'சூடிக்கொடுத்த சுடர்க்கொடி', 'ஆண்டாள்' என்ற பெயர்களும் வழங்கி வரலாயின. பூமாலையையும் கூந்தலையும் ஒருங்கே குறிக்கும் கோதை என்ற பெயரை இவளுக்குச் சூட்டியதே பெரியாழ்வாரின் தீர்க்க தரிசனத்தைக் காட்டுகிறது என்றும் பக்தர்கள் பேசிக் கொண்டார்கள்.

ஆழ்வாரே தமக்கு இன்னும் அவ்வளவு பக்குவம் வரவில்லையே என்று நினைத்தார் ஒருகணம். எனினும், 'என் அருமைத் திருமகளால் நான் பெற்ற பேறு கொஞ்சமோ!' என்ற நினைப்பில் உள்ளம் விசேஷ திருப்தியடைந்தது. நந்தவனத்தில் தாம் கண்ட ஞானக்கொழுந்தின் பக்தி வளர்ச்சியில் சிறப்பாகப் பெருமிதம் கொண்டது பெரியாழ்வார் உள்ளம்.

★

Koviloor Digital Library

3

காதலும் கல்யாணமும்

ஞானக்கொழுந்தாகிய கோதை பரம பக்திக் கொழுந்தாக வளர்ந்து வந்தாள்.

> கோலைத் தேடிக் காணாதே
> குழைந்து வளைந்த கொழுந்தென்ன
> மாலைத் தேடிக் காணாதே,

வாடித் தவித்தது காதலியின் உள்ளம்.

காதலின் வளர்ச்சி

தன்னைக் கண்ணன் காலத்திலிருந்த கோபிகையாக எண்ணிக்கொண்டு நோன்பு நோற்றுப் பார்த்தும், கோபிகைகளின் காதற் கதைகளைக் கேட்டுக் கேட்டு அநுபவித்தும் திருப்தியடையலாம் என்று கருதினாள் 'அவன் பசுவின் பின்னே போன அந்த அடிச்சுவடும், கல்மழைக்கு அன்று எடுத்த குன்றும், அவனோடு தொடர்புள்ள தூய யமுனை நீரும் உண்டு என்றால், சென்று, கண்டு, காதல் நோய் தீருவோம்' என்று எண்ணினாள்.

ஆசை வெள்ளம் சுழித்து ஓடியது. அந்தச் சுழியில் அகப்பட்டுக்கொண்டவளுக்கு இன்னதுதான் செய்யவேண்டுமென்பது திட்டமாகப் புலனாகவில்லை. காமனையும் அவன் தம்பி சாமனையும் அடிதொழுது காமநோன்பு நோற்றுப் பார்த்தாள்.

கண்ணன்மீது காதல் வளர்ந்த அந்த நெடுங்கதையிலே இளமை நினைவுகளை எண்ணியெண்ணி இன்புற

Koviloor Digital Library

முயன்றாள். கண்ணனது பால லீலைகளைத் தானும் ஒரு கோபியாகி அநுபவிக்க முயன்றும் காதல் உள்ளம் ஆறுதல் பெறவில்லை.

குறி பார்த்தாள். குயிலோடு உறவாடி, 'நீ கண்ணன் வரக் கூவாய்!' என்று வேண்டிக்கொண்டாள். 'குயிலே! உன்னை யல்லாது யார் இனி என் ஆருயிர் காப்பவர்?' என்றெல்லாம் கெஞ்சினாள்; கொஞ்சினாள்.

காதல் என்ற தீயில் உருகும் மெழுகை ஒத்தாள் கோதை. அப்போது இறைவன் அருளால் ஒரு கனவு கண்டாள். அந்தக் கனவிலே இறைவன் தன்னை மணந்துகொண்டதாகக் கண்டு அந்தக் கனவுத் திருமணத்தை விவரமாகத் தோழிக்கு உரைத்தாள்.

பிறகு உருவெளித் தோற்றத்தில் கண்ணபிரானைக் கண்டாள். தன் வலம்புரிச் சங்கை வாயில் வைத்து ஏதோ வெற்றியடைந்துவிட்டதுபோல் பம் பம் என்று ஊதிக்கொண்டு வந்து விட்டான். அந்தச் சங்கைப் பார்த்து,

கருப்பூரம் நாறுமோ?
கமலப்பூ நாறுமோ?
திருப்பவளச் செவ்வாய்தான்
தித்தித் திருக்குமோ?

என்றெல்லாம் கேட்டாள்.

கோதையின் காதலன் தரிசனமளிக்காமலே இருந்து விடுவதும் உண்டு. கார்காலம் வந்துவிட்டது. 'சுந்தரத் தோளனைப் பிரிந்து என்ன இருப்பு? என்ன பிழைப்பு?' என்று தோன்றியது. மேகத்தைத் தூதுவிட்டாள். ஆனால் அந்த மேகங்கள் மழையாகப் பெய்து மறைந்து போயின. கோதையின் துயரம் கொடுந்துயராகிவிட்டது.

'மழை பெய்து நாடு செழித்தது. எனினும்', 'என் இதயத்திலே பல நாளாக அருள்மழை பெய்யவில்லையே!'

Koviloor Digital Library

என்று ஏங்கினாள் கோதை. சோலைமலைப் பெருமானைக் கண்டு ஆறுதல் பெறலாம் என்று கருதித் தந்தையாரோடும் அங்கே சென்றாள்.

மலைச்சாரலில் உள்ள நீலமலர்கள் முதலியன தன் அழகன் திருமேனியை நினவூட்ட, முல்லைமலர்கள் அவன் புன்னகை செய்வதுபோலத் தோன்றின. கோதையின் அகமும் முகமும் சோலைமலைக் காட்சிகளைக் கண்டும் மலர்ச்சி பெறவில்லை. காதலனை நினைந்து நினைந்து உருகியும் காதலியின் கலக்கம் தீர்ந்தபாடில்லை.

'என்னை அடைந்தவர் பிழைகள் செய்தாலும் அவர் எனக்கு உயிராவர்' என்று சக்கரவர்த்தித் திருமகன் உரைத்த உரை பொய்க்காது என்று எண்ணமிட்டாள். ஆகவே, தான் பிழை செய்திருந்தாலும் அந்தப் பிழையை நோக்காது காதலன் அருள் செய்யக் கடமைப்பட்டிருக்கிறான் என்பது அவள் நம்பிக்கை. தானோ பிழை ஒன்றும் செய்யவும் இல்லை. அப்படியிருந்தும், 'நீ என் உயிர்!' என்று சொல்லிக்கொண்டு அவன் ஏன் ஓடி வந்து காதலை வெளியிடவில்லை?

'அவன் வார்த்தை பொய்த்தாலும், நான் ஆழ்வார் மகள் என்பது பொய்யாகாதே, தோழீ!' என்று அருகிலிருந்த தோழியை நோக்கிப் புலம்பினாள். 'இனி எந்த வகை செய்தால் நான் பிழைத்திருப்பேன்?' என்று வருந்திய வண்ணமாயிருந்தாள்.'

மேலும் மேலும் காதல் வெள்ளமிட்டது. 'என்னைத் துவாரகையில் கொண்டு சேர்த்துவிடுங்கள்!' என்பாள் ஒரு சமயம். 'கண்ணன் பிறந்த வடமதுரைக்கே என்னைக் கொண்டுபோய் விடுங்கள்' என்பாள் ஒரு சமயம். ஸ்ரீவில்லிபுத்தூரை மானசிகமாக ஆய்ப்பாடி யாக்கிக் கொண்டவள், 'ஆய்ப்பாடிக்கே போய் விட்டால் ஆறுதல் பெறக்கூடுமோ?' என்றும் எண்ணினாள்.

Koviloor Digital Library

அங்கேயிருந்து கண்ணன் பாததூளி, வனமாலை முதலான நினைவுக்குறிகள் கிடைத்தாலும் போதும் என்று நினைத்தாள் ஒரு சமயம். 'எப்படியாவது என் அன்பனை என்னிடம் வரவழைத்து நான் வாழ்வதற்கு வேண்டிய உபாயத்தை எண்ணிப் பாருங்கள். வேறு ஒன்றும் சொல்ல வேண்டாம்' என்று அருகிலுள்ளவர்களை வேண்டிக் கொண்டாள்.

இந்த நிலையில் ஸ்ரீரங்கநாதன் தன்னை வந்தடைந்து துயரை ஆற்றுவதுபோலவும் ஓர் உணர்ச்சி ஏற்பட்டது. பிறகு காதலன் மறையவே, பிரிவுத்துயரம் முன்னிலும் அதிகரித்து, 'உலகமே இருண்டு விட்டதோ?' என்ற உணர்ச்சியையும் காதலியின் உள்ளத்தில் உண்டாக்கிவிட்டது.

அவநம்பிக்கையோடு நம்பிக்கை போராடியது. 'என் கண்ணனை நான் காணவில்லையோ?' என்று ஒரு கேள்வியைத் தானே கேட்டுக்கொண்டு, 'கண்டோமே!' என்று விடையும் தந்தது காதலியின் உணர்வு.

'கண்டிலி ரோ?' எனவும்
கண்டன னாம்'எனவும்,
எண்திசை யும்புகழும்
இன்னிசை பாடினளால்

[கண்டிலிரோ - கண்டீர்கள் இல்லையோ?]

என்பது வடிவழகிய நம்பிதாசரின் வாக்கு.

இத்தகைய இன்னிசைப் பாமாலைத் தமிழ் விளங்கப் பாடிக் கொடுத்த கோதை ஏற்கெனவே பூமாலையும் சூடிக்கொடுத்துத் தான் வந்த காரியத்தை நிறைவேற்றிக் கொண்டாள். இந்த நிலையிலேயே மனம் பொருந்திய மணம் நிறைவேறிவிட்டது, ஆண்டாளுக்கும் கண்ணனுக்கும் என்று சொல்லலாம்.

Koviloor Digital Library

ஸ்ரீரங்க யாத்திரை

கோதை பெரியாழ்வாரை நோக்கி, ''திருவரங்கம் சென்று அழகிய மணவாளனை வணங்க விரும்புகிறேன். இன்றே புறப்படலாமே'' என்று சொன்னாளாம். அவரும் நல்லதென்று வடபெருங் கோயிலுடையானை வணங்கி, விடை பெற்றுக்கொண்டு, கோதையை மூடு பல்லக்கில் ஏற்றிக் கொண்டு புறப்பட்டாராம்.

வழியிலே கோதை ஆழ்வாரை நோக்கி, ''ஸ்ரீரங்கநாதனின் கோபுரமும் விமானமும் தெரியும்போது எனக்குத் தெரிவிக்க வேணும்; கோபுரத்தைக் கண்டதும் நான் கால்நடையாகவே போய்த் தரிசிக்க விரும்புகிறேன்'' என்றாள். கோதையின் பல்லக்கைப் பக்தர்கள் சூழ்ந்து கொண்டார்கள். அந்தரத்திலிருந்து பூமாரி பொழிவதுபோல், வழியில் உள்ள ஊரார் மேல் மாடங்களிலிருந்து பூக்களைப் பல்லக்கின்மீது சொரிந்தனர்.

'இதோ பொன்னரங்கப் பொற்சிகரம்!' என்று பெரியாழ்வார் குரல் ஒலித்தது. காவிரி ஆற்றின் தென்கரைக்கு வந்த பின்பே பெரியாழ்வார் இச்செய்தியைத் தெரிவிக்கிறார். அருமைத் திருமகள் நடந்து வருந்தலாகாதே என்றுதான் முன் கூட்டியே சொல்லவில்லை.

கோபுரம் தெரிகிறதென்று சொன்னதுதான் தாமதம், கோதை உடனே திருவரங்கர் சேவடியை அடைந்து, பணிந்து, திருமார்பில் விற்றிருக்கின்றாள். அதே சமயம் பல்லக்குப் போகிகள், 'பல்லக்கில் பாரமில்லையே!' என்று ஆச்சரிய மடைகிறார்கள்.

அது கேட்ட ஆழ்வார் மூடுபல்லக்கின் திரையைத் தூக்கிப் பார்த்துத் தம் அருமை மகளைக் காணாது திகைத்துத் திடுக்கிட்டுத் திக்பிரமை கொள்கிறார்.

Koviloor Digital Library

சீரார் திருவரங்கர்
செய்த களவு(வு) ஈது!'

என்று புலம்பிக்கொண்டே ஓடிப்போய்ப் பெருமானை வணங்குகிறார்.

'அஞ்சாதீர்!' என்ற அபயக்குரல் கேட்கிறது. திருவரங்கப் பெருமானின் திருமார்பில் கோதையைக் கண்டு களிகூர்ந்து, பெருமானை நோக்கிப் பெரியாழ்வார், ''உலகறிய நாடறிய வேதம் முழங்கும் வில்லிபுத்தூரில் நீ எழுந்தருளி என் பெண்ணை மணஞ் செய்துகொள்ளவேணும்; அந்த ஸ்தலத்திலேயே என் மகளுடன் இனிதமர்ந்து வழிபடுவோர்களுக்கெல்லாம் அருள் புரியவேணும்' என்று பிரார்த்திக்கிறார்.

''பங்குனி உத்திரத்தில் அப்படியே ஸ்ரீவில்லிபுத்தூரில் மண்ணும் விண்ணும் தொழ யாம் வந்து உமது திருமகளை மணம் புரிவோம்!'' என்ற பெருமாளின் வாக்கு தெளிவாகக் காதில் விழுகிறது. அது கேட்ட பெரியாழ்வார் பெரிதும் மகிழ்ந்து தம் திருமகளை அருகில் அழைத்து, முடிதடவி, ஸ்ரீரங்கநாதனிடம் விடை பெற்றுக்கொண்டு கோதையுடன் ஸ்ரீவில்லிபுத்தூருக்குத் திரும்புகிறார்.

ஊருக்குத் திரும்பியது

பேரிகை, காளம், கொம்பு முதலான மங்கல வாத்தியங்கள் ஒலிக்க, இசை வல்லோர் கீதங்கள் பாடக் கவிஞர்கள் பல்லாண்டு பாட,

வம்பவிழும் குழற்கோதை
மணவாளர் உகந்தளித்த
செம்பொன்மணிப் பல்லக்கில்
எழுந்தனள்.

[வம்பு அவிழும் - வாசனை பொருந்திய. குழல்கோதை - கூந்தலையுடைய கோதை.]

Koviloor Digital Library

திருவரங்கப் பெருநகரம் கடந்து, காவிரி வளநதி கடந்து புகழ்ச்சோழன் எல்லை விட்டுப் பாண்டிய நாட்டை அடைந்தார்கள் பெரியாழ்வாரும் கோதையும்.

மட்டவிழும் பொழில்புடைசூழ் மதுரை தன்னில்
வாதியரை ஈடழித்து, மறையின் அந்தம்
எட்டெழுத்தே' எனக்கூறி வேதம் நான்கும்
இருந்தபடி எடுத்தோதி, மன்னர் மன்னன்
கட்டியபொற் கிழிஅறுத்துத் திருப்பல் லாண்டைக்
கட்டுரைத்துக் கண்ணனுக்குக் காப்பிட்(டு) ஏத்தும்
பட்டர்பிரான் திருமகளார் வந்தார், வந்தார்;
பாடவல்ல நாச்சியார் வந்தார், வந்தார்!

[மட்டு - வாசனை. வாதியரை - வீண்வாதம் செய்த கொள்கையினரை. மறை - வேதம். காப்பிட்டு - இரட்சையிட்டு.]

என்று சிலர் பாடிக்கோதையை வரவேற்றார்கள்.

வேறு சிலர் - கோதையின் இன்னிசைப் பாடல்களை அமுதமாகப் பருகியவர்கள் - திருப்பாவையைச் சிறப்பாகக் குறிப்பிட்டுப் பாவை பாடிய செல்வியைக் குதூகலத்துடன் வரவேற்று,

தேமருவு மலர்க்கோதை வந்தாள், வந்தாள்;
திருப்பாவை பாடினாள் வந்தாள், வந்தாள்.

என்று பாடினார்கள்.

இன்னும் சிலர், 'ஞானமயச் செழுங்கோதை வந்தாள், வந்தாள்' என்று வாழ்த்தினார்கள். 'இந்த ஞானசுந்தரியின் மேனி அழகைத்தான் என்ன என்பது?' என்று வியந்தவர்கள்,

அன்னநடை மின்னிடையார் வந்தார் வந்தார்;
ஆழ்வார்தம் திருமகளார் வந்தார் வந்தார்

என்று பாடி மகிழ்ந்தார்கள்.

Koviloor Digital Library

ஆண்டாளின் அன்பைப் பெரிதும் போற்றியவர்கள், 'இவள் பாசுரங்கள் வாயிலாகப் புலனாகும் இன்ப அன்பு எல்லோருக்கும் உரியது! என்ற கருத்தை வெளியிட்டு,

ஆரணங்கு வந்தாள் பூங்
கோதை வந்தாள்
அனைத்துயிர்க்கும் இன்பருள
ஆண்டாள் வந்தாள்

என்று பாடிப் பரவசமாயினர்.

ஸ்ரீவில்லிப்புத்தூருக்கு வந்து சேர்ந்ததும் பக்தர்கள் ஒரு முகமாய்க் கோதையின் பெரும்புகழைப் பாடினார்கள்:

வேதநா யகிவந்தாள்; வேள்விநா யகிவந்தாள்;
கோதைநா யகிவந்தாள்; கோலநா யகிவந்தாள்;
போதநா யகிவந்தாள்; பூமிநா யகிவந்தாள்;
நாதநா யகிவந்தாள்; ஞானநா யகிவந்தாள்!

[*கோலநாயகி-அழகு வாய்ந்த தலைவி, போதநாயகி-நல்லுணர்வை அளிக்கக்கூடிய தலைவி.*]

கோதை திருமணம்

'இவளை மணந்துகொள்ளும் நாயகன் எப்போது வருவானோ? என்று சிலர் பெரியாழ்வாரைக் கேட்டார்கள் சந்தேகத்துடன். அவரோ தம் மாளிகை முன் கால்நாட்டிக் கொட்டகை அமைத்துத் திருமணத்துக்கு வேண்டிய உபகரணங்களை யெல்லாம் சேகரித்தார். கோதையும் அழகிய மணவாளர் வாக்கைத் தன் மாசற்ற மனத்திற்குள் எண்ணிப் பார்த்து அவர் வருகையை நோக்கியிருந்தாள்.

திருமண நாள் நாளை யென்று முரசு முழங்கியது. வடபெருங்கோயிலை விசேஷமாக அலங்கரித்தார்கள். வீதிகளும் வீட்டுவாசல்களும் அலங்கரிக்கப் பெற்றன. கோதை திருமணத்தை எதிர்பார்த்து மக்கள்,

Koviloor Digital Library

மஞ்சனம் ஆடு வாரும்,
வரிவிழி இணைகள் தம்மில்
அஞ்சனம் எழுது வாரும்,
அம்மனை ஆடு வாரும்,
பஞ்சுகள் அணிகின் றாரும்,
பரிபுரப் பதத்தின் நேர்ந்த
வஞ்சிபோல் இடையில் வண்ண
மேகலை அணிகின் றாரும்

[*வரிவிழி இணைகள்-ரேகைகளோடு கூடிய இரு கண்கள், பஞ்சு-செம்பஞ்சு, பரிபுரம்-பாதசரம். வஞ்சி-கொடி. வண்ண மேகலை - அழகிய மேகலாபரணம்.*]

ஆகிக் குதூகலமாயிருந்தார்கள்.

பெண்கள் தங்களை விதம் விதமாக அழகு செய்துகொண்டார்கள்; விருந்தாளிகளை உபசரிப்பதில் கண்ணும் கருத்துமாயிருந்தார்கள், 'கோதை வாழ்க' என்று வாழ்த்தினார்கள்; ஏழிசை பாடினார்கள்.

தண்நறும் புழுகும் வாசச்
சந்தனக் குழம்பும் கூட்டித்
திண்ணைகள் மெழுகு வாரும்,
தெருக்களில் தெளிக்கின் றாரும்,
பண் அமர் சிந்திற் சேர்ந்த
பாடல்கள் பயில்கின் றாரும்
வண்ணமா மணிப்பட் டாடை
வறியவர்க் (கு) அளிக்கின் றாரும்

[*தண்நறும் புழுகு-குளிர்ந்த வாசனையுள்ள புனுகு. பண் அமர் சிந்திற் சேர்ந்த பாடல்கள்-பண்ணோடு கூடிய சிந்துப் பாடல்கள்.*]

ஆகி ஒரே குதூகலமாக இருந்தார்கள்.

கோதை கல்யாணத்தை முன்னிட்டுப் பெண்கள் கொண்ட குதூகலத்தை மேலும் வருணிக்கிறார் வடிவழகிய நம்பிதாசர்.

Koviloor Digital Library

அறுசுவை அடிசில் பேணி
அணைந்தவர்க் (கு) அளிக்கின் றாரும்,
நறுமலர் புனைகின் றாரும்,
நாசிஆ பரணம் வெள்கக்
குறுநகை புரிகின் றாரும்,
கூன்பிறை நுதலில் வட்ட
மறுவறு திலதம் இட்ட
மயிலென வருகின் றாரும்

[அடிசில் - சமைத்த உணவு. பேணி அணைந்தவர்க்கு - விரும்பி அணுகி வந்த விருந்தாளிகளுக்கு. நறுமலர் புனைகின்றாரும் - மணமுள்ள மலர்களால் தங்களை அலங்கரித்துக் கொள்பவர்களும். கூன் பிறைநுதலில் - வளைந்த பிறைச்சந்திரன் போன்ற நெற்றியில். மறுவறு திலகம் - குற்றமற்ற சாந்துப் பொட்டு.]

என்றெல்லாம் வருணித்துக் கோதை திருமணத்தில் பெண்குலம் வாழ்வு பெற்றது என்ற உணர்ச்சியைப் பெண்கள் எல்லாரும் அடைந்ததாகக் குறிப்பிடுகிறார்.

பெண்களின் அழகுக் கலை யுணர்வை வெளியிடும் போது அவர்கள் தங்களையும் தங்கள் வீடுகளையும் அலங்கரித்ததைக் குறிப்பிடுவதுடன் அவர்களது ஓவியக் கலைத் தேர்ச்சியையும் சுட்டிக்காட்டுகிறார். சிலர் சித்திரம் எழுதுகிறார்கள். எழுதியதும் அது உயிர்பெற்று மூச்சு விடுவதுபோலத் தோன்றுகிறதாம். 'எங்களுடன் அம்மானை ஆட வாருங்கள்; வாதிட்டுச் சூது விளையாட வாருங்கள்' என்றுகூடக் கூவி அழைக்கிறார்களாம், அந்த உயிரோவியங் களை ஓவியம் அனைய மாதர்:

ஓவியம் எழுது வாரும்,
உயிர்(பு)உள (து) இதற்(கு)என் பாரும்,
ஆவிபெற் றுடையீர்! வாதிட்(டு)
ஆடும்எம் மோ(டு)என் பாரும்.

[உயிர்ப்பு - மூச்சு]

Koviloor Digital Library

கோதை திருமணத்தில் அழகுக் கலைகள் புத்துயிர் பெறுவதுபோல் அறிவுக் கலைகளும் புதிய உயிரும் புதிய ஒளியும் பெறுகின்றனவாம்.

அருமறைப் பயன்கள் தம்மை
ஆசற விதிக்கின் றாரும்

[அருமறைப் பயன்கள் - வேத வேதாந்தங்களின் அர்த்த விசேஷங்கள். ஆசுஅற - குற்றம் இல்லாமல். விதிக்கின்றாரும் - விளக்கிக் காட்டுகிறவர்களும்.]

காணப்பட்டார்கள் என்று கூறிக் கலை விருந்துகளுடன் ஞான விருந்தும் நடைபெற்றதாகக் குறிப்பிடுகிறார்.

பக்திக்கோ எல்லையில்லை. 'மாலிருஞ்சோலை அழகனோ மணவாளன்?' என்றார் சிலர். 'அழகிய மணவாளனோ மணவாளன்!' என்று வியந்தவர் சிலர். இக் குழுவில்,

'தாலிவேங் கடவர் முன்னே,
சமைத்தனர் இவட்(கு)'என் பாரும்

[வேங்கடவர் - திருவேங்கடத்தில் எழுந்தருளியிருக்கும் பெருமான். முன்னே - முன்னமே. சமைத்தனர் - தயாரித்தனர். இவட்கு - இவளுக்கு.]

காணப்பட்டனராம்.

அந்தப் பங்குனி உத்திரத்தில் மண்ணும் விண்ணும் ஒருங்கே குதூகலம் அடைந்தனவாம். தேவர்கள் தேவியர் களுடன் வில்லிபுத்தூர் வள நகருக்கு வந்துவிட்டனராம்.

காரார் குழலா ளைக்கலி யாண
குணங்கள் கைவி டாத
ஏரார் இடையாளை, இற வாவரம்
நல்கிய இன்சொ லாளை

[காரார் குழலாளை - மேக நிறம் பொருந்திய கூந்தலையுடையவளை. ஏர் ஆர் - அழகு நிறைந்த.]

Koviloor Digital Library

மஞ்சனம் ஆட்டி மங்களப் பட்டாடை புனைந்து அணிகளும் அணிந்து மணக்கோலம் செய்தார்கள்.

மணவாளனோ இன்னும் வந்து சேரவில்லை. எல்லாரும் பெரியாழ்வாரை நோக்கப் பெரியாழ்வார் தம் திருமகளை நோக்கினார். அவளோ கருடனை வேண்டிக் கொள்ள, அந்தப் பட்சிராஜன் ஸ்ரீரங்கநாதனை அழைத்துக் கொண்டு வானவீதி வழியாக வந்துவிட்டானாம்.

சீரார் பிரமன் செறிந்(து)ஆ குதிசெய்ய,
ஏரார் பெரியாழ்வார் பல்லாண்(டு) எடுத்(து) ஏத்த,
ஆராத காதல் அடியார் குழாம்புகழக்
காரார் குழல்அணங்கைக் கண்ணபிரான் கைப்பிடித்தான்.

[*சீர் ஆர் - சிறப்புமிக்க. ஏர் ஆர் - அழகுமிக்க. ஆராத காதல் அடியார் - தெவிட்டாத பக்திக் காதலுள்ள அடியவர்கள், கார்ஆர் குழல் அணங்கு - மேக நிறம் பொருந்திய கூந்தலையுடைய ஆண்டாள்.*]

என்று புராண தோரணையில் வடிவழகிய நம்பிதாசர் இந்தப் பாணிக்கிரகண வைபவத்தை வருணிக்கிறார்.

கோதை தன் கனவைத் தோழிக்கு உரைக்கும் பாசுரக் கருத்தை ஒட்டி, மாயன் கோதையின் கைப் பிடித்ததன்றி அவள் காலையும் பிடித்து அம்மி மிதிப்பித்துத் தீவலம் வந்து அருந்ததி பார்த்ததாகவும் சூடிக் கொடுத்த நாச்சியார் பிரபந்தம் தெரிவிக்கிறது. கருடன் செய்த உதவிக்காகத் தன்னோடும் தன் காதலனோடும் கருடனுக்கும் ஏகாசனம் அளித்தாளாம் கோதை.

★

Koviloor Digital Library

4

ஆண்டாள் சொல்லும், 'என் சரிதம்'

கதைகளில் ஆண்டாளை ஒருவாறு கண்டோம்; இனி நாம் ஆண்டாளின் வாழ்க்கைக் கதையை வேறொரு முறையில் தெளிவாக அறிந்துகொள்ள முயல்வோம். வாழ்க்கை வரலாறுகளைப் பற்றி இந்நாளில் எழுதிவைப்பதுபோல் அந்நாளில் நம் முன்னோர் விவரமாகவும் சரித்திர மனப் பான்மையுடனும் எழுதி வைத்திருக்கிறார்கள் என்று சொல்ல முடியாது. எனினும், 'என் சரிதம்' என்று இந்நாளில் சிலர் எழுதிவைப்பதை நினவூட்டும் முறையில் தற்சரிதக் குறிப்புகளை உண்மைக் கவிஞர்களும் உத்தம பக்தர்களும் தங்கள் பாடல்களிலும் உபதேசங்களிலும் வெளியிடுகிறார்கள் என்று சொல்வது மிகையாகாது.

பாசுரச் சோலையில்

ஆண்டாளும் 'என் சரிதம்' எழுதிவைத்திருக்கிறாள் என்று சொன்னால் அதில் வியப்பு இல்லை. தன் கதையைத் தானே சொல்லுகிறாள் என்றுகூடச் சொல்லலாம். 'எங்கே? எப்படி?' என்ற கேள்விகளுக்குத், 'திருப்பாவையிலும் நாச்சியார் திருமொழி என்ற பிரபந்தத்திலுமே' என்று துணிந்து பதில் உரைக்கலாம்.

இந்தப் பிரபந்தங்களில் ஆண்டாள் வளர்ந்த கதையை மட்டுமா கேட்கிறோம்? ஆண்டாளின் ஆத்ம சரிதத்தை அவளது ஆன்ம அழகின் வளர்ச்சியுடன் தெரிந்து

Koviloor Digital Library

கொள்கிறோம். குழந்தைப் பருவ நினைவுகளையும் மங்கைப் பருவ உணர்ச்சிகளையும் பக்திப் பெருங் காதலையும், இறைவன் ஆட்கொண்டதையும் இவள் பாசுரங்களைத் தெளிய ஓதித் தெரிந்துகொள்கிறோம். கதைகளில் தெளியாத பகுதிகளையும் இங்கே தெளியப்பெற்று ஆண்டாளை உள்ளபடியே தரிசிக்கும் பேறு பெறுகின்றோம்.

சூடிக்கொடுத்த சுடர்க்கொடியின் பாசுரங்களிலே அவள் தூய உள்ளத்தை, பெண்மையின் பெருமையை, உயர்ந்த குறிக்கோளை, சிறந்த குணாதியசத்தை, பரந்த பண்பாட்டைக் காண்கிறோம். வாக்கிலே அவள் வாழ்க்கை பேசுகிறது; ஞானஒளி வீசும் திருமுகம் அருள்நகை புரிகின்றது;

சொல்லியல் வன்மையும்,
வில்லிபுத் தூர்அம்மை தோள் அழகும்,
முல்லையை வென்ற
நகையும்எல் லாம்என்தன் முன்நிற்குமே!

என்றவாறு கோதையை முகமுகமாய்க் காணும் பேறும் கிடைத்துவிட்டதுபோல் உள்ளம் பூரித்துப்போகிறது, இவள் பாசுரங்களை ஓதி ஓதி உணரும்போது. இந்தத் தூய ஆன்ம அழகைப் பாசுரச் சோலையில் பார்த்து,

சோலைக் கிளியவள்
தூயநற் பாதம் துணைநமக்கே

என்று போற்றுகிறோம்.

ஆண்டாள் காணும் புதுவை

ஆண்டாள் காலத்தில், புலமையும் பொருட் செல்வமும் ஒருங்கே செழித்திருந்த பாண்டிய நாட்டிலே ஸ்ரீவில்லிபுத்தூர் செல்வச் சிறப்பும் புலமைச் சிறப்பும் வாய்ந்த ஒரு பேரூராக திகழ்ந்தது என்பதற்கு நாச்சியார் திருமொழிலேயே ஆதாரம் கிடைக்கிறது. வில்லி என்ற வேடன் புதிதாக அமைந்திருந்த

Koviloor Digital Library

அவ்வூரில், 'பொன் இயல் மாடங்கள் சூழ்ந்த புதுமை'யை ஆண்டாள் குறிப்பிடுகிறாள்.

இம் மாடங்கள் மலைபோலப் பொலிந்து தோன்றின என்றும் கூறுகிறாள். இம்மாடங்களில் 'வேதவாய்த் தொழிலாளர்கள் வாழ்ந்ததையும் சுட்டிக்காட்டுகிறாள்.

சிற்பம் முதலான பல்வேறு தொழில்களுடன் 'வேதவாய்த் தொழிலு'ம் செழித்திருந்தது வில்லிபுத்தூரில். இருவகைத் தொழிலாளர்களையே தாம் கௌரவிப்பதாகக் கூறுகின்றார் கார்லைல் என்ற பேரறிஞர். வயிற்றுப் பசிக்கு உணவு கிடைக்குமாறு உழைக்கும் விவசாயத் தொழிலாளியை யும், இதயப்பசிக்கு உணவு கொடுக்க உழைக்கும் அறிவுத் தொழிலாளியையும் ஒருங்கே போற்றுகிறாராம். 'மூன்றாம வரை நான் மதிப்பதில்லை' என்கிறார். கார்லைல் போற்றும் இருவகைத் தொழிலாளிகளும் ஆண்டாளின் வில்லிபூத்தூரில் காணப்பட்டனர் எனக் கருதலாம்.

இவ்வூரில் பக்தி செழித்திருந்தது என்பதைச் சொல்லவா வேண்டும்? பெரியாழ்வாரும் கோதையும் பிறந்த ஊரில் பக்திக்குப் பஞ்சம் ஏது? பக்தியை வித்தாகக் கொண்டு ஞானமும் கலைகளும் உழைப்பும் கலந்து வாழ்ந்து இவ்வூரைப் பாண்டிய நாட்டுக்கு ஒரு நல்லணியாக ஒளிரச் செய்தன எனலாம்.

ஆண்டாள் காலத்திற்குப் பின்பும் பல நூற்றாண்டு களாகப் பின்வருமாறு இது பேரும் புகழும் பெற்றிருந்தது:

கோதை பிறந்தவூர், கோவிந்தன் வாழுமூர்,
சோதி மணிமாடம் தோன்றுமூர் - நீதியார்
நல்லபத்தர் வாழுமூர், நான்மறைகள் ஓதுமூர்
வில்லிபுத்தூர் வேதக் கோன் ஊர்.

[வேதக்கோன் - பெரியாழ்வார்.]

Koviloor Digital Library

ஆண்டாளின் தந்தை

ஆண்டாள் விஷ்ணுசித்தர் என்ற பெரியாழ்வாரின் அருமைத் திருமகள் என்பதைத் திருப்பாவையிலும் திருமொழியிலும் உள்ள பலச்ருதிப் பாடல்கள் தெரிவிக்கின்றன. திருப்பாவை, 'பட்டர் பிரான் கோதை' என்று ஆண்டாளைக் குறிப்பிடுகிறது. 'விட்டு சித்தன் கோதை', 'புதுவையர்கோன் பட்டன் கோதை', 'வில்லிபுத்தூர்க்கோன் கோதை' என்றெல்லாம் நாச்சியார் திருமொழி குறிப்பிடுகிறது.

பெரியாழ்வாரிடம் ஆண்டாளுக்குப் பரம பக்தியும் விசுவாசமும் உண்டு என்பதற்கும் இவள் வாக்கிலே சான்றுகள் உண்டு. தன் தந்தையைப் 'புதுவை மன்னன்' என்று இவள் போற்றுவதைத்தான் பாருங்கள். 'வேதவாய்த் தொழிலாளர்கள்' என்று குறிக்கப் பெறும் ஞானிகளிலும் பரம ஞானியாக, அன்பர் குழுவுக்கு ஓர் அரசனாகத் திகழ்ந்து பெரும் புகழ் பெற்றிருந்தார் பெரியாழ்வார்.

மாலையும் கழுத்துமாக அவர் பஜனை செய்வதையும், பகவானுக்கும் அடியார்களுக்கும் பணி புரிவதையும் ஆண்டாள் கண் குளிரப் பார்த்திருக்கிறாள். இந்தக் குறிப்பை,

> பைங்கமலத் தண்தெரியல்
> பட்டர்பிரான்

[*கமலம் - தாமரை. தண் - குளிர்ந்த. தெரியல் - மாலை.*]

என்ற திருப்பாவை இறுதிப் பாசுரத்தின் சொற்றொடரில் காணலாம்.

பெரியாழ்வாரின் பக்தி அனுபவங்களைப் பெரிதும் போற்றியது ஆண்டாளின் உள்ளம் என்பதற்கும் திருமொழியில் அகச்சான்று உண்டு.

Koviloor Digital Library

செம்மை யுடைய
திருவரங்கர் தாம்பணித்த
மெய்ம்மைப் பெருவார்த்தை
விட்டுசித்தர் கேட்டிருப்பர்.

என்பது ஆண்டாள் வாக்கு.

பெரியாழ்வாரையே குருவாகவும் கொண்டு ஆண்டாள் கல்வி கற்றாள் என்றும், பக்தியிற் பயிற்சி பெற்றாள் என்றும் கருதலாம். பெரியாழ்வாரின் மெய்ம்மைப் பெருவாழ்வே இவளுக்கு ஒரு மகத்தான உபதேசமாகவும் இருந்தது என்று ஊகிக்கலாம். பெரியாழ்வாரின் பூந்தோட்டத்திலேயே இவள் தன் பக்திப் பயிரையும் உரமிட்டு அன்புநீர் பாய்ச்சி வளர்க்கக் கற்றுக் கொண்டாள்.

பெரியாழ்வாரைப்போல் தானும் பூமாலையும் பாமாலையும் சூட்டி வழிபட விரும்பினாள். அவர் கண்ணனுக்குப் பாடிய பிள்ளைத்தமிழைக் காதாரக் கேட்டு நெஞ்சு நிறையப் பருகிப் பாடிப்பாடி இன்புறுவாள் என்றும் ஊகிக்கலாம்.

குழந்தைக் கண்ணனை அவர் கண்ணாரக் கண்டார்; குழந்தை விளையாட்டுகளைக் கண்டு பரவசமானார். மனத்தொட்டிலில் இட்டு வளர்த்து வந்தார். பிள்ளையை அம்புலிக்கு அறிமுகப்படுத்தினார். குழந்தையின் புன்சிரிப்பையும் தலை அசைப்பையும் தளர் நடையையும் கண்டார்; பிறருக்கும் காட்டினார். ஆண்டாள் மட்டும் பார்க்காமல் இருக்க முடியுமா?

மனத்தில் வளர்ந்த பிள்ளை, மனையில் வளர்ந்த அருமைப் பெண்ணுக்கு அறிமுகமாகிவிட்டான். இருவருக்கும் நட்புரிமை ஏற்பட்டது. ஆண்டாளுக்கு வயது வந்ததும் நட்பே காதல் ஆகிவிடுகிறது.

பெரியாழ்வாரின் பூந்தோட்டத்திலே பூங்கொடி ஒரு தருவை நாடிச் சென்று, படர்ந்து, பொலிவதைச் சிறுமியான

Koviloor Digital Library

கோதை அடிக்கடி பார்த்திருப்பாள். வயது வந்த பெண்கொடியும், பெரியாழ்வாரின் கண்ணன் என்ற தருவை நாடிப் படரலாயிற்று.

> கோல்தேடி ஓடும்
> கொழுந்ததே போன்றதே
> மால்தேடி ஓடம்
> மனம்

என்ற பூதத்தாழ்வாரின் பக்தி அநுபவம் ஆண்டாளுக்குக் காதல் அநுபவம் ஆகிறது.

சிறு வீடு கட்டுதல் (குழந்தை நினைவுகள்)

குழந்தைப் பருவத்திலே ஆண்டாள் சிறுவீடு கட்டி விளையாடியிருப்பாள் அல்லவா? தன்னை ஒத்த சிறுமியர் களுடன் விளையாடும்போது, அவர்களில் ஒவ்வொருவரும் ஏதாவது ஒரு வேலையைச் சுறுசுறுப்பாகச் செய்வதுண்டு. சிறு சுளகு, மணல், நீர், குடம் எல்லாம் கொண்டு வருவார்கள். சிரமப்பட்டு வீடு கட்டுவார்கள்.

இந்த நினைவுகளை நாச்சியார் திருமொழியின் இரண்டாம் பகுதியில் காண்கிறோம்.

> வண்டல் நுண்மணல்
> தெள்ளி யாம்வளைக் கைகளால்
> சிரமப் பட்டோம்.

[வண்டல் நுண்மணல் - வண்டல்களில் உள்ள சிறிய மணல்களை. தெள்ளி - புடைத்து.]

> 'வட்ட வாய்ச்சிறு தூதையோடு
> சிறுசுள கும்மண லும்கொண்டு

[வட்டவாய் - வட்ட வடிவமான வாயுள்ள. சிறு தூதையோடு - சிறிய பானையோடு.]

என்றும் இவள் கூறுவதைக் கேளுங்கள்.

Koviloor Digital Library

சிறுமியர்கள் ஒருவரையொருவர் கூப்பிடுவதையும் 'அதைச் செய்; இதைச் செய்' என்று ஒருவரையொருவர் ஏவுவதையும் கேட்கிறோம். ஏதோ ஒரு பெரிய அரண்மனை கட்ட முயல்வது போல் சிரமப்படுவதையும் காண்கிறோம்.

சிறு சுளகில் மணலை இட்டுக் கொழிக்கிறார்கள்; அதனோடு வண்டல் மண்ணையும் கலக்கிறார்கள். தண்ணீர் சேர்த்துக் குழைக்கிறார்கள். முதுகு நோக உழைக்கிறார்கள்.

> **இன்று முற்றும் முதுகு நோவ**
> **இருந்(து) இழைத்த இச் சிற்றிலை**

என்பது ஆண்டாள் வாக்கு.

ஆண்டாளும் தோழிகளும் இழைத்து இழைத்து அழகு செய்கிறார்கள், தாங்கள் கட்டிய வீட்டை. வீடு சிறியதாக இருந்தும் வாழ வசதியாக இருக்கவேண்டாமா? முற்றம் வேண்டும்; கூடம் வேண்டும்; அறைகள் வேண்டும்.

சின்னஞ்சிறு முற்றம் ஒன்றை அமைத்துக் கொள்கிறார்கள். வளையணிந்த சிறு கைகள் அழகிய அறைகளை எவ்வளவு பொறுமையுடன் அமைக்கின்றன! மனோபாவமும் கலந்து வேலைசெய்ய, நீண்ட கூடங்களுடன் ஒரு செல்வ நெடுமாடம் அமைந்துவிடுகிறது.

ஆனால் முடிவு என்ன? எதிர்பாராத நிலையில் கண்ணன் வருகிறான். நீலமேகம் ஒன்று வானத்திலிருந்து நழுவி வந்ததுபோல் வந்துவிடுகிறான். மழை பெய்ய வந்ததுபோல் வந்தமேகம் இரக்கமில்லாமல் அவர்கள் கட்டிய வீட்டை அழித்துவிடுகிறதாம்.

என்ன என்னவோ பேசினான்; என்ன என்னவோ செய்தான்; கடைசியாக, கட்டி முடித்த வீட்டையும் சிதைத்துவிட்டான். எனினும், அந்த முகத்தைப் பார்த்ததும் [illegible]ளுக்கு ஆத்திரம் ஏற்படவில்லை; வருத்தமும் போய் [illegible] ஏற்படுகிறது.

Koviloor Digital Library

என்ன மாயம்! என்ன மந்திரம்! 'எங்கள் சிறு வீட்டைச் சிதைக்கவேண்டாம்' என்று இவர்கள் வேண்டிக்கொண்டும் தீமை செய்யும் சிறுவன்பால் இச்சிறுமியருக்கு ஆசை பெருகுகிறது; மையல் ஏறுகிறதாம்.

'நாங்கள் உன்னைக் குறித்து உன் நெஞ்சு நோகும்படி ஒன்றும் உரைத்தோமில்லை. நீயோ நாங்கள் உழைத்துக் கட்டிய சிறு வீட்டைச் சிதைக்கிறாயே!' என்கிறார்கள். 'நீ அழித்தாயாகிலும் அதற்காக நாங்கள் உன் மேல் துளியும் கோபம் கொள்ளவில்லை; எங்கள் உள்ளம் ஓடி உருகுகிறது உன் தாமரைக் கண்களைக் கண்டதும்!' என்கிறார்கள். 'கள்ள மாதவா! கேசவா!' என்று கொஞ்சுகிறார்கள்.

'ஒரு பாவமும் அறியாத சிறு பெண்கள் நாங்கள்; எங்களுக்கு வருத்தம் உண்டாக்குவதால் என்ன பயன்?' என்று குறும்பு செய்த கண்ணனை நோக்கிக் கேட்கிறார்கள்:

> யாதும் ஒன்(று)அறி யாதபிள்
> ளைக ளோமைநீ நலிந்(து)என் பயன்?

[*பிள்ளைகளோமை - சிறு பெண்களாகிய எங்களை. நலிந்து - வருத்தமுறச் செய்து. என் பயன் - என்ன பயன்.*]

கண்ணன் ஒரு குறும்புப் புன்னகையுடன் நின்று கொண்டிருக்கிறான். கோதை சொல்லுகிறாள்: 'நாங்கள் விளையாடிக்கொண்டிருக்கிற முற்றத்திலே புகுந்து முகம் காட்டி நின்று புன்முறுவல் செய்து எங்கள் சிற்றிலோடு (சிறு வீட்டுடன்) சிந்தையையும் சிதைத்து விடுவாயோ?'

விளையாட்டுப் பருவத்திலே கோதை தோழியருடன் சிற்றில் (சிறு வீடு) இழைத்தது வெளிக்காட்சி; அந்தச் சிற்றிலைக் கண்ணன் சிதைத்தது மனக்காட்சி. இந்த மனக் காட்சியைப் பின்னாளில் நினைவூட்டிக்கொண்டு தன் பக்திக் காதலை ஆண்டாள் வெளியிடுவது நாச்சியார் திருமொழியின் இரண்டாம் திருமொழிப்பாசுரங்களாகப் பரிணமித்திருக்கிறது.

Koviloor Digital Library

இதனால் சின்னஞ் சிறுமியாக விளையாட்டு வேடிக்கை களில் பொழுது போக்கி வந்த அந்தப் பருவத்திலேயே இவளுக்குக் கண்ணனுடைய நினைவு ஏற்பட்டிருக்க வேண்டும் என்பது தெரியவருகிறது. மழலை மாறாத குழந்தைப் பருவத்திலேயே அவள் உள்ளத்தில், பெரியாழ்வார் மானசிகமாகவும் கவிதை வாயிலாகவும் வளர்த்து வந்த கோகுலச் சிறுவன் (கண்ணன்) இடம் பெற்றுவிடுகிறான் என்று ஊகிப்பது பொருத்தமே.

சிற்றில் இழைப்பதும், மண்சோறு சமைப்பதும், பதுமைகளும் செப்புகளும் வைத்து விளையாடுவதும் ஆகிய பிராயத்திலேயே தம் மகள் சங்கு, சக்கரம் முதலான பொருள்களை வரைந்து மகிழ்வதாகப் பெரியாழ்வாரும் பாடியிருக்கிறார். 'என் மகளின் பக்திதான் என்ன! விளையாட்டிலும் பக்திக்கு உரிய பொருள்கள்!' என்று இப்பெரியார் வியந்து கோதையின் பக்தி மனப்பான்மையை உறுதிப்படுத்தியிருக்கவேண்டும்.

கோதை தந்தையுடன் நந்தவனப் பணிபுரிந்ததற்கும், சிறு குடம் கொண்டு பூச்செடிகளுக்குத் தண்ணீர் பரிமாறியதற் கும் இவள் வாக்கிலே சான்றுகள் கிடைக்கவில்லை யெனினும், தந்தை விரும்பும் பணிகளைப் புரிந்தவண்ணம் கிருஷ்ணபக்தியை இவள் வளர்த்து வந்தாள் என்று கருதுவது பொருந்துவதே. இந்த நிலையில் குழந்தைப் பருவம் நழுவி மங்கைப் பருவம் வந்துவிடுகிறது.

மங்கையின் காதல்

தம் திருமகள் தன்னை அழகு செய்துகொண்டு கண்ணாடி பார்த்ததையும் பெரியாழ்வார் குறிப்பிடுகிறார். கோதை சூடிக்கொடுத்த சுடர்க்கொடியாகப் பரிணமித்த கதையின் விதையைப் பெரியாழ்வார் பாசுரங்களில் பார்க்கிறோம். மகளின் பக்திக் காதல் தந்தையின் பக்திச்

Koviloor Digital Library

காதலையும் வென்றுவிடுகிறது என்பதற்கு அகச்சான்றுகள் நாச்சியார் திருமொழியில் காணப்படுகின்றன.

ஆண்டாள் காறை என்ற கழுத்தணியைப் பூட்டிக் கொண்டு அந்த அழகைக் கண்ணாடியில் நோக்குவதையும், கைவளைகளைக் குலுக்கிப் பார்ப்பதையும், கூறைப் புடைவை கட்டிக்கொண்டு மணப்பெண்போல் நிற்பதையும், கொவ்வைக் கனிபோன்ற தன் அதரத்தை அழகு செய்து கொள்வதையும் பின்வரும் பெரியாழ்வார் வாக்கில் காண்கிறோம்:

காறை பூணும்; கண்ணாடி காணும், தன்
கையில் வளைகுலுக்கும்
கூறை உடுக்கும்; அயர்க்கும்; தன்
கொவ்வைச்செவ் வாய்திருந்தும்!

இந்த நிலையில் கோதையைக் கண்ட பெரியாழ் வாருக்கு ஒரு சிறு கவலையும் ஏற்பட்டிருக்க வேண்டும். உலகில் இல்லாத புருஷோத்தமனை அல்லவா கோதை காதலிக்கிறாள்? அத்தகைய பக்தியும் பெரியாழ்வாரின் உள்ளம் உகந்ததுதான். ஆனால் அந்தப் புருஷோத்தமனுக்குத் தன் அருமைத் திருமகளை மணம் செய்து கொடுப்பது எப்படி?

'என் மங்கைக்கு இசைந்த மணமகனைக் காண வேணுமே? எங்கே? எப்படி?' என்று அவர் சிந்தித்திருக்க வேண்டும்; வருந்தியிருக்கவேண்டும். கோதையோ புருஷோத்தமன் எப்போது தன்னை வந்து மணந்து கொள்வானோ என்ற ஒரே மனப்பான்மையுடன் இருக்கிறாள். இது பெரியாழ்வாரையும் பிரமிக்கச் செய்யும் மனநிலைதானே.

கண்ணனை அடையவேண்டும் என்று தானும் ஒரு கோபிகையாகி மார்கழி நோன்பு நோற்ற கோதை, காதற் கடவுளான மன்மதனை நோக்கி, 'நீ என்னைக் கண்ணனோடு சேர்த்து வைக்கவேணும்' என்று வேண்டிக்கொள்கிறாள். காமதேவன் எழுந்தருள வேண்டிய இடத்தைச் சோதித்து

Koviloor Digital Library

மணலால் அலங்கரித்து மேடையிட்டு அந்கத் காதற் கடவுளையும் அவன் தம்பியையும் வணங்குவதாக ஆண்டாள் பாசுரம் தெரிவிக்கிறது.

மன்மதன் மென்மையான தன் காலைக் கொண்டு நடக்கும் இடத்தில் பெரு மணல்களும் உறுத்தக்கூடும் என்று நொய் மணல்களாக ஆராய்ந்து அலங்கரித்து வட்டமாகக் கோலம் இடுகிறாளாம். 'காமன் தம்பி சாமன்' என்பர், கண்ணனைத் தொழும்போது அண்ணனாகிய பலதேவனை யும் சேர்த்துப் பேசுவதுபோல். மன்மதனை மாத்திரம் தொழுதால் போதாதென்று அவன் தம்பியையும் சேர்த்து, 'உன்னையும் உம்பியையும் தொழுதேன்' என்கிறாள்.

சிறிய வெண்மணல்களைக் கொண்டு வீதிகளை அலங்கரிப்பதும், நாட்காலை நீராடுவதும், சமித்துச் சுள்ளிகளை இட்டுத் தீ வளர்ப்பதும் காமன் நோன்பின் உறுப்புக்களாகும் என்ற குறிப்பையும் இவள் பாசுரத்தில் காண்கிறோம். ஊமத்தை மலர்களையும் முருக்கை மலர்களையும் இட்டு, மன்மதனை வணங்கும் குறிப்பும் காணப்படுகிறது. காமன் நோன்பின் வேறு விவரங்களையும் இப்பாசுரங்களில் காண்கிறோம்.

கோதையின் திருமணம் குறித்துப் பெரியாழ்வார் கவலை கொண்டிருப்பதைக் கோதையும் ஊகித்து அறிந்துகொண்டிருக்கவேண்டும். உலகத்தில் இல்லாத புருஷோத்தமனை மனம் பொருந்தி மணந்துகொள்ளத் துணிந்தவள் தன் மன நிலையைத் தெளிவுபடுத்திப் பாசுரமிட்டிருக்கிறாள்.

'நானா மனிதனுக்கு வாழ்க்கைப்படுவது? புருஷோத்தம னுடைய பத்தினி அல்லவா?' என்ற மனநிலையை,

மானிடவர்க்கென்று பேச்சுப்படில்,
வாழகில் லேன்கண்டாய் மன்மதனே!

[*வாழகில்லேன் - உயிர் வாழ்ந்திருக்க மாட்டேன்.*]

Koviloor Digital Library

என்ற கோதை வாக்கில் எவ்வளவு தெளிவாகக் காண்கிறோம்!''

வேள்விகளில் தேவேந்திரன் முதலான தேவர்களுக்கு ஹவிஸ் என்ற உணவைக் கொடுக்கிறார்கள் அல்லவா? அந்தத் தூய உணவை ஒரு காட்டு நரி வந்து காலால் கடந்தும் மூக்கால் மோந்தும் பாழாக்குவது பொருத்தமாகுமா?

அப்படியேதான் இருக்கிறது கண்ணபிரானுக்காகக் கிளர்ந்து எழுந்த தன் காதலை மானிடர்க்கு உரிமையாக்கு வதும் என்கிறாள்:

வானிடை வாழும்அவ்
வானவர்க்கு மறையவர்
வேள்வியில் வகுத்தஅவி,
கானிடைத் திரிவதோர்
நரிபுகுந்து கடப்பதும்
மோப்பதும் செய்வதொப்ப,

[*வானிடை - வானுலகத்தில். வகுத்தஅவி - கொடுத்த ஹவிஸ் என்ற உணவை. கானிடை - காட்டில். மோப்பதும் - மோந்து பார்ப்பதும்.*]

பகவானுக்கு உரிய தன்னை மானிடம் ஒருவனுக்கு வாழ்க்கைப்படுத்தவேண்டும் என்ற பேச்சு ஒன்று கிளம்புமேயானால், தனது உயிர் உடனே மாய்ந்துவிடும் என்கிறாள்.

'ஒரு நல்ல மாப்பிள்ளை பார்த்துக் கோதையைத் தாரை வார்த்துக் கொடுக்க வேண்டாமா?' என்று ஒரு பேச்சு எழுவது இயல்புதானே. 'கோதைக்கு இசைந்த மாப்பிள்ளை கிடைக்க வேண்டுமே? என்று பெரியாழ்வாரும் கவலையுற்றுப் பேசியிருக்கலாம். இந்த நிலையில் கோதையோ, 'அந்தப் பேச்சே எனக்கு விஷம்' என்று மன்மதனை நோக்கிப் பேசுகிறாள்.

Koviloor Digital Library

கடலில் மூழ்கிக் கொண்டிருப்பவன் புல்லைப் போன்ற ஓர் அற்பப் பொருளைக் கண்டாலும் பற்றிக் கொள்வதுபோல் கோதையும் தன்னைக் கண்ணனிடம் கொண்டு சேர்க்குமாறு காதல் தெய்வத்தை வேண்டிக்கொள்கிறாள். உண்மையில், கண்ணனை அடைவதற்குக் கண்ணன் காதல் ஒன்றுதானே துணையாக முடியும்? தேவதேவனை அடைவதற்குச் சூரியன் முன் மின்மினி போல் தோன்றும் காமதேவன் என்ற சிறு தெய்வத்தின் துணையும் அவசியமாகுமா?

கோபியருடன் கோதை

கடைசியாக, கண்ணனைப் பிரிந்திருந்த கோபியரே தனக்கு வழி காட்டக்கூடியவர் என்ற நினைவு மேலிடுகிறது. ஒரு சமயம் அவர்கள் தங்கள் தாபத்தைத் தணித்துக் கொள்வதற்குக் குளிர்ந்த நீராடுவோம் என்று தீர்மானித்து ஒரு சுனைக்குப் போகிறார்கள். அவர்களோடு தானும் பனி நீராடப் போகிறாள் கோதை, தன் தாபத்தையும் தணித்துக் கொள்ளலாமென்று.

கண்ணன் அவர்கள் நிழலைப் பற்றிக்கொண்டு போய் அவர்களுக்கு முன்னமே அந்தப் பொய்கைக் கரையை அடைகிறான். அவன் வந்ததை இவர்கள் அறிந்துகொள்ள வில்லை! அவர்கள் நீராடும்போது கரையில் விட்டு வைத்திருந்த ஆடை ஆபரணங்களைச் சிறுபிள்ளையான கண்ணன் வாரி எடுத்துக் கொண்டு குருந்த மரத்தின்மீது ஏறி, மறைந்து நிற்கிறான்.

நீராடி முடிந்த பின் ஆய்ச்சியர்கள் கண்ணனை இறைஞ்சி அருள் பெறுகிறார்கள். இறைவன் நம்மை அடிபிடித்து வந்து, பற்றற்ற நிலையில் கண்டு அருள் புரிகின்றான் என்ற பொருள் புதைந்த இந்த ஸ்ரீ கிருஷ்ண லீலையில் ஆண்டாளின் உள்ளம் ஈடுபடுகிறது. இந்த லீலையில் தானும் பங்கு கொள்வதாகப் பாவித்துப் பேறு பெறுகின்றாள்.

Koviloor Digital Library

தோழியும் நானும் தொழுதோம்;
துகிலைப் பணித்தரு ளாயே!

என்ற வாக்கிலே, கோதை, தானும் கோபியருள் கோபியாக மாறி விடுவதைக் காண்கிறோம்.

குறி பார்த்தல்

ஒருவன் தனக்கு நேரும் நன்மை தீமைகளை முன்கூட்டியே தெரிந்துகொள்ள விரும்பிக் குறி பார்க்கும் வழக்கம் அந்தக் காலத்திலும் உண்டு; இந்தக் காலத்திலும் உண்டு. கோதையும் கண்ணன் தன்னை எப்போது மணந்து கொள்வான் என்பதை அறியக் குறி பார்த்துக்கொள்கிறாள்.

குறி பார்ப்பதில் கூடல் இழைத்தல் என்பது ஒரு முறை. வட்டமாகக் கோடு கீறி, அதற்குள்ளே சுழி சுழியாகச் சுற்றிலும் சுழித்து, இரண்டு இரண்டு சுழியாகக் கூட்டிப் பார்ப்பார்கள்.

இரட்டைக் கணக்காக முடிவு பெற்றால் காதலனை அடையக் கூடும் என்ற குறி கிடைத்துவிட்டதாகக் காதலி நம்புகிறாள். ஒற்றைக்கணக்காக முடிவுற்றால் காதலனை அடைய முடியாது என்று நினைத்துக் கொள்கிறாள். இப்படி ஒரு சங்கேதம் வைத்துக் கொண்டு குறி பார்ப்பதைத்தான் கூடல் இழைத்தல் என்றும், கூடற்குறி என்றும் சொல்லுகிறார்கள்.

கூடல் இழைத்தல் என்ற துறையில் நாச்சியார் திருமொழியின் நான்காம் பகுதி அமைந்திருக்கிறது.

வாய்த்த காளியன்
மேல்நடம் ஆடிய
கூத்த னார்வரில்,
கூடிடு கூடலே!

என்றும்,

காவலன், கன்று
மேய்த்து விளையாடும்
கோவ லன்வரில்,
கூடிடு கூடலே!

என்றும் பாடுகிறாள்.

Koviloor Digital Library

அழகிய கோபிமார்களின் நெஞ்சினுள் குழைந்து இருக்கிறானாம் கண்ணன். (ஜீவாத்மாக்களின் நெஞ்சினுள் பரமாத்மா இருக்கும் இருப்பைக் குறிப்பிடுவது கோபியர் கதை.) அதே கண்ணன்தான் தன்னை ஈடுபடுத்திய அழகன் என்கிறாள்:

பழகு நான்மறை இன்பொரு ளாய், மதம்
ஒழுகு வாரணம் உய்ய அளித்தஎம்
அழக னார், அணி ஆய்ச்சியர் சிந்தையுள்
குழக னார்வரில், கூடிடு கூடலே!

[*மதம் ஒழுகு வாரணம் - மதம் ஒழுகு யானை; (இங்கே) கஜேந்திரன் என்ற யானை. அணி ஆய்ச்சியர் - அழகிய கோபிமார். குழகனார் - குழைந்திருக்கும் இளைஞர்.*]

குயிலே! கூவாய்

இப்படியெல்லாம் கூடல் இழைத்துக் குறி பார்த்து வரும் கோதை தன் வீட்டுப் புறக்கடையின் மலர் வனத்திலே பெடையோடு களித்திருக்கும் குயிலைப் பார்க்கிறாள். அந்தச் சோலையில் புன்னை, குருக்கத்தி, கோங்கு, செருந்தி முதலான மரங்களும் காணப்படுகின்றன.

புன்னை குருக்கத்தி
ஞாழல் செருந்திப்
பொதும்பினில் வாழும் குயிலே!

[*ஞாழல் - கோங்கு மரங்கள். பொதும்பினில் - சோலையில்.*]

என்று அந்தக் குயிலை அழைத்து, 'என் பவள வாயன் வரக்கூவாய்' என்று வேண்டிக்கொள்கிறாள். 'விரைவாகக் கூவவேணும்' என்று துரிதப்படுத்துகிறாள்.

அவன் தனக்கு உருக்காட்டவில்லையென்றும், எனினும் உள்ளம் புகுந்து, தன்னை நைந்து போகும்படி ஹிம்ஸிக் கிறான் என்றும் சொல்லுகிறாள். இப்படி ஹிம்ஸித்த போதிலும் தான் முடிந்துபோக விடாமல் நாள்தோறும் உயிரைப் பெய்து தத்தளிக்கச் செய்து வேடிக்கை பார்க்கிறான் என்கிறாள்;

Koviloor Digital Library

வெள்ளை விளிசங்(கு) இடம் கையில் கொண்ட
விமலன் எனக்(கு) உருக்காட்டான்;
உள்ளம் புகுந்(து) என்னை நைவித்து நாளும்
உயிர்ப்பெய்து கூத்தாட்டுக் காணும்!

[வெள்ளை விளிசங்கு - வெண்ணிறமுள்ள அழைக்கக் கூடிய, சங்கு. இடம் கையில் - இடது கையில். விமலன் - பரிசுத்தனான புருஷோத்தமன். உருக்காட்டான் - தன் உருவத்தைக் காட்டுவதில்லை. நைவித்(து) - நைந்து போகச் செய்து. நாளும் - நாள்தோறும். உயிர்ப்பெய்து - உயிரைப் பெய்து பெய்து. கூத் தாட்டுக் காணும் - கூத்தாடச் செய்து வேடிக்கை பார்க்கிறான்.]

இந்த வாக்கிலே கோதையின் காதல் உள்ளம் உலகத்தில் இல்லாத ஒருவனைக் காதலித்து என்ன பாடுபடு கிறது என்பதைக் காண்கிறோம். காதலின் ஹிம்ஸையுடன் காதலின் நம்பிக்கையையும் இங்கே காண்கிறோம். 'என் வேங்கடவன் வரக் கூவாய்!' என்று குயிலை வேண்டிக் கொள்வதிலேயே நம்பிக்கையும் தொனிக்கிறதல்லவா?

'தலைவன் வர எங்கும் காணேன்' என்று சொல்லிக் கொண்டே, 'என் கரு மாணிக்கம் வரக்கூவாய்!' என்று குயிலை வேண்டிக்கொள்கிறாள்.

காதலி யோ(டு)உடன் வாழ்குயி லே!என்
கருமா ணிக்கம் வரக்கூவாய்

என்று கூறுவதில், தானும் காதலனோடு வாழ விரும்புவது இயல்புதானே என்பது குறிப்பு.

அன்பர்களைப் பிரிவதால் உண்டாகும் துன்பத்தைக் குயிலும் அறிந்திருக்கிறது என்கிறாள். எனவே, என் புண்ணியனை இங்கே வரும்படி கூவவேணும் என்று குயிலை வேண்டிக்கொள்கிறாள்:

அன்பு உடையாரைப் பிரிவுறு நோயது
நீயும் அறிதி குயிலே!
பொன்புரை மேனிக் கருளக் கொடியுடைப்
புண்ணிய னைவரக் கூவாய்!

Koviloor Digital Library

[பிரிவு உறுநோய் - பிரிவதால் உண்டாகும் வருத்தம். அறிதி - அறிவாய். பொன் புரை மேனி - பொன் போன்ற அருமைத் திருமேனியுடைய. கருளக் கொடி - கருடக் கொடி.]

நினைவும் கனவுகளும்

தன் காதலனை நினைத்து நினைத்து இவள் உருகிக் கொண்டிருப்பதையும், கண் உறக்கம் இல்லாமல் காலம் கழிப்பதையும் இவள் வாக்கிலேயே கண்டு கொள்ளலாம்:

என்(பு)உருகி இனவேல் நெடுங்கண்கள்
இமைபொ ருந்தா பலநாளும்;
துன்பக் கடல்புக்கு வைகுந்தன் என்ப(து) ஓர்
தோணி பெறா(து) உழல்கின்றேன்

[என்பு - எலும்பு. இனவேல் நெடுங்கண்கள் - சிறந்த வேல் போன்ற நீண்ட கண்கள். இமை பொருந்தா பலநாளும் - நெடுங்காலமாக இமை பொருந்தி மூடிக் கிடக்கவில்லை. துன்பக் கடல் புக்கு - துன்பக் கடலில் அழுந்தி. உழல்கின்றேன் - தத்தளித்துத் தடுமாறிக்கொண்டிருக்கிறேன்.]

தோணி பெறாது காதல் வெள்ளத்திலே தத்தளித்துக் கொண்டிருக்கும் கோதைக்கு ஏதாவது ஒரு தெப்பமாவது கிடைக்கிறதா? கோதைக்குக் கனவிலே காதலன் முகம் காட்டுகிறான். பொற் குடங்களையும் தோரணங்களையும் கண்டு களிக்கிறாள் கோதை. மனம் பொருந்திய மணம் இக்கனவிலே நடைபெறுகிறது.

ஆனால் கண் விழித்ததும் துயரம் அதிகரிக்கிறது. மீண்டும் காதல் வெள்ளம், துன்ப வெள்ளமாகவே காண்கிறது. 'அந்தோ! என் திருமண வைபவம் கனவாகவா கழிந்தது? தெய்வம் இப்படியா வஞ்சித்தது?' என்று வருந்துகிறாள்.

உறக்கமும் கொள்ளாமல், பொழுது போக்குவதற்கும் உபாயம் தோன்றாமல், வருந்திக் கொண்டிருக்கிறாள். அப்போது கண்ணனுடைய இடது கையிலுள்ள சங்கின் நினைவு வருகிறது. உடனே ஒரு பகற் கனவு.

Koviloor Digital Library

திருமால் பாஞ்ச சன்னியம் என்ற சங்கை வாயில் வைத்து ஊதிக்கொண்டே வருகிறான். அந்த வாய்ச் சுவையை அந்தச் சங்கிடம் கேட்டறிய விரும்புகிறாள் கோதை.

கருப்பூரம் நாறுமோ?
கமலப்பூ நாறுமோ?

[*நாறுமோ - பரிமளிக்குமோ. கமலப்பூ - தாமரைப்பூ.*]

என்று தொடங்கும் திருமொழிப் பாசுரத்தை அறியாதார் யார்?

சங்கின் பாக்கியத்தைப் புகழ்கிறாள். அழகைப் புகழ்கிறாள்; கண்ணன் கைமேல் அழகாக வீற்றிருப்பதைப் புகழ்கிறாள். 'உன் பெருமையே பெருமை; உன் செல்வமே செல்வம்!' என்று கொண்டாடுகிறாள்.

செல்வப் பெருங் சங்குடன் உருவெளித் தோற்றமாய்க் காட்சியளித்த இறைவன் மறைந்துவிடுகிறான். அந்தச் சங்கம் இவள் கேட்ட கேள்விகளுக்கு மறுமாற்றம் ஒன்றும் சொல்லாமலே மறைந்து போகிறது. மறுபடியும் ஆற்றாமைதான்; பொறுக்க முடியாத ஆற்றாமை.

கார்காலத்தில் கோதை

ஆண்டாள் மேகத்தைத் தூது விடுகிறாள். காலம் கார்காலமாக இருக்கிறது. மேகங்கள் மின்னி முழங்குகின்றன. தலைவன் மீண்டு வரும் காலத்தைக் குறிப்பிடும்போது, 'கார்காலத்தில் தவறாது வருவேன்' என்று சொல்லிப்போவது உண்டு. இத்தகைய காதற் காட்சிகளைத் தமிழ் இலக்கியத்திலே காணலாம்.

ஆண்டாளுக்கும் இந்த நினைவு வருகிறது. தன்னுடைய தலைவனும் கார்காலத்தில் தவறாது வருவதாய்க் கூறிப் போனதாகவும் ஒரு நினைவு. அந்தக் கூற்றுக்கு இணங்க, அந்த மேகவண்ணனும் மேகங்களோடு வந்திருக்கக் கூடுமென்று நம்புகிறாள். 'மேகங்களே! திருமாலும் வந்தானோ?' என்று கேட்கிறாள்.

Koviloor Digital Library

மேகம் பதில் சொல்லவில்லை; திருமாலும் தென்படவில்லை. மறுபடியும் மேகங்களை நோக்கி, 'நீங்கள் என்னுடைய நிலையைத் திருவேங்கட மலைமீது அர்ச்சாவதாரமாக எழுந்தருளியிருக்கும் என் காதலனுக்கு அறிவிக்க வேணும்' என்று வேண்டுகிறாள்.

இந்த மேகவிடு தூதிலே, காதலால் தவித்துக் கொண்டிருக்கும் கோதை எப்படி ஒருவாறு ஆவி காத்திருக்கிறாள் என்பது புலனாகிறது.

குளிர்அருவி வேங்கடத்(து) என்
கோவிந்தன் குணம்பாடி,
அளியத்த மேகங்காள்!
ஆவிகாத் திருப்பேனே?

[அளியத்த - அருள் புரியதக்க. கேமங்காள் - மேகங்களே. இருப்பேனே - இருப்பேனோ?]

ஆண்டாளின் பாசுரங்களில் தெய்வ அழகுடன் இயற்கைப் பொருளழகும் பொலிகின்றது. மேகவிடு தூதில் மேகங்களைத் தான் எவ்வளவு அழகாக வருணிக்கிறாள்! 'வானப்பரப்பு முழுவதும் நீலநிறமான மேற்கட்டியை விரித்துக் கட்டினாற்போல் மேகங்கள் பரவியிருப்பதாகத் தொடங்கும் வருணனையைத்தான் பாருங்கள்.

ஆனால் இயற்கைப் பொருள்களின் அழகிற்காக ஆண்டாள் இப்பொருள்களைக் குறிப்பிடவில்லை. இப்பொருள்களினூடு தன் அழகனது தெய்வ அழகைத்தான் காண்கிறாள். 'மேகத்தோடு மேகமாக என் திருமாலும் (என் மேகவண்ணனும்) வந்தானோ?' என்று மேகவிடு தூதின் முதல் பாசுரத்திலே கேட்கும் கேள்வியிலேயே ஆண்டாள் காணும் இயற்கை அழகின் ரகசியம் புலனாகிறது.

மேகங்கள் பொழிகின்றன. கார்காலத்தில் மலரக்கூடிய பூக்கள் மலர்ந்து பொலிகின்றன. சில மலர்கள் நன்றாக

Koviloor Digital Library

மலர்ந்திருக்கின்றன. சில மலரத் தொடங்குகின்றன. சில அரை மலர்ச்சியாக இருக்கின்றன. இப்பூக்களெல்லாம் அன்பனை நினைவூட்டி இவள் ஆற்றாமையைத்தான் அதிகப்படுத்து கின்றன.

மழைக்காலத்தில் களித்துத் திரியும் பிராணிகளும் இறைவ னுடைய செளந்தரியத்தை நினைவூட்டி, ஆற்றாமையை, 'உயிர் கொண்டு தப்பிப் பிழைக்க முடியாதோ?' என்ற அவஸ்தை நிலைக்குக் கொண்டுபோய்விடுகின்றன. 'அன்பனுடைய சூழ்ச்சி என்னே! தான் நேராக வராமல் தன் வடிவை நினைவூட்டும் இந்திர கோபம் (ஒருவகைப் பட்டுப் பூச்சி) முதலான பிராணிகளை அனுப்பி வைக்கிறானே!' என்று சொல்லத் தோன்றுகிறது ஆண்டாளுக்கு.

திருமாலிருஞ்சோலை என்ற அழகர் மலையின் தாழ்வரையிலே கொடி முல்லைகள் அரும்பி அழகனுடைய புன்சிரிப்பை நினைவூட்டுகின்றன. சில பூக்கள் சிரிக்கின்றனவாம், 'எங்களுக்கு நீ தப்பிப் பிழைக்க முடியாது!' என்று பரிகசிப்பது போல. 'எல்லாம் அவன்; அந்தப் பெரிய கைகாரன் நம்மைப் பிடித்துக்கொள்ள வைத்திருக்கும் வலைதான்!' என்று தோன்றுகிறது. ஆனால் அவன் எங்கே?

மலர்கள், வண்டுகள், சுனைகள் எல்லாம் சோலை மலைப்பொழில்களில் அழகனுடைய அழகை நினைவூட்டி ஹிம்சிக்கின்றன. 'அந்த அழகனைக் காணவேண்டும்; அல்லது இந்த இயற்கையழகுக் காட்சிகளுக்குத் தப்பிப் பிழைக்க வேண்டும்!' என்பது ஆண்டாளின் காதல் நிலை.

கண்ணன் கைவிட மாட்டான் என்ற நம்பிக்கை காதல் வெள்ளத்தில் தோணியாக உதவத்தான் உதவுகிறது. இந்த நம்பிக்கைக்குக் கோதை தந்தையான பெரியாழ்வார்மீது கொண்டிருக்கும் பக்தி விசுவாசமும் ஒரு பெருங் காரணமாகும்.

Koviloor Digital Library

பகவான் தனக்கு வசப்படமாட்டான் எனினும், பெரியாழ்வாருக்கு வசப்படாமல் இருக்க முடியாது என்ற நம்பிக்கை ஆண்டாள் உள்ளத்தின் ஆழத்திலே வேரூன்றிக் கிடக்கிறது. 'பூச்சூட்ட வாராய்; நீராட வாராய்!' என்றெல்லாம் அவர் அழைத்ததும், கண்ணன் ஓடி வந்ததாகவே அவளுக்கு ஞாபகம்.

ஒரு பூவை இட்டு வரச் செய்யவும், ஓர் இசையைப் பாடி, இறைவனைச் சேவிக்கவும் ஆற்றல் உள்ளவர் பெரியாழ்வார் என்ற கோதையின் நம்பிக்கைக்கு நாச்சியார் திருமொழியில் அகச் சான்று கிடைக்கிறது. அத்தகைய பெரியாரின் தொடர்பினால் தனது நோக்கம் இனிது நிறைவேறும் என்ற நம்பிக்கையும் இவளது பக்திக்காதலுடன் சேர்ந்து, ஒரு தெப்பம்போல் உதவியது; காதல் வெள்ளத்தில் நீச்சும் நிலையும் காணாது தத்தளித்துக் கொண்டிருந்த கோதைக்கு.

ஆண்டாளும் திருவரங்கமும்

ஆண்டாளின் நிலைகண்ட பெரியாழ்வார் ஒரு சமயம் நூற்றெட்டுத் திருப்பதிகளில் சிறந்ததான திருவரங்கத்தில் எழுந்தருளியிருக்கும் அழகிய மணவாளப் பெருமானின் சிறப்பியல்புகளை எடுத்துக் கூறினாராம். கோதையும் உடனே அரங்களைச் சென்று அடைய விரும்பினாளாம்.

நூற்றெட்டுத் திருப்பதிகளிலும் காட்சி தரும் மூர்த்திகளில் திருவரங்கனையே தன் காதலுக்குரிய கண்ணனாகக் கோதை தேர்ந்தெடுத்ததாகவும், அந்தக் காதலை அவள் தந்தையிடம் தெரிவித்ததாகவும், பெரியாழ்வார் திருவரங்கத்துக்கு அவளை முத்துச் சிவிகையில் அழைத்துச் சென்றதாகவும், அங்கே அப்பெருமாள் அவள் விரும்பிய கண்ணனாகவே காட்சியளித்து அவளை ஆட்கொண்டதாகவும் வழங்கி வரும் குருபரம்பரைக் கதை, நாச்சியார் திருமொழி

Koviloor Digital Library

யில் அவள் வாக்கிலே வெளிப்படும் குறிப்புக்களிலிருந்து வளர்ந்ததொரு கதைதான்' என்று துணிந்து கூற இயலவில்லை.

திருவரங்கத்துச் செல்வன் எல்லாப் பொருள்களிலும் அந்தராத்மாவாக நிற்பவன் என்றும், அவன் ஏற்கெனவே தன் கைப்பொருள்களையெல்லாம் கைக்கொண்டு கடைசியாகத் தன் மெய்ப்பொருளையும் கொள்ளை கொண்டதாகவும் கோதை பாடியிருக்கும் ஒரு பாசுரத்திலே, ஆண்டாள் திருவரங்கனால் ஆட்கொள்ளப் பெற்றாள் என்ற கதைக்கு ஆதாரம் கிடைத்திருக்கக் கூடும்.

கைப்பொருள்கள் முன்னமே
கைக்கொண்டார், காவிரிநீர்
செய்ப்புரள ஓடும்
திருவரங்கச் செல்வனார்;
எப்பொருட்கும் நின்று, ஆர்க்கும்
எய்தாது, நான்மறையின்
சொற்பொருளாய் நின்றார்என்
மெய்ப்பொருளும் கொண்டாரே!

[*செய்புரள ஓடும் - நன்செய் என்ற பயிர் நிலங்களில் எல்லாம் ஓடிப் புரளும்படி நீர்வளம் மிகுந்த. எப்பொருட்கும் நின்று - எல்லாப் பொருள்களிலும் உள்ளுறை பொருளாக, அதாவது அந்தராத்மாவாக, நின்று. ஆர்க்கும் எய்தாது - எவராலும் அடையப் பெறாமல். நான்மறையின் சொற்பொருளாய் - நான்கு வேதங்களிலும் உள்ள சொற்களுக்கு உட்பொருளாகி.*]

இப்பாசுரத்தில், 'என் மெய்ப் பொருளும் கொண்டாரே' என்பதற்கு, 'என் மெய் அல்லது உடம்பாகிய பொருளையும் கொண்டார்' என்று பொருள் கொள்கிறார்கள். 'அவர் என் கைப் பொருள்களையெல்லாம் கைக் கொண்டபின் உடம்பு ஒன்றுதான் எனக்குக் கைம் முதலாக மிஞ்சியிருந்தது; அதையும் கடைசியாகக் கைக்கொண்டார்' என்ற பொருள் திருவரங்கனாகிய அழகிய மணவாளனோடு கோதை கலந்து மறைந்தாள் என்ற கதைக்கு ஆதாரம் என்று சொல்லவும் கூடும்.

Koviloor Digital Library

கோதை மறைந்ததும் பெரியாழ்வார் பெரிதும் வருந்தி மனம் பதறிக் கதறியதாகவும் கதை வழங்குகிறது.

ஒருமகள் தன்னை யுடையேன்,
உலகம் நிறைந்த புகழால்
திருமகள் போல வளர்த்தேன்;
செங்கண்மால் தான்கொண்டு போனான்!

என்ற பெரியாழ்வார் வாக்கையும் இக்கதைக்கு ஆதாரமாகக் காட்டலாம்.

கோதை, திருவரங்கத்தில் அழகிய மணவாளனோடு கலந்து மறைந்தபின் பெரியாழ்வார் ஸ்ரீ வில்லிபுத்தூருக்குப் போய் தமது கைங்கரியத்தைத் தொடர்ந்து செய்து கொண்டிருந்தார் என்றும், காலம் செல்லச் செல்ல ஒருவாறு மனம்தேறிக் கைங்கரியத்தில் ஈடுபட்டவாறே கதிபெற்றார் என்றும் சொல்லுகிறார்கள். அவர் வில்லிப்புத்தூருக்குத் திரும்பி வந்து, தம் இல்லத்திற்குள் நுழைந்ததும் தம் திருமகள் இல்லாத அந்த இல்லத்தைக் கண்டு பெரிதும் வருந்தியிருக்கக் கூடுமல்லவா?

அத்தகைய பாட்டு ஒன்றையும் குரு பரம்பரைக் கதைக்கு ஆதாரமாகக் காட்டலாம்;

நல்லதோர் தாமரைப் பொய்கை
நாள்மலர் மேல்பனி சோர
அல்லியும் தாதும் உதிர்ந்திட்(டு)
அழகழிந் தால்ஒத்த தாலோ!
இல்லம் வெறியோடிற் றாலோ!
என்மக ளைஎங்கும் காணேன்!

[*நாள் மலர் மேல்* - அன்றலர்ந்த தாமரைப் பூவின் மேல். *பனி சோர* - பனி சொரிய.]

ஆனால் ஆண்டாளின் 'என் சரிதம்' இப்படி முற்றுப் பெறுவதாகத் தோன்றவில்லை. 'மெய்ப் பொருளும்

Koviloor Digital Library

கொண்டாரே' என்பதற்கு, 'என் உண்மைப் பொருளாகிய ஆத்மாவையும் கொள்ளை கொண்டார்' என்று பொருள் கொள்வதே பெரிதும் பொருந்துவதாகும். ஏனென்றால், இப்படிக் கூறிய பின்பும், 'அவருடைய மேன்மை எங்கே? என்னுடைய கீழ்மை எங்கே?' என்ற நினைவு கோதைக்கு வருவது போலவும், அத்தகைய நினைவுகளுக்கிடையே திருவரங்கத்துச் செல்வனார் முன்பு பேசியிருக்கும் பேச்சுக்களை மறக்கவே முடியவில்லை என்ற எண்ணம் வருவது போலவும் பாசுரங்கள் அமைந்திருக்கின்றன.

'உன்னைப் பிரியேன்; பிரிந்தால் ஆற்றேன்' என்று காதலன் காதலிக்கு உறுதி கூறுவது உண்டல்லவா? அப்படியே திருவரங்கச் செல்வனும் இந்தக் காதலிக்கு ஏதேதோ சொல்லியிருந்தானாம். அந்த வார்த்தைகளை நெஞ்சிலிருந்து பேர்த்து எறியப் பார்த்தாலும் முடியவில்லையே என்கிறாள்.

தேசுடைய தேவர்
திருவரங்கச் செல்வனார்
பேசி யிருப்பனகள்
பேர்க்கவும் பேராவே!

[*தேசு உடைய - ஒளிமயமாகிய. பேசியிருப்பனகள் - பேசியிருக்கும் பேச்சுக்கள்.*]

கரைபுரண்ட காதல்

ஸ்ரீரங்கநாதனை எண்ணி யெண்ணிக் கதறிய பின்பும் அவன் உடனே வந்து அருள் புரியவில்லை என்பது போலவும், தானே அவன் உள்ள இடத்திற்குப் போவதென்றால் அதற்குச் சக்தி இல்லை என்பது போலவும், பிறகு இந்நிலையிலும் கோதை தன்னிடம் பரிவுள்ளவர்களை நோக்கி, 'நீங்கள் என்னைக் கண்ணனுடைய நகரமாகிய வடமதுரைக்குப் பக்கத்திலே கொண்டு போய்ச் சேர்த்துவிடுங்கள்' என்று வேண்டுவது போலவும் பாசுரம் அமைந்திருக்கிறது.

Koviloor Digital Library

கோதை அவர்களை நோக்கி, 'என்னை ஆய்ப்பாடியிலே கொண்டு சேர்த்துவிடுங்கள்; அங்கே மாயனைக் கண்டால் இந்தக் காதல் நோய் தலை மடங்கும்' என்கிறாள். பிறகு, 'என்னை யமுனைக்கரையிலே கொண்டு போட்டு விடுங்கள்!' என்றும் சொல்லுகிறாள்.

கண்ணன் வாழ்ந்த அந்த அவதார காலத்திற்கு உள்ளம் பாய்ந்து சென்றுவிடுகிறது. 'கடம்ப மரத்தின் மேல் ஏறி, மடுவில் குதித்துக் காளிய நாகத்தின் படத்தின் மேலே ஒரு நடனப் பாய்ச்சல் பாய்ந்து, ஒரு யுத்த நடனம் செய்தானே, அந்த மடுவின் கரையில் என்னைக் கொண்டுபோய் விட்டு விடுங்கள்!' என்கிறாள்.

'பசுக்கள் பிழைக்க மழை தடுத்துக் குடை பிடித்தானே கண்ணன் அந்தக் கோவர்த்தன மலைக்கடியில் என்னைக் கொண்டுபோய்ச் சேர்த்து விடுங்கள்!' என்கிறாள்.

இப்படியெல்லாம் இவள் பிரிவாற்றாது வருந்திக் கொண்டிருக்கும்போது, இவள் வளர்த்த கிளிப்பிள்ளை ஒன்று இவள் முன்பு கற்பித்து வைத்திருந்த காதலன் பெயரைச் சொல்லுகிறதாம். அதைக் கேட்டதும், 'என்னைத் துவாரகையிலே சேர்த்து விடுங்கள்!' என்கிறாள் காதலி.

கண்ணபிரான் இருக்கும் ஏதாவது ஓரிடத்தில் தன்னைக் கொண்டுபோய்ச் சேர்த்துவிடுமாறு உறவினரை வேண்டிக் கொண்டவள், அப்படிச் செய்ய முடியவில்லையென்றால் அவரிடமிருந்து நினைவுக் குறியாக ஏதாவது ஒரு பொருளைக் கொண்டு வந்தாவது தரவேண்டும் என்கிறாள். கண்ணனுடைய காட்சியிலேயே தான் பழகிக் கிடப்பதாகச் சொல்லுகிறாள்.

'அழுதாலும் உருக்காட்டவில்லை. தொழுதாலும் உருக்காட்டவில்லை; என்றாலும் அவன் என்னைச் சுற்றிச் சுழன்ற வண்ணமாக இருக்கிறான்' என்றவள், 'இவள் ஒருத்தி இருக்கிறாளோ? இறந்தே போய்விட்டாளோ?' என்றுகூடக்

Koviloor Digital Library

காதலன் விசாரிக்கவில்லையே! என்கிறாள். 'என்னிடமிருந்து எல்லாவற்றையும் கொள்ளை கொண்டவனுக்குத்தான் என்ன குறும்பு!' என்று குமுறுகிறாள்.

ஆயர்பாடிக்கு அணிவிளக்கு, எல்லாருக்கும் நன்மை விளைக்கும் பெருமான்; ஆனால் கோதைக்கோ அல்லல் விளைத்த பெருமான்! இப்படிக் கூறுவதில் இவள் காதலின் பேராழம் எவ்வளவு தெளிவாகத் தெரிகிறது! அல்லல் விளைத்த பெருமானே ஆண்டாளுக்குப் பெரும் பேறும் விளைக்கின்றான்!

இவள், தான் பெற்ற தனிப்பெரும் பாக்கியத்தை, வினாவிடையாகப் பேசுவதுடன் நாச்சியார் திருமொழி முற்றுப் பெறுகின்றது. 'கண்ணனைக் கண்டதுண்டோ?' என்பது வினா; 'ஓ! நன்றாகக் கண்டதுண்டு' என்பது விடை. 'எங்கே?' 'கண்ணனது பல திருவிளையாடல்களுக்கும் ஒரு களமாக விளங்கிய பிருந்தாவனத்திலே.'

ஏதோ ஒரு சிறைக் கூடத்திலே கட்டுண்டு கிடப்ப வனைப்போல் பரமபதத்திலே ஒடுங்கிக் கிடந்த பெருமான் இந்நிலத்திலே கால் தோயப் பீதாம்பரம் புழுதி படியத் திரிந்து, கண்ணனாக விளையாடி, மக்களுக்கு அருள் புரிந்தான் என்ற கதை பெரியாழ்வார் வாயிலாகப் புத்துயிர் பெற்று, ஆண்டாளை வசீகரித்து, ஒரே காதல் வெள்ளமாகி, பக்திப் பயிரைப் பல நூற்றாண்டுகளாக வளர்த்து வந்திருக்கிறது.

கோதை, கண்ணனைக் கடைசியாகக் கண்டுபிடித்தாளே அந்தப் பிருந்தாவனம், கோதை கண்முன் வில்லிபுத்தூருக்கே ஓடிவந்துவிடுகிறது.

கணங்களோடு மின்மேகம்
　　கலந்தாற்போல, வனமாலை
மினுங்கநின்று விளையாட
　　விருந்தாவனத்தே கண்டோமே!

Koviloor Digital Library

என்று இவள் உள்ளமே, 'கண்ணனைக் கண்டீரோ?' என்ற இவள் கேள்விக்கு விடை தருகின்றது!

தோழன்மாருடன் ஒரு வசீகரமான நீலமேகம் விளையாடுவதுபோல் விளையாடிக்கொண்டிருக்கிறானாம் கண்ணன். நீலமேனிக்குப் பரபாகமாய் மின்னொளி விசுகிறதாம் அவன் அணிந்துகொண்டிருக்கும் வனமாலை. அந்த மாலை அசைய அசையப் பிள்ளைகளோடு விளையாட்டு இடையறாது நடைபெறுகின்றது, பக்தி என்ற பிருந்தாவனத்திலே. அன்றும் இன்றும் என்றும் நடைபெறுகின்ற அற்புதத் திருவிளையாட்டு.

தன்நேர் ஆயிரம் பிள்ளைகளோடு நடைபெறும் இந்த விளையாட்டிலே, கண்ணன் மார்பிலே புரளும் அந்த வன மாலையாக அமைந்துவிட வேண்டும் என்று ஆசைப்படுகிறது கோதையின் காதல். அந்த மேகத்திற்கு மின்னலாகவும் அமைந்துவிடுகிறாள், கோதை என்பதற்கும் நாச்சியார் திருமொழி சான்று தருகிறது எனலாம்.

தன்னுடைய காதலின் இந்த மகத்தான லட்சியத்தை நிறைவேற்றிக்கொள்வதற்கு ஆண்டாள் நோற்ற நோன்புதான் பாவை நோன்பு என்ற மார்கழி நோன்பு. இந்த நோன்பைத்தான் எவ்வளவு புதுமையாகப் புரட்சிகரமாக நோற்கின்றாள்!

★

Koviloor Digital Library

5

நோன்பா, நாடகமா?

கண்ணன்மீது காதல் கொண்ட ஆண்டாள் அவனை அடைவதற்கு என்ன செய்யக்கூடும் என்று ஆலோசனை செய்து பார்த்தாள். கண்ணபிரானை நோக்கி நோன்பு நோற்ற ஆயர் மங்கையரின் கதையைக் கேட்டிருந்தாள். பெரியாழ்வாரின் இல்லமும் நந்தவனமும் பாகவதர்க்கெல்லாம் பொது நிலையம் அல்லவா?

நோன்பும் நியமங்களும்

நம் பாவைக்குச் செய்யும் கிரிசைகள் (கிரியைகள்) கேளீரோ? என்ற செய்யுட் பகுதி, உள்மனத்திலிருந்து ஏதோ ஒரு மந்திரம்போல் எழுந்தது. தமது நோன்புக்கு அங்கமாகச் செய்யவேண்டிய கிரியைகளைக் குறித்து கோபிமார் ஆராய்ந்திருக்க வேண்டும் அல்லவா?

எந்த விசேஷ காரியத்தில் ஈடுபடுவோரும் அந்தக் காரியத்தில் வெற்றி பெறுமளவும் சில நியமங்களை மேற்கொள்வது நலம் என்பது வாழ்க்கை அநுபவங்களில் ஒன்று. இந்த அநுபவத்தை ஒட்டி, நோன்பு அல்லது விரதங்களுக்குச் சாஸ்திரங்களில் நியமங்கள் கூறப் பட்டிருப்பதையும் அறிவோம். கோபியர், தாங்கள் கண்ணன் அருள் பெறுவதற்காக நோற்ற நோன்பிலும் சில நியமங்களை மேற்கொண்டிருக்கவேண்டும் என்பது ஆண்டாள் நினைவிற்கு வந்தது.

கண்ணனை அடைந்து நோன்பை முடித்துக்கொண்ட பின்பே விருந்து உண்போம் என்று ஆயர் மங்கையர்

Koviloor Digital Library

நிர்மானிக்கிறார்கள். அதுவரை, 'நெய்யுண்ணோம், பாலுண்ணோம்' என்பதை விரத நியமமாகக் கொள்கிறார்கள். விரதம் முடிந்ததும், 'பால்சோறு மூட நெய் பெய்து' விருந்து சாப்பிட விரும்புகிறார்கள்.

விடியற்காலத்தில் நீராடியதும் பெண்கள், கண்ணில் மையிட்டும், கூந்தலில் பூச்சூட்டிக்கொண்டும் தங்களை அழகு செய்துகொள்வது வழக்கம் அல்லவா? நோன்பு முடியும் வரை இந்த வழக்கமும் தவிர்ந்திருப்போம் என்கிறார்கள். 'நோக்கம் நிறைவேறியதும் நாம் நம்மை அலங்கரித்துக் கொள்வோம்; கண்ணில் மையிட்டுக் கூந்தலில் பூச்சூட்டியும் நல்ல ஆடைகள் உடுத்துக்கொண்டும் ஆபரணங்களை அணிந்துகொண்டும் மகிழ்ச்சியடைவோம்' என்கிறார்கள்.

நெய்யுண்ணாமை, பாலுண்ணாமை, மையிட்டு எழுதாமை, மலிரிட்டு முடியாமை என்று தாங்கள் விட வேண்டிய காரியங்களைப் பிரஸ்தாபிக்கும்போதே,

'செய்யா தனசெய்வோம்;
தீக்குறளை சென்றோதோம்

[தீக்குறளை - கொடிய கோள் வார்த்தைகளை.]

என்றும் சொல்லித் தாங்கள் மேற்கொள்ள வேண்டிய 'நிவ்ருத்தி' ரூபமான நியமங்களைப் பூர்த்தி செய்து கொள்கிறார்கள்.

செய்யத் தகுதியற்றவைகளை எப்போதும் செய்யக் கூடாது. கோள் சொல்வதும் எப்போதும் தவிர்க்கப்பட வேண்டியதுதான். நோன்பு செய்யும்போது விட்டு, நோன்பு நிறைவேறியதும் மேற்கொள்ளக் கூடிய காரியங்கள் அல்ல இவை. எப்போதுமே கைக்கொள்ள வேண்டிய 'நிவ்ருத்தி' ரூபமான நியமங்கள் நோன்புக் காலங்களிலே விசேஷமாக வற்புறுத்தப்படுகின்றன.

Koviloor Digital Library

'இப்படி 'நிவ்ருத்தி' ரூபமான கிரியைகளை மேற்கொண்டது போல் கோபியர்கள் 'பிரவ்ருத்தி' ரூபமான சில நியமங்களையும் மேற்கொண்டார்கள். அதாவது, சிலவற்றை விடவேண்டும், விட்டே விட வேண்டும் என்று தீர்மானித்ததுபோல், சிலவற்றை விசேஷமாகப் பற்றிக்கொள்ள வேண்டும் என்றும் தீர்மானித்தார்கள்.

'பரமன் அடிபாடி... நாட்காலை நீராடி... ஐயமும் பிச்சையும் ஆம் தனையும் கைகாட்டி' என்று தாங்கள் பற்றிக்கொள்ள வேண்டிய நியமங்களைக் குறிப்பிடுகிறார்கள். பற்றிக் கொள்ளும் கிரியைகள் மூன்று; விடும் கிரியைகள் நான்கு என்று சங்கற்பம் செய்துகொண்டு, நோன்பு நோற்கத் தொடங்கும் கோபியர்களுடன் ஆண்டாளும் கலந்துகொண்டு, கண்ணனை அடைய விரும்புகிறாள்.

நாடகம் தொடங்குகிறது

ஸ்ரீவில்லிபுத்தூரே ஆய்ப்பாடியாகக் காண்கிறது. வடபத்ரசாயி என்ற பெருமாளின் சந்நிதி (வட பெருங் கோயில்) நந்த கோபரின் திருமாளிகை ஆகிறது. வடபத்ர சாயி, கண்ணனாகக் காட்சி தருகிறார். பாவனாசக்தி முதிர்ந்த நிலையில் ஆண்டாள் 'இடை-நடையும் இடை-முடியும் இடைப்-பேச்சுமாய்' ஆய்ப்பெண்டிருள் ஒருத்தி ஆகிவிடுகிறாள்.

கிருஷ்ண சரிதம் நாடகமாக நடைபெறுகின்றது, ஆண்டாளின் உள்ளத்திலே. காலாந்தரத்தில் நிகழ்ந்தவை, பக்தர்களின் மனோபாவங்களிலும் கவிஞர்களின் மனோ பாவங்களிலும் நடந்தவை, அவள் உள்ளத்திலே நடை பெறுகின்றன.

காளிய நாகத்தின் துஷ்ட சக்தியைக் கண்ணன் அடக்கியதும், எத்தனையோ அசுர சக்திகளைத் தொலைத்து ஒழித்ததும், பெற்ற தாய்போல் வந்த பேய்ச்சியை முடித்ததும்

Koviloor Digital Library

ஆகிய லீலைகள் எல்லாம் ஆண்டாளின் இதயமாகிய நாடக அரங்கில் தோற்றம் அளித்து, ஒருவாறு துயர் தீர்க்கின்றன.

மார்கழி மாதம். பூர்ண சந்திரோதயம் கண்டதும், 'மதி நிறைந்த நன்னாள் நமக்கு வாய்த்திருக்கிறது' என்று உள்ளம் பூரிக்கிறது. கோபியர்கள் ஒருவரையொருவர் முகம் கண்டு அநுபவிக்கக் கூடும்; பிறகு எல்லாரும் கூடிச் சென்று, கண்ணனைத் துயில் உணர்த்துவதற்கும் பாங்காக இருக்கிறது பால் நிலா. மகிழ்ச்சி பொங்குகிறது ஆண்டாளுக்கு; கோபியருள் கோபி ஆகிவிட்டாள் அல்லவா?

'மதிநிறைந்த நன்னாள்' என்று வாய்விட்டுச் சொல்லி, 'நன்னாள்' என்பதை அழுத்திச் சொல்லுகிறாள் ஆண்டாள்; முன்னே கழிந்த நாட்களெல்லாம் இவ்வளவு நல்லவை அல்ல என்ற உணர்ச்சியுடன். நல்ல காரியம் செய்ய விரும்பியதும் நல்ல நிலாவும் நாளும் அவளுக்கு நினைவின்றியே வாய்த்துக் கொள்கின்றனவாம்.

நீராடப் போதுவீர்!
போதுமினோ நேரிழையீர்!'

[*நீராடப் போதுவீர் - நீராட வருவதற்கு விருப்பமுள்ளவர்களே. போதுமின் - வாருங்கள். நேரிழையீர் - நல்ல அணிகளை அணிந்துள்ளவர்களே.*]

என்ற அழைப்பொலி முழங்குகிறது.

இந்தப் பெண்களே ஆய்ப்பாடியின் சிறந்த செல்வம்; பால்வளம் முதலான செல்வங்கள் நிறைந்துள்ள கோகுலத்திலே செல்வத்துள் செல்வம்.

சீர்மல்கும் ஆய்ப்பாடிச்
செல்வச் சிறுமீர்காள்!'

[*சீர்மல்கும் - செல்வம் நிறைந்துள்ள. சிறுமீர்காள் - சிறுமியர்களே.*]

Koviloor Digital Library

என்ற அழைப்பிலே இந்தச் சிறுமியர்களுக்கு, அவர்களது குதூகலம் நிறைந்த இளமையும் கிருஷ்ண கைங்கரியத்திலுள்ள விருப்பமுமே மிகச் சிறந்த செல்வமாகும் என்ற குறிப்பைக் காண்கிறோம்.

பக்திக்கும் கைங்கரியத்திற்கும் விருப்பம் மாத்திரமே போதும். வேறொரு தகுதியோ சாதனமோ தேவை இல்லை என்பதைப் 'போதுவீர்! போதுமினோ'- அதாவது, வருகிறவர்கள் எல்லாம் வரலாம் - என்ற அழைப்பே வலியுறுத்துகிறது.

இப்படி விருப்பத்துடன் கிருஷ்ணனைக் குறித்துப் பாவை நோன்பு நோற்க விரும்புகிறவர்கள் தங்களுடைய சகல தாபங்களையும் தீர்க்கக்கூடிய கண்ணன் திருமேனியை நினைத்ததுமே கார்முகிலைக் கண்டாற்போன்ற உணர்ச்சியை அடைந்து, உள்ளம் குளிர்ந்து போகிறார்கள்.

'கார்மேனிச் செங்கண்
கதிர்மதியம் போல்முகத்தான்'

[*கார்மேனி - நீலக் கருமேகத்தோடு ஒத்த திருமேனியும். செங்கண் - செந்தாமரைப்பூப் போன்ற கண்களும். கதிர்மதியம் போல் முகத்தான் - சூரியனையும் சந்திரனையும் ஒருங்கே ஒத்த முகத்தையும் உடைய கண்ணன்.*]

என்று, பேரொளிக்குச் சூரியனையும் குளிர்ச்சிக்குச் சந்திரனையும உவமை கொண்டிருக்கும் அந்த முக அழகை நினைத்துப் பார்த்து அகமகிழ்ச்சியும் முகமலர்ச்சியும் அடைகிறார்கள்.

கண்ணனை நினைக்கும்போது அவன், 'நந்தகோபன் குமரன்' என்பதும், 'யசோதை இளஞ்சிங்கம்' என்பதும் நினைவுக்கு வருகின்றன. பசும் புல்லையும் சாக மிதிக்காத பரம சாதுவாகிய நந்தகோபன், கண்ணன்மீது உள்ள பரிவினால் எப்போதும் கூர்மையான வேலும் கையுமாய்க்

Koviloor Digital Library

காணப்படுகிறானாம். யசோதையோ கண்ணன் அழகைக் கண்டு கண்டு அந்தக் களிப்பின் மிகுதியால் தானும் புதியதொரு பார்வை அழகு பெற்றிருக்கிறாளாம்.

இப்படி, 'எங்கும் அழகு, எல்லாம் அழகு' என்று சொல்லும்படி ஒளிரும் கோகுலத்திலே, கண்ணன் திருமுகமே சூரியனாகவும் சந்திரனாகவும் பிரகாசிக்கும் அந்தப் பிரதேசத்திலே விழித்துக் கொள்கிறாள் ஆண்டாள். அங்கே பாகவதர்கள் எல்லாம் கோபியர்கள்; ஞான பக்தி வைராக்கியம் முதலிய குணங்களெல்லாம் அவர்களை அழகு செய்யும் ஆபரணங்கள். 'நோன்பு' என்றும் அதற்கு அங்கமான பறை அல்லது வாத்தியம் என்றும் சொல்லிக் கொண்டு அவர்கள் கைங்கர்ய ருசியுடன் திரிகிறார்கள்.

மழை வளமும் அருள் வளமும்

இந்தக் கோபியர்களுடன் ஆண்டாளும் 'பரமன் அடி பாடி'ப் பாவை நோன்பு நோற்கின்றாள். இதனால்,

தீங்கின்றி நாடெல்லாம்
　　திங்கள்மும் மாரிபெய்(து)
ஓங்குபெருஞ் செந்நெல்
　　ஊடு கயல்உகளப்
பூங்குவளைப் போதில்
　　பொறிவண்டு கண்படுப்ப,-

[*செந்நெல் ஊடு - செங்நெற் பயிர்களின் நடுவே. கயல் உகள - மீன்கள் துள்ள. பூங்குவளைப் போதில் - அழகிய நீலமலரில். கண்படுப்ப - உறங்க.*]

வளமும் செல்வமும் நிறைந்து திகழும் என்று நம்புகிறார்கள்.

'குடம் நிறைக்கும் வள்ளல் பெரும் பசுக்களை'ச் செல்வமாகப் பெற விரும்புகிறவர்கள் கோகுல வாசிகள். பாவை நோன்பு நோற்பதால் இந்தச் செல்வம் நீங்காத

Koviloor Digital Library

செல்வமாக நிறைந்திருக்கும் என்று நம்புகிறார்கள். இந்தப் பசுக்களை,

'ஏற்ற கலங்கள்
எதிர்பொங்கி மீதளிப்ப
மாற்றாதே பால்சொரியும்
வள்ளற் பெரும்பசுக்கள்'

[*ஏற்ற கலங்கள் - சுரந்த பாலை ஏற்றுக்கொள்ளும் பாத்திரங்கள். மீது அளிப்ப - மேலே அளிக்கும்படி. மாற்றாதே - இடைவிடாமல்.*]

என்றும் குறிப்பிடுகிறார்கள். கலம் இடுவார் குறையே அன்றி இட்ட கலங்களை இந்தப் பசுக்கள் நிறைக்கத் தட்டில்லையாம்.

இந்தப் பசுக்களின் வள்ளன்மை ஞான பக்திக்கும் அறிகுறிதான். குரு உபதேசம் செய்யும்போது, ஏற்ற கலமாக இருந்து, உபதேசம் பெறும் சீடன் உள்ளத்திலே ஞானம் 'எதிர்பொங்கி மீது அளிக்கும்' நிலையில் நிறைந்து விடுகிறதாம். இதைப் பக்தி மதத்தின் ஒரு சிறப்பியல்பு என்று சொல்லலாம்.

குரு உபதேசம் பெறும்போதே சீடனுடைய உள்ளொளியும் பொங்குவதால் அந்தச் சீடனுடைய விசேஷ ஞானம் குருவுக்கும் பயன்படுகிறது என்பது குறிப்பு. குருவிடம் சீடன் கற்றுக்கொள்வதுபோல் குருவும் தம்மைக் குரு என்று நினைத்துக்கொள்ளாமலே சீடனிடம் கற்றுக்கொள்வார் என்பதும் குறிப்பு.

'இதுவன்றோ நிறைந்த செல்வம், நீங்காத செல்வம்!' என்று சொல்லிக்கொண்டே ஆண்டாள் கோபியர்களுடன் கலந்து கொண்டு, 'மழையே! மழையே! வா வா' என்று ஒரு மழைப்பாட்டும் பாடுகிறாள். 'மழையே! நீ உனக்கென்று ஒன்றையும் கையிருப்பாக ஒளித்து வைத்துக் கொள்ளாமல் உன்

Koviloor Digital Library

வன்மையைப் பொழிந்துவிடவேண்டும், எங்கள் வள்ளல் பெரும் பசுக்களைப் போல' என்று எல்லாரும் மழைக் கடவுளைக் கேட்டுக்கொள்கிறார்க்ள.

கோபியர்கள் மழைக் கடவுளை நோக்கிப் பிரார்த்திக்க வில்லை; கண்ணனைத் தவிர வேறொரு தெய்வத்தையும் அவர்கள் பிரார்த்திப்பதில்லையே! 'எம்பெருமான் அடி பணியும் அவர்களுக்கு நாமும் பணிபுரிந்து நிறம் பெற வேணும்' என்று கருதி, அவர்களுடைய நியமனத்தை நோக்கி, மழைக் கடவுளே பிரார்த்தனை செய்து, பேறுபெறுகிறானாம்.

இவர்கள் சொல்லுகிறார்கள்: 'வாராய் மழைக் கடவுளே! நீ உன் வன்மையை எள்ளளவும் ஒளிக்கலாகாது. கடலில் புகுந்து, அங்குள்ள நீரை முற்றும் முகந்துகொண்டு வா; பெருமுழக்கம் செய்துகொண்டு, வானத்தின்மேல் ஏறி வா; எங்கள் பெருமானது மேனியின் திருநிறம் பூண்டு வா...'

மின்னல் மின்னுமல்லவா? பகவானுடைய சக்கரம் போல் மின்னவேண்டுமாம். இடி இடிப்பது பகவானுடைய சங்கு முழக்கத்தை நினைவூட்ட வேண்டுமாம். மேகம் நீரைச் சொரியும்போது பகவானுடைய சார்ங்கம் என்ற வில் சரமழை பொழிவதுபோல் தோன்றவேண்டுமாம். என்ன அதிசயம்! இறைவனுடைய மறக்கருணையும் (தண்டனையும்) கருணைதான்!

'தாழாதே சார்ங்கம்
உதைத்த சரமழைபோல்
வாழ உலகினில்
பெய்திடாய்'

என்ற வேண்டுகோளைக் கேளுங்கள். இது இவர்கள் மழைக்குக் கட்டளையிடும் பரிசு.

ஆண்டாளின் மழைப் பாட்டைக் கோபியர்கள் எல்லாரும் பாடுகிறார்கள். கண்ணனுடைய அருள்போல்

Koviloor Digital Library

மழை பெய்யவேண்டும் என்று பாடும்போதே, மழைபோல் அவனுடைய அருளும் தங்களை நோக்கி இறங்கி வர வேண்டும் என்பதையும் குறிப்பாக வெளியிடுகிறார்கள்.

நோன்பு நோற்கும் பெண்களில் ஒருத்தி சொல்லுகிறாள், 'எந்த மங்கள காரியத்திற்கும் இடையூறு ஏற்படக்கூடும்; நெடுநாளாய்ச் செய்துள்ள பாவங்கள் இருக்கின்றனவே!' என்று. இதற்கு வேறொருத்தி, 'பகவானுடைய திருப் பெயர்களைப் பெருங்கீர்த்தனம் செய்தால் இடையூறுகள் எல்லாம் போய்விடும் என்று பதில் சொல்லுகிறாள்.

'தூயோமாய் வந்துநாம்
தூமலர்கள் தூய்த்தொழுது
வாயினால் பாடி
மனத்தினால் சிந்திக்க,
போய பிழையும்
புகுதருவான் நின்றனவும்
தீயினில் தூசாகும்
செப்(பு) - ஏலோர் எம்பாவாய்

[தூமலர்கள் - நல்ல மலர்கள். தூய் - தூவி. செப்பு - திருப்பெயர்களைச் சொல்லு.]

என்று பாடிக்கொண்டே போகிறார்கள்.

கிருஷ்ணபக்தி - கண்ணன் அருள்- ஒரு பேராறு. ஆற்று வெள்ளத்திலே ஆடி அநுபவிக்க விரும்புகிறவர்கள் துணை யின்றி இறங்க அஞ்சுவதுபோல் துணை கூட்டிக் கொள்வதற்காக ஒருவரையொருவர் துயில் உணர்த்துகிறார்கள், கோபியர்களும். இதை வேறொரு வகையிலும் நோக்கலாம்.

கண்ணன் குணங்களை நினைத்துக்கொண்டே மயங்கிக் கிடக்கிறார்கள் சிலர். வேறு சிலரோ கண்ணன் காதலால் இருந்த இடத்தில் இருக்க முடியாமல், கிடந்த இடத்தில் கிடக்க முடியாமல் எழுந்திருந்து, பிறரையும் எழுப்ப முற்படுகிறார்கள்.

Koviloor Digital Library

எழுப்ப வருகிறவர்கள் பொழுது விடிந்ததையும் அறியாமல் உறங்கிக்கொண்டிருக்கும் ஒருத்தியின் வீட்டு வாசலில் வந்து நிற்கிறார்கள். 'விடிந்த பின்பும் இப்படிக் கிடந்து உறங்கலாமோ?' என்று கேட்கிறார்கள். பொழுது விடிந்தது என்பதற்கு அடையாளமும் சொல்லுகிறார்கள்.

கிழக்கு வெளுத்தது

'பறவைகளும் எழுந்து ஆரவாரஞ் செய்கின்றன' என்று முதல் முதல் சொல்லுகிறார்கள்:

'புள்ளும் சிலம்பின காண்'

[புள் - பறவை.]

என்று சொல்லிவிட்டு, 'சந்நிதியில் வெண்சங்கு ஊதுவதும் உன் காதில் விழவில்லையோ?' என்று கேட்கிறார்கள்.

'பிள்ளாய்! எழுந்திராய்'

என்று அருமையாகவும், 'நோன்பின் பெருமை அறியாது, பொழுது விடிந்ததையும் அறியாது உறங்கிக்கொண்டிருக்கும் பெண்ணே!' என்ற குறிப்புடன் சற்றுக் கிண்டலாகவும் பேசுகிறார்கள்.

சர்ப்ப சயனத்தில் - அதாவது, 'தொல் அறிவு என்னும் ஓர் பாம்பின் மேல் - ஞானத் தெளிவு என்ற பாற்கடலிலே' அறிதுயில் அமர்ந்த பேராயனை,

'வெள்ளத்(து) அரவில்
துயில் அமர்ந்த வித்தினை'

[வித்தினை - வித்தாக உள்ளவனை.]

என்று குறிப்பிடுகிறார்கள். உலகங்களுக்கெல்லாம் உயிர்களுக் கெல்லாம் ஒரு விதையல்லவா இறைவன்?

இந்த உலக வித்தினை எவ்வளவு ரஸமாக - உழவர் விதையை நீரிலே சேர்ப்பதுபோல் வெள்ளத்திலே சேர்ந்து

Koviloor Digital Library

கிடப்பதாகப் பேசுகிறார்கள்! இந்த வித்தினை உள்ளத்தில் கொண்டவர்கள் முனிவர்களும் யோகிகளும் ஆவர். முனிவர்கள் என்றால் மனன சீலர்கள்; அதாவது இறைவனுடைய குணத்தைத் தியானவாயிலாக அநுபவித்துக் கொண்டிருப்பவர்கள்; விதையைத் தங்கள் உள்ளத்தில் ஊன்றிக்கொண்டு அதன் விளைவுகளை, வைபவத்தை, சிந்தனை அலைகளிலே கண்டுகொண்டிருப்பவர்கள்; யோகிகள்; இங்கே கைங்கரிய விருப்பம் உள்ளவர்கள்.

'இந்த முனிவர்களும் யோகிகளும் இறைவனை உள்ளத்திலே கொண்டிருப்பதால், வயிறு வாய்க்கப் பெற்ற கர்ப்பிணிகள் கருவில் உறையும் பிள்ளைக்கு நோவு வாராதபடி மெள்ள எழுந்திருப்பதுபோல் எழுந்து, ''ஹரிர்ஹரி! ஹரிர்ஹரி'' என்று அந்தச் சிற்றஞ்சிறு காலையில் உச்சரிப்பது பேரரவமாக எங்கள் உள்ளம் புகுந்து குளிர்விக்கின்றதே; இனியாகிலும் எழுந்திரு' - என்கிறார்கள்.

இவளையும் எழுப்பிக்கொண்டு வேறொரு வீட்டிற்கு வருகிறார்கள். இங்கும் பொழுது விடிந்ததற்கு அடையாளம் சொல்கிறார்கள்.

கீசு கீ(சு) என்றெங்கும்
ஆனைச்சாத் தம்கலந்து
பேசின பேச்சரவம் கேட்டிலையோ?
பேய்ப்பெண்ணே!'

[ஆனைச்சாத்தம் - வலியன் என்ற கீச்சாங்குருவி.]

என்ற வாக்கிலே காலைப் பொழுதின் வருணனையோடு தோழிமார்களின் அன்பும் எவ்வளவு அழகாய்த் தொனிக்கிறது!

ஆய்ச்சியர் கழுத்தில் அணிந்துள்ள ஆபரணங்கள் கலகலவென்று ஒலிக்குமாறு கைகளை அசைத்துத் தயிர் கடைவதையும், பொழுது விடிந்ததற்கு ஓர் அறிகுறியாகக் காட்டுகிறார்கள்.

Koviloor Digital Library

'வாச நறுங்குழல்
ஆய்ச்சியர் மத்தினால்
ஓசை படுத்த
தயிர் அரவம் கேட்டிலையோ?'

[குழல் - கூந்தல்.]

'பேய் பெண்ணே!' என்று கூப்பிட்ட அதே பெண்ணை மறுபடியும் 'நாயகப் பெண்பிள்ளாய்!' என்று புகழ்ந்தும் கூப்பிடுகிறார்கள். 'மிக்க தேஜஸை உடையவளே!' என்றும் புகழ்கிறார்கள். எல்லாம் அன்பின் விளைவானதால் தாழச் சொன்னதுமில்லை, உயரச் சொன்னது மில்லை என்பது தெளிவு.

வேறொரு வாசலில் வந்து நிற்கிறார்கள். 'கிழக்கு வெளுத்ததே; எருமைகள் பனிப் புல் மேயப் பரந்து போகின்றனவே' என்று சொல்லி, உள்ளே படுத்திருப்பவளை,

'பாவாய்! எழுந்திராய்'

என்று எழுப்புகிறார்கள்.

சுற்றும் விளக்குகள் எரியத் தூபங்கள் மணம் கமழ, ஒரு நன் மணி மாடத்திலே மெல்லணைமேல் கண் துயிலும் ஒருத்தியைச் சாளர வாசலால் நோக்கித் துயில் எழுப்புகிறார்கள். 'அம்மான் பெண்ணே!' என்று அவளை உறவு கொண்டாடிக் கூப்பிடுகிறார்கள்.

அவள் தாயை, 'அமமாமீ!' என்று கூப்பிட்டு, உம் மகளை எழுப்ப மாட்டீரே?' என்று கேட்கிறார்கள்.

'ஊமையோ? அன்றிச்
செவிடோ? அனந்தலோ?'

[அனந்தலோ - உறக்க மயக்கம் உடையவளோ?]

என்று அம்மாமியைக் கேட்கிறார்கள்.

Koviloor Digital Library

ஏதோ ஒரு பெருந்துயில் மந்திர வாதத்திற்குக் கட்டுப்பட்டுத் தூங்கிக்கொண்டிருக்கிறாளோ?' என்றும் கேட்கிறார்கள்.

அந்தத் துயில் மந்திரத்திற்கு எதிர் மந்திரம் போடுவது போல்,

'மாமாயன் மாதவன்
வைகுந்தன்'

என்றெல்லாம் பகவானுடைய திருநாமங்கள் பலவற்றையும் வாயாரச் சொல்லுகிறார்கள்.

எவ்வளவு நகைச்சுவையுடன் அவர்கள் பேசுகிறார்கள். இந்த மாதிரி ஹாஸ்யப் பேச்சை அடுத்த வீட்டு வாசலிலும் கேட்கிறோம்; அவர்கள் வாயிலாகத்தான்.

'மாற்றமும் தாராரோ
வாசல் திறவாதார்?'

[*மாற்றம் - ஒரு மறுமொழி.*]

என்று கேட்டு விட்டு,

'கூற்றத்தின் வாய்வீழ்ந்த
கும்ப கரணனும்
தோற்றும் உனக்கே
பெருந்துயில்தான் தந்தானோ?'

[*கூற்றம் - யமன்.*]

என்றும் ஒரு கேள்வி கேட்டுப் பரிகசிக்கிறார்கள்.

'ஊருக்கு ஒரு பிள்ளை கண்ணன்; ஊருக்கு ஒரு பெண் இக் கண்மணி!' என்று சொல்லும்படி அவ்வளவு பிரசித்தமான ஒருத்தியைத் துயில் உணர்த்தும்போது,

'குற்றம் ஒன்(று) இல்லாத
கோவலர்தம் பொற்கொடியே!'

என்றும், 'புனமயிலே!' என்றும் அழைக்கிறார்கள்.

Koviloor Digital Library

தாங்கள் 'முகில் வண்ணன் பேர் பாட'வும் மயில் களித்துக் கூத்தாடவேண்டும் அல்லவா? 'அதற்கு மாறாக உறங்கும் பொருள்தான் எதுவோ?' என்று கேட்கிறார்கள்.

பசுக்களைச் செல்வமாக உடையவர்கள் கோபாலர்கள் (கோவலர்) என்ற ஆயர்கள். கன்றுகளையுடைய எருமைகளையும் இவர்கள் செல்வமாகக் கொண்டிருக்கிறார்கள் என்பதை ஆண்டாள் ஸ்ரீவில்லிபுத்தூரைச் சார்ந்த ஆய்ப்பாடியைப் பார்த்தே தெரிந்து கொண்டிருக்கலாம். எனவே, ஒரு பெண்ணை,

'கனைத்திளங் கற்றெருமை
கன்றுக் கிரங்கி
நினைத்து முலைவழியே
நின்றுபால் சோர
நனைத்தில்லம் சேறாக்கும்
நற்செல்வன் தங்மாய்!'

[*கற்றெருமை கன்றுகளையுடைய எருமைகள்.*]

என்று ஆண்டாளின் கோபியர்கள் அழைக்கக் காண்கிறோம்.

ஒரு வீட்டு வாசலில் வந்து நின்றுகொண்டதும், அந்தப் பெண் தானே எல்லாருக்கும் முன் துயில் உணர்ந்து வந்து, மற்றவர்களை எழுப்புவதாக வாக்களித்திருந்தது நினைவுக்கு வருகிறது.

'எங்களை முன்னம்
எழுப்புவான் வாய்பேசும்
நங்காய்! எழுந்திராய்;
நாணாதாய்! நாவுடையாய்!'

என்று பரிகசிக்கிறார்கள்.

'நீ உன் வீட்டுப் புழைக்கடைத் தோட்டத்தில் உள்ள குளத்தைப் போய்ப் பார்; செங்கழுநீர்ப்பூ மலர்ந்து, ஆம்பல் மலர்கள் வாய் மூடியிருப்பதைக் காண்பாய்!' என்கிறார்கள்.

Koviloor Digital Library

'உங்கள் புறங்கடைத்
தோட்டத்து வாவியுள்
செங்கழுநீர் வாய் நெகிழ்ந்(து)
ஆம்பல்வாய் கூம்பினகாண்'

என்கிறார்கள்.

[*வாவியுள் - தடாகத்திலே.*]

என்பது ஓர் அருமையான இயற்கை வருணனை.

பக்த லட்சணம்

ஒரு வீட்டு வாசலில் துயில் உணர்த்துவோருக்கும் படுத்திருப்பவளுக்கும் இடையே உரையாடல் நடைபெறுகின்றது, வினாவிடை ரூபமாக. 'இளங்கிளியே!' என்று கூப்பிடுகிறார்கள், வெளியே இருப்பவர்கள். இவள் தூங்கிக் கொண்டிருக்கவில்லை. தன் தோழிமார் எல்லாரும் திரண்டு வந்து, தன் வீட்டு வாசலில் நிற்பதைத் தான் சாளர வாசல் வழியாகக் காண விரும்பியே படுத்துக்கிடக்கிறாளாம்.

அடுத்த வீட்டுப் பெண்ணை இவர்கள் துயிலெழுப்பிய போது,

'பங்கயக் கண்ணானைப்
பாடு – ஏலோர் எம்பாவாய்'

என்று பாடி முடித்தார்கள்.

அது இந்த 'இளங்கிளியின்' காதில் விழ, அந்தப் பேச்சின் இனிமையை எண்ணி நெஞ்சு குளிர்ந்து அப் பாசுரத்தை இவளும் மெல்ல நுண்ணிதாகப் பாடிக் கொண் டிருந்தாளாம். அந்தக் குரலில் மென்மையைச் செவியுற்றுத் தான் இவர்கள் அவளை 'இளங்கிளியே!' என்று விளிக்கிறார்களாம்.

''இளங்கிளியே! இன்னம் உறங்குகிறாயோ?' என்று அவர்கள் கேட்டதும் அவள்,

Koviloor Digital Library

''சில்லென்(று) அழையேன்மின்,
நங்கைமீர்! போதர்கின்றேன்.''

(அழையேல்மின் - அழையாதேயுங்கள். போதர் கின்றேன் - புறப்பட்டு வருகிறேன்.)

என்று பதில் சொல்லுகிறாள்.

அதற்கு அவர்கள், ''நீ கடுமையான வார்த்தை சொல்லுவதில் வல்லமை உடையவள் என்பதை நாங்கள் நெடு நாளாகவே அறிந்திருக்கிறோம்'' என்று பதில் சொல்லு கிறார்கள்: அதற்கு அவள், ''நீங்கள் உங்கள் குற்றத்தைப் பிறர்மீது ஏற்றிப் பேசுகிறீர்கள். வீணாக வாய்ச் சொற்களோ வன் சொற்களோ பேசும் திறமை உங்களுக்கே உரியது; நானோ வீண் சொல்லைச் சொல்லியும் அறியேன்; வன்சொல்லும் சொல்ல வல்லேன் இல்லை'' என்று பதில் சொல்லுகிறாள்.

இப்படிச் சொன்னவள் மறுபடியும் ஆலோசித்து, 'இப்படிப் பதில் சொல்வது பக்த லட்சணம் இல்லை' என்று தெரிந்துகொள்கிறாளாம். ஒரு பக்தனை நோக்கி மற்றவர்கள் குற்றம் சாட்டினால், அதிலும் பக்தர்கள் குற்றம் சாட்டினால், அவன் குற்றம் செய்யாதவனாக இருந்தபோதிலும் தன்னுடைய பரம ஸாத்விக நிலையில் அதனை உடனே மறுத்துப் பேசிவிடாமல், 'அதுவும் ஒரு வேளை தனக்கு உரியதாய் இருக்குமோ? அப்படியானால் திருந்தவேண்டியது தானே' என்று உகந்து அந்தக் குற்றத்தையும் ஏற்றுக்கொண்டு தற்சோதனை செய்துகொள்வானாம்.

இத்தகைய பக்த லட்சணத்தை நினைத்துப் பார்த்ததும் இந்தப் பெண், தான் மறுத்துப் பேசினது தவறு என்றே கருதுகிறாள். பிறர் குற்றத்தையும் தன் குற்றமாக இசைவதே சரி என்று நிர்மானித்தபின்,

'வல்லீர்கள் நீங்களே!'

[வல்லீர்கள் - கடுஞ்சொற்களைப் பேசுவதில் வல்லமை உடையீர்.]

என்று ஏற்கெனவே சொன்னவள்,

Koviloor Digital Library

'நானேதான் ஆயிடுக!'

என்று, அவர்கள் சொன்ன குற்றத்திற்குத் தானே உரியவள் என்பதை ஒப்புக்கொள்கிறாள்.

'உங்கள் குற்றத்தை நீங்கள் பிறர்மீது சுமத்தவேண்டாம்' என்று முன்பு சொன்னவள் இப்போது அவர்கள் குற்றத்தைத் தன் குற்றமாக இசைந்து ஒப்புக்கொள்வது கவனிக்கத்தக்கது. 'இல்லாத குற்றத்தைச் சிலர் உண்டென்றால் இல்லை செய்யாதே இசைகையிறே வைஷ்ணவ லக்ஷணம்' என்பது ஆறாயிரப்படி அருளிச் செயல். 'பிறர் குற்றத்தையும் தன் குற்றமாக இசைந்தானிறே ஸ்ரீ பரதாழ்வாள்' என்று இந்த லக்ஷணத்தையே பரத குணாதிசயமாகவும் காட்டுகிறார்கள்.

இப்படி 'இளங்கிளியாள்' தாழ்ந்து பேசியதும் தோழிமார் சிரித்துக்கொண்டே, 'சரி, சரி; உன் குற்றத்தை நீ ஒப்புக்கொண்ட பின்பு 'மேலும் தாமதம் செய்யாமல் சீக்கிரமாக எழுந்து வந்துவிடு' என்று அவசரப்படுத்து கிறார்கள். 'மற்றவர்களுக்கு இல்லாத நீ மட்டும் வேறாக என்ன அதிசயம் உடையவளாக இருக்கிறாய்?' என்றும் கேட்கிறார்கள்.

இப்படி அவர்கள் சொல்லியும் உள்ளே இருப்பவள் எழுந்து வந்துவிடாமலே, 'எல்லாரும் வந்தனரோ?' என்று கேட்கிறாள். இந்தக் கேள்வியும், இதற்கு அவர்கள் விடையும் எவ்வளவு ரஸமாகவும் வேகமாகவும் பொருந்தி அமை கின்றன என்பதை இந்த ஒரே வாக்கியத்தில் பார்த்துக் கொள்ளலாம்:

'எல்லாரும் போந்தாரோ?
போந்தார், போந் தெண்ணிக்கொள்'

இப்படி உரையாடியும் பாடியும் துயில் எழுந்தவர்கள் மற்றைப் பெண்களையும் எழுப்பித் தம்முடன் கூட்டிக் கொண்டு, எல்லாரும் ஒரு பெருங்கூட்டமாகத் திரண்டு, நந்தகோபன் மாளிகை வாசலை அடைகிறார்கள்.

Koviloor Digital Library

இந்தக் கோகுலப் பெண்கள் பலரையும் ஆண்டாள் ஸ்ரீவில்லிபுத்தூரிலே சந்தித்திருக்கக்கூடும். எனவே, வில்லிபுத்தூரை ஆய்ப்பாடியாகவும் அங்குள்ள பெண்களை ஆய்ப்பெண்களாகவும் பாவித்துக் கொண்டவளுக்குத் தானும் அவர்களுள் ஒருத்தியாகிக் கலந்துகொள்வது எளிதாயிற்று.

ஆசையும் சோதனையும்

நந்தகோபன் மாளிகையை அடைந்ததும், கோயில் காப்பவனையும் தோரண வாசல் காப்பவனையும் நோக்கி, 'மணிக் கதவம் தாள் திறக்க வேணும்' என்று அவர்கள் வேண்டிக் கொள்கிறார்கள். கண்ணபிரான் தங்கள் நோன்பிற்கு வேண்டிய உபகரணத்தைத் தருவதாக நேற்றே வாக்களித்தான் என்று சொல்லி, அவனைப் பள்ளியெழுச்சி பாடி, எழுப்ப வந்திருக்கிறோம் என்கிறார்கள். பரிசுத்தர்களாய் ('தூயோமாய்') வந்திருப்பதாகவும் சொல்லுகிறார்கள்.

வாசல் காப்போனின் அனுமதி கொண்டு உள்ளே புகுந்து ஆயச் சிறுமியர் நந்தகோபனை முதல் முதல் பள்ளி உணர்த்துகிறார்கள். பிறகு யசோதைப்பிராட்டியை எழுப்பு கிறார்கள். அப்பால் கண்ணபிரானையும் நம்பி மூத்த பிரானாகிய பலதேவனையும் உணர்த்துகிறார்கள்.

கடவுளைப் பற்றுவோருக்குத் தாயாகிய பிராட்டியின் கருணை அவசியமல்லவா? எனவே, இவர்கள் நப்பின்னைப் பிராட்டியைத் துயில் எழுப்புகிறார்கள். கண்ணனுடைய பிரதான மனைவி நப்பின்னை என்பது தமிழர் கொள்கை.

'நந்தகோபாலன் மருமகளே! நப்பினாய்!' என்று அழைத்துப் பொழுது விடிந்தமைக்கு அடையாளமும் சொல்லுகிறார்கள்:

'வந்(து)எங்கும் கோழி
அழைத்தனகாண், மாதவிப்
பந்தர்மேல் பல்கால்
குயில் இனங்கள் கூவினகாண்'

Koviloor Digital Library

[*மாதவிப் பந்தர்மேல் - ஒருவகைக் குருக்கத்திக் கொடிகளால் ஆகிய பந்தலின்மேல். குயில் இனங்கள் - குயில் கூட்டங்கள். பல்கால் - பல தடவை.*]

பந்து அடித்து விளையாடுவதில் நப்பின்னைக்குப் பிரியம் அதிகம். இரவில் விளையாடியபின், அந்தப் பந்தைக் கையால் அணைத்துக்கொண்டே படுத்து உறங்கிக் கொண்டிருக்கிறாளாம். இதைச் சாளர வாசலால் பார்த்து விடுகிறார்கள் ஆய்ச்சியர். அவர்களோடு ஆண்டாளும் பார்க்கிறாள். அதனால்தானே,

'பந்தார் விரலி! உன்
மைத்துனன் பேர்பாடச்
செந்தா மரைக்கையால்
சீர் வளைஒலிப்ப
வந்து திறவாய்
மகிழ்ந்(து) - ஏலோர் எம்பாவாய்.'

[*பந்துஆர் விரலி - பந்து பொருந்திய விரலை உடையவளே. மைத்துனன் - (இங்கே) கணவன். சீர் ஆர் - சீர் பொருந்திய. சீர் - சிறப்பு.*]

என்று குதூகலகமாகப் பாடுகிறாள்.

இந்தப் பாட்டின் வாயிலாக ஆண்டாளுக்கு நப்பினை எவ்வளவு பிரத்தியட்சமாகக் காட்சி வழங்குகிறாள்! இயற்கைப் பொருள் அழகுகளுடன் மானசக் காட்சியையும் இசைத்துச் சித்திரிக்கும் ஆண்டாளின் கவித்வ சக்தியை இப்பாட்டில் காண்கிறோம். இது ரசிகர்களை விசேஷமாக வசீகரிக்கும் திருப்பாவை பாடல்களில் ஒன்று. ராமானுஜர் சிறப்பாக உகந்தருளிய பாடல் இது என்பர்.

நப்பின்னைப் பிராட்டியை உணர்த்திக் கதவைத் திறக்கும்படி வேண்டிக்கொண்ட பின், கண்ணனையும் நப்பின்னையையும் மறுபடியும் துயில் எழுப்ப முயல்கிறார்கள். இதற்குப் பின்பும், 'கண்ணா! படுக்கையிலிருந்து

Koviloor Digital Library

எழுந்தருள்வாய்; விமலா! (பரிசுத்த சுபாவமுள்ளவனே) துயிலெழாய்' என்கிறார்கள்.

'நப்பின்னை நங்காய்! திருவே! துயில் எழாய்' என்றும் பாடுகிறார்கள். நப்பின்னையின் ரூபசௌந்தரியத்தையும் குண சௌந்தரியத்தையும் புகழ்ந்து பாடி, 'நங்காய்! எங்கள் மனோரதத்தை நிறைவேற்றியருள வேணும்' என்கிறார்கள்.

நப்பின்னை எழுந்து வந்து, 'தோழிகளே! நீங்கள் வருந்த வேண்டாம்; உங்கள் காரியம் நிறைவேறச் செய்கிறேன்; நாம் எல்லாரும் கூடிக் கண்ணபிரானை வேண்டிக்கொள்வோம்; வாருங்கள்' என்று சொல்லுகிறாளாம். எனவே நப்பின்னை உள்ளிட்ட அனைவரும் சேர்ந்து, கண்ணபிரானது வீரத்தைப் பாடித் துயில் உணர்த்துகிறார்கள்.

இப்படி இவர்கள் துயில் உணர்த்த முயன்றும், 'இன்னமும் இவர்களுடைய ஆசையைச் சோதிப்போம்' என்று கண்ணன் பேசாமலே கிடக்கிறான். இந்த நிலையில் ஆய்ச்சியர், 'நாங்கள் அகங்காரம் அடங்கி வந்து உன்னை அணுகுகிறோம். உன்னுடைய கண்கள் கொஞ்சம் கொஞ்சமாக எங்கள்மேல் விழிக்க மாட்டாவோ?' என்று பிரார்த்திக் கிறார்கள்.

முதலிலேயே பூர்ண கடாட்சம் செய்தருள வேண்டு மென்றுகூட இவர்கள் கேட்கவில்லை. அது தாங்க முடியாது என்று கருதியவர்களைப்போல்,

'செங்கண் சிறுச் சிறிதே
எம்மேல் விழியாவோ?'

என்கிறார்கள். பொறுக்கப் பொறுக்கக் கடாட்சித்தால் போதும் என்பது குறிப்பு. 'கோடை ஒடின பயிரிலே ஒரு பாட்டம் மழை வர்ஷியாதோ? (பொழியாதோ?) என்னுமாய் போலே' என்பது வியாக்கியானம்.

Koviloor Digital Library

சௌந்தரியமும் சக்தியும்

'வேறு புகலற்று, உன்னை நோக்கி வந்து விழுகிறோம்!' என்று ஆய்ச்சியர் பேசக் கேட்ட கண்ணன், அவர்களை நோக்கி 'மிகவும் வருந்தி இவ்வளவு தூரம் வந்தீர்களே! உங்கள் இருப்பிடம் தேடி வந்து அருள் புரிவதன்றோ என் கடமை?' என்று சொல்லி, 'உங்களுக்கு நான் செய்யவேண்டுவது என்ன?' என்று கேட்கிறானாம். அவன் கேட்கிறானோ, இல்லையோ? இப்படி அவன் கேட்பதுபோல் அவர்களுக்குத் தோன்றுகிறது.

எனவே அவர்கள், 'பெருமானே! எங்களுடைய மனோரதம் ரகசியமாக விண்ணப்பம் செய்யக்கூடியதன்று; நீ சிங்காதனத்தில் அமர்ந்திருந்து கேட்டருள வேணும்' என்கிறார்கள். சிங்காதனத்தில் வீற்றிருப்பதற்குச் சிங்கம்போல் கம்பீரமாகப் புறப்பட்டு வரவேணும்' என்கிறார்கள்.

மழைக் காலத்தில் மலைக் குகையிலே உறங்கும் சிங்கம் துயிலுணர்ந்து எழுந்து, தீவிளித்துப் பிடரி ரோமங்கள் சிலிர்க்கப் புடை பெயர்ந்து, வெளிப்பட்டு வருவதுபோல் கண்ணனும் புறப்பட்டு வரவேணும் என்கிறார்கள். 'யசோதை இளஞ்சிங்கம்' அல்லவா? ராஜ சிம்மம்போல் இந்தப் புருஷ சிம்மமும் புறப்பட்டு வந்து, சிங்காசனத்திலிருந்து அவர்கள் காரியத்தை ஆராய்ந்தருள வேணுமாம்.

பாரதப் போரில் அர்ச்சுனன் கண்ணனை நோக்கி, 'இரண்டு சேனைகளின் நடுவே தேரைக் கொண்டுபோய் நிறுத்து' என்றான். அந்த வேண்டுகோளைக் கட்டளைபோல் மதித்துப் பார்த்த சாரதியும் அப்படியே செய்தான்; அதற்கு முன்கூட்டியே அப்பியாசம் செய்து பழகிக்கொள்வதுபோல், கண்ணன் இப்பெண்களின் வேண்டுகோளுக்கும் இசைந்து புறப்பட்டு வருகிறான்.

அந்த நடையழகு கண்டதும் பெண்கள் தங்கள் மனோரதங்களையும் மறந்து, அந்த அழகைப் போற்று

Koviloor Digital Library

கிறார்கள்; அவனுடைய வீர செளந்தரியத்தையும் குண செளந்தரியத்தையும் போற்றுகிறார்கள்.

'இத்திருவடிகளைக் கொண்டோ இவனை நாம் நடக்கச் சொல்வது!' என்று வருந்தியவர்களைப்போல் பேசத் தொடங்குகிறார்கள். அந்த அடிமலர்களை முடிமேல் புனைந்துகொள்ள விரும்புகிறார்கள். கண்களில் ஒற்றிக் கொள்ள ஆசைப்படுகிறார்கள். 'பண்டு உலகம் அளந்த திருவடி; அண்மையில் சகடம் உதைத்த திருவடி' என் கிறார்கள்.

செளந்தரியத்திலே சக்தியை மறந்து, 'நின் திருவடி' களுக்கு ஒரு தீங்கும் நேராது ஒழிய வேணும்' என்கிறார்க்ள.

'எங்களுக்கு நன்மை தரவேணும், மங்களம் தரவேணும்' என்று பிரார்த்திக்க வந்தவர்கள் இப்போது தங்களையும் தங்களுடைய நன்மைகளையும் மறந்து, அவனுடைய மங்களங்களையே பிரார்த்திக்கிறார்கள்.

'காதலனுக்குக் குறையொன்றும் இல்லாதிருப்பதே நமக்கும் குறையில்லாதிருப்பது' என்று கருதுகிறாள் பதிவிரதை. இந்தக் கோபியரும் அப்படியே நடந்துகொள்கிறார்கள். பெரியாழ்வார், 'என்ன தீங்கு வருகிறதோ?' என்று பொங்கும் பரிவால் இரட்சகனுக்கும் இரட்சை தேடிப் பல்லாண்டு பாடியதுபோல் இவர்களும், 'அடி போற்றி' என்றும், 'திறல் போற்றி' என்றும், 'புகழ் போற்றி' என்றும், 'கழல் போற்றி' என்றும், 'குணம் போற்றி' என்றும், 'வேல்போற்றி' என்றும் வாழ்த்துகிறார்கள்.

இப்படி இவர்கள் ஆறு தடவை 'போற்றி செய்து' வாழ்த்துவதை, 'இவர்கள் நாக்குக்கு இடும் ஷட்ரஸம் (அறுசுவை) இருக்கிறபடி!' என்று குறிப்பிடுவது ஒரு வியாக்கியானம். இப்படிக் கண்ணன் அழகை விருந்தாக அநுபவித்த பின்பே வந்த காரியம் நினைவிற்கு வருகிறது.

 Koviloor Digital Library

வந்த காரியம்

''உன்னுடைய சேவகத்தையே (வீரியங்களையே) புகழ்ந்து கொண்டு அடியோம் இப்போது பறைகொள்ள (நோன்பிற்குரிய வசதிபெற) வந்தோம்; இரங்க வேணும்'' என்று பிரார்த்திக்கிறார்கள். அது கேட்ட கண்ணன், ''உங்களுக்கு வேண்டியது பறைதானோ? வேறு ஏதேனும் உண்டோ?'' என்று வினாவுகிறானாம். ''இக்குளிரிலே நீங்கள் உங்கள் உடம்பைப் பேணாமல் வருந்தி வந்தீர்களே!'' என்றும் இரங்குகிறான்.

''பெருமானே! உன்னுடைய குணங்களை நாங்கள் பாடிக்கொண்டு வந்தோம்; ஒரு வருத்தமும் இல்லாமல் சுகமாகவே வந்து சேர்ந்தோம். 'பறை' என்று சொல்லிக் கொண்டு நாங்கள் உன்னைக் காண வந்தோம்'' என்று இவர்கள் பதில் சொல்லுகிறார்கள்.

ஒருத்தி மகனாய்ப் பிறந்து அதே இரவில் ஒருத்தி மகனாய் ஒளித்து வளர்ந்தவனுக்குத் தங்கள் வேண்டுகோளை நிறைவேற்றி வைப்பது அரிதன்று என்கிறார்கள். இப்படிக் கண்ணன் ஒளித்து வளருவதையும் பொறாதவனாய், 'எப்படியாவது இவனைக் கொன்று தீர்த்துவிடவேண்டும்' என்று தீங்கு நினைந்த கஞ்சன் கருத்திலேயே நெருப்பாகத் தோன்றி, அவன் வயிறு எரிந்து இறக்கச் செய்தானாம் கண்ணன். கண்ணனுக்கு அவன் நினைத்த தீங்கு, அவனுக்கே தீயாகிவிட்டது! இப்படியெல்லாம் செய்து முடித்த கண்ணனுக்குத் தங்கள் வேண்டுகோளை நிறைவேற்றி வைப்பது மிகவும் எளியதே என்கிறார்கள்.

கண்ணனுடைய முக ஒளியைக் கண்டு, அவன் திருப்பெயர்களை வாயாரச் சொல்வதற்குப் பாவை நோன்பை ஒரு வாய்ப்பாகக் கொண்டவர்கள் இக்கோபியர்கள். அந்த நிலையில் நோன்பிற்கு உபகரணங்களான உறுப்புக்களைத்

Koviloor Digital Library

தந்தருள வேணும் என்று கண்ணனை வேண்டிக்கொள் கிறார்கள்.

பள்ளியெழுச்சிக்குச் சங்குகள் வேணும்; புறப் பாட்டுக்குப் பறை வேணும் என்கிறார்கள். பறை கொட்டிக் கொண்டு புறப்படும்போது எதிரே நின்று, பல்லாண்டு இசைப்போர் வேணும் என்கிறார்கள். பிறகு மங்கள தீபம் வேணும் என்கிறார்கள்.

தூரத்திலேயே எங்கள் கூட்டத்தைப் பிறர் காணும்படி, முன்னே பிடித்துக்கொண்டு போகக் கொடி வேண்டும் என்கிறார்கள். போகும்போது பனி தலைமேல் விழாதபடி ஒரு விதானம் அல்லது மேற்கட்டியும் வேணும் என்கிறார்கள். 'இந்த உபகரணங்களையெல்லாம் நீ தந்தருள வேணும்' என்று இவர்கள் கண்ணனை நோக்கிப் பிரார்த்திக்கிறார்கள்.

''இவ்வளவுதானா நான் உங்களுக்குச் செய்ய வேண்டுவது?'' என்று கண்ணன் கேட்கிறானாம். அதற்குப் பெண்கள், ''நோன்பு நோற்பதற்கு வேண்டியவை இவை; நோன்பு நோற்ற பின்பு நாங்கள் உன்னிடம் பெற வேண்டிய சம்மானங்களும் உண்டு. அவற்றையும் நாங்கள் பெற்று மகிழ அருள் புரியவேணும்' என்று பதில் சொல்லுகிறார்கள்.

'கூடாரை வெல்லும்சீர்க் கோவிந்தா!' என்று இப்போது கண்ணனை அழைத்துச் சம்மானம் வேண்டுகிறார்கள். எதிரிகளை - அடி பணியாதவர்களை (கூடாரை) - வெல்லும் சீரை உடையவன் கண்ணன் என்றால், கூடுமவர்களுக்குத் தோற்று நிற்கும் சீரையும் உடையவன் இவன் என்பது குறிப்பு.

'எல்லாரையும் வெல்லுவது குணத்தாலே; கூடுவாரைச் சீலத்தாலே வெல்லும்; கூடாதாரைச் சௌர்யத்தாலே வெல்லும். சௌர்யம் அம்புக்கு இலக்காக்கும்; சீலம் அழகுக்கு இலக்காக்கும்' என்பது ஒரு வியாக்கியானம்.

பல ஆபரணங்களையும் கண்ணன் தன் திருக்கையால் அணிய இவர்கள் அணிந்துகொள்ள வேணுமாம். ஆடை

Koviloor Digital Library

ஆபரணங்களைச் சிறப்பாக அணிந்துகொண்டு விருந்து சாப்பிட வேணுமாம். 'பால் சோறு மூட நெய்பெய்து...' என்றெல்லாம் அந்த விருந்தை வருணிக்கிறார்கள்.

பசி தீர உண்பதைக் காட்டிலும் பிரிந்து பட்ட துயரம் தீர எல்லாரும் கூடியிருந்து களிக்க விரும்புகிறார்கள்.

மூடநெய் பெய்து
முழங்கை வழிவாரக்
கூடி யிருந்த
குளிர்ந்(து) - ஏலோர் எம்பாவாய்

என்ற வாக்கிலே 'உண்டு' என்பது வெளிப்படையாகச் சொல்லப்படவில்லை.

பால் சோற்றை (க்ஷீராந்நம்) உண்ணவும் மறந்து, அந்த நெய்யை முழங்கையில் வழிய விட்டுக்கொண்டு, கண்ணனுடன் இருப்பதிலேயே பசிதீர்ந்து உளம் குளிர்ந்து போகிறார்கள் என்பது குறிப்பு. உண்ணாவிரதம் இருந்தவர் களுக்கு விருந்தும் உண்ணாவிருந்தாகவே அமைகிறது போலும்!

நோன்பைக் குறிப்பிட்டு அதற்கு உபகரணங்களான சங்கு முதலியவற்றையும் குறிப்பிட்டார்கள். நோன்பு முடிந்ததும் ஆடை ஆபரணங்களையும் விருந்தையும் சம்மானமாகக் குறிப்பிட்டார்கள்.

அது கேட்ட கண்ணன், 'இன்னும் சிலவற்றை நீங்கள் விரும்பினாலும், அவற்றையும் நான் தரக்கூடும்; ஆனால் உங்களுடைய நிலைமையை அறிந்து தரவேண்டும். அதற்கு நீங்கள் அனுஷ்டித்த உபாயம் ஏதாவது உண்டா?' என்று கேட்கிறானாம்.

இந்தக் கேள்விக்கு விடையாக ஆய்ச்சியர், 'நாங்கள் குருவின் பின் சென்று கற்றதில்லை. கறவைகள் பின் சென்று காட்டிலே மாடு மேய்த்துத் திரிந்தோம்' என்கிறார்கள். தயா

Koviloor Digital Library

விஷயமாகவே கண்ணன் தங்கள் வேண்டுகோளை நிறைவேற்றி வைக்கவேணும் என்கிறார்கள்.

'இரங்கு' என்கிறார்கள்; 'அருள்' என்கிறார்கள். சாதனத்தையோ உபாயத்தையோ இவர்கள் நம்பி வரவில்லை. அருளுக்கு இடையூறு, உபாயம் என்பது பக்தி மதத்தின் பரம ரகசியங்களில் ஒன்று. வாழைக்காயை விலை கொடுத்து வாங்குவது போல் விலையில்லாத இறையருளை விலை கொடுத்துப் பெற்றுக்கொள்ள முடியுமா?

'குறையொன்றும் இல்லாத கோவிந்தா!' என்று கண்ணனை அழைத்தவர்கள், 'நாங்கள் அறிவொன்றும் இல்லாதவர்கள்' என்று தங்களை அறிவித்துக்கொள்கிறார்கள். 'ஆராதனை என் அறியாமை ஒன்றுமே!' என்று இறைவனை வணங்குவதுதானே பேரறிவாளர்களின் நிலையும்?

இறைவன், குறை ஒன்றும் இல்லாதவன்; மனிதனோ குறைகள் உள்ளவன். எனினும் இருவருக்கும் இடையே உறவு ஒழிக்க இயலாதது என்பது ஆச்சரியமான நிலையல்லவா?

'உறவேல் நமக்கு இங்(கு)
ஒழிக்க ஒழியாது!'

என்பது ஆய்ச்சியர் வாய்ச்சொல். ஆய்ச்சியருக்கும் ஆயர்பிரானுக்கும் உள்ள இந்த உறவேதான், ஜீவாத்மாவுக்கும் பரமாத்மாவுக்கும் உள்ள உறவும்.

'மனிதனால் இந்த உறவை ஒழித்துக் கொள்ளவே முடியாது. கடவுளாலும் இந்த உறவை ஒழிக்க முடியாது!' என்ற பக்திப் பெருங்கொள்கையில் எவ்வளவு ஆறுதல்! - ஆத்ம தாபம் தீர எத்தகைய உறுதி!

கடைசியாகப் பாவை நோன்பில் தாங்கள் ஈடுபட்டுப் பெற விரும்புகின்ற பெரும் பேற்றைப் பிரஸ்தாபிக்கிறார்கள், கோபியர்கள். நோன்பு, வியாஜந்தான் என்கிறார்கள், 'உன் திருவடிகளில் நித்திய கைங்கரியம் புரிவதுதான் உத்தேசம்'

Koviloor Digital Library

என்கிறார்கள். 'இனி ஒரு நொடிப் பொழுதும் உன்னை விட்டு நாங்கள் பிரிந்திருக்க முடியாது' என்கிறார்கள்.

'உற்றோமே ஆவோம்;
உனக்கேநாம் ஆட்செய்வோம்;
மற்றைநம் காமங்கள்
மாற்று - ஏலோர் எம்பாவாய்'

என்று பாடுகிறார்கள்.

'பல பல காமத்தராகி' வாழ்ந்து வருகிறோமல்லவா? எல்லாக் காமங்களும் இறைவன்மீது காமமாகப் பரிணமிக்க வேண்டும் என்ற பிரார்த்தனையுடன் கோபியர்கள் பாவை நோன்பைப் பூர்த்தி செய்கிறார்கள்.

கோபியருள் கோபியாகிப் பாவை நோன்பு நோற்றுப் பாவைப் பாடல்களைப் பாடிய சூடிக் கொடுத்த சுடர்க் கொடியும், 'வந்த காரியம் பலித்தது. எனக்கு ஒரு கொழு கொம்பு கிடைத்துவிட்டது!' என்று மகிழ்ந்து, படர்ந்து, பெரும் புகழ் பெறுகின்றாள்.

★

Koviloor Digital Library

KOVILOOR ANDAVAR LIBRARY, KOVILOOR
A. No. 26738

6

காவியமோ ஓவியமோ?

பெரியாழ்வாரின் நந்தவனத்தில் ஒரு பகுதியாக இருந்த துளசிவனத்திடையே கோதை குழந்தையாகக் கண்டெடுக்கப் பெற்றாள் என்பதைப் பின்பழகிய பெருமாள் சீயரின் குருபரம்பரை முதலியவற்றில் காணும் கதைகளெல்லாம் ஒரு முகமாக வற்புறுத்துகின்றன.

இப்பெண்ணை ஆழ்வார் தம் மகளாகவே வளர்த்து வந்தார் என்பதும், இந்த ஆழ்வார் திருமகள், அவர் மானஸிகமாக வளர்த்து வந்த கண்ணன்பால் காதல் மிகப் பெற்று அப்பெருமானையே கணவனாக வரித்துக்கொண்டாள் என்பதும், இக்காதலி சூடிக்கொடுத்த சுடர்கொடியாகப் பிரசித்தி பெற்றாள் என்பதும் ஆண்டாள் கதைகளில் எல்லாம் காணப்படும் முக்கிய அம்சங்கள்.

கண்ணனைத் திருவரங்கத்துப் பெருமானான அழகிய மணவாளனாகப் பாவித்து, அவனையன்றி, 'மானிடவர்க்கு என்று பேச்சுப்படில் வாழகில்லேன்' என்று ஒரே வைராக்கியமாக ஆண்டாள் இருந்துவிடவே, பெரியாழ்வார் பெருங் கவலையுற்றிருந்தாரென்றும், அவர் கனவிலே அழகிய மணவாளப் பெருமான் தோன்றித் தம் கோயிலின் திருமுற்றத்திற்குக் கோதையை அழைத்துவரும்படி ஆணை தந்தானென்றும், ஆழ்வாரும் கோதையை மணக்கோலமாகத் திருவரங்கத்திற்கு அழைத்துச் செல்ல, அப்பெருமான் கோதையைத் தன்னுடன் ஐக்கியமாக்கிக் கொண்டானென்றும், குருபரம்பரைக் கதைகள் பலவும் கூறுகின்றன.

Koviloor Digital Library

அப்பால் பெரியாழ்வார் திருவரங்கத்திலிருந்து ஸ்ரீவில்லிபுத்தூருக்குத் திரும்பிவந்து, வழக்கம்போல் பணிபுரிந்து வந்தாரென்றும் குருபரம்பரைக் கதைகள் வாயிலாகத் தெரிந்து கொள்கிறோம். அழகிய மணவாளன் கனவிலே தோன்றிக் கோதையை அங்கீகரித்துக் கொள்வதாகக் கூறியபோது பெரியாழ்வார் பேருவகை கொண்டாரென்றும், பெருமாள் அங்கீகரித்தபின் அந்த உவகையுடன் பெண்ணின் பிரிவுக்கு ஆற்றாத துயரமும் கலந்துகொண்டதென்றும் கதைகள் தெரிவிக்கின்றன.

காவிய முறையிலே கல்யாணம்

'திவ்யசூரி சரிதத்'திலே ஏனைய குருபரம்பரைக் கதைகளில் காணப்படாத ஆண்டாள் கல்யாண வரலாறுகளும் காணப்படுகின்றன. பெரியாழ்வார் இறைவனுக்கே கோதையை மணஞ் செய்துகொடுக்க வேண்டுமென்று தீர்மானித்து, நம்மாழ்வாரின் அனுமதியின்படி அவர் திருமுன்பே திருமணத்தை நடத்தவும் விரும்பினாராம்.

பாண்டிய மன்னனான வல்லபதேவன் என்ற சீடனுடனும் புதல்வி கோதையுடனும் பெரியாழ்வார், ஆழ்வார் திருநகரியென்று இப்போது சொல்லப்படும் குருகையூருக்குச் சென்றாராம். அவர்கள் மூவரும் நம்மாழ்வாரின் திருவடிகளில் வணங்க, அவர் கோதையைக் கடாட்சித்தாராம்.

அப்போது அங்கே பல திருப்பதிகளிலுள்ள எம்பெருமான்களும் நம்மாழ்வாரின் வாக்காகிய தமிழ்ப் பாசுரங்களைக் கேட்பதில் விருப்பமுள்ளவர்களாகி வந்திருந்தார்களாம். பொய்கையார், பூதத்தார், பேயார், திருமழிசையார், குலசேகரர், தொண்டரடிப் பொடிகள், மதுரகவிகள் என்ற ஆழ்வார்களும் அங்கே காணப்பட்டனராம்.

அவர்களுடன் நம்மாழ்வார் கோதையின் வாக்காகிய 'திருப்பாவை', 'நாச்சியார் திருமொழி' என்ற இரண்டு

Koviloor Digital Library

பிரபந்தங்களையும் கேட்டுக் கோதையின் காதலை அறிந்து மகிழ்ந்தாராம். பிறகு நிகழ்ந்த சுயம்வரத்தில் கோதை ஸ்ரீரங்கநாதனாகிய அழகிய மணவாளனை நாயகனாக வரித்து, மணஞ் செய்துகொண்டாளாம்.

இப்படிக் குருகையூரில் திருமணம் நடந்தபின், கோதை, மணவாளனுடன் மணக்கோலத்திலேயே திருவரங்கம் நோக்கிச் சென்றாளாம். செல்லும் வழியில் திருமங்கை மன்னன், மணமகனையும் மணமகளையும் வழிமறித்துக் களவு செய்ய முயன்றதாகவும், அந்த முயற்சியிலேதான் அவர் வாள்வலியால் மந்திரோபதேசம் பெற்றதாகவும் 'திவ்யசூரி சரிதம்' சொல்லுகிறது. இந்த விவரங்கள் காவிய முறைக்கு ஏற்ற கற்பனைகளே என்பதைப் பக்தர்களும் ஒப்புக்கொள்வார்கள்.

கோதையின் கதையும் குணாதிசயமும் காவியமாகவும் ஓவியமாகவும் பக்தர் உள்ளங்களில் பல நூற்றாண்டுகளாக வளர்ச்சி பெற்றிருக்க வேண்டும். பிற்காலத்தில் தோன்றிய வடிவழகிய நம்பிதாசர் என்ற பக்தரின் மனோபாவத்திலும் ஆண்டாளின் திருக்கல்யாணம் விவரமாக வருணிக்கப் பெற்றிருப்பதைக் காண்கிறோமல்லவா?

பெயரிலும் காவிய வித்து

'கோதை' என்ற சொல்லுக்குப் 'பூமாலை', 'கூந்தல்', 'முத்தாரம்', 'பெண்' முதலான பொருள்களைத் தமிழ் நிகண்டுகளில் காண்கிறோம். வடமொழியில் 'கோதா' என்பதற்கு, 'வாக்கை உதவுபவள்' என்ற பொருளைக் காண்கிறோம். இப்பொருள்களிலிருந்தே கோதையின் கதைக்குச் சில காவிய விவரங்களும், ஓவிய அம்சங்களும் கிடைத்திருக்கக்கூடும்.

பெரியாழ்வார் தாம் கண்டு வளர்த்த பெண்ணுக்கு இட்ட இயற்பெயரே கோதை என்பதிலும் கருத்துவேற்றுமை இருக்க

Koviloor Digital Library

முடியாது. 'தம் குழந்தை இறைவன் விஷயத்தில் வாக்கைப் பயன்படுத்தப் போகிறாள் என்று நினைத்தே தம் பெண்ணுக்குப் இப்பெயர் இட்டாரோ? என்று உலகம் கருதுமாறு சுப முகூர்த்தத்தில் ''கோதா'' என்று பெயரிட்டார்' என்பது திவ்யசூரி சரிதம்.

'கோதா' என்பது ஸாமவேத சாகை ஒன்றன் ஆசிரியையான பெண் ஒருத்தியின் பெயராகும் என்பது ஸர் மோனியர் வில்லியம்ஸ் என்பாரின் ஸம்ஸ்கிருத - இங்கிலீஷ் அகராதியிலிருந்து தெரியவருகிறது. அந்தப் பழைய ஞானப்பெண்மணியின் பெயரை விஷ்ணு சித்தர் என்ற பெரியாழ்வார் தம் அருமைத் திருமகளுக்குச் சூட்டினாரென்று கருதுவதும் பொருந்துவதே.

வாக்கிலும் ஒரு மகா காவியம்

கோதையின் வாக்கிலும் கோதையின் வாழ்க்கைக் கதை ஒரு மகா காவியமாகக் காணப்படுகிறது. இக் காவியத்தின் உயிர்நிலை கோதையின் காதல்தான் - பக்திப் பெருங்காதல் தான். இவளது பிரேமைப் பெருக்கே - காதற் பெரு வெள்ளமே - 'நாச்சியார் திருமொழி' என்று கூறுவதிலும் கருத்து வேற்றுமைக்கு இடமில்லை. பெரும் பள்ளத்தில் பாயும் பெருவெள்ளமன்றோ நம் மனக்கண்முன் தோன்றுகிறது, கோதையின் பாசுரங்களை ஓதி, ஓதி அந்த உணர்ச்சி பெருக உணரும்போது?

நோன்புகளிலும் காவிய மனப்பான்மை

பழைய காலத்தில் கன்னியர், பாவை நோன்பு நோற்பதுபோல் காமன் நோன்பு நோற்கும் வழக்கமும் உண்டு. ஆண்டாளும் மணம் செய்வதற்கு உரிய இளம்பருவத்தில் காதற் கடவுளான காமதேவனைக் குறித்து, நோன்பு நோற்றாள் என்று கருதுவது பொருத்தமானதே.

Koviloor Digital Library

'சீவக சிந்தாமணி'யில் சுரமஞ்சரி என்ற பெண் சீவகனை அடைய விரும்பிக் காமனை வேண்டி நோன்பு நோற்றதாகத் தெரிந்துகொள்கிறோம். 'பெருங்கதை'யிலும் பதுமாபதி என்ற பெண் உதயணனை அடைய விரும்பிக் காமன் நோன்பு நோற்ற செய்தியைக் கேள்விப்படுகிறோம். இப்படியே புருஷோத்தமனை அடைய விரும்பி, ஆண்டாள் காமன் நோன்பு நோற்ற கதையை இவள் பிரபந்தத்திலே காண்கிறோம்.

'மானிடவர்க்கு என்று பேச்சுப்படில் வாழ கில்லா'ப் பெருநோன்பு நோற்ற சிறப்பு ஆண்டாளுக்கு உரியது. கண்ணன் உகந்த கோபியருள் ஒருத்தியாகி இவள் பாடி யிருப்பதும் கூடுவிட்டுக் கூடு பாய்வதுபோன்ற ஒருவகைக் காவிய மனப்பான்மைதான். திருப்பாவைப்பாசுரங்கள் இந்த மனப்பான்மைக்கே சான்றாகின்றன.

காமன் நோன்பைப்போல் மார்கழி நோன்பும் விவரமாக வருணிக்கப்படுகிறது, ஆண்டாள் வாக்கிலே. இந்த இரண்டு நோன்புகளின் வாயிலாக ஆண்டாளின் காதல் வெள்ளம் கரைபுரண்டு ஓடுவதையும், புருஷோத்தமன் என்ற ஆனந்த சமுத்திரத்தை நோக்கி ஓடுவதையும் காண்கிறோம்.

மார்கழி மாதத்திலே மதி நிறைந்த நாளான பௌர்ணமி யன்று அதிகாலையில் நீராட்டம் நடைபெறுவதாகத் தெரிவிக்கிறது, திருப்பாவை முதற்பாட்டு. அதிகாலையில் சுக்கிரோதயம் அல்லது விடிவெள்ளியின் உதயம் கண்டு நீராடுவதையும் ஆண்டாள் குறிப்பிடுகிறாள்.

வெள்ளி எழுந்தது கண்டு விசேஷமாக நன்னீராடு வதும், யாத்திரை ஆரம்பிப்பதும், விரும்பிய வேறு காரியங்களைச் செய்வதும் நம்மவர் வழக்கம் என்பதற்குப் பண்டைத் தமிழிலக்கியங்களில் சான்று கிடைக்கிறது. ஆனால் ஆண்டாளோ வெள்ளி எழுந்ததை மட்டும் குறிப்பிடாமல்,

Koviloor Digital Library

'வெள்ளி எழுந்து
வியாழம் உறங்கிற்று'

என்று பாடுகிறாள்.

ஆண்டாள் காலம்

இங்கே ஆண்டாள் காலநிலைக்கு ஒரு திறவுகோலைக் கண்டு காட்டுகிறார் ஆராய்ச்சிப் பேரறிஞரான திரு.மு. இராகவையங்கார். 'மார்கழி மாதத்துப் பௌர்ணிமையில் விடிவதற்கு முன் சுக்கிரோதயம் நிகழ வேண்டுமென்ற நியதியே இல்லை. அம்மாதத்து வைகறைகளிலே வெள்ளி எழுவது ஒரு முறையன்றி உண்டாகக்கூடிய நிகழ்ச்சி. அவ்வாறிருக்க, வெள்ளி ஒருபுறம் உதயமாக மறுபுறம் வியாழன் அஸ்தமித்தது என்று கோதையார் குறிப்பிட்டுக் கூறலாயினர் எனின், அஃது அவர் காலத்து நிகழ்ந்த ஒரு விசேட சம்பவமே' என்கிறார்.

வெள்ளி எழுதலும் வியாழம் உறங்குதலும் உடன் நிகழ்ந்தன என்று கொண்டு, அந்த விசேட நிகழ்ச்சிகள் பெரியாழ்வார் காலமாகிய எட்டாம் நூற்றாண்டில் எந்த எந்த ஆண்டுகளில் நிகழ்ந்தன என்பதை ஆராய்ந்து பார்க்கிறார் இந்தத் தமிழ் அறிஞர், வானசாஸ்திர அறிஞர்களின் உதவி கொண்டு.

இந்த ஆராய்ச்சியின் பயனாக, 'எட்டாம் நூற்றாண்டில் ஒரே தடவையாக, 731-ஆம் வருஷம், டிசம்பர் மாதம், 18-ஆம் தேதி அதிகாலை 3.50 முதல் 4 வரையுள்ள மணியில் ஆகும் இந்த நிகழ்ச்சித் தோற்றம்' என்று முடிவு கட்டியிருக்கிறார்கள். அந்த மார்கழிப் பௌர்ணிமையன்று அதிகாலையே திருப்பாவை தோன்றிய சுபகாலமாக வேண்டுமென்றும், நீராடுவதற்குச் சிறிது முன்னதாகவே துயிலுணர்ந்த கோதை, தான் கண்ணாரக் கண்ட வானநிலையையே பாடியிருக்கிறா ளென்றும் திரு.மு. இராகவையங்கார் கூறியிருப்பது கூர்ந்து நோக்கத்தக்கது.

Koviloor Digital Library

குரும்பரம்பரையில் பொதுவாக ஆண்டாள் தோன்றிய மாத நட்சத்திரங்கள் காணப்படுகின்றனவேயன்றி ஆண்டு குறிக்கப்படவில்லை. விசேஷமாகப் பின்பழகிய பெருமாள் சியர் குருபரம்பரையையும் திவ்யசூரி சரிதத்தையும் சுட்டிக் காட்டலாம். பிற்பட்ட குருபரம்பரை நூல்கள் சிலவற்றில் வருஷமும் குறிக்கப்பட்டிருப்பதைப் பிரமாணமாகக் கொள்ள வேண்டியதில்லை.

எனவே, திரு.மு. இராகவையங்கார் அபிப்பிராயப் படுவது போல், கி.பி. 716-ஆம் ஆண்டுத் திருவாடிப்பூரத்தில் ஆண்டாள் தோன்றியதாகவும், தனது பதினைந்தாம் வயதில் - அதவாது கி.பி. 731-இல் - திருப்பாவையை இயற்றியதாகவும் கருதுவது, பொருத்தமென்றே தோன்றுகிறது. ஆனால், 'அழகிய மணவாளன் அப்பிராட்டியை (கோதையை) அங்கிகரித்தருளிய காலத்தே அவருக்கு 15 திருநட்சத்திரத்திற்கு மேல் (வயதுக்கு மேல்) நடைபெறவில்லை' என்ற ஊகத்திற்குத் தக்க சான்று கிடைக்கவில்லை.

வாழ்க்கையும் குணாதிசயமும்

ஆண்டாளின் வாழ்க்கையை ஒரு காவியமாகத் தன் முடிவற்ற இன்னிசையால் பாடிக் காட்டுவதும் நாச்சியார் திருமொழி; இந்தக் குணாதிசயத்தை ஓர் ஓவியமாக எழுதிக் காட்டுவதும் இத்திருமொழிதான், தெய்வக் காதலனை அடைய நோன்பு நோற்றதையும், கோபியருள் கோபியாகி அவனுக்கே பணிபுரியத் துணிந்ததையும் இவரது முதல் பிரபந்தமாகிய திருப்பாவையில் காண்கிறோம். அந்தப் புருஷோத்தமனை அடைந்து பேறு பெறுகின்றாள் கோதை என்ற செய்தியை நாச்சியார் திருமொழியின் திரண்ட பொருளாகக் காண்கிறோம்.

இத் திருமொழியிலே, சிறுமியாகிய ஆண்டாள், காதலுடன் வளர்ந்துகொண்டிருப்பதைக் காண்கிறோம்.

Koviloor Digital Library

உருவெளித் தோற்றத்தில் தெய்வக் காதலன் வந்து உறவாடுவதைக் காண்கிறோம். காலவெள்ளம் பின்னோக்கிப் பாய, ஆண்டாளின் காதல் வெள்ளம் கோபியர்களின் காதல் வெள்ளத்துடன் கலந்து பெருகுவதைக் காண்கிறோம்.

காதல் பேரின்பத்துடன் பிரிவுப் பெருந்துயரத்தையும் காண்கிறோம்; - ஆம்; காதலனைக் காணாத துயரத்தை - அன்று, கண்டு பிரிந்த துயரத்தைத்தான்; - பிரிவை ஆற்றாத காதலி, குறி பார்ப்பதையும் காண்கிறோம்; தூது விடுவதையும் பார்க்கிறோம். இயற்கைப் பொருளழகுகளில் தன் அழகனது அழகுகளை இவள் காண்பதும் நமக்குத் தெரியவருகிறது, இவள் திருமொழி வாயிலாக.

'கனாக்கண்டேன் தோழீ! நான்'

கண்ணன் வந்து மணப்பதாகக் கனாக் காண்பதுதான் எத்தகைய அதிசயக் கவிதையாய்ப் பரிணமித்திருக்கிறது! தோரணம் நாட்டுகிறார்கள்; மத்தளம் கொட்டுகிறார்கள்.

> வாரணம் ஆயிரம் சூழ வலம் செய்து
> நாரணன் நம்பி நடக்கின்றான் என்(று) எதிர்
> பூரண பொற்குடம் வைத்துப் புறமெங்கும்
> தோரணம் நாட்டக் கனாக்கண்டேன் தோழீ! நான்.

[*வாரணன் - யானைகள். பூரண பொற்குடம் - பொன்னாலாகிய பூரண கும்பங்களை. புறம் எங்கும் - ஊர்ப்புறம் முழுவதும்.*]

என்று தொடங்கும் திருமொழியை அறியாதார் யார்?

தோழரும் தானுமாகக் கண்ணன் ஆயிரம் யானைகளில் ஏறித் திருமணத்தின் பொருட்டு வருவான் என்பதை ஸ்ரீவில்லிபுத்தூர் வாசிகள் முன்கூட்டியே கேள்விப்பட்டு, ஊரை அலங்கரித்து, ஆண்டாளைப்போல் தாங்களும் அந்தப் புருஷோத்தமனின் வருகையை எதிர்நோக்கி இன்புற்றிருக் கிறார்களாம்.

Koviloor Digital Library

மணமகன் ஊருக்குள் வந்து புகுந்ததும் விரைவாகவே கல்யாணப் பந்தலுக்கும் வந்து சேர்ந்துவிடுகிறான்:

நாளை வதுவை மணமென்று நாளிட்டு
பாளை கமுகு பரிசுடைப் பந்தற்கீழ்,
கோளரி மாதவன் கோவிந்தன் என்பான் ஓர்
காளை புகுதக் கனாக்கண்டேன் தோழீ! நான்.

[*வதுவை மணம் - விவாக மங்களம். நாள் இட்டு - நல்ல நாள் குறிப்பிட்டு. பரிசுடை - பெருமையாகவுடைய. பந்தற் கீழ் - பந்தலின் கீழே. கோளரி - பராக்கிரமம் பொருந்திய சிங்கம். காளை - இளம் பிள்ளை. புகுத - வந்து சேர.*]

திருமணத்திற்கு மக்களோடு தேவர்களும் கூட்டங் கூட்டமாக வருகிறார்களாம். மணமகன் தேவ தேவன் அல்லவா? மண்ணில் கால் பாவாதவர்களும் கால் பாவி வந்து, 'ஆண்டாள்' திருமணம் கண்டால் அல்லது நாங்கள் எழுந்து போவதில்லை என்று (சத்தியாக்கிரகம் செய்வதுபோல்) தங்கியிருக்கிறார்களாம்.

தன்னைப் பெண் பேசித் தனக்குக் கூறைப் புடைவை உடுத்துவதையும் விவரமாகக் கண்டு தோழியிடம் தெரிவிக்கிறாள். தனக்கு 'மந்திரக் கோடி' (மந்திரித்துக் கொடுத்த புது ஆடை) உடுத்துக்கொள்ளச் செய்தவள் துர்க்கை என்கிறாள். கண்ணனது உடன் பிறந்தவளான துர்க்காதேவி நாத்தி முறையில் உள்ளவள் என்பது குறிப்பு.

பெரியோர்கள் நாலு திசைகளிலிருந்தும் புண்ணிய தீர்த்தங்களைக் கொண்டுவந்து புரோட்சித்து, உரத்த குரலில் வாழ்த்தி, மணமகனுக்கும் மணமகளுக்கும் இடையூறுகள் ஏற்படாமல் காப்பு நூல் கட்டியதையும் தோழிக்குத் தெரிவிக்கிறாள்:

காப்புநாண் கட்டக்
கனாக்கண்டேன் தோழீ! நான்.

Koviloor Digital Library

மணமகனாகிய கண்ணன் திருமணம் நடக்கும் மாளிகைக்கு வரும்போது விளக்கு, கலசம் முதலியவற்றைச் சுமங்கலி ஸ்திரீகள் எடுத்து, எதிர்கொண்டார்கள் என்ற விவரத்தையும் தெரிவிக்கிறாள். அவர்கள் எதிர்கொள்ள வடமதுரை மன்னனாகிய கண்ணன் அடி நிலைகளாகிய பாதுகைகளை அணிந்துகொண்டு நிலம் அதிரக் கம்பீரமாக வருகிறானாம்.

'அதோ சூரிய ஒளிபோல் ஜொலிக்கிற தீபம்; அந்தத் தீபத்திலே ஜொலிக்கிற பொற்கலசங்கள்! அதோ, அந்த ஜொலிப்புகளையும் வென்றுவிடும் மேனியழகு வாய்ந்த இள மங்கையர். எல்லாவற்றுக்கும் மேலாக ஜொலிக்கும் கண்ணன்!'' என்றெல்லாம் கண்முன் காட்டுவதுபோல் அமைந்திருக்கும் பாசுரம்:

> *கதிரொளி தீபம் கலசமுடன் ஏந்திச்*
> *சதிர்இள மங்கையர் தாம்வந்(து) எதிர்கொள்ள,*
> *மதுரையார் மன்னன் அடிநிலை தொட்(டு) எங்கும்*
> *அதிரப் புகுதக் கனாக்கண்டேன் தோழீ! நான்.*

[கதிர் ஒளி தீபம் - சூரியனைப்போல் ஒளி விடுகிற தீபம். சதிர் இள மங்கையர் - அழகு மிக்க இளம் பெண்கள். மதுரையார் மன்னன் - வடமதுரையில் உள்ளவர்களுக்கு மன்னனாகிய கண்ணன். அடிநிலை தொட்டு - பாதுகைகளைப் போட்டுக்கொண்டு.]

காப்பு நாண் கட்டியபின் மணமகன் மாளிகையில் புகுந்ததைச் சொல்லுகிறாள். கனவுக் கல்யாணமானதால் முன்னம் நிகழ்வது பின்னும், பின்னே நிகழ்வது முன்னுமாக மாறிக் காண்கிறாள் என்றுதான் சொல்லவேண்டும்.

'தோழியே, தோழியே! சகல மங்கள வாத்தியங்களும் முழங்கக் கண்ணன் கல்யாணப் பந்தலுக்குள் வந்து சேர்ந்தானம்மா!' என்று சொல்லும்போதே, அந்த மணப் பந்தலை எவ்வளவு அழகாக, முத்துமாலைகளை வரிசையாகத்

Koviloor Digital Library

தொங்கவிட்டு அலங்கரித்திருந்தார் தந்தையார் என்பதும் கட்புலனாகிறது.

'கல்யாணப் பந்தலுக்குள் வந்து என்னைக் கைப் பற்றினான் என் உள்ளம் கவர்ந்த கள்வன்' என்கிறாள்.

'மத்தளம் கொட்ட, வரிசங்கம் நின்(று) ஊத,
முத்துடைத் தாமம் நிரைதாழ்ந்த பந்தற்கீழ்,
மைத்துனன் நம்பி மதுசூதன் வந்(து) என்னைக்
கைத்தலம் பற்றக் கனாக்கண்டேன் தோழீ! நான்.'

[வரிசங்கம் - வரிகள் அல்லது ரேகைகளையுடைய சங்குகள். நின்று ஊத - நிலைத்து ஊதவும். தாமநிரை - மாலைகளின் வரிசைகள். தாழ்ந்த பந்தற்கீழ் - தாழ்ந்து தொங்கின பந்தலின்கீழே. மைத்துனன் - மைத்துன முறையுள்ளவன். மதுசூதன் - மதுசூதனன் என்ற கண்ணன்.]

கண்ணனை 'மைத்துனன்' என்று குறிப்பிடுவது கவனிக்கத் தக்கது. 'நப்பின்னைப் பிராட்டியோடு உண்டான சம்பந்தம் தன்னோடும் உண்டு என்று இருக்கிறாள் காணும்' என்பது விசேஷ உரை. திருப்பாவையில் நப்பின்னையை நோக்கி, 'உன் மைத்துனன் பேர் பாடி' என்று கோபியர்கள் கூறுவதையும் நினைவூட்டிக் கொள்ளலாம்.

நப்பின்னைப் பிராட்டியைக் கண்ணனுக்கு 'மாமன் மகள்' என்று கூறுவது உண்டு. தன்னையும் ஒரு கோபிகை யாகப் பாவித்துக்கொள்ளும் கோதை நப்பின்னைக்குக் கண்ணனோடு உள்ள அதே உறவுமுறையைத் தனக்கும் உரிய முறையாகக்கொள்கிறாள். தன்னையும் அந்தப் பிராட்டி யாகவே பாவித்துக் கண்ணன் காதலியாகிவிட்டாள், கோதையென்பது குறிப்பு. 'மைத்துனன்' என்பதற்கு இங்கே, 'அத்தை மகன்' என்று பொருள் கொள்ளவேண்டும்.

'கைத்தலம் பற்றக் கனாக் கண்டேன்'

என்று தன் தளிர்க்கைகளை அவன் தடக்கை (பெரிய கை) பிடித்துக் கொண்டதை - அதாவது, பாணிக்கிரகணம்

Koviloor Digital Library

செய்துகொண்டதைக் - கூறியபின், அவன் தன் கையைப் பிடித்தவண்ணம் தீ வலம் செய்ததையும் குறிப்பிடுகிறாள்:

'காய்சின மாகளி(று) அன்னான் என் கைப்பற்றித்
தீவலம் செய்யக் கனாக்கண்டேன் தோழீ! நான்.'

[*காய்சின மாகளிறு அன்னான் - மிகுந்த கோபத்தையுடைய பெரிய ஆண்யானை போன்ற கண்ணன்.*]

மந்திரம் ஓதி வளர்த்த ஓமாக்கினியைப் பிரதட்சிணம் செய்ததாகவும், அந்தச் சிறந்த வேதமந்திரங்கள் விவாக மங்களத்திற்கு உயிராகிச் செவிக்கு இனிய ஸ்வரத்துடன் உச்சரிக்கப்பட்டதாகவும் கோதை கூறினாள். அக்கினி சாட்சியாகத் தன்னைக் கல்யாணம் செய்துகொண்டான் கண்ணன் என்கிறாள்.

கையைப் பற்றிக்கொண்டு தன்னுடன் மணமகன் தீயையும் வலம் வந்துவிட்டதால், 'இனி அவன் என்னை விட்டுப் பிரியமாட்டான்' என்ற குறிப்போடு அத்திருமணச் சடங்கை மிகுந்த மகிழ்ச்சியுடன் தோழிக்குச் சொல்லுகிறாள் கோதை. தூய நெருப்பு, மணமகனுக்கும் மணமகளுக்கும் இடையே ஏற்பட்டிருக்கும் தூய நட்பிற்கும் காதலுக்கும் அறிகுறியாகும்.

இந்த நட்புக்காதல் இந்த ஒரு பிறவிக்கு மட்டுமா உரியது?

'இம்மைக்கும் ஏழேழ் பிறவிக்கும் பற்றாவான்,
நம்மை உடையவன், நாராயணன் நம்பி'

[*இம்மைக்கும் - இப்பிறப்பிற்கும். ஏழ் ஏழ் பிறவிக்கும் - இனி வரக்கூடிய எல்லாப் பிறவிகளுக்கும்.*]

என்கிறாள்.

தன்னுடன் அக்கினி வலம் வந்தவன் அழகிய கையால் தன் கையைப் பிடித்துக்கொண்டதுடன், தன் காலைப் பிடித்து அம்மி மிதிக்கவும் வைத்தான் என்றும் சொல்லுகிறாள்:

Koviloor Digital Library

'செம்மை உடைய திருக்கையால் தாள்பற்றி,
அம்மி மிதிக்கக் கனாக்கண்டேன் தோழீ! நான்.'

[தாள் - கால். மிதிக்க - மதிப்பிக்க.]

கோதைக்கு விடுதலை என்ற மோட்சத்தைப் பற்றிய கவலையே கிடையாது. 'இவனுடைய அநுபவம் மாறாதே சொல்லுமாகில், என்றும் பிறந்தால் ஆகாதோ? - என்றிருக்கிறாள்' என்பது விசேஷ உரை. இத்தகைய காதலுக்கு முடிவும் உண்டோ? விடுதலையும் வேண்டுமோ?

'அன்பனது கருணையிருந்தால், அன்பு இருந்தால், எத்தனை பிறப்புப் பிறந்தால்தான் என்ன?' என்பது கோதையின் காதல் நிலை. இதைத்தான்,

'எற்றைக்கும் ஏழேழ்
பிறவிக்கம் உன்தன்னோ(டு)
உற்றோமே யாவோம்;
உனக்கேநாம் ஆட்செய்வோம்'

என்ற திருப்பாவை அடிகளிலும் காண்கிறோம்.

மணமக்கள் இருவரையும் ஒருசேர வைத்து மங்கள நீராட்டியதையும் குறிப்பிடுகிறாள்:

குங்குமம் அப்பிக் குளிர்சாந்தம் மட்டித்து,
மங்கல வீதி வலம் செய்து, மணநீர்
அங்கவ னோடும் உடன்சென்(று), அங்கு ஆனைமேல்
மஞ்சனம் ஆட்டக் கனாக்கண்டேன் தோழீ! நான்.

[குங்குமம் அப்பி - குங்குமக் குழம்பைப் பூசிக்கொண்டும். குளிர் சாந்தம் - குளிர்ச்சியுள்ள சந்தனம். மட்டித்து - உடம்பு முழுவதும் பூசி.]

தீயின் அருகிருந்து ஓமம் செய்ததால் ஏற்படும் வெப்பத்தைத் தணிவிக்க மணமக்களுக்குக் குங்குமம் அப்பிக் குளிர்ந்த கலவைச் சந்தனமும் பூசுகிறார்களாம். மஞ்சள்

Koviloor Digital Library

நீராட்டுதல் என்ற வசந்த நீராட்டை, திருமணத்தை முற்றுப்பெறச் செய்யும் சடங்காகக் குறிப்பிடுகிறாள் கோதை.

ஆண்டாளின் இந்தத் தூய நற்கனவையே ஒரு காவியம் என்று சொல்லலாம், 'கோதை கண்ட கனவு ஒரு காவியம்; உள்ளம் பேருள்ளத்துடன் கலக்கும் சந்தர்ப்பம்; ஆத்மா பரமாத்மாவை அண்டும் நேரம்; பிரபத்தியோக நிலை' என்பர் வளரும் தமிழ்ச் சோலையில் ஓர் அபூர்வ மலராகத் திகழ்ந்து மறைந்த திரு.கு. ப.ரா.

ஓர் அற்புத குண சித்திரம்

கோதையின் குணாதிசயம் பக்த குணாதிசயங்கள் என்ற சித்திர சாலையில் என்றும் அழியாத ஓர் ஓவியமாகும். இந்த ஓவியத்திலே காதலின் புதுமை என்றும் புதுமையாக ஜொலிக்கிறது. பெரியாழ்வாரின் குணசித்திரத்திலும் பக்திக் காதலின் புதுமையைக் காண்கிறோம். எனினும் அது தாயன்பின் புதுமை; இதுவோ மையல் ஏற்றி மயக்கும் புதுமை.

பெரியாழ்வாரின் பக்தி பாடுபட்டுத் தேடியது. ஆண்டாளின் மனோ பக்திக் காதலோ புதையலெடுத்த மாநிதி. எனவே இந்த ஓவியத்திற்கு ஒரு தனிச் சிறப்பு உரியதாகும்.

பூமாலையும் பாமாலையும் அன்புருவாகிய அழகனுக்குச் சூட்டிய சிறப்பு, பெரியாழ்வாருக்கும் உரியதுதான். எனினும் அவர் கட்டிக் கொடுத்த பூமாலையைக் காட்டிலும் இவள் சூடிக்கொடுத்த பூமாலையை இறைவன் சிறப்பாக உகந்தானல்லவா? அதே காதலை - 'புருஷோத்தமனின் காதலி நான்' என்ற தனிப்பெருஞ் சிறப்பை, இவள் பாடிக்கொடுத்த பாமாலைகளிலும் காணலாம்.

Koviloor Digital Library

'பெரியாழ்வார், பெற்றெடுத்த பெண் பிள்ளை வாழியே' என்று ஆண்டாளை வாழ்த்துகிறது பக்தி உலகம். ஆழ்வார்கள் அனைவர்க்கும் திருமகளாவாள் ஆண்டாள் என்றும் ஸ்ரீவைஷ்ணவ ஆசாரியர்கள் கூறுவதுண்டு.

ஆழ்வார்களுக்கெல்லாம் ஸ்ரீ கிருஷ்ணபக்தி உண்டு. ஸ்ரீ கிருஷ்ணாநுபவமும் உண்டு. எனினும் ஆழ்வார்களின் ஞான சந்ததியாகக் கொண்டாடப் பெறும் ஆண்டாளோ அவர் களுடைய வழியையே பின்பற்றிச் சென்று, கிருஷ்ணாநுபவத் தில் அவர்களையும் மிஞ்சிவிட்டாள் என்பர்.

பக்தி யுலகில் ஆண்டாள் என்ற குணசித்திரம், காதலே பக்திக் காதலாகி, விளைக்கத் தக்க அற்புத அநுபவங்களுக்கு ஓர் அரும்பெருஞ் சான்றாகும்.

★

Koviloor Digital Library

7

தேசிகர் துதிக்கும் கோதை

கவிவாதி சிங்கம் என்றும், வேதாந்தகுரு என்றும் புகழ் படைத்திருக்கும் வேதாந்த தேசிகர் ஒரு சமயம் ஸ்ரீவில்லிபுத்தூருக்குச் சென்றார். ஆண்டாளுக்கு ஸ்ரீவைசாக வசந்த விழா நடந்துகொண்டிருந்தது. கோதையின் விக்கிரகம், கோதை நாச்சியார் நாடகசாலைத் தெருவிலுள்ள திருவேங்கடமுடையான் சந்நிதிக்கு முன்பாகவுள்ள வசந்த மண்டபத்துக்கு எழுந்தருளும்போது, தேசிகர் வீதியில் தரிசித்தார்.

வேதாந்த குருவின் ஆண்டாள் பக்தி

அந்த ஆனந்தம் உள்ளடங்காது பொங்கிக் கொண்டிருந்தது. அதற்குப் போக்குவீடாக அப்பெரியார் கோதா ஸ்துதி என்னும் வடமொழிப் பிரபந்தத்தை இயற்றினார். கோதை வசந்த மண்டபத்துக்குள் வருவதற்கு முன்னே இந்தப் பிரபந்தம் பாடி முடிக்கப் பெற்றதாம்.

இந்தப் பிரபந்தத்தை ஹனுமந்தன்பட்டி மதுர கவி ஸ்ரீநிவாஸையங்கார் தமிழ்ச் செய்யுளாக மொழி பெயர்த்திருக்கிறார். முதல் நூலின் கருத்துக்களை வடமொழி பயிலாதவர்களும் உணர்ந்துகொள்வதற்குத் தமிழ்ச் செய்யுள் வடிவான இத்தோத்திரப் பாமாலை உதவும். எனினும் மூல நூலின் அருமை பெருமைகளை எந்த மொழி பெயர்ப்பின் மூலமாகவும் அறிந்து கொள்ள முடியாது.

தேசிகரின் கோதாஸ்துதி, 'இவர் பிரார்த்தனைக்கு இணங்கப் பாடுவதற்கு இன்பமாய்க் கோதையின் மணிச்

Koviloor Digital Library

சிலம்பின் ஒலிபோல் அமைந்துள்ளது' என்று ரசிகர்களும் பக்தர்களும் கொண்டாடுகிறார்கள். 'வேதாந்த தேசிகரின் ஆண்டாள் பக்தி மலர்ந்து, கோதாஸ்துதியாகப் பரிமளிக்கிறது' என்று கோதா ஸ்துதியை ஓதி உணர்வோர் ஒருமுகமாய் ஒப்புக்கொள்வர்.

இந்த ஸ்துதி இருபத்தொன்பது சுலோகங்கள் கொண்டது. திருப்பாவை முப்பது பாசுரங்கள் அடங்கியதாக இருப்பதால், தேசிகர் தாமும் முப்பது சுலோகங்கள் பாட வேண்டுமென்றே எண்ணி இருந்தாராம். ஆனால், 'ஆண்டாளோடு சரிநிகர் சமானமாக நாமும் நின்று பேசவேண்டாம்; சிறிது குறையப் பாடுவதே நலம்' என்று முடிவுகட்டி, ஒரு சுலோகம் குறைவாகத் தமது ஸ்துதியை அமைத்துக்கொண்டார் என்று சிலர் கூறுவதுண்டு. திருப்பாவைப் பாசுரங்கள் முப்பதில் பலச்ருதிப் பாட்டாகிய இறுதிப் பாசுரத்தைச் சேர்க்காமல் 'சிற்றஞ்சிறுகாலை' என்ற பாசுரத்தோடு திருப்பாவைப் பிரபந்தம் பூர்த்தி ஆனதாகக் கருதித் தாமும் இருபத்தொன்பது சுலோகங்களில் தமது கோதா ஸ்துதியை ஸ்ரீ தேசிகர் இயற்றி முடித்திருக்கவும் கூடும்.

கோதாஸ்துதியைப் பக்தியோடு பாராயணம் செய்வோர் ஸ்ரீரங்க ராஜாவின் பேரருளால் எங்கும் திருவருள் பெற்று இன்புறுவர் என்பது இந்த ஸ்துதிப் பிரபந்தத்தின் பலச்ருதி சுலோகக் கருத்து. இது திருப்பாவையின் முப்பதாவது பாசுரத்தின் கருத்தைத் தழுவியதுதான்:

சங்கத் தமிழ்மாலை
    முப்பதும் தப்பாமே
இங்(கு)இப் பரி(சு) உரைப்பார்
    ஈரிரண்டு மால்வரைத்தோள்
செங்கண் - திருமுகத்துச்
    செல்வத் திருமாலால்
எங்கும்திருவருள்பெற்(று)
    இன்புறுவர் எம்பாவாய்.

Koviloor Digital Library

'மலர்ந்த பக்தியோடு தேசிகன் உள்ளத்திலிருந்து உருகி, வாக்காக வெளிவரும் இதே பிரகாரமாக யார் தப்பாமல் உச்சரிக்கிறாரோ?' என்ற கருத்தைக் கோதாஸ்துதியின் இறுதி சுலோகத்தில் குறிப்பாகக் காண்கிறோம். 'இப்பரிசு உரைப்பார்' என்று திருப்பாவையின் இறுதிப் பாசுரத்தில் வருவதற்கும் 'கோதை எப்படிப் பக்தி வெள்ளமாக அகமகிழ்ந்து உரைத்தாளோ அப்படியே ஓதுகிறவர்கள்' என்று குறிப்பாகப் பொருள் கொள்ளலாம் அல்லவா?

ஸ்ரீரங்க ராஜாவிடம் கோதைக்கு உள்ள பக்தி, ஸ்ரீதேசிகருக்கும் கோதையிடம் உண்டு. கோதையின் உள்ளம் உருகிச் 'சங்கத் தமிழ் மாலை'யாக - சங்கத்தார் வளர்த்த சிறந்த தமிழால் இயற்றிய பாமாலையாக - வெளிப்பட்டதுபோல், தேசிகரின் உள்ளம் உருகிச் சங்கத் தமிழ் போலவே உயர்ந்த சம்ஸ்கிருதமாக வெளிப்பட்டது. கோதையின் அருளால் கோதை விஷயமாக வெளிப்பட்ட இந்த ஸ்துதியே கோதாஸ்துதி. கோதாஸ்துதியால் கோதையின் பெயரும் புகழும் தமிழகம் கடந்து, வட இந்தியாவிலும் பரவிவிட்டன.

வாக்கு அருளும் கோதை

'பெரியாழ்வாரது வம்சமாகிய நந்தவனத்திற்குக் கற்பகக்கொடி போன்ற ஆண்டாள், ஸ்ரீரங்கராஜா என்ற தருவின் சேர்க்கையால் சேவிக்கத் தகுந்த பேரழகு உடையவள் ஆனாள்' என்று கோதாஸ்துதியின் முதலாவது சுலோகம் தெரிவிக்கிறது. இதே சுலோகத்தில் கோதை பொறுமையே உருவெடுத்து வந்தவள் என்பதையும், கருணையின் மிகுதியால் மகாலக்ஷ்மியைப் போன்றவள் என்பதையும் தெரிந்துகொள்கிறோம். இவள் சூடிக்கொடுத்த சுடர்க்கொடி என்பதையும் தெரிந்துகொள்கிறோம்.

இரண்டாவது சுலோகம் 'ஒளிவளர் கோதையே!' என்று ஆரம்பமாகிறது. கோதையின் மகிமை தம்மைப் போன்றவர்களின் தோத்திரத்தில் அடங்காதது என்று தெரிந்து, பேசாமல்

Koviloor Digital Library

இருப்பதே உசிதமென்று மௌனமாகத்தான் இருந்தாராம் இவர். ஆனால் கோதையின் கல்யாண குணங்கள் அந்த மௌன விரதத்தைக் குலைத்து, வாயடங்கியிருந்த இவரை வாய்திறக்கச் செய்துவிட்டனவாம்.

இந்த இரண்டாவது சுலோகத்திலே இவர் நூல் இயற்றிய வரலாற்றுக் குறிப்பு ஒன்றையும் காணலாமென்று கருதுவோர் உண்டு. தேசிகர் ஸ்ரீவில்லிபுத்தூருக்குச் சென்ற நாள் திரயோதசி திதி என்றும், அன்று மகாப் பிரதோஷகாலத்தில் மௌன நோன்பை நோற்றுக்கொண்டு வீற்றிருந்தார் என்றும், அப்போது கோதை அந்த வழியாக வீதி எழுந்தருளியதைக் கண்டதும், அவர் மௌன விரதத்தை விட்டு விட்டுக் கோதாஸ்துதியைப் பாடினார் என்றும் சொல்லுகிறார்கள்.

மௌனமுற்றிருந்த தமக்கு வாக்கு அருளிய கோதையை, 'வாக்கு அருளும் கோதையே!' என்று மூன்றாம் சுலோகத்தில் விளித்துப் பாடுகிறார். மௌனம் குலைந்துவிட்டதால் வாக்கு மிகவும் இனிமையாக, அமுதமாக, அன்பு மயமானதாக வெளிப்பட வேண்டும் என்கிறார்.

'அன்னையே! உன் திருவடிகளில் அணிந்த மணிச் சிலம்பின் இன்னிசை என் வாக்கில் அமைய வேண்டும்' என்று பொருள்படப் பிரார்த்திக்கிறார். உள்ளம் அன்பு மயமாகும் போது வாக்கிலே அமுதமாக இன்னிசை அமைந்துவிடும் என்ற குறிப்பையும் இந்தச் சுலோகத்தில் காணலாம்.

கண்ணனுடைய தொடர்பினால் யமுனை தூய்மையும் மேன்மையும் அடைந்திருப்பதுபோல், கண்ணன் விஷயமாகப் பாடப் பெற்றிருக்கும் திருப்பாவை முதலான பிரபந்தங்களும் சிறப்படைந்திருக்கின்றனவாம். இப் பிரபந்தங்களை முறையாக ஓதி உணர்ந்தால் ஆண்டாளின் கடைக்கண் நோக்கைப் பெற்று, உள்ளம் ஞானத் தெளிவு பெறும் என்றும், கவிகள் மதுரவாக்கைப் பெறுவர் என்றும் நான்காவது சுலோகம் தெரிவிக்கிறது.

Koviloor Digital Library

கருணையும் காதலும் பக்தியும்

கோதாஸ்துதியின் ஐந்தாவது சுலோகம், இருவகையான மாலைகளால் கோதை எம்பெருமானைக் கட்டுப்படுத்தி விட்டாள் என்று சாதுரியமாகத் தெரிவிக்கிறது. சூடிக்கொடுத்த நாச்சியார் என்ற பிரசித்தமான பெயருக்கு இசைந்தவாறு தான் சூடிய பூமாலையை இறைவனுக்குக் கொடுத்ததுடன், பாமாலையையும் அவனுக்குச் சூட்டித் தொண்டர்களுக்கும் தந்திருக்கிறாள் அல்லவா? இப்படி இவள் பகவானை உகப்பித்ததால், குழந்தைகளான நாம் செய்யும் குற்றங்களையும் இறைவன் பொருட்படுத்தாமல் நம்மைக் கைக்கொள்வான் என்கிறார்.

தன்மீது உள்ள அன்பு காரணமாக இறைவன் நமக்கும் கருணை புரியவேண்டும் என்பது கோதையின் திருவுள்ளம் என்பர். பாபிகளும் ஆண்டாளுடைய பக்தி வெள்ளத்தால் தூய்மையுற்றுப் பகவானுடைய திருவருளுக்கு இலக்காக முடியும் என்பது இந்த ஐந்தாவது சுலோகத்தின் தாத்பரியம்.

ஆண்டாளின் திருவாக்கிலிருந்து பிறந்த திவ்யப் பிரபந்தங்களை அந்த முகத்தாமரையின் மகரந்தம் என்றும், தேன் என்றும் போற்றுகிறது கோதாஸ்துதியின் ஏழாவது சுலோகம்.

புருஷோத்தமனான பெருமான்மீது ஜீவாத்மா கொள்ளும் பக்திக்காதலைக் காதலனுக்கும் காதலிக்கும் இடையே உள்ள காதலுடன் உவமித்துப் பேசுவது பிரசித்தமல்லவா? ஆழ்வார்களும் காதல் துறையில் தங்கள் புனித பக்தி அநுபவங்களை வெளியிடுகிறார்கள் என்பதும் பிரசித்தமானதே. இத்தகைய பக்திக்காதல், பெண்மணியான ஆண்டாளுக்கு இயற்கையாகும் என்பதை எட்டாவது சுலோகம் சுட்டிக்காட்டுகிறது.

Koviloor Digital Library

பெண்ணுடை உடுத்துப் பேசினாலும் உடனே, 'மங்கையர் கோன் பரகாலன் கலியன் சொன்ன' என்று உண்மையைச் சொல்லவேண்டியிருக்கிறதாம், திருமங்கை மன்னனுக்கு. சடகோபரும் கணவனிடத்தில் காதலிக்கு உள்ள அன்புபோல் தமது பக்தியை வெளியிடத்தான் வெளியிடு கிறார். எனினும், 'குருகூர்ச் சடகோபன் சொன்ன' என்று ஆண்மையை முடிவில் ஒப்புக் கொள்கிறார். இப்படி 'வேஷம் கட்டி ஆடும்' பக்தியைக்காட்டிலும் ஆண்டாளின் பக்திக்காதல் அநுபவம் எவ்வளவு இயற்கையானது!

இத்தகைய கருத்தை வெளியிட்டு, ஆண்டாளுடைய அன்பனான அழகிய மணவாளனை ஆண்டாளைப்போல் ஆழ்வார்களும் காதலிக்கிறார்கள் என்று வேதாந்த தேசிகர் கூறியுள்ளார். பகவானைப் புனித பக்தி நிலையில் அநுபவிப்பதற்கு மிகவும் வாய்த்திருப்பது ஆண்டாளின் நிலை என்பது கருத்து.

பத்தாவது சுலோகத்திலே, ஆண்டாள் தன் கூந்தலில் சூடிக் கொடுத்த மாலையைப் பகவான் உகந்தருளினான் என்ற கதையைக் குறிப்பிடுகிறார். பெரியாழ்வார் தொடுத்து வைத்திருந்த நறுமணம் உள்ள மாலையும் ஆண்டாள் கூந்தலிலிருந்து ஒரு புதுமணம் ஊட்டப் பெற்றதாகவே தெய்வக் காதலன் கருதினானாம். இந்த மாலைகளைப் பெரியாழ்வார் பகவானுக்குக் கொடுத்துப் பெரும்பேறு பெற்றார் என்பர் வேதாந்த தேசிகர்.

அடுத்த சுலோகத்திலே, ஆண்டாள் பிறந்ததால் தெற்குத்திசையே பெரும்பேறு பெற்றது என்கிறார். வடதிசையை உத்தரதிசை என்றும் சொல்வது உண்டு. உத்தர திசை என்பதற்கு மேலான திசை என்ற பொருளும் உண்டு. ஆண்டாளின் பிறப்பால் தென்திசையே உத்தரதிசை ஆகிவிட்டதாம்.

Koviloor Digital Library

அறிதுயில் அமர்ந்தருளும் அழகிய மணவாளன் (ஸ்ரீரங்க நாதன்) தென்திசையை நோக்கிப் பள்ளிகொண்டிருக்கிறான் அல்லவா? ஆண்டாள் பிறந்ததிசை என்ற பிரியத்தினால் அப்பெருமானது அருள் நோக்கிற்கு விசேஷ உரிமை பெற்றிருக்கிறது இத்திசை - நம் தமிழ்நாடு - என்பது உட்பொருள்.

இத்தகைய கருத்துக்களும் பல சமத்கார மொழிகளும் நிரம்பியது கோதாஸ்துதி. 'கோதாதேவி, அடியார்களாகிய நமது இதய கமலத்தில் வீற்றிருந்து விளங்கக் கடவர்' என்ற கருத்தை இருபத்தெட்டாவது சுலோகத்தில் காண்கிறோம். இத் தேவியை, 'மல்லிநாடு ஆளும் மெல்லியல்' என்றும், 'ஒளிமிளிர் கோதை' என்றும், 'வாக்கு அருளும் கோதை' என்றும், 'தக்கசீர்க் கோதை' என்றும், 'அன்னையாகிய அகிலாண்டநாயகி' என்றும், 'கோதற்ற கோதை' என்றும் இந்த ஸ்துதி குறிப்பிடுவதைக் காணலாம்.

கோதையின் பாதாரவிந்தத்தில் ஏற்பட்ட பக்தியின் விளைவாகிய இந்த ஸ்துதியை அன்போடு நாள்தோறும் பாராயணம் செய்பவர், பகவானிடம் பக்தியைப் பூரணமாக அடைந்து, இம்மையிலும் யாவராலும் மதிக்கப் பெறுவர் என்றும், மறுமையிலும் மோட்ச மடைந்து இன்புறுவர் என்றும் இறுதி சுலோகம் (29-ஆவது சுலோகம்) தெரிவிக்கிறது.

ஆழ்வார்களை 'மால் உகந்த ஆசிரியர்' என்று குறிப்பிடும் வேதாந்த தேசிகர், இவர்களுடைய தமிழ் மாலைகளைத் 'தெளிய ஓதித் தெளியாத மறை நிலங்கள் தெளிகின்றோமே!' என்று கூறுகிறார். வேத வேதாந்தங்களில் தெளியாத சந்தேகங்களும் தெளிவுபடுகின்றன ஆழ்வார்களின் வாக்கிலே என்பது கருத்து. ஆழ்வார்களிடம் இவ்வுளவு பக்தி கொண்டிருக்கும் தேசிகருக்குப் 'பூங்கோதை' என்ற ஆண்டாளிடம் விசேஷ பக்தி உண்டு என்பது தெளிவு.

Koviloor Digital Library

ஆண்டாளின் பக்திக்காதலைப் பெரிதும் பாராட்டும் ஆசாரியர்கள் முதலானோர் இந்த நாச்சியாரை, 'மல்லி நாடு ஆண்ட மடமயில்' என்றும், 'செழுங்குழல் மாலைத்தொடை தென் அரங்கருக்கு ஈயும் மதிப்புடைய சோலைக்கிளி' என்றும், 'திருப்பாவை பாடிய செல்வி' என்றும், 'மரகதப் பெண்' என்றும், 'வடிவு ஒப்பிலாத பெண்' என்றும், 'வருணிக் கொணாத பெண்' என்றும், 'அரங்கேசர்க்கு மோகப் பெண்' என்றும் 'வில்லிபுத்தூர்க்கு முத்தான பெண்' என்றும், 'முத்திக்கு வித்தான பெண்' என்றும் பல படியாகப் புகழ்ந்து பேசுவது உண்டு. இத்தகைய ஆண்டாளிடத்தும், அவள் அருளிய பிரபந்தங்களிடத்தும் இவருக்கு உள்ள ஆராத ஆர்வத்தை அறிவிக்கிறது ஸ்ரீகோதாஸ்துதி என்ற இவரது வடமொழிப் பிரபந்தம்.

★

Koviloor Digital Library

8

கோதை தமிழ்

தமிழிலக்கியச் சோலையிலே பொதுவாகக் கோதை தமிழும் சிறப்பாகத் திருப்பாவையும் பொதுமக்கள் உள்ளத்தை மகிழ்விக்கும் இன்னிசைப் பூங்கொத்தாகப் பொலிந்து பரிமளிப்பதைக் காண்கிறோம். திருப்பாவையைச் சிறப்பாகக் கோதை தமிழ் என்று அபிமானித்துப் பேசுவதும் உண்டு.

ஆண்டாள் காலத்துக்குப் பின் வாழ்ந்த, கம்பனை உள்ளிட்ட பல கவிஞர்கள் வாக்கிலும், 'அழகர் பிள்ளைத் தமிழ்' முதலான பல்வேறு சில்லறைப் பிரபந்தங்களிலும், திருப்பாவையின் பொருள் நோக்கும் சொல் நோக்கும் ஊடுருவிக் கிடக்கக் காணலாம்.

திருப்பாவை யென்னத் திருந்(து) இயற்பாத் தந்த
திருப்பாவை வில்லிபுத்தூர்ச் செல்வி - அருட்பார்வை
வாய்ந்ததனால், செய்யுள் வழக்கென்(று) இரண்டிடத்தால்
ஆய்ந்துரைப்பல் செய்யுள் அணி

என்று, மாறனலங்காரம் என்ற இலக்கண நூலிலும், 'திருப்பாவை பாடிய வில்லிபுத்தூர்ச் செல்வி' என்று ஆண்டாள் சிறப்பாகக் குறிக்கப் பெறுவதைக் காண்கிறோம்.

அழகுகளின் பவனி

'வேதம் அனைத்துக்கும் வித்தாகும்' என்று கோதை தமிழில் பொதிந்துள்ள வேத வேதாந்த உட்பொருளைப் பண்டிதர்களும் பக்தர்களும் அநுபவித்து மகிழ்வதுபோல் கோதையின் கவிதையைப் பண்டிதர்களோடு சாதாரண

Koviloor Digital Library

மக்களும் அநுபவித்து இன்புறுகிறார்கள். திருப்பாவைப் பாடல்களை இசையுடன், மனமுருகிப் பாடிப் பக்தர்கள் பஜனை செய்துகொண்டு போகும்போது வசீகரிக்கப் பெறாத தமிழர் இல்லையென்றே சொல்லலாம். பக்தி ரஸத்துடன் கவிச்சுவையும் கலந்து பரிமளிப்பதால் இவ்வளவு வசீகர சக்தி திருப்பாவைக்கு ஏற்பட்டிருக்கிறது.

ஆய்ப்பாடியில் கண்ணன் செய்த பல திருவிளை யாடல்களும், திருப்பாவையில் நோன்பு நோற்பவர்களால் பேசப்படுகின்றன. ஜீவாத்மாவுக்கும் பரமாத்மாவுக்கும் உள்ள தொடர்பை நினைவூட்டும் ஆயர்மகளிர் நோன்பும் திருப்பாவைக் கவிதைக்கு ஓர் அபூர்வ சோபை தருகின்றது. இந்த ஆய்ச்சியர்களுடன் ஆண்டாளும் அவள் தோழிகளும் அபேதமாய்க் கலந்துகொள்ளும் மனோபாவச் சிறப்பும் திருப்பாவையின் வசீகர சக்திக்கு ஒரு காரணமாகும்.

நோன்பு நோற்கும் இந்தச் சிறுமியர் கூட்டத்திலே பெரியாழ்வார் குலவிளக்கு, எம்பெருமானுக்கு ஏற்றி வைத்த ஒரு தீபமங்கள ஜோதிபோல் ஜொலிக்கின்றாள்; ஞானசௌந்தரியத்தினாலும் குணசௌந்தியத்தினாலும் காதலின் பேரழகினாலும். அந்தக் கூட்டத்தினர்களுக் கெல்லாம் இவளே தலைவியாகிக் கட்டளையிடுகிறவள் போலக் காணப்படுகிறாள்.

வெள்ளி எழுந்து
வியாழம் உறங்கிற்று

என்று அப்போதைய நிகழ்ச்சி ஒன்றைப் பார்த்துவிட்டுக் கோதை,

'மார்கழித் திங்கள்
மதிநிறைந்த நன்னாளால்'

என்று பாடிக்கொண்டு புறப்படுகிறாள். மற்ற மகளிரும், 'கலீர், கலீர்' என்று சிலம்புகள் ஒலிக்க,

Koviloor Digital Library

'நீராடப் போதுவீர்!
போதுமினோ நேரிழையீர்!'

என்று பாடிக்கொண்டு போகிறார்கள்.

இந்தச் சிறு கூட்டம், ஒவ்வொரு வாசலிலும் நின்று பாடித் துயிலெழுப்பி, மற்றவர்களையும் சேர்த்துக்கொண்டு போகிறது. பறவைகள் உதய சூரியனைத் துயில் உணர்த்தப் பாடுவதுபோல் ஒலிக்கின்றன. இப்பெண்களும் கண்ணனைத் துயிலெழுப்பப் பாடிக்கொண்டே போகிறார்கள். இப்பாடல் களைப் பாடும் பக்தர்களும் கேட்கும் ரஸிகர்களும் தங்கள் இதயத்திலேயே தெய்வ உணர்ச்சியை விழிக்கச் செய்து கொண்டு, பெருமகிழ் வெய்துகிறார்கள்.

கோயிலில் சங்கு முழங்குகிறது. 'ஹரி:' என்று இறைவனுடைய நாமத்தை உச்சரிப்பதும் காதில் விழுகிறது.

பிள்ளாய்! எழுந்திராய்!'

என்று ஒருத்தியை எழுப்பும் குரலும் நமது காதில் விழுகிறது.

அன்புப் பேச்சும் பரிகாசப் பேச்சும் உரையாடல்களும் ஒரு நாடக நிகழ்ச்சியை நினைவூட்டுகின்றன. கதைச் சுவையும் நாடகப் பண்பும் இயற்கை வருணனைகளும் வேறு வருணனைகளும் கைகோத்துச் செல்லுகின்றன, தோழிமார் களைப்போல.

இறையருள்போல் இறங்கிவரும் மழையால் நாடு செழிக்குமே அந்த இயற்கைச் செழிப்பைத்தான்,

'ஓங்கு பெருஞ்செந்நெல் –
ஊடு கயல்உகள,
'பூங்கு வளைப்போதில்
பொறிவண்டு கண்படுப்ப'

என்ற அடிகள் எவ்வளவு அழகாகவும் பொருத்தமாகவும் நம் கண்முன் கொண்டுவந்து விடுகின்றன!

Koviloor Digital Library

ஆனந்தமான காலை வேளைதான் எவ்வளவு ஆனந்தமாக வருணிக்கப்படுகிறது! கீச்சாங் குருவி முதலான பறவைகளின் ஒலிகளோடு கோயிற் சங்கொலியும் தயிர் கடையும் ஆய்ச்சியர்களின் மத்தொலிகளும் அணியொலி களும் காலை யழகின் மாட்சியைப் பேசுகின்றன. எருமைகள், பனிப்புல் மேயப் போவதும், செங்கழுநீர் வாய்நெகிழ, ஆம்பல் வாய் கூம்புவதும், கோழியும் குயிலும் கூவுவதும் காலைப்பொழுது என்ற நித்திய அழகின் வாயிலாகக் கண்ணன் காலத்தையும் ஆண்டாள் காலத்தையும் நமது காலத்தையுங் கூட ஒரு சேர இணைத்துக் காட்டுகின்றன.

திருப்பாவையில் காணும் பெண்களிலே எத்தகைய குணசித்திரங்கள்! ஒருத்தி பேய்ப் பெண் என்று பரிகசிக்கப் பெறும் நாயகப் பெண் பிள்ளை; ஒருத்தி குதூகலமுடைய பாவை; ஒருத்தி பெண்மையின் அணிகலம். குதூகலமுடைய பாவை இப்போது, உறக்கத்திலும் குதூகலம் உடையவள் போலக் காணப்படுகிறாள். பெண்மையின் அணிகலம் இப்போது நித்திராதேவிக்கும் ஆபரணம்போலக் காணப் படுகிறாள்.

அடுத்த பாட்டிலே, 'குற்றம் ஒன்றில்லாத கோவலர்தம் பொற்கொடி'யைச் சந்திக்கிறோம். ரூப சௌந்தரியத்தில் மயிலை ஒத்தவள். மேகத்தைக் கண்டு தோகை விரித்தாடும் மயில் போல் கண்ணனை நினைத்ததும் அழகு ஜொலிக்க மகிழ்ச்சி அடையக்கூடியவள். தோழிமாரைக் கண்டும் அப்படி மகிழ்ச்சி அடையக்கூடியவள். 'இப்போது நாங்கள் முகில் வண்ணன் பேர் பாடுகிறோமே; நீ மயில்போல் ஆடி வா, பார்க்கலாம்' என்பது தோழியர் குறிப்பு.

அடுத்த வீட்டுச் செல்வி ஒரு நற்செல்வன் தங்கை. வெளியிலே பனி கொட்டுகிறது. உள்ளே இவள் படுத்திருக் கிறாள், சுகமாக வசதியாக. எருமைகள் அந்த நற்செல்வனின் செல்வம்; இவள் செல்வமோ, 'மனத்துக்கு இனியான்' மீது காதல்.

Koviloor Digital Library

'ஈதென்ன பேருறக்கம்?'

என்று கேட்கும் தோழியர்கள், 'உறக்கத்தின்மீதும் இவ்வளவு காதலா?' என்று கேட்கிறார்கள்.

'இனித்தான் எழுந்திராய்;
ஈதென்ன பேருறக்கம்?'

என்று சற்றுக் கடுமையாகவே பேசுகிறார்கள், அந்தக் கடும்பனி வேளையில்.

பிறகு கண்ணழகு வாய்ந்த ஒருத்தியை, 'போதரிக் கண்ணினாய்!' என்று அழைக்கிறார்கள். மலர்போன்ற அந்தக் கண்களின் அழகையும், 'பாவாய்!' என்று அந்த மேனியின் அழகையும் குறிப்பிட்டு, அந்த அழகுகள் வழக்கம்போல் தங்களுக்கு நன்கு புலனாகுமாறு தங்களுடன் வந்து கலந்து கொள்ளவேணும் என்கிறார்கள். 'கள்ளம் தவிர்ந்து கலந்து கொள் அம்மா!' என்கிறார்கள்.

'கண்ணனுடைய குணம், செயல்கள் முதலியவற்றை நினைத்துக்கொண்டு தனியே கிடக்கிற அந்தக் கள்ளத்தை விட்டு எங்களோடு கலந்துகொள்' என்ற குறிப்புடன் தோழிமார் பேசுவது இந்தப் 'போதரிக்கண்ணினா'ளை ஒரு தனிக் குணசித்திரமாகக் காட்டுகிறது.

உள்ளத்தில் ஊசலிடும்
உல்லாசப் பார்வைவிழிக்
கள்ளத்தினால்

தன் காதலை மறைத்துக்கொண்டு தோழியருடன் கலந்துகொள்ளும் ஒருவகை நாடகத் திறனும் இவளுக்கு உண்டு என்று ஊகிக்கலாம்.

அடுத்த வீட்டுப் பெண், மேலே சொன்னவளைப்போல் பெரும்பாலும் கண்ணால் பேசுவதின்றி நாவன்மையுடன் பேசும் திறம் உள்ளவள். இவளிடம் செயல் திறமையைக்

Koviloor Digital Library

காட்டிலும் சொல் திறம் அதிகம் என்பது தோழியர் அபிப்பிராயம். இவளை, 'வாய் பேசும் நங்காய்!' என்று கூப்பிடுகிறார்கள்.

நங்காய்! எழுந்திராய்!
நாணாதாய்! நாவுடையாய்!'

என்றெல்லாம் அழைத்துத் தோழியர் எழுப்புவதைப் பாருங்கள்! இதுவும் ஒரு குணசித்திரந்தானே.

அப்பால், 'இளங்கிளியே!' என்று ஒருத்தியை அழைக்கிறார்கள். பேச்சில் இனிமையுள்ளவள் இவள் என்பது கருத்து. இந்த இனிமையான பேச்சில் வலிமையும் உண்டு என்கிறார்கள். அந்த வல்லமை வாய்ப் பேச்சாக, வாசாகைங்கரியமாகப் போய்விடுகிறது என்பதையும் குறிப்பிடுகிறாள்.

சுடச்சுடப் பதில் சொல்லக்கூடியவள் இந்தக் கிளிமொழியாள். அப்படியே பதில் சொல்லிக்கொண்டு வருகிறாள். கடைசியாகப் பிறர் குற்றத்தையும் தன் குற்றமாக ஒப்புக்கொள்ளும் திறமையையும் வெளியிடுகிறாள். இந்த நிலையிலும், 'எல்லாரும் வந்து விட்டார்களோ?' என்று கேள்வி கேட்டுக்கொண்டே, ஓரிரண்டு நிமிஷம் கண்மூடி இருக்கலாமோ என்று தந்திரமாகக் கருதுகிறாளாம். 'இப்படியும் ஒரு குணாதிசயம்' என்று மகிழ்வெய்துகிறோம். இவ்விதமாகப் பத்துக் குண சித்திரங்களை, இந்தப் பெண்களிடையே காண்கிறோம்.

இவர்கள் எழுப்பப் பெறுவதே சிறுசிறு நாடகக் காட்சிகளாக அமைகின்றது. கண்ணனைத் துயிலெழுப்புவதும் ஒரு நாடகக் காட்சிதான். கண்ணன் பள்ளியறையிலிருந்து சிங்காதனத்திற்குச் சிங்கம்போல் கம்பீரமாக வரவேண்டு மென்று பிரார்த்திக்கும் பெண்களின் உள்ளத்தில் நடைபெறும் நாடக நிகழ்ச்சியைத்தான் என்னென்பது?

Koviloor Digital Library

மலைக்குகையில் உறங்கிக் கிடந்த சிங்கம் அறிவுற்றுத் தீவிழித்துப் பிடரி ரோமத்தை உதறிக்கொண்டு வருவதுபோல் கண்ணன் வந்து, சிங்காதனத்தில் அமர்ந்து, பகிரங்கமாகத் தங்கள் வேண்டுகோளைப் பூர்த்தி செய்யவேண்டும் என்கிறார்கள். உறக்க மயக்கத்திலே படுக்கையி லிருந்து ரகசியமாகச் சொல்லிவைத்த வார்த்தையாகப் போய் விடலாகாது, கண்ணன் வரம் கொடுப்பதும் என்பது குறிப்பு.

ஊரும் நாடும் உலகும் உய்யத் தங்கள் காதல் இனிது நிறைவேற வேணும் என்கிறார்கள். தங்களுடைய ஆத்ம க்ஷேமத்துடன் உலகத்தின் ஆத்ம நலமும் கைகூடவேண்டும் என்ற கருத்துடன் தங்கள் அகக் காதலையும் கைங்கரியப் பிரார்த்தனையையும் கண்ணபிரான் பகிரங்கமாக நிறைவேற்றி வைக்கவேண்டும் என்கிறார்கள்.

'உற்றோமே ஆவோம்;
உனக்கேநாம் ஆட்செய்வோம்;
மற்றைநம் காமங்கள்
மாற்று............'

என்று சொல்லி, இந்தக் காரியத்தை ஆராய்ந்து அருள் புரிவதற்கு ரகசிய முறையொன்றும் தேவையில்லை என்பதைக் குறிப்பாகக் கூறுகிறார்கள். ஜீவாத்மாவுக்குப் பரமாத்மாவிடம் உள்ள இயற்கைப் பாசம் அல்லது பக்திதானே இவர்கள் காதல்.

தத்துவப் பொருளை மறந்து அநுபவித்தாலும், திருப்பாவையைக் கவிதைச் சித்திரங்களாகக் கண்டு அநுபவிக்கலாம்; திருப்பாவையிலுள்ள கதைப் போக்கை அதன் நாடக அமைப்பு முறையுடன் அநுபவித்தும் பார்க்கலாம். இப்படிப் பார்த்தாலும் ஆண்டாள் ஓர் உண்மைக் கவி, உத்தமக்கவி என்பதில் ஐயமில்லை. ஆண்டாளின்

Koviloor Digital Library

பக்திக்காதலே உண்மையாக மண்ணிலும் மனத்திலும் தெய்வநிலையைக் கண்டு காட்டுவதுதான்.

காதல் பொங்கும் கவிதை

கோதையின் மாசற்ற காதற்பெருக்காகிய 'நாச்சியார் திருமொழி' என்ற இன்பத் தமிழ்ப் பாடல்களும் இசை வெள்ளத்தில் மிதக்கும் கவிதைகளே. இவற்றின் தமிழ் அழகும் அன்பு மணமும் பக்தர் உள்ளத்திற்கு அமுதமாவதுடன் ரஸிகர் மனக்கண்ணுக்கும் 'இசைத் தென்றலில் அசைந்தாடும் வாடாத வண்ணமலர்கள்' ஆகின்றன.

'நாச்சியார் திருமொழி'யில் ஜகன்மோகன கோபாலனது வடிவழகைக் காண்கிறோம்; குண அழகையும் காண்கிறோம். இந்தப் புருஷோத்தமனை எண்ணியெண்ணி அல்லும் பகலும் உள்ளுருகும் காதலியையும் காண்கிறோம். தன்னலம் கருதாத காதல், தியாக சிகரத்தை அடையக் காண்கிறோம். இக்காதல் இறுதியில், 'அவர் பெரியர், செல்வர்; நாமோ சிறு மானிடவர்' என்ற வேற்றுமை உணர்ச்சியையும் போக்கி, ஆத்மாவுக்கும் பரமாத்மாவுக்கும் திருமணம் நிறைவேறச் செய்துவிடும் என்பதையும் தெரிந்துகொள்கிறோம்.

எல்லாவற்றுக்கும் மேலாக, ஆண்டாளின் திருமண ரகசியத்தை 'நாச்சியார் திருமொழி'யின் கவிதையிலே காணும் பேறு பெறுகின்றோம். இவளை இளமை தொட்டு ஆராத பக்திப் பெருங்காதல் ஆட்கொண்டதை அறிந்துகொண்டு, 'புருஷோத்தமன் காதலே வாழ்வு' என்ற மனஉறுதியுடன் இவள் கண்ணனையே சிந்தித்துக்கொண்டிருப்பதைக் காண்கிறோம், திருமண ரகசியத்தின் முதற் படியாக.

அல்லும் பகலும் அனவரதமும் புருஷோத்தமனிடம் காதலை உள்ளத்திலே நிலைநாட்டிக்கொண்டவளுக்கும்

Koviloor Digital Library

பிரிவுத்துயரம் ஏற்படத்தான் ஏற்படுகிறது. இராக்கனவிலும், பகற்கனவிலும்கூடக் காதலனைக் கண்டு இன்புற்றாள், இயற்கை அழகுகளிலும் கண்டு களித்தாள் எனினும் 'தலைவனைக் கலந்து இன்புற்றோமில்லையோ?' என்று உள்ளம் தத்தளிப்பதையும் திருமொழிப்பாடல்களில் காண்கிறோம்.

சுழற்காற்றிலும் சூறாவளியிலும் சிக்கித் தடுமாறும் மரக்கலம் போல் தத்தளிக்கும் மனநிலையையும் காண் கிறோம். அத்தகைய ஆபத்திலே சிக்கி, 'முழுகிப் போய் விடுமோ?' என்று தவிக்கும் நிலையிலுள்ள தோணிபடும் பாட்டை, இவள் உள்ளம் படுவதையும் காண்கிறோம். கரை தெரியாத காதல் வெள்ளத்தில் தோணியும் பெறாது, தவித்துத் தத்தளிக்கும் மன நிலையையும் பார்க்கிறோம். இத்தகைய மன நிலைகளிலிருந்து எழுகின்ற சிந்தனை அலைகள் இசைக் கடலிலே கவிதை அலைகளாகப் பரிணமிப்பதையும் பார்க்கிறோம்.

கோதையின் பாசுரம் ஒன்றும் அரங்கநாதனை இவள் மணந்துகொண்டதாக வெளிப்படையாகக் குறிப்பிடவில்லை. திருமண நோக்கம் நிறைவேறியது என்பதற்கே, 'நாச்சியார் திருமொழி' சான்று தருகின்றது.

இந்தத் திருமண நோக்கத்தைச் சிறப்பாக, 'நாச்சியார் திருமொழி'யின் இறுதிப் பதிகத்தில் காண்கிறோம். 'கண்டீரோ? கண்டீரோ?' என்று மனம் தேடித் தவித்த மணவாளனை, அதே மனம், 'விருந்தாவனத்தே (பிருந்தா வனத்திலே) கண்டோமே! விருந்தா வனத்தே கண்டோமே!' என்று பதில் சொல்லி ஆறுதல் அளிக்கிறது.

பிருந்தாவனத்திலே இஷ்டமான பசுக்களை மறித்து, நீரூட்டிவிட்டு, விளையாடிக்கொண்டிருந்த நிலையில் ஆண்டாளின் உள்ளம், தன் காதலனைக் கண்டு பிடிக்கிறது:

Koviloor Digital Library

இட்ட மான பசுக்களை
இனிது மறித்து நீரூட்டி
விட்டுக்கொண்டு விளையாட
விருந்தா வனத்தே கண்டோமே

[இட்டமான - இஷ்டமான]

எவ்வளவு காதலுடன் மணவாளனைத் தேடி, மணந்து கொள்ளும் காரியம் நடைபெறுகின்றது! இவள் காதல் அதிகரிக்க வேண்டுமேயென்று அவன் முகம் காட்டிக் காட்டி மறைவதையும் குரல் காட்டித் திடீரென்று மறைந்து மறைந்து போவதையும் நினைத்துக்கொண்டு, தனது தெய்வக் காதலனை, 'ஏலாப் பொய்கள் உரைப் பான்' என்றுகூடக் கூசாது சொல்லத் தோன்றுகிறது, ஆண்டாளுக்கு.

அன்பன் சொன்ன மெய்ம்மைப் பெரு வார்த்தை களையும், 'ஏலாப் பொய்கள்' என்று துணிந்துரைக்கும் காதலியைப் பாருங்கள்! எனினும், ஆசை குறைகிறதா?

'மாலாய்ப் பிறந்த நம்பியை,
மாலே செய்யும் மணாளனை
ஏலாப் பொய்கள் உரைப்பானை
இங்கே போதக் கண்டீரே?'

என்று கேட்டதுமே, கருடனுடைய சிறகின் கீழ், வெயில் படாது வந்துகொண்டிருக்கும் நம்பியை, அதே மனம் கண்டு கொள்கிறது.

கமலக்கண் என்னும் பாசத்தை வீசி, அந்த நெடுங்கயிற்றுக்குள் இவளைச் சிக்க வைத்து, இழுத்துக் கொண்டு விளையாடுகிறானாம் ஈசன். அந்த ஈசனை,

'வேர்த்து நின்று விளையாட
விருந்தா வனத்தே கண்டோமே!'

என்று குதூகலமாய்க் கண்டுகொள்கிறாள்.

Koviloor Digital Library

'பீதக ஆடை இடைதாழப்
பெருங்கார் மேகக் கன்றே போல்
வீதி ஆர வருவானை
விருந்தா வனத்தே கண்டோமே!'

[*பீதக ஆடை - பொன்னாடை. வீதி ஆர - வீதி நிறைய.*]

என்று கண்டு குதூகலிக்கிறாள்.

இறைவன் செய்யும் சோதனைகளைத் தாங்காது, அழகனாயினும், 'தருமம் அறியாக் குறும்பன்' என்று அலறுகிறது, இதயம் ஒரு கணம்; மறுகணத்திலேயே உதய பர்வதத்தின் மேல் விரியும் கதிர்போல வந்துவிடுகிறான் மணவாளன்.

'களிவண்(டு) எங்கும் கலந்தாற்போல்,
கமழ்பூங் குழல்கள் தடந்தோள்மேல்
மிளிர நின்று விளையாட
விருந்தா வனத்தே கண்டோமே!'

[*களிவண்டு - தேனுண்டு களிக்கும் வண்டுகள். கமழ் பூங்குழல்கள் - மணம் கமழும் அழகிய சுருண்ட ரோமம். தடந்தோள் - பெரிய தோள்கள்.*]

என்று கண்டு களிக்கின்றாள்.

துஷ்டர்களை வேட்டையாடி வருகிறானாம், பக்தர்களுக்கு அருள்புரியும் பொருட்டு.

'வேட்டையாடி வருவானை
விருந்தா வனத்தே கண்டோமே!'

என்கிறாள். இந்த வீரனை இப்போது, 'விமலன்' (ஒரு குற்றமும் இல்லாதவன்) என்று குறிப்பிடுகிறாள் காதலி. இவள் காதல் நோக்கம் (திருமண நோக்கம்), இனிது நிறைவேறியது என்பது குறிப்பு.

காதல் வேட்டையில் பரிபூர்ண வெற்றி! ஆனால் தேடியது இவள் மட்டுமா? அவனுந்தான் தேடித்

Koviloor Digital Library

தவித்து, வேட்டையாடி, ஜீவாத்மாவை மணந்து கொள்கிறாளாம். 'வேட்டையாடி வருவானை' என்பதில் கண்ணன் வேட்டையாடிய வண்ணம் அவளை நோக்கி வந்துகொண்டிருந்தான் என்பது குறிப்பு.

இப்படிப் பரமனைப் பரமபதத்தில் அல்ல, 'பாரின்மேல், விருந்தாவனத்தே கண்ட'தை வெளியிடும் கோதை சொல் ஆன்ம நலத்தை நாடுகிறவர்களுக்கெல்லாம் மருந்தாகும் என்றும், இச்சொல்லை மனத்தே வைத்துக் கொண்டு வாழ்வோர் இறைவனை என்றும் பிரியாது வாழ்வார்களென்றும் முடிவு பெறுகின்றது தெய்வக்காதல் பொங்கும் ஆண்டாள் கவிதை.

★

Koviloor Digital Library

9

பாவைப் பாட்டு

ஆண்டாள் இயற்றிய திருப்பாவையையும் மாணிக்கவாசகர் இயற்றிய திருவெம்பாவையும் அறியாத தமிழர் இல்லை. பாவைப் பிரபந்தங்களுக்குத் தமிழ்க் கவிதையில் ஒரு ஸ்தானம் உண்டு. 'சிறுபான்மை பாவைப் பாட்டும் அம்மானைப் பாட்டும் முதலாயின...' என்று பேராசிரியர் தொல்காப்பியப் பொருளதிகாரச் சூத்திரம் ஒன்றன் உரையில் *(461-ஆம் சூத்திரம்)* குறிப்பிடுகிறார்.

நோன்பு வளர்ந்த கதை

பாவைப் பாட்டில் குறிக்கப் பெறும் நோன்பு குறித்துப் பிங்கலந்தை நிகண்டு பிரஸ்தாபிக்கிறது. ஐந்து வயது முதல் ஒன்பது வயது வரையுள்ள மகளிர், பாவை நோன்பில் ஈடுபடுவர். பனிநீராடி மன்மதனை (காதற் கடவுளை)க் குறித்து நோற்கும் நோன்பு பாவை நோன்பு, என்பது பிங்கலந்தையின் கருத்து. தாங்கள், நல்ல கணவரைப் பெறுவதற்குக் காதற் கடவுள் அருள் புரியவேண்டும் என்பது உட்பொருள். பாவை நோன்பு வேறு, காமன் நோன்பு வேறு என்பதைக் கோதை வாக்கிலிருந்து தெளிவாகத் தெரிந்து கொள்ளலாம்.

நாடு செழிக்க நல்ல மழை பெய்யவேண்டும் என்பதும் பாவை நோன்பின் ஒரு நோக்கமாகும். (இந்த நோக்கம் காமன் நோன்பில் இல்லை.) இது குறித்துப் பரிபாடல் என்ற சங்க நூல் பிரஸ்தாபிக்கிறது. எனவே நல்ல கணவரைப் பெற்று, நல்வாழ்வு வாழவேண்டும், அதற்கு நன்மழை பெய்து, நாடு

Koviloor Digital Library

செழித்து, வசதி தரவேண்டும் என்பதைப் பாவை நோன்பின் உயிர் நிலைப் பொருளாகக் கொள்ளலாம். பாவை நோன்பின் பழைய நிலையில் மதக் கொள்கை, உயிர் நிலைக் கருத்தாக அமையவில்லை என்பது தெளிவு. நுண் மணலில் சிறுமியர் இஷ்டம்போல் பிடித்துவைத்த பாவைகள் (பிரதிமைகள்) காலப்போக்கில் இஷ்ட தெய்வங்களின் பிரதிமைகள் ஆகியிருக்கலாம்.

பாவை நோன்பை, மார்கழி நோன்பு என்றும் கூறலாம். மார்கழித் திங்களில் பனிநீராடி, நோன்பு நோற்பதுதானே பாவை நோன்பு. ஆனால் சங்க நூல்கள் மார்கழி நீராட்டத்தைத் தைந்நீராடல் என்று குறிப்பிடுகின்றன. பரிபாடலிலும் கலித்தொகையிலும் ஐங்குறுநூறு, நற்றிணை ஆகிய நூல்களிலும் பிரஸ்தாபிக்கப்படும் தைந்நீராடல், பின்னாளில் ஆண்டாளும் மணிவாசகப் பெருமானும் பிரஸ்தாபிக்கும் மார்கழி நீராடலின் பழைய சொரூபந்தான்.

சங்க காலத்திலேயே பாவை நோன்பு அனுஷ்டானத்தில் இருந்தது. வைதிய அனுஷ்டானமாக அல்ல; லௌகிக அனுஷ்டானமாக. அந்நாளில் மாதங்களை, இன்றுபோல் சூரியன் வழியாகக் கணக்கிடாமல் சந்திரன் வழியாகக் கணக்கிட்டார்கள். அந்தப் பழைய வழக்கத்தின் நினைவுக்குறியாகத்தான் மாதத்தைத் 'திங்கள்' (சந்திரன் என்ற பொருளைக் குறிப்பது) என்கிறோம்.

திருப்பாவையின் தொடக்கத்திலேயே, 'மார்கழித் திங்கள் மதி நிறைந்த நன்னாளால்' என்று ஓதுகிறோமல்லவா? முன்னாளில் மார்கழித் திங்கள், மதிநிறைந்த நன்னாளாகிய பௌர்ணமியன்று முடிவு பெற்றது. மறுநாள் தை மாதம் தொடங்கி, இன்றைய தை மாதத்துப் பௌர்ணமியோடு முடிந்தது. இது பூர்ணி மாந்தம் என்ற முறை. இம் முறைப்படி முன்னாளில் மார்கழி நோன்பு அனுஷ்டிக்கப்பட்டதால், மார்கழிப் பௌர்ணமியில் தொடங்கிய நீராட்ட நோன்பைத் தைந்நீராடல் என்று நம்முன்னோர் வழங்கி வந்தனர்.

Koviloor Digital Library

பனி நீராடுவதும் விரதம் அல்லது தவமாகக் கருதப்பட்டது. இந்த விரதத்தை, 'அம்பா ஆடல்' என்று சங்க நூலார் குறிப்பிடுவர். மணமாகாத பெண்கள் தாய்மாரைத் துணையாகக் கொண்டு, நீராடியதாக ஆசிரியர் நல்லந்துவனார் கூறுவதால், இது, 'அம்பா ஆடல்' என்று பெயர் பெற்றதாக உரை ஆசிரியர் பரிமேலழகர் ஊகஞ் செய்திருக்கிறார். அம்மா - அம்பா.

'அம்பா' என்பது உலகத் தாயாகிய தேவியைக் குறிப்பது பிரசித்தமல்லவா? எனவே, இந்த நீராட்டம் ஆதியில் தேவியின் பொருட்டு நிகழ்த்தப்பட்டிருக்கவேண்டும் என்பது ஆராய்ச்சிப் பேரறிஞரான ஸ்ரீ மு. இராகவையங்காரின் ஊகம். இதற்கு ஆதாரமாக ஸ்ரீமத் பாகவதத்திலே மார்கழி நோன்பு பற்றி வரும் செய்திகளை இவர் சுட்டிக் காட்டுகிறார்.

இந்தச் செய்திகளை ஸ்ரீமத் பாகவதம், தசமஸ்கந்தம் 22-ஆம் அத்தியாயத்தில் விவரமாகக் காணலாம். கோகுல மகளிர் (கோபிகைகள்) காத்யாயனி (தேவி) விரதத்தைத் தொடங்கினார்கள். இந்த விரதத்தை ஹேமந்த ருதுவின் முதல் மாதத்தில் - அதாவது மார்கழித் திங்களில் தொடங்கியதாகவும், ஹிவிஸ்ஸை உட்கொண்டு நோன்பை நடத்தி வந்ததாகவும் பாகவதம் தெரிவிக்கிறது. 'நெய் உண்ணோம் பால் உண்ணோம்' என்று திருப்பாவையில் வருவதை நினைவூட்டிக் கொண்டால், 'ஹவிஸ்ஸை உட்கொண்டு' என்பதன் பொருள் புலனாகும்.

அருணோதயத்தில் அந்தக் கோகுல மகளிர் எழுந்திருந்து நீராடச் சென்றதாகப் பாகவதம் குறிப்பிடுவதுதான், 'சிற்றஞ் சிறுகாலை'யில் திருப்பாவையில் நிகழும் நிகழ்ச்சி. யமுனா நதியில் நீராடியதாகப் பாகவதம் பிரஸ்தாபிக்கிறது. இந்த யமுனையைத் 'தூய பெருநீர் யமுனை' என்று திருப்பாவை குறிப்பிடுகிறது. பாவனா சக்தியால் ஸ்ரீவில்லிபுத்தூரையே கோகுலமாக்கிக் கொண்ட ஆண்டாள், அங்குள்ள ஒரு நீர்

Koviloor Digital Library

நிலையை, 'தூய பெருநீர் யமுனை'யாகக் கற்பனை செய்துகொண்டிருக்கலாம்.

நீராடிய பின் ஈரநுண் மணலால் காத்யாயனி தேவியின் உருவம் சமைத்துக்கொண்டனர் என்றும், அந்தப் பாவையைச் சந்தனம், பூ, தூபம், தளிர், பழம் இவற்றாலும் நைவேத்தியங் களாலும் ஆராதித்ததாகவும் பாகவத புராணம் தெரிவிக்கிறது.

'தூயோமாய் வந்து நாம்
தூமலர் தூவித் தொழுது'

என்று திருப்பாவையில் வருவதை இங்கே நினைவூட்டிக் கொள்ளலாம்.

'காத்யாயனி! ஹே மஹாமாயே! மஹா யோகி! ஈச்வரீ! உன்னைத் தொழுகிறோம்; எங்களுக்கு நந்தகோபர் மகனாகிய கண்ணபிரானை நாயகனாக அருள்வாயாக!' என்று பொருள்படும் மந்திரத்தை ஜபித்ததாகப் பாகவதம் கூறுகிறது. தேவியின் திருநாமங்களை அவர்கள் வாயாரச் சொல்வது, பகவான் திருநாமங்களைப் பெண்கள் திருப்பாவையில் வாயாரப் பாடி வருவதை நினைவூட்டுகிறது.

தேவியை விளித்து, வணங்கிய பின், கோபியர்கள் கண்ணனைத் தியானித்துக்கொண்டு ஒரு மாத காலம் பூசனை புரிந்து, நோன்பை விடாது நடத்தி வந்தார்கள் என்பது பாகவதம். திருப்பாவையிலோ, கோபியர்கள் கண்ணன் திருநாமங்களையே பாடிக் கண்ணனையே சிந்திக்கிறார்கள் என்பது பிரசித்தம். 'கண்ணன் அல்லால் தெய்வம் இல்லை' என்பது இவர்கள் மனநிலை.

கோபியர்கள் ஒருநாள் யமுனை ஆற்றில் நீராடுவதற்காகச் சிற்றஞ்சிறுகாலையில் (கிழக்கு வெளுக்கு முன்பே) எழுந்திருந்து அவரவருடைய தோழிமார்களின் பெயரைச் சொல்லிக் கூப்பிடுகிறார்கள். இது திருப்பாவையில் வருணிக்கப்படுவது பிரசித்தம்.

Koviloor Digital Library

பிறகு கோபியர்கள் ஒருவரோடொருவர் கைகோத்துக் கொண்டும், கண்ணன் வரலாறுகளைப் பாடிக்கொண்டும் நடந்து போய், யமுனை ஆற்றின் ஒரு பக்கம் சேர்ந்து நீராடுகிறார்கள். இந்த நிகழ்ச்சியைக் குறிப்பாகவும் வெளிப்படையாகவும் திருப்பாவையில் காணலாம். நீரில் விளையாடும்போதும் அவர்கள் கிருஷ்ண சரிதங்களைப் பாடுகிறார்கள்.

அப்போது பரம யோகிகளுக்கும் யோகியும், எல்லாம் அறிந்தவனும் (சர்வஞ்ஞனும்) ஆகிய கண்ணபிரான் அந்தப் பெண்களுக்கு விரத பலம் அளித்து, மனோரதம் நிறைவேறச் செய்தான் என்பது ஸ்ரீ பாகவத புராணத்தில் கூறப்படும் கண்ணன் வரலாறு.

இந்த விரதம் உமாதேவியைப் பற்றியது என்பதும், இந்த நோன்பில், 'பாவை' என்பது ஈர நுண்மலால் செய்த தேவியின் உருவம் என்பதும், பாகவத புராணத்தில் தெளிவாகக் கூறப்படுகின்றன. இப்புராணத்தின் கூற்றை ஆதாரமாகக் கொண்டே, 'அம்பா ஆடல்' என்று சங்க நூலார் குறிப்பிடும் நீராட்டம் தேவியின் பொருட்டு நிகழ்ந்திருக்க வேண்டும் என்பர் ஆராய்ச்சிப் பேரறிஞர் ஸ்ரீ மு. இராகவையங்கார்.

ஆனால் பாகவத புராணம் ஆழ்வார்களின் காலத்திற்கும் பிற்பட்டுத் தோன்றியிருக்க வேண்டும் என்பது தற்கால ஆராய்ச்சியாளர்களின் தேர்ந்த கருத்து. பழைய ஸ்ரீ வைஷ்ணவ ஆசாரியர்கள் விஷ்ணு புராணம் போன்ற நூல்களை கண்ணன் வரலாறுகளுக்கு ஆதாரமாகக் காட்டுவதுபோல் பாகவத புராணத்தை நூற் பிரமாணமாகக் காட்டுவதில்லை.

வியாக்கியான சக்கரவர்த்தியான ஸ்ரீ பெரியவாச்சான் பிள்ளை ஸ்ரீமத் பாகவத வரலாற்றை ஆதாரமாகக் காட்டாதது டன், மார்கழி நோன்பு, அம்பா என்ற உமாதேவியுடன் தொடர்புடையது என்பதையும் குறிப்பிடவில்லை.

Koviloor Digital Library

தமது வியாக்கியான அவதாரிகையில் கோகுலத்துள்ள ஆயர்கள், மழை பெய்யாக் குறையை நீக்க வேண்டிக் கண்ணனுடைய தலைமையில் தங்கள் பெண்களை மார்கழி நோன்பு நோற்கச் சொன்னதாகவும், அப் பெண்கள் அதற்கு இசைந்து, சிற்றஞ்சிறு காலையில் துயில் உணர்ந்து, எழுந்து, தோழிமார்களையும் துயில் உணர்த்தி அழைத்துக்கொண்டு, யமுனா நதியில் மார்கழி நீராடி, நோன்பு நோற்றுக் கண்ணனைத் தலைவனாகப் பெறும் தங்கள் மனோரதத்தை அடையப் பெற்றதாகவுமே ஸ்ரீ பெரியவாச்சான்பிள்ளை கூறியுள்ளார். எனவே பாவை நோன்பைத் தேவியுடன் தொடர்பு படுத்துவதற்குத் திருப்பாவை வியாக்கியானத்திலோ மூலத்திலோ ஆதாரம் இல்லை என்பது திண்ணம்.

'இந்நோன்புக்கு மூலம்... சிஷ்டாசார ஸித்தம்; ''மேலையார் செய்வனகள்'' என்று ஆண்டாள் தானும் அருளிச் செய்தாள்' என்பர் ஸ்ரீ பெரியவாச்சான் பிள்ளை. இந் நோன்பிற்கு வேத நூற் பிரமாணம் இல்லை என்பதும், முன்னோர் அனுஷ்டானத்தையே பின்பற்றி இந்நோன்பு நடைபெற்று வருகிறது என்பதும் பெரியவாச்சான் பிள்ளையின் கருத்து. 'மேலையார் செய்வனகள்' என்ற ஆண்டாள் வாக்கைத் தம் கருத்துக்கு ஆதாரமாக வியாக்கியான சக்கரவர்த்தி காட்டுவதும் கவனிக்கத்தக்கது.

திருப்பாவைத் தனியனில் 'தொல்பாவை' என்று வருவதும் மார்கழி நீராட்டம், தமிழ் நாட்டின் பழைய வழக்கத்தைத் தழுவியது என்பதற்கே சான்றாகும். அதாவது, 'அம்பா ஆடல்' என்ற பழைய தைந்நீராடல்தான் இது. இந்த நோன்பு திருப்பாவை, திருவெம்பாவை போன்ற பிரபந்தங்கள் வாயிலாகவே சமய நோன்புகளாகப் பரிணமித்திருக்க வேண்டும்.

ஆண்டாள் கூறும் நோன்பின் விளக்கத்தை ஸ்ரீமத் பாகவதத்தில் காண்பதாகக் கருதுவதைவிட, இந்த நோன்பின்

Koviloor Digital Library

பிற்கால வளர்ச்சியையும் பரிணாம விரங்களையும் பிற்காலத்தில் தோன்றிய பாகவத புராணத்தில் காண்பதாக ஊகிப்பதே ஆராய்ச்சி முறைக்குப் பொருந்துவதாகும். எனவே பாகவதக் கருத்தை ஒட்டி அம்பா என்பதற்கோ, 'பாவை' என்பதற்கோ தேவி என்று பொருள் கூறவேண்டிய அவசியம் இல்லை.

அம்பா என்பதற்குத் தாய் என்றுதான் பொதுவாகப் பொருள் கூறுகிறார் பரிமேலழகரும். மார்கழி நோன்பு, திருவாதிரைக்கு உரிய சிவபெருமானது விழா என்று கருதும் பரிமேலழகரும், 'அம்பா' என்பதற்கு உலகத் தாயாகிய தேவி என்று பொருள் கொள்ளவில்லை என்பது ஊன்றி நோக்கத்தக்கது.

'அம்பா' என்பதற்கு அம்மா என்றோ, உலக அம்மை ஆகிய உமாதேவி என்றோ பொருள் கொள்ளவேண்டிய அவசியம் இல்லையென்றால், அம்பா ஆடல் என்ற சொற்றொடருக்குப் பொருள்தான் என்ன? அம்பா ஆடல் என்பதை அம்பாவை ஆடல் என்று கொள்வது பொருத்தம் என்பர் ஒரு தமிழறிஞர். இதுவே என் கருத்தும் ஆகும்.

அம்பாவை ஆடல் என்றால் நீர்த்துறையில் பாவை அமைத்துப் பெண்கள் நீராடி விளையாடியதைக் குறிப்பதாகும். இது ஆதியில் சமயச் சார்பில்லாத நோன்பாக இருந்ததால், 'பாவை' என்பது தேவியைக் குறித்திருக்க வேண்டியதில்லை. நீர்த்துறைகளில் வைத்த பாவைகளை உமாதேவியாக வழிபடும் வழக்கம் ஆண்டாள் காலத்திற்கும் பிற்பட்டதாகவே தோன்றுகிறது.

சாதாரண விளையாட்டுப் பாவைகளைத் தேவியின் சொரூபமாக வழிபடத் தொடங்கிய பிற்கால வழக்கத்திலே, பழைய லௌகிக நீராட்டு விழா, சமயக் கொள்கையை ஏற்றுக்கொண்ட மாறுதலைக் காண்கிறோம். ஆண்டாளின் திருப்பாவை, வைஷ்ணவ சமயக் கருத்துக்களையும்,

Koviloor Digital Library

மணிவாசகப் பெருமானின் திருவெம்பாவை, சைவ சமயக் கருத்துக்களையும் பரப்பி வந்ததால், பழைய பாவை நோன்பு, பிற்காலத்தில் ஒருவகைச் சமய நோன்பாகப் பரிணமித்து, அப்பால் பாகவத புராணத்திலும் இடம் பெற்றிருக்க வேண்டும்.

'பாவை' என்பதற்கு நோன்பு என்று பெரியவாச்சான் பிள்ளை பொருள்கொண்டிருப்பதால், ஆண்டாள் காலத்தில் இச்சொல், நோன்புப் பொருளிலேயே வழங்கி வந்திருக்க வேண்டும். இந்த நோன்புப் பொருள், பாவை என்ற சொல்லின் சரியான பொருளாகிய பிரதிமை அடியாகவே வந்திருக்க வேண்டும். ஆனால் தேவியின் பிரதிமையடியாக நோன்புப் பொருள் கிடைத்திருக்கக்கூடும் என்பதற்குத் தக்க ஆதாரம் இல்லை.

மலையாளத்தில் பாவை நோன்பு

தமிழ் நாட்டின் பழைய வழக்கங்களில் சில, ஒரு காலத்தில் தமிழகத்தின் இன்றியமையாத பகுதியாக இருந்த மலையாள நாட்டில் இன்றும் காணப்படுகின்றன. பழைய தைந்நீராடல் என்ற மார்கழி நீராட்டத்தை இன்றும் மலையாள நாட்டில், திருவாதிரைப் பெருவிழாவாக இளம் பெண்கள் கொண்டாடுவதைக் காணலாம்.

இவர்கள் திருப்பாவையைத் தழுவி, வைஷ்ணவ முறையாகவோ, திருவெம்பாவையைத் தழுவிச் சைவ முறையாகவோ இவ்விழாவைக் கொண்டாடாவிட்டாலும், இவர்களது கொண்டாட்டத்தின் ஒரு முக்கிய அம்சம் திருப்பாவையின் 27-ஆவது பாசுரத்தில் காணப்படுகிறது.

மலை நாட்டுப் பெண்கள், விழாவின் இறுதியில் தங்களை ஆடையாபரணங்களால் அலங்கரித்துக்கொண்டு, விருந்து சாப்பிடுகிறார்கள். அந்த விருந்தில் பாயசத்தை விசேஷமாக உபயோகிக்கிறார்கள். ஆண்டாளின் கோபியர்,

Koviloor Digital Library

ஆடையாபரணங்கள் அணிந்து, பாற்சோறு உண்ண விரும்புவதை இப்படி நினைவூட்டும் மலையாளப் பெண்களும், இந்த நோன்பைக் காத்யாயனி விரதமாக அனுஷ்டிப்பதில்லை என்பது கவனிக்கத்தக்கது.

மலையாள நாட்டில் கொண்டாடப்படும் இந்தத் திருவாதிரை விழாவின் விளக்கத்தை ஸ்ரீ கோபால பணிக்கர் எழுதிய, 'மலையாளமும் அதன் வாசிகளும்' என்ற நூலில் காணலாம். மார்கழி மாதத்தில் திருவாதிரை நாள் இறுதியாகப் பத்து நாள்களிலும் அதிகாலையில் மலையாளப் பெண்கள் நீராடுவதும் பாடுவதுமாக, விழாக் கொண்டாடுவதை, ஸ்ரீ பணிக்கர் குறிப்பிடுகிறார். மார்கழித் திருவாதிரை நாளுக்கு முன் ஒன்பது நாளும் திருவெம்பாவை மகோத்ஸவ நாள் என்பது பிரசித்தம்.

நீராடும்போது அப்பெண்கள் தண்ணீரைத் தட்டுவதால் ஒருவகை ஒலியை உண்டாக்குவதாகவும், பணிக்கர் குறிப்பிடுகிறார். 'இவ் ஒலியை அவர்கள் இடக்கையை மூடித் தண்ணீர் மட்டத்திற்குக் கீழே அமிழ்த்திக்கொண்டு வலது உள்ளங்கையைச் சாய்ப்பாக அடித்து உண்டாக்குகின்றனர். பாடுதல் முடியும்வரை இவ் ஒலி தாள வொத்தாக நிகழும்' என்றும் ஸ்ரீ பணிக்கர் கூறுவர்.

இக்கருத்தைத் திருவெம்பாவையின் 11-ஆவது பாசுரத்தில் காணலாம்:

> 'மொய்ஆர் தடம்பொய்கை
> புக்கு முகேர் என்னக்
> கையால் குடைந்து
> குடைந்(து)உன் கழல்பாடி...'

[*மொய் ஆர் தடம் பொய்கை - வண்டுகள் நிறைந்த அகன்ற பொய்கையில். புக்கு - புகுந்து. முகேர் என்ன - முகேர் என்ற ஓசை எழும்படி. கையால் குடைந்து குடைந்து - கைகளால் நன்றாகத் தட்டி, இறைத்து, நீராடி.*]

Koviloor Digital Library

பாவைப் பாட்டும் வாழ்க்கையும்

பாவைப் பாட்டுக்களில் இப்போது பிரசித்தமாக உள்ள திருப்பாவை, திருவெம்பாவை தவிர, சமண முனிவர் அருளிய பாவைப் பாட்டு ஒன்றும் இருந்ததாகத் தெரிய வருகிறது. இந்த நூல் இப்போது கிடைக்கவில்லை. இதன் பாட்டு ஒன்று, யாப்பருங்கல விருத்தியில் மேற்கோளாகக் காட்டப் பெற்றிருக்கிறது. சமணர்களின், 'திருவெம்பாவை' ஒன்றும் அச்சிடப்பட்டிருக்கிறது; ஆனால் இது வேறு, அந்தப் பழைய சமண முனிவரின் பாவைப் பாட்டு வேறு என்பது நிச்சயம். பிற்காலத்தில் தத்துவராய சுவாமிகள் வேதாந்த பரமாக (அத்வைத பரமாக) இயற்றிய பாவைப் பாடல்களும் உண்டு.

திருப்பாவை, ஸ்ரீவில்லிபுத்தூரில் இயற்றப்பட்டது. திருவெம்பாவை திருப்பெருந்துறையில் இயற்றப்பட்டது என்றும், திருவண்ணாமலையில் இயற்றப்பட்டது என்றும் இருவகை அபிப்பிராயங்கள் உண்டு. திருவண்ணாமலையில் இயற்றப்பட்டது என்பதற்கே திருவெம்பாவையில் அகச்சான்றுகள் காண்கிறோம்.

மணிவாசகப் பெருமான் திருவண்ணாமலையில் இருந்தபோது, மார்கழி மாதத்தில், திருவாதிரை நாளுக்கு முந்தின நாள்களில் அதிகாலையில் பெண்கள் ஒருவரை யொருவர், அவரவர் வீடுதோறும் போய்ப்போய் எழுப்பிக் கொண்டு நீராடச் செல்வதைக் கண்ணுற்றார் என்றும், அந்தக் காட்சியின் விளைவே திருவெம்பாவை என்றும், 'திரவாதவூரடிகள் (மாணிக்கவாசகர்) புராணம்' தெரிவிக்கிறது.

திருவெம்பாவையில் 'சக்தி' என்ற உமாதேவியை மாணிக்கவாசகர் நான்கு இடங்களில் குறிப்பிடுகிறார். ஆனால் இந்த நோன்பு, சக்தி வழிபாடாகிய நோன்பு என்று மணிவாசகப் பெருமானும் குறிப்பிடவில்லை. பிற்காலத்திலே தான் பல சக்திகள் ஒருங்குகூடித் தம்முள் ஒருவரையொருவர்

Koviloor Digital Library

எழுப்பிக்கொண்டு, இறைவன், இறைவி புகழ்களைப் பாடி, நீராடச் சென்றனர் என்ற கொள்கை தோன்றியிருக்க வேண்டும்.

மார்கழி நோன்பு, தன் பழைய நிலைமை மாறிச் சமயானுஷ்டானம் ஆகிவிட்டதற்குத் திருப்பாவையைப் போல் திருவெம்பாவையும் சான்றாகும்,

ஆழிசூழ் வையத்(து)
அறிவன்

என்று அருகக் கடவுளைப் போற்றும் சமணர் பாவைப் பாட்டும் சான்றாகும்.

திருப்பாவை, திருவெம்பாவையின் புகழ், கடல் கடந்து, 2000 மைல்களுக்கு அப்பால் உள்ள சயாம் தேசத்திலும் சென்று நிலைத்துவிட்டது. அங்கே அரசாங்கத்தாரால் பல நூற்றாண்டுகளாக நடத்தப்பெற்று வரும் ஒரு விழாவுக்கு, 'த்ரியெம்பாவை - த்ரிபாவை' என்று பெயர். இப்பெயருக்குப் பொருளும் தெரியாமல், இது தமிழ் மொழி என்றுகூடத் தெரியாமல் சயாம் மக்கள் இவ்விழாவைக் கொண்டாடி வந்திருக்கிறார்கள். 'சயாம் மன்னர் அரசியல் சடங்குகள்.' என்னும் நூல் ஒன்றை க்வாரிட்சு வேல்ஸ் (*Quaritch Wales*) என்ற ஆசிரியர் இயற்றியுள்ளார். இந்நூலிலிருந்து, முடிசூட்டு விழா முதலிய சில முக்கியமான சடங்குகளில் தாய்லாந்து என்று இப்போது வழங்கப்பெறும் சயாம் தேசத்தினர் தமிழ் நாட்டின் பாவைப் பாடல்களை ஓதுவது உண்டு என்பது தெரியவருகிறது.

சில சோழ சக்கரவர்த்திகளின் ஆட்சியில், தமிழ் நாகரிகம் சயாம், ஜாவா, சுமத்ரா, கம்போடியா முதலிய நாடுகளில் பரவியிருந்தது என்பது சரித்திரச் செய்தி. அக்காலத்தில் திருப்பாவை, திருவெம்பாவை முதலான பாடல்களைத் தமிழர்கள் சயாம் முதலிய வெளிநாடுகளிலும் பரப்பி இருக்க வேண்டும்.

Koviloor Digital Library

இன்றும் திருப்பாவை - திருவெம்பாவைப் பிரபந்தங்களில் காணப்படும் பெருங் கொள்கைளைத் தமிழர்களாகிய நாம் தனி வாழ்க்கையிலும் நாட்டு வாழ்க்கையிலும் வெளி நாட்டாரோடு தொடர்புற்று வாழும் வாழ்க்கையிலும் பயன்படுத்திக் கொள்ளலாம்.

சென்ற சில ஆண்டுகளாகத் திருப்பாவை, திருவெம்பாவை மகாநாடுகள், காமகோடி பீடம் ஸ்ரீ சங்கராசாரிய சுவாமிகளின் நன்முயற்சியால் நாடெங்கும் சிறப்பாக நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது. பழைய காலத்தில் கடல் கடந்துபோய், வெளிநாட்டாருடைய நல்வாழ்விற்கும் உதவிய பாவைப் பாடல்கள், அன்றுபோல் இன்றும், எதிர்காலத்திலும் நம்மவருக்கும் பிறருக்கும் நன்னெறிகாட்ட உதவும் என்று நம்பலாம்.

★

Koviloor Digital Library

10

திருப்பாவையும் திருவெம்பாவையும்

'திருப்பாவையும் திருவெம்பாவையும் வேறு வேறு தெய்வச் சார்பு உடையவாயினும் ஒரே பொதுக்குறிப்பு உடையன' என்று ஸ்ரீ மு.இராகவையங்கார் கூறுவர். ஆண்டாள் அருளிய திருப்பாவை, திருமாலின் புகழையும், மாணிக்கவாசகர் அருளிய திருவெம்பாவை, சிவபெருமானின் புகழையும் பாடுகின்றன. இந்த இரண்டு பிரபந்தங்களும், பாவைப்பாட்டு வகையைச் சேர்ந்த இரண்டு நல்லிசைப் பூந்துணர்கள்.

திருப்பாவை, சூடிக்கொடுத்த சுடர்க்கொடியில் பூத்த, முப்பது ஜோதி மலர்களால் ஆகிய ஓர் இசைத் தமிழ்ப் பூங்கொத்து. திருவெம்பாவை, மணிவாசகப் பெருமான் என்னும் ஆண்தகையின் பக்திக்காதலில் பூத்த, இருபது வாடா மலர்களால் ஆகிய ஓர் இசைத் தமிழ்ப் பூங்கொத்து. 'பாவாய்!' என்று முடிவு பெறுவதால் இந்தப் பிரபந்தங்களைப் பாவைப் பாட்டு என்கிறோம்.

ஒற்றுமை வேற்றுமைகள்

'அரன் நாரணன் நாமம்' என்பது ஆழ்வார் வாக்கு. அரண் என்றாலும் நாரணன் என்றாலும் - இந்த இரண்டு திருப்பெயர்களும், இறைவனைக் குறிப்பன என்பது பொருள். இந்த இரு தெய்வங்களும், 'வண்ணம் வேறு, உடம்பு ஒன்றாய், வானவில் அனையரே' என்பது உண்மை. வானவில்லின் ஏழு நிறங்களையும் உலகத்திலுள்ள பெருஞ் சமயங்களும் அறிகுறியாகக் கொண்டால், சிவபெருமானது

Koviloor Digital Library

செந்நிறத்தையும், திருமாலின் பச்சை நிறத்தையும் வானவில்லின் இரண்டு முக்கிய நிறங்களுக்கு அறிகுறியாகக் கொண்டு, சைவத்தையும் வைஃஷ்ணவத்தையும் தமிழ்ப் பெருமக்கள் உகந்த இரு பெரும் சமயங்களாகக் கருதலாம்.

திருப்பாவையிலும் திருவெம்பாவையிலும் பாசுரங்கள், 'எம்பாவாய்' என்றே முடிகின்றன. எனவே திருப்பாவை, திருவெம்பாவை என்ற பெயர்களில் குறிப்பிடத்தக்க வேறுபாடு இல்லை என்பது உய்த்து உணரத்தக்கது. திருவெம்பாவை, இருபது பாடல்களும், திருப்பாவை, இறுதிப் பாடலொழிய இருபத்தொன்பது பாடல்களும், 'ஏலோர் எம்பாவாய்' என்றே முடிவு பெறுகின்றன. இதைப் பாவைப் பாட்டின் மகுடம் என்று கொள்வதே பொருத்தமாகும்.

'பாவை' என்ற சொல் : நோன்பு, பிரதிமை என்ற பொருளில் உபயோகிக்கப்படுகிறது. திருப்பாவைப் பிரபந்தத்திலே, 'நம் பாவைக்குச் செய்யும் கிரிசைகள்' என்றும், 'நாங்கள் நம் பாவைக்குச் சாற்றி நீராடினால்' என்றும் வருவது காண்க. பாவை என்ற சொல்லுக்குப் 'பிரதிமை' என்பது பொருள். இது, மணலால் செய்யப்பட்ட காத்யாயினி தேவியின் (உமாதேவி அல்லது காளி தேவியின்) வடிவமாகிய பிரதிமையைக் குறிக்கும் என்பர். இந்தப் பிரதிமையைக் குறித்துச் செய்யும் நோன்பைப் 'பாவை நோன்பு' என்று சொல்லுகிறார்கள்.

பாவை நோன்பின் சில முக்கியமான செய்திகளைத் திருப்பாவையின் இரண்டாவது மூன்றாவது பாசுரங்களிலும், இருபத்தாறாவது இருபத்தேழாவது பாசுரங்களிலும், இருபத்தொன்பதாவது பாசுரங்களிலும் காண்கிறோம். பதின்மூன்றாவது பாசுரத்தின் மூன்றாவது அடியில், 'பாவைக்களம்' என்று நோன்பு நோற்கும் இடம் குறிக்கப்படுகிறது. திருவெம்பாவையில் நோன்பைப்பற்றிய

Koviloor Digital Library

பிரஸ்தாபமே இல்லை. பாடல்களின் இறுதி மகுடத்தில், 'எம்பாவாய்' என்று வருவது தவிர, இடையில் பாவை என்ற சொல் வரவே இல்லை.

'பறை' என்ற சொல், பாவை நோன்பிற்கு அவசியமான வாத்தியம் அல்லது உபகரணம் என்ற பொருளில் திருப்பாவையில் பல இடங்களிலும் காணப்படுகிறது. இச்சொல்லைத் திருவெம்பாவையில் நாம் காண்பதில்லை. நோன்பிற்கு வேண்டிய வேறு பல பொருள்களையும் திருப்பாவை பிரஸ்தாபிக்கிறது. இத்தகைய பிரஸ்தாபம் ஒன்றும் திருவெம்பாவையில் இடம் பெறவில்லை.

பாவை, ஒருவகை நோன்பைக் குறித்தது என்ற பொருளும் மறக்கப்பட்டு, பாவைப்பாட்டு ஒருவகைப் பிரபந்தமாக மட்டும் வழங்கிவந்த காலத்திலே, மணிவாசகப் பெருமான் தோன்றித் திகழ்ந்தார் என்று ஊகிக்கலாம். மார்கழி நீராட்டத்தை, இரண்டு பிரபந்தங்களும் பிரஸ்தாபிக்கின்றன. மார்கழித் திங்களில் சிற்றஞ்சிறு காலையில் எழுந்து, நீராடி, மகிழும் முறையையே பாவைப் பாட்டின் முக்கிய அம்சமாகத் திருவெம்பாவை குறிப்பிடுகிறது.

இந்த முக்கிய அம்சத்திலே திருப்பாவைக்கும் திருவெம்பாவைக்கும் இடையே விசேஷ ஒற்றுமைகளைக் காண்கிறோம்.

'மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்னாளால்'

என்று திருப்பாவை தொடங்குகிறதல்லவா? திருவெம்பாவையின் இறுதிப் பாட்டு,

'போற்றியாம் மார்கழிநீர் ஆடேலோர் எம்பாவாய்'

என்று முற்றுப் பெறுகின்றது.

காலையில் நீராடுவது, மற்ற மாதங்களைக் காட்டிலும் மார்கழி மாதத்தில் சிரமமான காரியந்தான். பனியும் குளிரும் அதிகமாக இருப்பதால் உறக்கத்தை உதறித் தள்ளி நீராடப்

Koviloor Digital Library

புறப்படுவது எளிதன்று. குளிரைப் பொருட்படுத்தாமல் அதிகாலையில் எழுந்த சிலர், பஜனை செய்வதுபோல் பாடிக்கொண்டே வீடு வீடாகச் சென்று தோழிமார்களைத், துயில் எழுப்புகிறார்கள். மார்கழி நீராடலின் இந்த அம்சத்தைத் திருப்பாவையிலும் திருவெம்பாவையிலும் விவரமாகக் காணலாம்.

திருப்பாவையில் ஆறாவது பாசுரத்திலிருந்து பதினைந்தாம் பாசுரம் முடியப் பத்துப் பாடல்கள் துயிலெழுப்புவதை வருணிக்கின்றன. திருவெம்பாவையில் முதல் எட்டுப் பாடல்கள் துயிலெழுப்பும் பாசுரங்கள்.

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெரும் சோதியை,
யாம் பாடக் கேட்டேயும் வாள் தடங்கண்
மாதே! வளருதியோ?

என்ற திருவெம்பாவையின் தொடக்கவே துயலெழுப்பும் முயற்சிதான்.

இறைவனை நாங்கள் பாடுவதைக் கேட்டும் நீ உறங்குகிறாயா? என்று தொடங்கும் திருவெம்பாவை முதலாவது பாட்டிலே, ஒரு பெண்ணின் வீட்டு வாசலில் நின்று, பல பெண்கள் பேசிக்கொண்டிருக்கும் குரல்களைக் கேட்கிறோம். இத்தகைய நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து கூறியபின், ஒன்பதாவது பாட்டிலே வரவேண்டியவர்கள் எல்லாம் எழுந்து வந்துவிட்டார்கள் என்ற குறிப்பையும், எல்லாரும் சேர்ந்து, பாடிக்கொண்டு, தடாகத்தை நோக்கி நீராடச் செல்லுகிறார்கள் என்ற குறிப்பையும், பெண்கள் தங்கள் விருப்பத்தை வெளிப்படையாகச் சொல்லி, இறைவனை வேண்டுகிறார்கள் என்பதையும் வெளியிடுகிறார் மாணிக்கவாசகர்.

உறங்கிக்கொண்டிருப்பவர்களை எழுப்பும் முறைகளிலும், நகைச்சுவை ததும்ப பெண்கள் பேசிக்கொள்ளும்

Koviloor Digital Library

முறையிலும் திருப்பாவைக்கும் திருவெம்பாவைக்கும் ஒற்றுமைகள் காண்கிறோம். சுகமாய்த் தூங்கிக் கொண்டிருப்பவர்களின் இயற்கையும், குளிரில் வாசலிலே நின்றுகொண்டு, உள்ளே உறங்குகிறவளை எழுப்புகிறவர் களின் நிலையும் உலகியலுக்குப் பொருத்தமாகவும், ரசிகர்களுக்கு விருந்தாகவும் இந்த இரண்டு பாவைப் பாட்டுக்களிலும் சித்திரிக்கப்படுகின்றன.

திருவெம்பாவையின் முதலாவது பாட்டில், சிவபெருமானிடம் பேரன்புடைய கன்னியர்களின் மூத்தவள் முன்னர் எழுந்து, மிக நெருங்கிய அன்புடைய ஒருத்தி இல்லம் சென்று, அவளைத் துயில் எழுப்பியது கூறப்படுகிறது என்றும் ஊகிக்கலாம். துயில் நீங்காமை யால்,

'வன் செவியோ நின்செவிதான்'

அதாவது, 'உன்செவி மிகுதியும் செவிடுபட்டதோ?' என்று எழுப்புகிறவள் கேட்கிறாள். இதே கருத்தைத் திருப்பாவையில் ஒன்பதாவது பாசுரத்திலே,

'ஊமையோ? அன்றிச் செவிடோ?'

என்ற அடியில் காணலாம்.

திருவெம்பாவையின் இரண்டாவது பாட்டிலே மற்றொரு தோழி எழுப்பப்படுகிறாள். முதல் பாசுரத்தில் எழுப்பியவளும் எழுப்பப் பெற்றவளும் ஆகிய இருவரும் சேர்ந்து, இரண்டாவது பாசுரத்தில் துயில் எழுப்புகிறார்கள் எனலாம். துயில்பவள் கண் திறவாமலே பதில் சொல்லு கிறாள். இந்த உரையாடல் முறையையும் திருப்பாவையில் காண்கிறோம்.

திருவெம்பாவையின் மூன்றாவது பாசுரத்திலும் நான்காவது பாசுரத்திலும் இந்தச் சம்பாஷணை முறையைக்

Koviloor Digital Library

காண்கிறோம். உறங்குபவளும் உணர்த்துகிறவர்களும் நகைச்சுவையுடன் பேசிக் கொள்கின்றனர். நான்காவது பாசுரத்தில்,

''வண்ணக் கிளிமொழியார்
எல்லாரும் வந்தாரோ?''

என்று தூங்குபவள் கேட்கிறாள்.

இதற்கு முன், எழுப்புகிறவர்கள்,

''ஒண்ணித் திலநகையாய்!
இன்னம் புலர்ந்தின்றோ?''

[*ஒண் நித்தில நகையாய்* - ஒரு பொருந்திய முத்தை ஒத்த பற்களையுடைய பெண்ணே! *புலர்ந்தின்றோ* - பொழுது விடியவில்லையோ?]

என்று கேட்டார்கள்.

இத்தகைய சம்பாஷணையை,

'எல்லே இளங்கிளியே!
இன்னம் உறங்குதியோ?'

என்ற திருப்பாவைப் பாசுரத்தில் காணலாம். இந்தப் பாசுரத்திலே எழுப்புகிறவர்கள், உறங்குறவளின் குரல் இனிமையைப் பாராட்டி, அவளைக் கிளிமொழியாள் என்கிறார்கள். திருவெம்பாவைப் பாசுரத்திலோ எழுப்பப் படுகிறவள், வந்தவர்களின் குரல்கேட்டு, அவர்களைக் கிளிமொழியார் என்று குறிப்பிடுகிறாள்.

திருவெம்பாபைப் பாசுரத்தில், ''எல்லாரும் வந்தாரோ?'' என்ற கேள்விக்கு,

''எண்ணிக்கொ(டு) உள்ளவா
சொல்லுகோம்; அவ்வளவும்
கண்ணைத் துயின்(று), அவமே
காலத்தைப் போக்காதே......''

Koviloor Digital Library

[எண்ணிக்கொடு - எண்ணிக்கொண்டு. உள்ளவா - உள்ளவாறு. சொல்லுகோம் - சொல்லுவோம். அவ்வளவும் - நாங்கள் அப்படி எண்ணுகின்றவரையும். அவமே - வீணாக.]

என்று வந்தவர்கள் பதில் சொல்லுகிறார்கள். 'ஆகவே, 'நாங்கள் எண்ணமாட்டோம்; நீயே வந்து எண்ணிக்கொள்' என்றும் சொல்லுகிறார்கள்.

இக் கருத்தைத் திருப்பாவைப் பாசுரத்திலும் காண்கிறோம்.

'எல்லாரும் போந்தாரோ?'
'போந்தார், போந்(து) எண்ணிக்கொள்'

[போந்தாரோ - வந்து விட்டாரோ?]

என்று வருவது காண்க.

மேலே சொன்ன திருவெம்பாவைப் பாசுரத்தில் (நான்காவது பாசுரம்) சிவபெருமான், 'கண்ணுக்கு இனியான்' என்று குறிக்கப்படுகிறார். திருப்பாவையில் பன்னிரண்டாவது பாசுரத்தில், ஆண்டாள் இறைவனை, 'மனத்துக்கு இனியான்' என்று குறிப்பிடுவதைக் காணலாம்.

'கோழிகள் கூவுகின்றன; பறவைகள் எல்லாம் எங்கும் ஒலிக்கின்றன; திருப்பள்ளியெழுச்சிக் காலத்தை அறிவிக்கக் குழலும் வெண்சங்குகளும் எங்கும் ஊதப்படுகின்றன' என்ற வருணனைகளைத் திருவெம்பாவை எட்டாவது பாசுரத்தில் காண்கிறோம். காலைச் சங்கு ஊதுவதை ஆண்டாளும் குறிப்பிடுகிறாள். காலை வேளை குறித்த இயற்கை வருணனைகளைத் திருப்பாவையிலும் காண்கிறோம்.

'கோழி சிலம்பச்
சிலம்பும் குரு(கு) எங்கும்

[சிலம்ப - கூவ. குருகு - சிறு பறவைகள்.]

என்ற மணிவாசகர் வாக்கோடு.

Koviloor Digital Library

'வந்(து) எங்கும் கோழி
அழைத்தனகாண்; மாதவிப்
பந்தல்மேல் பல்கால்
குயில்இனங்கள் கூவினகாண்!'

என்ற ஆண்டாள் வாக்கை ஒப்பிடலாம்.

திருவெம்பாவை ஒன்பதாம் பாசுரத்தில், 'உன்னைத் தலைவனாகப் பெற்ற உனது சிறந்த அடியார்களாகிய நாங்கள் உன் தொண்டர்களின் திருவடிகளை வணங்கு வோம்; அவர்களுக்கே உரிமை உடையவர்களாவோம்; அத்தகுதி வாய்ந்த அடியார்களே எங்களுக்குக் கணவர் ஆவார்கள்; அவர்கள் உகந்து சொன்ன முறையே குற்றேவல் புரிவோம் என்ற கொள்கை வெளியிடப் படுகிறது.

கண்ணன் காதலை அடைவதும், அவனுக்கே குற்றேவல் புரிவதும், திருப்பாவையின் திரண்ட பொருள் என்பதையும் இப்பொருள் திருப்பாவையின் தனிப்பெருங் கொள்கையாக இறுதிப் பாசுரத்தில் வெளியிடப்படுவதையும் நாம் அறிவோம்.

மழைப்பாட்டு

திருவெம்பாவையில் எட்டுப் பாடல்களில், உறங்கியவர்களை எழுப்பிக்கொண்டு, எல்லாரும் சேர்ந்து பாடிய வண்ணம் தடாகத்தை நோக்கி நீராடச் செல்லுகிறவர்கள், ஒரே குதூகலமாய்த் தடாகத்தில் நீராட விரும்புவதையும், நாடு செழிக்க மழை பெய்ய வேண்டுமென்று மழைப்பாட்டு ஒன்று பாடுவதையும் காண்கிறோம். இந்த மழைப்பாட்டு, திருவெம்பாவையின் பதினாறாவது பாசுரம், திருப்பாவையிலோ நான்காவது பாசுரம் மழைப்பாட்டு.

Koviloor Digital Library

திருவெம்பாவையின் மழைப்பாட்டு:

'முன்னிக் கடலைக்
சுருக்கி, எழுந்(து)உடையாள்
என்னத் திகழ்ந்(து), எம்மை
ஆள் உடையாள் இட்(டு) இடையின்
மின்னிப் பொலிந்(து), எம்
பிராட்டி திருஅடிமேல்
பொன்னம் சிலம்பில்
சிலம்பி, திருப்புருவம்
என்னச் சிலைகுலவி
நம்தம்மை ஆள்உடையாள்
தன்னில் பிரி(வு) இலா
எம்கோமான் அன்பர்க்கு
முன்னி அவள், நமக்கு
முன்சுரக்கும் இன்அருளே
என்னப் பொழியாய்
மழையேல் ஓர் எம்பாவாய்!

[முன்னி - நெருங்கி. சுருக்கி - நீரை முகந்து. உடையாள் என்னத் திகழ்ந்து - எம்மை உடையவளாகும் உமாதேவியின் திருமேனிபோல் கருநிறமாக விளங்கி. ஆள் உடையாள் - ஆட் கொண்டிருப்பவள். இட்டு இடையின் - சிறிய இடை போன்று. பொன்னம் சிலம்பின் - பொன்னாலாகிய சிலம்பைப்போல். சிலை குலவி - வானவில்லை விளங்க நிறுத்தி. உடையாள் தன்னில் பிரிவு இலா - உமாதேவியிடம் பிரிவு இல்லாமல் அமர்ந்திருக்கின்ற. எம்கோமான் - எமது தலைவனாகிய சிவபெருமான். சுரக்கும் - சொரிகின்ற.]

இப்பாசுரத்தில், மழைக்கு உமாதேவியின் திரு நிறம் உவமிக்கப்படுகிறது. ஆண்டாளின் மழைப்பாட்டில் திருமாலின் திருநிறம் உவமிக்கப்படுகிறது.

Koviloor Digital Library

மின்னலுக்குத் தேவியின் இடையை உபமானமாகக் குறிப்பிடுகிறார் மணிவாசகர். திருமாலின் சக்கரம் உபமானமாகிறது, திருப்பாவைப் பாசுரத்தில்.

இடி முழக்கத்திற்குத் தேவியின் கிண்கிணி ஓசையை ஒப்பிடுகிறார் மணிவாசகர். ஆண்டாள், திருமாலின் சங்கை உவமையாக்குகிறாள்.

திருவெம்பாவையில், உலக அன்னையின் இன்னருள் போல் மழை பொழிய வேண்டும் என்று பெண்கள் வேண்டுகிறார்கள். திருப்பாவையில் பகவானுடைய வில்லிலிருந்து பாணங்கள் கிளம்புவதுபோல் மழை கொட்ட வேண்டுமென்று பெண்கள் விரும்புகிறார்கள். இறைவன், மறக்கருணையாலும் இன்னருளே பொழிகின்றான் என்பது குறிப்பு.

வேறு ஒற்றுமைகள்

திருவெம்பாவையின் பதினேழாவது பாசுரத்தில், 'கொங்கு உண் கருங்குழலி' (மணம் தங்கிய கருநிறம் வாய்ந்த கூந்தலையுடைய இறைவி), திருப்பாவையில் (18-ஆம் பாட்டு) கந்தம் கமழும் குழலீ! (மணம் கமழுகின்ற கூந்தலையுடைய நப்பின்னையே)!' என்ற சொற்றொடரை நினைவூட்டுகிறது. திருப்பாவையில் நப்பின்னைப் பிராட்டியைக் குறிப்பது கூர்ந்து நோக்கத்தக்கது.

திருவெம்பாவையின் இறுதிப்பாட்டு :

'போற்றி, அருளுகநின்
ஆதியாம் பாதமலர்;
போற்றி, அருளுகநின்
அந்தமாம் செந்தளிர்கள்;
போற்றிஎல் லாஉயிர்க்கும்
தோற்றமாம் பொற்பாதம்;

Koviloor Digital Library

போற்றிஎல் லாஉயிர்க்கும்
போகமாம் பூங்கழல்கள்;
போற்றிஎல் லாஉயிர்க்கும்
ஈறாம் இணை அடிகள்;
போற்றி, மால் நான்முகனும்
காணாத புண்டரிகம்;
போற்றி, யாம் உய்யஆட்
கொண்டுஅருளும் பொன்மலர்கள்;
போற்றி, யாம் மார்கழிநீர்
ஆடேலோர் எம்பாவாய்!

[அந்தமாம் - முடிவாக உள்ள. செந்தளிர்கள் - சிவந்த தளிர் போன்ற திருவடிகள். தோற்றமாம் பொற்பாதம் - தோற்றுவதற்குக் காரணமாக இருந்த அழகிய அடிகள். போகமாம் பூங்கழல்கள் - இன்பம் தந்து காப்பாற்றும் அழகிய அடிகள். புண்டரிகம் - பாதமாகிற தாமரை.]

இது போன்ற வணக்கப்பாட்டு, திருப்பாவையில் இருபத்து நான்காவது பாசுரம். திருவெம்பாவையில், 'போற்றி', அடிகளின் தொடக்கத்தில் வருவதுபோல், திருப்பாவையில்,

அன்றிவ் உலகம்
அளந்தாய்! அடிபோற்றி

என்பதுபோல், இறுதியில் வருகிறது.

திருவெம்பாவை, திருவாசகத்தில் மிகச் சிறந்த பகுதிகளில் ஒன்றாக மதிக்கப்படுகிறது. திருப்பாவை நாச்சியார் திருமொழியில் அப்படியே மதிக்கப்படுகிறது. திருவெம்பாவை இருபது பாசுரங்களையும் மார்கழி மாதத்தில் விடியற்காலையில் சைவர்கள் குடும்பங்களில் ஓதுவார்கள். சிவன் கோவில்களில் மார்கழித் திருவாதிரையை இறுதியாகக் கொண்ட பத்து நாள்களில் முறையாக ஓதுகிறார்கள். திருப் பாவை, வைஷ்ணவர்களால் மார்கழி மாதம் ஓதப்படுகிறது.

Koviloor Digital Library

தனியன்

உய்யக்கொண்டார் அருளியது

அன்ன வயற்புதுவை ஆண்டாள், அரங்கற்குப்
பன்னு திருப்பாவைப் பல்பதியம் - இன்னிசையால்
பாடிக் கொடுத்தாள், நற் பாமாலை பூமாலை
சூடிக் கொடுத்தாளைச் சொல்லு.

[அன்னவயல் புதுவை - அன்னப் பறவைகளை உடைய வயல்களோடு கூடிய ஸ்ரீவில்லிபுத்தூர். ஆண்டாள் - ஆண்டாளை. அரங்கற்கு - ஸ்ரீரங்கநாதனுக்கு. பன்னு - ஆராய்ந்து கொண்டாடுகிற. பல்பதியம் - பல பாசுரங்கள். நற்பாமாலை - அழகிய பாட்டுக்களால் ஆகிய மாலை.]

'திருப்பாவை என்ற பிரபந்தத்தை அனுசந்திப்பதற்கு முன்பே இப் பிரபந்தத்தை அருளிய ஆண்டாளின் திருப்பெயரை நெஞ்சே! நீ அனுசந்திப்பாயாக' என்பது பொருள்.

இங்கே அரங்கன் என்பது கண்ணன். பள்ளி கொண்டிருந்த கண்ணனைத் துயிலெழுப்பப் பாடியிருப்ப தால், கண்ணனை அரங்கன் என்று குறிப்பிடுவது பொருந்தும். பதியம்: பத்யம் என்ற வட சொல்லின் திரிபு.

பன்னு திருப்பாவை : ஆண்டாள் ஆராய்ந்து அருளிய திருப்பாவை; அல்லது பக்தர்களும் ரசிகர்களும் பொருள் நயங்களை ஆராய்ந்து அநுபவிக்கிற திருப்பாவை.

'ஆராய்ந்து கொண்டாடுகிற முப்பது பாசுரங்களை உடைய திருப்பாவை என்ற பாமாலையை இன்னிசையோடு அமையுமாறு கண்ணனுக்குப் பாடிக் கொடுத்தவளும், அதே பெருமானாகிய வடபெருங்கோயிலுடையானுக்கு (வட பத்திரசாயிக்கு)ப் பூமாலைகளைத் தன் முடியிலே சூட்டிக்கொண்டு கொடுத்தவளும், அன்னங்கள் உலாவுகின்ற

Koviloor Digital Library

வயல்களையுடைய புதுவை என்ற ஸ்ரீவிலிலிப்புத்தூரில் தோன்றியவளுமாகிய ஆண்டாளை, நெஞ்சமே! அனுசந்திப் பாயாக' என்பது பொழிப்புரை.

உய்யக்கொண்டார் : ஸ்ரீவைஷ்ணவ ஆசாரியர்களில் முதல்வரான ஸ்ரீநாதமுனிகளின் சீடர்.

சூடிக் கொடுத்த சுடர்க்கொடியே! தொல்பாவை
பாடி யருளவல்ல பல்வளையாய்! - நாடி நீ
'வேங்கடவற் கென்னை விதி'யென்ற இம்மாற்றம்
நாங்கடவா வண்ணமே நல்கு

[சுடர்க்கொடி - ஒளி பொருந்திய பூங்கொடி போன்றவளே. தொல்பாவை - பழமையான பாவை நோன்பை. பல்வளையாய் - பல வளையல்களை அணிந்தவளே. நாடி - நாட்டம் அல்லது விருப்பம் கொண்டு; கண்ணனை நாடி. வேங்கடவதற்கு - திருவேங்கடமுடையானாகக் காட்சி தருகின்ற கண்ணனுக்கு. என்னை விதி - என்னை உரியவளாக விதிப்பாய்; என்னை வாழ்க்கைப்படுத்துவாய். என்ற - என்று மன்மதனை நோக்கி முன்னமே சொன்ன. இம்மாற்றம் - இந்தச் சொல்லை; இந்தச் சொல்லின் உட்பொருளை. நாம் கடவாவண்ணம் - அடியவர்களாகிய நாம் கடந்து போகாதபடி. நல்கு - அருள் செய்வாய்.]

பகவான் விஷயத்தில் ஆண்டாளுக்கு எவ்வளவு காதல் உண்டோ, அவ்வளவு பக்திக் காதலும் அடியவர்களான நமக்கும் உண்டாக வேண்டும். அப்படி உண்டாகுமாறு ஆண்டாள் அருள்புரிய வேணும் என்பது பிரார்த்தனை. ஆண்டாளை நோக்கி, அடியவர்களுக்காக உய்யக்கொண்டார் செய்துகொள்ளும் பிரார்த்தனை இது.

'அனங்க தேவா!...... வேங்கடவற்கு என்னை விதிக்கிற்றியே' என்பது ஆண்டாள் வாக்கு. (நாச்சியார் திருமொழி.) தெற்கே ஸ்ரீவில்லிப்புத்தூரில் தோன்றி, ஆண்டாள் என்னும் சுடர்க்கொடி, வடவேங்கட மலையில்

Koviloor Digital Library

உள்ள வாசுதேவ தருவைத் தழுவி வாழ விரும்பிக் காதலித்த அந்தக் காதல் 'பக்திக்காதலுக்கு ஒரு பெருங் குறிக்கோள்' என்பது இத் தனியனின் உட்பொருள்.

'பூமாலையைத் தான் சூட்டிக்கொண்டு, தன் காதலனாகிய கண்ணனுக்குக் கொடுத்த அன்புச்சுடர் மயமான பூங்கொடி போன்றவளே! ஆயச்சிறுமியர் அனுஷ்டித்த பழைமையான பாவை நோன்பைத் 'திருப்பாவை' வாயிலாகப் பாடி, உலகத்துக்குக் கருணையோடு கொடுக்கவல்லவளும், பல வளையல்களை அணிந்தவளமான கோதையே! நீ கண்ணனிடம் நாட்டங்கொண்டு, ''மன்மதனே! என்னைத் திருவேங்கட முடையானுக்கு வாழ்க்கைப் படுத்துவாய்!'' என்று சொன்ன இந்தச் சொல்லை நாங்கள் கடந்து போகாதபடி அருள்புரிவாயாக' என்பது பொழிப்புரை.

'இம்மாற்றம் நாம் கடவா வண்ணமே நல்கு' என்பதற்கு, 'இந்தச் சொல்லை அல்லது பிரபந்தத்தை (நாச்சியார் திருமொழி என்ற பிரபந்தத்தை) நாங்கள் நன்கு தெரிந்துகொள்ளும்படி எங்களுக்கு நீ கருணை புரிவாயாக' என்றும் பொருள் கொள்ளலாம். இப்படிப் பொருள் கொண்டால்; இத் தனியன், நாச்சியார் திருமொழிக்கு இசைந்த தனியானாகும்.

1

'மார்கழி நோன்பு நோற்க நீராட வாருங்கள்' என்று ஆய்ப்பாடிக் கன்னிகைகளில் சிலர் மற்றைப் பெண்களை அழைப்பது.

மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்னாளால்;
நீராடப் போதுவீர்! போதுமினோ, நேரிழையீர்!
சீர்மல்கும் ஆய்ப்பாடிச் செல்வச் சிறுமீர்காள்!
கூர்வேல் - கொடுந்தொழிலன் நந்தகோ பன்குமரன்,

Koviloor Digital Library

ஏரார்ந்த கண்ணி யசோதை இளஞ்சிங்கம்,
கார்மேனிச் செங்கண் கதிர்மதியம் போல்முகத்தான்
நாரா யணனே, நமக்கே பறைதருவான்,
பாரோர் புகழப் படிந்து - ஏலோர் எம்பாவாய்

[மார்கழித் திங்கள் - மார்கழி மாதத்தில். மதிநிறைந்த நன்னாளால் - சுக்லபக்ஷ பௌர்ணமி என்னும் நன்னாள் வாய்த்திருக்கிறது. நீராடப் போதுவீர் - நீராடுவதற்கு வரவேணு மென்ற விருப்பம் உள்ளவர்களே. போதுமினோ! - வாருங்கள். நேரிழையீர் - அழகிய ஆபரணங்களை அணிந்து கொண்டிருப்பவர்களே. சீர்மல்கும் - சிறப்பு நிறைந்திருக்கும். ஆய்ப்பாடிச் செல்வச் சிறுமீர்காள் - ஆய்ப்பாடியிலுள்ள செல்வச் சிறுமிகளே. கூர்வேல் கொடுந்தொழிலன் - கூர்மையான வேலையும் கொடுந்தொழிலையும் உடையவன். ஏர்ஆர்ந்த கண்ணி - அழகு நிறைந்த கண்களை உடையவள். இளஞ்சிங்கம் - சிங்கக்குட்டி. கார்மேனிச் செங்கண் - மேகம் ஒத்த மேனியும் செந்தாமரை ஒத்த கண்களும். கதிர்மதியம் - சூரிய கிரணங் களையுடைய சந்திரன். பறை - நோன்புக்கு வேண்டிய வாத்தியங் களில் ஒன்று. பாரோர் - இந்த உலகத்தவர். படிந்து - (நோன்பில்) இறங்கி.]

சூரிய காந்தியையும் சந்திரனது குளிர்ச்சியையும் ஒருங்கே கொண்ட திருமுகமானதால், 'கதிர் மதியம் போல் முகம்' என்று குறிக்கப்படுகிறது. ஆய்ப்பாடிக்குச் 'சீர்': நெய், பால், தயிர் முதலியவற்றின் வளத்தோடு, கண்ணன் வளரும் நீர்மையும் சீர்மையுமாகும்.

பசும்புல்லும் சாக மிதியாத பரமசாதுவான நந்தகோபன், 'கூர்வேல் கொடுந்தொழிலன்' ஆனதற்குக் காரணம், குழந்தைமீதுள்ள பேரன்பு: 'எந்த நிமிஷத்தில் என்ன ஆபத்து வந்துவிடுமோ?' என்று வேலைச் சாணை பிடித்துக் 'கொடுந்

Koviloor Digital Library

தொழிலு'க்கும் சித்தமாக இருக்கிறானாம். 'பிள்ளையை மாறாதே பார்த்துக் கொண்டிருக்கையாலே' யசோதையின் கண்களில் அழகு மேன்மேலும் நிறைந்து கொண்டிருக் கிறதாம்.

2

நோன்பு நோற்கிறவர்கள் தாங்கள் மேற்கொண்டுள்ள நியமங்களைத் தெரிவிக்கிறார்கள்.

வையத்து வாழ்வீர்காள்! நாமும்நம் பாவைக்குக்
செய்யும் கிரிசைகள் கேளீரோ; பாற்கடலுள்
பையத் துயின்ற பரமன் அடிபாடி,
நெய்யுண்ணோம்; பாலுண்ணோம்; நாட்காலை நீராடி,
மையிட் டெழுதோம்; மலரிட்டு நாம்முடியோம்;
செய்யா தனசெய்யோம்; தீக்குறளை சென்றோதோம்;
ஐயமும் பிச்சையும் ஆந்தனையும் கைகாட்டி
உய்யுமா றெண்ணி உகந்து – ஏலோர் எம்பாவாய்.

[வையத்து - உலகத்தில். வாழ்வீர்காள் - வாழப் பிறந்தவர்களே. நம் பாவைக்கு - நம்முடைய பாவை நோன்பிற்கு. கிரிசைகள் - கிரியைகள். பையத்துயின்ற - மெல்லத் தூங்குகின்ற; யோக நித்திரை செய்கிற. நாள் காலை - விடியற்காலத்திலேயே. தீக்குறளை ஓதோம் - தீமை உண்டாகும் கோள் சொல்லமாட்டோம். ஐயமும் - தானமும். ஆம்தனையும் - யாசிப்பவர்களுக்குத் திருப்தி ஏற்படும் வரை. கைகாட்டி - 'நாம் கொடுத்தோம்' என்னும் செருக்கு ஒரு சிறிதும் இல்லாமல் கொடுத்து. உய்யும் ஆறு - உய்ந்துபோகும் விதத்தை. உகந்து - மகிழ்ந்து.]

இந்த நியமங்களில் சில 'ப்ரவ்ருத்தி' ரூபமானவை; சில 'நிவ்ருத்தி' ரூபமானவை. பற்றிக்கொள்ள வேண்டிய நியமங்கள் 'ப்ரவ்ருத்தி'; விட வேண்டியவை 'நிவ்ருத்தி.' எந்த நற்பெருங் காரியத்தில் ஈடுபட விரும்புவோரும் இத்தகைய நியமங்கள் சிலவற்றைக் கைக்கொள்வது நலம். சில நியமங்களைப் பற்றிக்கொள்வார்கள். சில வழக்கங்களை

Koviloor Digital Library

விடவேண்டும் என்ற நியமத்தையும் மேற்கொள்வார்கள். இந்தப் பொதுவிதியை அனுசரித்து, இந்த ஆய்ப்பாடிப் பெண்களும் சில நியமங்களை மேற்கொள்கிறார்கள்.

இவர்கள் மேற்கொள்ளும் நியமங்களில், பற்றும் கிரியைகள் (ப்ரவ்ருத்தி) மூன்று: (1) பரமன் அடிபாடுதல், (2) காலை நீராடுதல், (3) ஐயமும் பிச்சையும் கை காட்டுதல். விடும் கிரியைகள் (நிவ்ருத்தி) நான்கு : (1) நெய் பால் உண்ணாதது, (2) மையாலும் மலராலும் அலங்கரித்துக் கொள்ளாதது, (3) செய்யாதன செய்யாமல் இருப்பது. (4) கோள் சொல்லாமல் இருப்பது. பற்றும் கிரியைகளோடு விடும் கிரியைகளும் இப்பாட்டிலே, 'செய்யும் கிரிசைகள்' என்று குறிக்கப்படுகின்றன.

ஐயம் : தகுதி வாய்ந்தவர்களுக்கு உரிய காலத்தில் வேண்டுமளவு உதவுவது. பிச்சை : பிக்ஷுக்களுக்குக் கொடுப்பது. கை எவ்வளவு கொடுத்தாலும், 'நாம் என்ன கொடுத்து விட்டோம்?' என்று நெஞ்சு நினைக்க வேண்டும் என்பது, 'கைகாட்டி' என்ற சொற்றொடரின் புதை பொருள்.

3

உத்தமன் பேர்பாடி, நோன்பிற்கு அங்கமாக நீராடினால் மழைபெய்து நாடு செழிக்கும்:

ஓங்கி உலகளந்த உத்தமன் பேர்பாடி
நாங்கள்நம் பாவைக்குச் சாற்றிநீர் ஆடினால்,
தீங்கின்றி நாடெல்லாம் திங்கள்மும் மாரிபெய்து
ஓங்கு பெருஞ்செந்நெ லூடு கயல்உகளப்
பூங்குவளைப் போதில் பொறிவண்டு கண்படுப்ப,
தேங்காதே புக்கிருந்து சீர்த்த முலைபற்றி
வாங்கக் குடம்நிறைக்கும் வள்ளல் பெரும்பசுக்கள்
நீங்காத செல்வம் நிறைந்து - ஏலோர் எம்பாவாய்

Koviloor Digital Library

[நம் பாவைக்குச் சாற்றி - எங்கள் பாவை நோன்பிற்கு அங்கம் என்று சொல்லி. செந்நெல் ஊடு - செந்நெற் பயிர்களின் ஊடே. கயல் உகள - கயல் மீன்கள் துள்ளவும். பூங்குகளைப் போதில் - அழகிய குவளை மலர்களில். பொறிவண்டு கண் படுப்ப - புள்ளிகளை உடைய வண்டுகள் உறங்க. தேங்காதே புக்கு இருந்து - (பால் கறப்பவர்கள்) சலியாமல், ஏங்காமல் கறக்கப் புகுந்து, ஒரு நிலையாக இருந்து. சீர்த்த - பருத்த. வாங்க - இழுக்க. வள்ளல் பெரும் பசுக்கள் - வள்ளல் தன்மையுள்ள பெரும் பசுக்கள். நிறைந்து - நிறையும்படி.]

'தீங்கின்றி' என்று தொடங்கி, ஆறு அடிகளால் இம் மார்கழி நோன்பினால் நாட்டுக்கு விளையும் நன்மையை வெளியிடுகிறார்கள். 'ஒன்பது நாள் வெயிலும் ஒரு நாள் மழையுமாய்,' திங்கள் மும்மாரி பெய்து, நாடு செழிக்க வேணும் என்கிறார்கள்.

ஓங்கி உலகளந்த உத்தமனையே பயனாகக் கொண்டு, வேறு ஒரு பயனும் கருதாமல் மார்கழி நோன்பு நோற்றால், கண்ணனை அடையவேண்டும் என்ற தங்கள் நோக்கம் நிறைவேறுவதுடன்; நாடு செழித்து, நீர்வளம், நெல்வளம், பால் வளம் ஆகிய வளங்கள் எல்லாம் பெருகும் என்பது பாட்டின் கருத்து.

முதல் பாசுரத்தில் பகவானை, 'நாராயணன்' என்று குறிப்பிட்டார்கள். இம்மைக்கும் மறுமைக்கும் நாதன் என்பது உட்பொருள். இரண்டாம் பாசுரத்தில், ஞானத் தெளிவாகிய பாற்கடலில் அறிதுயில் அமர்ந்த மூர்த்தியைக் குறிப்பிட்டார்கள். இம்மூன்றாம் பாசுரத்தில் அவதார மூர்த்தியாகி, ஓங்கி, உலகளந்து, அசுர இருள் போக்கிய அருளைக் குறிப்பிடுகிறார்கள்.

'பிறரை ஹிம்சித்துத் தன் வயிற்றை வளர்க்கவேணும் என்றிருக்குமவன் அதமன்; பிறரும் ஜீவிக்கவேணும், நாமும் ஜீவிக்க வேணும் என்றிருக்குமவன் மத்யமன். தன்னை அழிய மாறியாகிலும் பிறர் ஜீவிக்கவேணும் என்னுமவன் உத்தமன்' என்பது வியாக்கியானம்.

Koviloor Digital Library

4

பெண்களின் மழைப்பாட்டு

ஆழி மழைக்கண்ணா! ஒன்றும்நீ கைகரவேல்;
ஆழியுள் புக்கு முகந்துகொடு ஆர்த்துஏறி,
ஊழி முதல்வன் உருவம்போல் மெய்கறுத்துப்
பாழியந் தோளுடைப் பற்பநா பன்கையில்
ஆழிபோல் மின்னி, வலம்புரிபோல் நின்றதிர்ந்து
தாழாதே, சார்ங்கம் உதைத்த சரமழைபோல்
வாழ உலகினில் பெய்திடாய், நாங்களும்
மார்கழிநீ ராட மகிழ்ந்து - ஏலோர் எம்பாவாய்

[*ஆழிமழைக்கண்ணா* - கடல்போல் கம்பீரமான மழைக்கடவுளே. *ஒன்றும் நீ கைகரவேல்* - நீ ஒன்றையும் கையிருப்பாக ஒளித்து வைத்துக்கொள்ளாதே. *ஆழியுள்* - கடலினுள். *புக்கு* - புகுந்து. *முகந்து கொடு* - நீரை முகந்துகொண்டு. *ஆர்த்து ஏறி* - ஆரவாரம் செய்து வானத்தில் ஏறி. *ஊழி முதல்வன்* - காலம் முதலிய எல்லாவற்றுக்கும் முதற் காரணமான பகவான். *மெய்* - உடம்பு. *பாழி* - வலிமை. *அம் தோளுடை* - அழகிய தோள்களை உடைய. *பற்பநாபன்* - பத்மநாபன். *ஆழி* - சக்கரம். *வலம்புரி* - வலம்புரிச் சங்கு. *நின்று அதிர்ந்து* - நிலையாக இடித்து. *தாழாதே* - தாமதியாமல். *சார்ங்கம்* - சார்ங்கம் என்னும் வில். *உதைத்த சரமழை* - உதைத்துத் தள்ளிய அம்பு மழை.]

'மழையே! மழையே! வா வா' என்று, குழந்தைகள் பாடுகிறார்கள் அல்லவா? ஆய்ப்பாடிச் சிறுமியரும், 'மழையே, உலகம் வாழ, நாங்கள் மகிழ்ந்து, மார்கழி நீராடப் பெய்வாயாக' என்கிறார்கள்.

'ஜகத்தை ஈரக் கையாலே தடவி நோக்கவல்லவன்' என்று பகவானால் மதிக்கப் பெற்றவன் மழைக்கண்ணன் என்பர். நாட்டார், சிறுமை பாராது, தன் பெருமை அல்லது

Koviloor Digital Library

கம்பீர நிலைக்கு இசையப் பொழிவதால், ஆழி மழைக்கண்ணன் என்று விரிவுரை கூறுவதும் உண்டு.

'ஆழிமழைக்கண்ணா!' என்பது 'ஆழிமழைக்கு அண்ணால்!' என்று இருந்து, சிதைந்திருக்கக் கூடும் என்பது ஓர் ஆராய்ச்சிப் பேரறிஞரின் ஊகம்.

பக்தர்களும் பக்தைகளும் பகவானைத் தவிர வேறு எந்தத் தேவதையையும் பிரார்த்திப்பதில்லை. மழைக்கடவுளே இவர்களைப் பிரார்த்தித்து இவர்களது கட்டளையைப் பெற்றுக் கொள்கிறான் என்பர்.

5

தொழுது பாடி, சிந்திக்க,
பிழைகள் எல்லாம் தீயினில்
தூசாகும்:

மாயனை, மன்னு வடமதுரை மைந்தனை,
தூய பெருநீர் யமுனைத் துறைவனை,
ஆயர் குலத்தினில் தோன்றும் அணிவிளக்கை,
தாயைக் குடல்விளக்கம் செய்ததா மோதரனை,
தூயோமாய் வந்துநாம் தூமலர்தூ வித்தொழுது
வாயினால் பாடி, மனத்தினால் சிந்திக்க,
போய பிழையும் புகுதருவான் நின்றனவும்
தீயினில் தூசாகும் செப்பு - ஏலோர் எம்பாவாய்.

[*மாயனை* - மாயச் செயல்களையுடைய கண்ணனை. *மன்னு வட மதுரை மைந்தனை* - தன்னுடைய தொடர்பு நிலைபெற்றுப் பொருந்தியிருக்கும் வட மதுரையில் அவதரித்த தலைவனை. *தூய பெருநீர் யமுனைத் துறைவனை* - தூய்மையான வெள்ளமுடைய யமுனா தீர வாசியை. *ஆயர் குலத்தினில்* - கோகுலத்தில். *அணி விளக்கை* - தீபமங்கள ஜோதியை. *தாயைக் குடல் விளக்கம் செய்த* - தன் பிறப்பினால்,

Koviloor Digital Library

பெற்ற வயிற்குக்கு மேன்மை உண்டாக்கிய. தாமோதரனை - கண்ணனை. தூயோமாய் - நாங்கள் தூய்மையுடையவர்களாக. தூமலர் - தூய மலர்கள். போய பிழையும் - முன்பு செய்த பிழைகளும். புகுதருவான் நின்றனவும் - இனிமேல் நம்மை அறியாமல் நேரிடத்தக்க பாவங்களும். தீயினில் தூசு ஆகும் - தீயில் இட்ட பஞ்சுபோல் ஆகிவிடும். செப்பு - சொல்லு; (இங்கே) அவனுடைய திருநாமங்களைச் சொல்லு.]

பகவந் நாம சங்கீத்தனத்தில் இன்புற்று, நம்பிக்கை யுடன் ஈடுபடவே, ஏற்கெனவே செய்த பிழைகளும் இனிமேல் நேரக்கூடிய பிழைகளும் தீயினில் தூசாகிவிடும் என்பது பொருள். 'சேர்ப்பால் (குழம்புப்பால்), போக ரூபமாகப் பருகுமவனுக்குத் தன்னடையே பித்தம் போமா போலே' என்பது வியாக்கியானம்.

'தூயபெருநீர் யமுனை' : கண்ணனுடைய தொடர்பி னால், 'பெருநீர் யமுனை' தூய்மை பெறுகின்றது. ஆயர்குலத்தினில் தோன்றும் அணிவிளக்கு : வட மதுரை யில் மறைந்து, ஆய்க்குலத்தில் தோன்றிய ஜோதி; இருட்டில் தீபம்போல் ஆய்ப்பாடிக்கு வாய்த்திருக்கும் மங்கள தீபம்.

தாமோதரன் : கயிற்றுத் தழும்பை வயிற்றில் உடையவன். யசோதை கட்டிய கயிற்றின் தழும்பு, பகவானுடைய எளிமைக்கு ஒரு நினைவுக் குறி.

செப்பு : ஒரு பெண்ணை முன்னிலைப்படுத்திக் கூறுகிறது.

Koviloor Digital Library

6

பொழுது புலர்வதற்கு அடையாளம் சொல்லி, 'இனியாவது எழுந்திரு' என்று, ஒருத்தியைத் துயில் உணர்த்துதல்:

(திருப்பாவையின் முதலாவது பள்ளியெழுச்சிப் பாட்டு)

புள்ளும் சிலம்பினகாண்; புள்ளரையன் கோயில்
வெள்ளை விளிசங்கின் பேரரவம் கேட்டிலையோ?
பிள்ளாய்! எழுந்திராய், பேய்முலை நஞ்சுண்டு,
கள்ளச் சகடம் கலக்கழியக் காலோச்சி,
வெள்ளத் தரவில் துயிலமர்ந்த வித்தினை
உள்ளத்துக் கொண்டு முனிவர்களும் யோகிகளும்
மெள்ள எழுந்து, 'அரி'யென்ற பேரரவம்
உள்ளம் புகுந்து குளிர்ந்து - ஏலோர் எம்பாவாய்

[புள்ளும் - பறவைகளும். சிலம்பினகாண் - கூவத்தொடங்கின. புள்ளரையன் - பறவைகளுக்கெல்லாம் தலைவனான கருடன். வெள்ளை விளிசங்கின் - கூவி அழைக்கிற வெண்ணிறச் சங்கின். பேரரவம் - பேர் ஒலி. கேட்டிலையோ - நீ கேட்கவில்லையோ. பிள்ளாய் - (இங்கே) சிறு பெண்ணே. பேய் - பேய் மகளான பூதனை. கள்ளச் சகடம் -கள்ளத்தனமாக அசுர உருவம் பெற்று வந்த வண்டி. கலக்கு - கட்டு. கால் ஓச்சி - காலால் ஓங்கி உதைத்து. வெள்ளத்து - பாற்கடல் வெள்ளத்திலே. அரவில் - பாம்பில்; சர்ப்ப சயனத்தில்; பாம்பணையில். துயில் - அறிதுயில் என்ற யோக நித்திரையில். வித்தினை - எல்லாவற்றுக்கும் விதையாகிய ஆதிமூலப் பரம்பொருளை. அரி - ஹரி. குளிர்ந்து - குளிர எழுந்திரு.]

இந்த ஆறாவது பாட்டு முதல், பதினைந்தாம் பாட்டு முடியப் பத்துப் பாசுரங்களால், எழுந்திராதவர்களை, எழுந்தவர்கள் எழுப்புகிறார்கள். இந்தப் பாசுரங்களைத் திருப்பாவையின் திருப்பள்ளியெழுச்சிப் பாடல்கள் என்று சொல்லலாம்.

Koviloor Digital Library

புள்ளரையன் - பட்சிராஜன் : கருடன். 'புள்ளரையன் கோயில்' சாதாரணமாகக் கருடன் கோயில் என்று பொருள் தரும். இங்கே கோயில் திருப்பள்ளியெழுச்சிக்கு ஊதின சங்கொலி குறிக்கப்படுவதால் புள்ளரையன் கோயில் என்பதற்கு பகவானுடைய சன்னதி என்று பொருள் கொள்வதே பொருத்தமாகும். ஆகவே புள்ளரையன்கோ என்பதற்குப் பட்சிராஜனுக்குத் தலைவனாகிய பகவான் என்று பொருள் கொண்டு, 'இல்' என்பதற்குச் சந்நிதி என்று பொருள் கொள்ள வேண்டும்' அல்லது புள் என்பதற்கே கருடன் என்று பொருள்கொண்டு, அவனுக்கு அரசனின் கோயில் எனலாம்.

7

கண்ணனிடம் ஈடுபட்டு, மெய்ம்மறந்து கிடக்கும் ஒருத்தியை எழுப்புதல்:

திருப்பாவையின் இரண்டாவது பள்ளியெழுச்சிப் பாட்டு

கீசுகீ சென்றெங்கும் ஆனைச்சாத் தம் கலந்து
பேசின பேச்சரவம் கேட்டிலையோ? பேய்பெண்ணே!
காசும் பிறப்பும் கலகலப்பக் கைபேர்த்து
வாச நறுங்குழல் ஆய்ச்சியர் மத்தினால்
ஓசை படுத்த தயிரரவம் கேட்டிலையோ?
நாயகப் பெண்பிள்ளாய்! நாரா யணன்மூர்த்தி
கேசவனைப் பாடவும்நீ கேட்டே கிடத்தியோ?
தேச முடையாய்! திற - ஏலோர் எம்பாவாய்.

[கீசுகீசு - கீச்சுக்கீச் சென்று. ஆனைச் சாத்தம் - வலியன் குருவிகள். கலந்து பேசின - பேடையுடன் சேர்ந்து கத்துகிற. பேச்சரவம் - குரலின் ஒலியை. காசும் பிறப்பும் - காசுமாலை என்ற அச்சுத்தாலியும், ஆமைத்தாலி என்ற ஆபரணமும். கலகலப்ப - கலகலவென்று ஒலிக்கும்படி. கைபேர்த்து - கைகளை முன்பின்னாக மாறிமாறி அசைத்து. வாச நறுங்குழல் - நறுமணம்

Koviloor Digital Library

கமழும் கூந்தல். நாயகப் பெண்பிள்ளாய் - பெண்களுக்குத் தலைவியாக இருப்பவளே. நாராயணன் மூர்த்தி, கேசவனை - நாராயணனின் அவதார மூர்த்தியாகிய கண்ணனை. கிடத்தியோ - படுத்துக்கொண்டு கிடக்கிறாயோ. தேசம் உடையாய் - தேஜஸ் அல்லது மிக்க ஒளிவாய்ந்த பெண்மணியே!]

ஆனைச்சாத்தம் : கீச்சுகீச்சு என்னும் கீச்சாங்குருவி; '"பொழுது விடிந்ததுகாண், எழுந்திராய்" என்று தம் கீச்சுகீச்சு மொழியில் கீச்சாங்குருவிகளும் பேசுகின்றனவே. அந்தப் பேச்சரவமும் காதில் விழவில்லையா, பேய்ப் பெண்ணே?' என்கிறார்கள். கீச்சாங்குருவியை, 'வலியன்' என்றும் பரத்வாச பட்சி என்றும் கூறுவது உண்டு.

முதல் முதல், "பேய்ப் பெண்ணே" என்று சினந்து பேசியவர்கள் பாட்டினிடையே, 'நாயகப் பெண்ணே!' என்று கொஞ்சி அழைத்து, இறுதியில், 'தேஜஸ் உடையவளே' என்று முகமன் இயம்புகிறார்கள். எப்படியாவது தங்கள் அன்பிற்கு உரியவளை எழுந்திருக்கச் செய்யவேணும் என்பது முக்கிய நோக்கம்.

காசு : பொன்னை அச்சில் இட்டு, அடித்துச் செய்த உருக்கள் கோத்த காசுமாலை. பிறப்பு : பலவகை வடிவமாகச் செய்த உருக்கள் கோத்த மாலை.

8

கண்ணனுடைய அருளுக்கு விசேஷமான தகுதியுள்ள ஒருத்தியை எழுப்புதல்:

(திருப்பாவையின் மூன்றாவது பள்ளியெழுச்சிப் பாட்டு)

கீழ்வானம் வெள்ளென்று; எருமை சிறுவீடு
மேய்வான் பரந்தனகாண்; மிக்குள்ள பிள்ளைகளும்
போவான்போ கின்றாரைப் போகாமல் காத்துன்னைக்
கூவுவான் வந்துநின்றோம். கோது கலமுடைய

Kovilloor Digital Library

பாவாய்! எழுந்திராய்; பாடிப் பறைகொண்டு
மாவாய் பிளந்தானை, மல்லரை மாட்டிய
தேவாதி தேவனைச் சென்றுநாம் சேவித்தால்
ஆவாவென் றாராய்ந் தருள் - ஏலோர் எம்பாவாய்.

[*வெள்ளென்று* - வெளுத்திருக்க. *சிறு வீடு* - சிறிது நேரம் விடும்போது. *மேய்வான் பரந்தனகாண்* - பனிப்புல் மேயப் பரவிச் சென்றன; *மிக்குள்ள பிள்ளைகளும்* - மிகுதியாகவுள்ள பெண்களையும், *போவான் போகின்றாரை* - நீராடப் புறப்பட்டவர்களான. *போகாமல் காத்து* - முன்னமே போகாமல் தடுத்து. *உன்னைக் கூவுவான் வந்து* - உன்னைக் கூப்பிடும் பொருட்டு வந்து. *கோது கலமுடைய பாவாய்!* - கண்ணனால் கொண்டாடப் பெறும் அழகிய பெண்ணே. *பாடிப் பறை கொண்டு* - கண்ணனுடைய குணங்களைப் பாடி; நோன்பிற்கு அவனிடம் பறையை வேண்டிக்கொண்டு. *மாவாய்* - குதிரை வடிவமான அசுரனது வாயை. *மல்லரை மாட்டிய* - கம்ஸனால் ஏவப்பட்ட பெருமல்லர்களையும், துரியோதனனின் நிலவறை மல்லர்களையும் மாளச் செய்தவனும், *ஆ ஆ என்று ஆராய்ந்து* - 'ஐயோ!' என்று இரங்கிக் குறைகளை விசாரித்து.]

கோது கலம் - 'கௌதூஹலம்' என்னும் வடசொல்லின் விகாரம்; இதற்கு ஆசை என்பது பொருள். இங்கே, கண்ணனுடைய ஆசை. கண்ணனுடைய விசேஷ அன்பிற்கு உரியவளை முன்னிட்டுச் சென்றால், கண்ணபிரானின் அருள் எல்லாருக்கும் கிடைக்கும் என்பது குறிப்பு.

எருமை சிறுவீடு மேய்வான் பரந்தனகாண் : அதிகமாகப் பால் கறக்கவேண்டும் என்பதற்காக அதிகாலையில், எருமைகளைச் சிறு தோட்டங்களில் பனிப்புல் மேய விடுவது உண்டு. பிறகு இந்த எருமைகள், ஊர் மாடுகளுடன், வெளியிடங்களில் மேயப்போகும். பனிப்புல் மேயச் சிறிது நேரம் விட்டபின், மேய்ச்சல் காட்டுக்குப் போகுமுன், மாடு கறப்பார்கள். பனிப்புல் மேய்கையைச், 'சிறுவீடு' என்பர்.

Koviloor Digital Library

பறை கொள்ளுதல் : நோன்பிற்கு உரிய உபகரணத்தை வெளிப்படையாகவும், தேவதிதேவனைச் சேவிப்பதை உட்பொருளாகவும் குறிப்பிடுவது.

9

'கண்ணன் வந்தபோது வரட்டும்' என்று தாமதிப்பவளை எழுப்புவது:

(திருப்பாவையின் நான்காவது பள்ளியெழுச்சிப் பாட்டு)

தூமணி மாடத்துச் சுற்றும் விளக்கெரிய,
தூபங் கமழத் துயிலணைமேல் கண்வளரும்
மாமான் மகளே! 'மணிக்கதவம் தாள்திறவாய்;
மாமீர்! அவளை எழுப்பீரோ உம்மகள்தான்
ஊமையோ? அன்றிச் செவிடோ? அனந்தலோ?
ஏமப் பெருந்துயில் மந்திரப் பட்டாளோ?
'மாமாயன், மாதவன், வைகுந்தன்' என்றென்றும்
நாமம் பலவும் நவின்று - ஏலோர் எம்பாவாய்.

[தூமணி மாடத்து - குற்றமில்லாத ரத்தினங்கள் இழைத்துச் செய்த மாளிகையில். தூபம் கமழ - அகில் முதலியவற்றின் மணம் கமழவும். துயில் அணைமேல் - தூங்குவதற்குரிய மென்மையான படுக்கையிலே. மாமான் மகளே - மாமன் மகளே. மணிக்கதவம் தாள் - மணிகளால் ஆகிய கதவின் தாழ்ப்பாளை. மாமீர் - மாமி! அனந்தலோ - சோர்ந்து கிடக்கிறாளோ? ஏமப் பெருந்துயில் மந்திரப் பட்டாளோ? - எழுந்திருக்க முடியாதபடி பெருந் தூக்கத்தில் காவல் இடப்பட்டாளோ?; அன்றி ஏதோ ஒரு பெருந்துயில் மந்திரத்தினால் கட்டுப்பட்டுக் கிடக்கிறாளா? மாமாயன் - பெரிய மாயச் செயல்களை உடையவனே! நாமம் பலவும் நவின்று - பல திருநாமங்களையும் சொல்வதால்.]

மாமீர்! - மரியாதையாகக் கூப்பிடும் பன்மை. **மாமான்:** மாமன் என்பதன் விகாரம். **நவின்று;** (இங்கே) 'நவில' என்று

Koviloor Digital Library

பொருள்படும். 'மாமியே! நாமம் பலவும் நவின்று அவளை எழுப்பீரோ?' என்று சேர்த்துப் பொருள் கூறுவதும் உண்டு.

ஏமப் பெருந்துயில் மந்திரப் பட்டாளோ? : எழுந்திராமல் உறங்கும்படி மந்திரவாதம் பண்ணிக் காவல் இட்டார் உண்டோ? ஏதோ ஒரு பெருந்துயில் மந்திரத்தால் கட்டுப்பட்டுக் கிடக்கிறாளோ? **துயில் மந்திரம் :** இந்நாளில் 'ஹிப்நாடிஸம்' என்றும் 'மெஸ்மரிஸம்' என்றும் சொல்லப் படுகிற வசிய நித்திரையை நினைவூட்டுகிறது. இந்தத் தீத்துயில் மந்திரத்துக்கு எதிர் மந்திரம் போடுவதுபோல், 'மாமாயன், மாதவன், வைகுந்தன்' என்று பல தடவை பகவானுடைய நாமங்களைச் சொல்லுகிறார்கள்.

அனந்தல் : (இங்கே) சோர்ந்து கிடக்கும் ஒருவகை மயக்க நிலை. அனந்தல், துயில், பெருந்துயில் என்ற மூன்று சொற்களுக்கும் உள்ள பொருள் வேற்றுமைகள் நுணுகி நோக்கத்தக்கன.

10

'கண்ணன் காதல்' என்னும் சொர்க்கத்தில் இருக்கும் ஒருத்தியை எழுப்புவது:

(திருப்பாவையின் ஐந்தாவது பள்ளியெழுச்சிப் பாட்டு)

நோற்றுச் சுவர்க்கம் புகுகின்ற அம்மனாய்!
மாற்றமும் தாராரோ வாசல் திறவாதார்?
நாற்றத் துழாய்முடி நாரா யணன்நம்மால்
போற்றப் பறைதரும் புண்ணியனால் பண்டொருநாள்
கூற்றத்தின் வாய்வீழ்ந்த கும்ப கரணனும்
தோற்றும் உனக்கே பெருந்துயில்தான் தந்தானோ?
ஆற்ற அனந்தல் உடையாய்! அருங்கலமே!
தேற்றமாய் வந்து திற - ஏலோர் எம்பாவாய்.

[நோற்றுச் சுவர்க்கம் புகுகின்ற - ஸ்ரீ கிருஷ்ணாநு பவத்துக்கு நோன்பு நோற்று, அந்தச் சுவர்க்கத்தில் மூழ்கிப்

Koviloor Digital Library

பரவசமாகியிருக்கும். அம்மனாய் - தலைவியே!; நாயகப் பெண்மணியே! மாற்றமும் - ஒரு மறுமொழியும். நாற்றத் துழாய்முடி நாராயணன் - நறுமணமுள்ள திருத்துழாயை முடியில் அணிந்திருக்கிற ஸ்ரீமந் நாராயணன். பண்டு ஒரு நாள் - முன்னொரு காலத்தில். கூற்றத்தின் வாய்வீழ்ந்த - யமன் வாயில் விழுந்த. தோற்றும் - தோற்றுப்போய். பெருந்துயில்தான் - பெரிய தூக்கத்தைத்தான். ஆற்ற அனந்தல் உடையாய் - மிகவும் சோம்பல் உடையவளே. அருங்கலமே - கிடைத்தற்கரிய ஆபரணமாக எங்களுக்கு வாய்த்திருப்பவளே. தேற்றமாய் வந்து - தெளிவுடன் வந்து.]

'வாசல் செம்மினால் வாயும் செம்ம வேணுமோ?' என்பது கேள்வி. 'செவிகுளிர மறுமொழி சொல்லா விட்டாலும் கண்குளிர உன்னைப் பார்க்கும்படி, நீ கதவைத் திறக்கலாகாதா?' - இத்தகைய கேள்வியில் தோழிகளின் கொஞ்சும் நெஞ்சு, இனிது புலனாகிறது.

இப்பாட்டிலுள்ள நகைச்சுவையும் கவிச்சுவையும் எவ்வளவு ரசமாக அமைந்திருக்கின்றன, பாருங்கள்! தோற்றவர்களின் பொருளை, வென்றவர் கைப்பற்றிக் கொள்வதுபோல், கும்பகர்ணன் நித்திரையை இவள் பற்றிக்கொண்டதாகத் தோழிகள் பரிகசிக்கிறார்கள்.

'அருங்கலமே!' என்ற அழைப்பிலும், தோழியருக்கு இவள் மீதுள்ள நட்புக்காதல் நன்கு புலனாகும். இவள், அவர்கள் கூட்டத்தில் போய்க் கலந்துகொண்டால், அது ஓர் அழகான நவரத்தின மாலைக்கு நடுநாயக ரத்தினம் ஒன்றை வைத்து அழுத்தியதுபோலத் தோன்றும் என்பது குறிப்பு. ராமனைப் 'புண்ணியன்' என்றது, 'ராமோ விக்ரஹவாந் தர்ம:' என்ற கருத்தைத் தழுவியது.

Koviloor Digital Library

11

'கண்ணன் ஊருக்கு ஒருபிள்ளை' என்பதுபோல் 'ஊருக்கு ஒருபெண்' என்று பெயர் பெற்றிருக்கும் செல்வியை எழுப்புவது:

(திருப்பாவையின் ஆறாவது பள்ளியெழுச்சிப் பாடல்)

கற்றுக் கறவைக் கணங்கள் பலகறந்து
செற்றார் திறலழியச் சென்று செருச்செய்யும்
குற்றமொன் றில்லாத கோவலர்தம் பொற்கொடியே!
புற்றர வல்குல் புனமயிலே! போதராய்.
சுற்றத்துத் தோழிமார் எல்லாரும் வந்துநின்
முற்றம் புகுந்து, முகில்வண்ணன் பேர்பாட,
சிற்றாதே பேசாதே செல்வப்பெண் டாட்டிநீ
எற்றுக் குறங்கும் பொருள்? - ஏலோர் எம்பாவாய்.

(கற்றுக்கறவை - கன்றுகளோடு கூடிய கறவைப் பசுக்களின். கணங்கள் பல கறந்து - பல கூட்டங்களைக் கறந்து. செற்றார் திறல் - பகைவர் வலிமை. அழியச் சென்று - அழியும்படி தைரியமாக அவர்கள் இருந்த இடங்களில் போய். செருச்செய்யும் - போர் புரிகின்றவர்களும். கோவலர்தம் பொற்கொடியே - கோபாலர்களின் குடியில் தோன்றிய பொன்கொடி போன்றவளே! புற்றரவு அல்குல் - புற்றிலுள்ள பாம்பின் படம்போன்ற அல்குலும். புனமயிலே - காட்டில் வாழும் மயிலின் சாயலும். போதராய் - எழுந்து வருவாய். செல்வப் பெண்டாட்டி - செல்வமும் பெண்மையும் வாய்க்கப் பெற்றவளே. முற்றம் புகுந்து - முன் வாசலிலே வந்து. முகில் வண்ணன் பேர்பாட - மேகம்போல் வடிவழகும் வண்மையும் உள்ள கண்ணனது திருநாமத்தைப் பாட. சிற்றாதே, பேசாதே - உடம்பு அசையாமலும், நாக்கு அசையாமலும். ஏற்றுக்கு உறங்கும் பொருள் - என்ன பயன் கருதியோ உறங்குகின்ற இந்தச் செய்கை?)

கற்றுக்கறவை : இளமை மாறாமல் இருக்கிற கறவைப் பசுக்கள் என்றும் பொருள்படும். செல்வப் பெண்டாட்டி: 'எங்கள் செல்வம்போல் இருக்கிற பெண்ணே' என்றும் பொருள்படும்.

Koviloor Digital Library

கோவலர்தம் பொற்கொடியே : சீதை, ஜனக குலத்திற்குப் புகழ் தந்ததுபோல், இவள் கோவலர் குடியை விளக்கம் செய்பவள் என்பது குறிப்பு. பொற்கொடி என்பதும், புன மயில் என்பதும் இவளுடைய சமுதாய அழகை உணர்த்தும்! புனமயில் என்பதில் அந்தக் காட்டுப் பகுதியை மயில் அழகு செய்வதுபோல், பெண்மையென்ற சோலையை இவள் சிறப்பிக்கின்றாள் என்பது குறிப்பு.

முகில் வண்ணன் : மேகம் மயிலைக் களிக்கச் செய்து, கூத்தாட வைப்பதுபோல், இவளைக் களிப்பித்துக் குதூகலம் அடையச் செய்பவன்.

12

கண்ணனைப் பிரியாமல் இருக்கும் செல்வனுடைய தங்கையைத் துயிலெழுப்புவது:

(திருப்பாவையில் ஏழாவது பள்ளியெழுச்சிப் பாட்டு)

கனைத்திள ..ற்றெருமை கன்றுக்கு இரங்கி
நினைத்து முலைவழியே நின்றுபால் சோர
நனைத்தில்லம் சேறாக்கும் நற்செல்வன் தங்காய்!
பனித்தலை வீழநின் வாசல் கடைபற்றிச்
சினத்தினால் தென் இலங்கைக் கோமானைச் செற்ற
மனத்துக் கினியானைப் பாடவும்; நீ வாய்திறவாய்!
இனித்தான் எழுந்திராய்; ஈதென்ன பேர் உறக்கம்?
அனைத்தில்லத் தாரும் அறிந்து - ஏலோர் எம்பாவாய்.

[கனைத்து - பால் கறப்பார் இல்லாமையால் முலை கடுத்துக் கதறிக் கொண்டு. நினைத்து - கன்றை நினைத்துக் கொண்டு, அந்த நினைவினால். நின்று பால் சோர - இடைவிடாமல் பால் சொரிய. நனைத்து இல்லம் சேறாக்கும் - வீட்டை நனைத்துச் சேறாக்குகின்ற. நற்செல்வன் - நல்ல செல்வத்தை உடையவன். பனி தலை வீழ - எங்கள் தலையில் பனி விழ. நின் வாசல் கடை பற்றி - உன் தலைவாசலைப் பற்றிக்கொண்டு.

Koviloor Digital Library

சினத்தினால் - தன்னுடைய கோபமாகிய தர்மாவேசத்தினால். தென் இலங்கைக் கோமானை - தென் திசையிலுள்ள இலங்கைக்கு அரசனான இராவணனை. செற்ற - கொன்று ஒழித்த. மனத்துக்கு இனியானை - நினைப்பவர் உள்ளத்திற்கு இனியனாகிய ராம பிரானை. நீ வாய் திறவாய் - நீ வாய் திறந்து பேசாமல் இருக் கிறாயே. அனைத்து இல்லத்தாரும் - எல்லா வீட்டுக்காரர்களும். அறிந்து - துயிலுணர்ந்த பின்பும். ஈது என்ன பேர் உறக்கம் - இது என்ன ஓயாத உறக்கம். இனித்தான் - இனியாவது.]

'மேலே பனி வெள்ளம் இட, கீழே பால் வெள்ளம் இட, உள்ளத்திலே கண்ணன் காதல் வெள்ளம் இட, நாங்கள் தெப்பம் ஒன்றைப் பற்றிக் கொள்பவர்களைப்போல், உன்னுடைய தலைவாசல் படியின் மேற்கட்டையைப்பற்றி நிற்கிறோமே!' என்பது ஓர் அருமையான உணர்ச்சிச் சித்திரம். நீ வந்து எங்களுக்குத் துணை புரியவேண்டும்' என்பது குறிப்பு.

இப்பாட்டின் முதல் இரண்டரை அடிகள், இவள் தமையனுடைய செல்வச் சிறப்பைக் கூறுகின்றன. எனினும் இவனது நற்செல்வம், கண்ணனது நட்பே. அந்தப் பாக்கியத்தால், 'பால் பாக்கியம்' முதலான பாக்கியங்களும் பெருகுகின்றன என்பது குறிப்பு.

மனத்துக்கு இனியான்: கல்யாண குணங்களால் உள்ளங்களை ஈடுபடுத்துகிறவன்; 'சத்துருக்களுக்கும் கண்ணநீர் (கண்ணீர்) பாயும் அவன்.'

13

தன் கண் அழகை நோக்கி, 'கண்ணன் தானே வருவான்' என்று படுத்திருப்பவளை எழுப்புதல்:

(திருப்பாவையின் எட்டாவது பள்ளியெழுச்சிப் பாட்டு)

புள்ளின்வாய் கீண்டானை, பொல்லா அரக்கனைக்
கிள்ளிக் களைந்தானைக் கீர்த்திமை பாடிப்போய்
பிள்ளைகள் எல்லாரும் பாவைக் களம்புக்கார்;
வெள்ளி எழுந்து, வியாழம் உறங்கிற்று;

Koviloor Digital Library

புள்ளும் சிலம்பினகாண்; போதரிக் கண்ணினாய்!
குள்ளக் குளிரக் குடைந்துநீ ராடாதே,
பள்ளிக் கிடத்தியோ? பாவாய்! நீ நன்னாளால்
கள்ளம் தவிர்ந்து கலந்து - ஏலோர் எம்பாவாய்

[புள்ளின்வாய் - பறவையின் உருவத்தோடு வந்த பகாசுரனுடைய வாயை. கீண்டானை - பிளந்து எறிந்தவனை. கிள்ளிக் களைந்தானை - கிள்ளி எறிந்து வம்ச நாசம் செய்தவனை. கீர்த்திமை - கீர்த்தி கூறும் வீர சரிதங்களை. பிள்ளைகள் எல்லாரும் - நம்மில், பருவத்தில் சிறியவர் உள்பட எல்லாச் சிறுமியர்களும். பாவைக் களம் புக்கார் - நோன்பு நோற்கும் இடத்திற்குப் போய்ச் சேர்ந்தார்கள். வெள்ளி எழுந்து - சுக்கிரன் உதயமாகி. வியாழம் உறங்கிற்று - பிரகஸ்பதி அஸ்தமித்து விட்டது. புள்ளும் சிலம்பினகாண் - கூட்டிலிருந்து வெளிப்பட்ட பறவைகளும், இரைதேடுவதற்காகக் கூவிக்கொண்டு போயின. போது அரிக்கண்ணினாய் - தாமரைப் பூவையும் மானையும் ஒத்த கண்ணழகு வாய்ந்தவளே. குள்ளக் குளிரக் குடைந்து நீராடாதே - உடம்பு மிகக் குளிர்ந்துபோக, துளைந்து விளையாடி நீராடாமல். பள்ளிக் கிடத்தியோ? - படுக்கையில் கிடப்பாயோ. நன்னாள் - இந்த நல்ல நாளில். கள்ளம் தவிர்ந்து - (கண்ணனைத் தனியே நினைக்கிற) இக் கள்ளத்தனத்தை விட்டு. கலந்து - எங்களோடு கலந்து.]

• **பொல்லா அரக்கனைக் கிள்ளிக் களைந்தான்:** பொல்லாத பெரும் தீமைகளையும் அநாயாசமாக அழித்துவிடுகிறது தெய்வசக்தி என்பது குறிப்பு.

வெள்ளி எழுந்து வியாழம் உறங்கிற்று : ஆண்டாள் வாழ்ந்த காலத்தில் வெள்ளி எழுதலோடு வியாழன் அஸ்தமித்த நிகழ்ச்சியும் ஏற்பட்டது என்றும், அதை ஆண்டாள் குறிப்பிடுகிறாள் என்றும் கருதுவது உண்டு.

குள்ளக்குளிர : 'செக்கச் சிவந்து', 'கன்னங்கறுத்து' என்பது போன்ற சொற்றொடர். மார்கழி மாதத்தில் அதிகாலையில் நீராடினால் குள்ளக் குளிரும் என்பது அநுபவம்.

Koviloor Digital Library

14

தங்களை முன்னம் எழுப்புவதாகச் சொல்லி, அதை மறந்து உறங்குகிறவளை உணர்த்துதல்:

(திருப்பாவையின் ஒன்பதாவது பள்ளியெழுச்சிப் பாட்டு)

உங்கள் புறங்கடைத் தோட்டத்து வாவியுள்
செங்கழுநீர் வாய்நெகிழ்ந்து ஆம்பல்வாய் கூம்பினகாண்
செங்கல் பொடிக்கூறை வெண்பல் தவத்தவர்,
தங்கள் திருக்கோயில் சங்கிடுவான் போகின்றார்;
எங்களை முன்னம் எழுப்புவான் வாய்பேசும்
நங்காய்! எழுந்திராய், நாணாதாய்! நாவுடையாய்!
சங்கொடு சக்கரம் ஏந்தும் தடக்கையன்
பங்கயக் கண்ணானைப் பாடு - ஏலோர் எம்பாவாய்.

[வாவியுள் - தடாகத்திலே. செங்கழுநீர் - செங்கழுநீர் மலர்கள். வாய்நெகிழ்ந்து - மலர்ந்து. கூம்பினகாண் - வாய் குவிந்தன. செங்கல்பொடிக் கூறை - காவிப்பொடியில் தோய்த்த காஷாய உடை தரித்தவர்களும். வெண்பல் தவத்தவர் - தாம்பூலம் தரியாமல் வெண்ணிறமான பற்களை உடையவர்களுமாகிய துறவிகள். சங்கு இடுவான் - சங்கு இடுவதற்காக. வாய்பேசும் நங்காய் - வாயால் சொல்லி, செயலில் மறந்துபோன நங்கையே! நாணாதாய், நாவுடையாய் - 'சொன்னபடி செய்தோம் இல்லையே' என்ற நாணமும் இல்லாதவளே! இனிமையாகப் பேசவல்ல நாக்கை உடையவளே. தடக்கையன் - பெரிய கைகளை உடையவன். பங்கயக் கண்ணானை - தாமரை போன்ற திருக்கண்களை உடையவனான கண்ணபிரானை.]

புறங்கடை - புழைக்கடை. 'உங்கள் புறங்கடை': தங்களோடு அவளைச் சேர்த்துக்கொள்ளாமல் பேசுவது போலப் பேசுவது. எழுப்புவதாகச் சொன்னவளை எழுப்ப வேண்டியிருக்கிறதே என்ற ஆத்திரத்தை இது வெளியிடுகிறது.

செங்கல் பொடிக்கூறை வெண்பல் தவத்தவர் : பண்டாரங்கள். இவர்களுடைய, 'கோயிலைத் திருக்கோயில்' என்று கூறுவது கவனிக்கத் தக்கது. இது ஆண்டாளின் பரந்த

Koviloor Digital Library

உள்ளத்தைக் காட்டுகிறது எனலாம். இந்தத் 'தவத்த'வரை வைணவத் துறவிகளாகவும் கருதலாம்.

சங்கு இடுவான் : (1) சங்கு ஊதுவதற்காக; (2) கதவில் திறவுகோலை இடுவதற்காக. கோவில்களில் கதவைத் திறக்கும்போது மங்களச் சங்கு போன்ற மங்கள வாத்தியங்கள் முழங்குவது உண்டு. இந்தச் சங்கு பின்பு நிகழும் பூஜை அல்லது ஆராதனைக்கும் உபலக்ஷணமாகும். 'சங்கிடுவான் போதந்தார்' என்றும் பாடம். போதந்தார் - வந்தார்; (இறந்தகாலம்)

15

உறங்கும் நங்கையும் உணர்த்தும் நங்கையரும்: ஒரு *ரசமான சம்பாஷணை:*

(திருப்பாவையின் பத்தாவது பள்ளியெழுச்சிப் பாட்டு)

'எல்லே இளங்கிளியே! இன்னம் உறங்குதியோ?'
'சில்லென் றழையேன்மின், நங்கைமீர்! போதர்கின்றேன்'
'வல்லை, உன்கட்டுரைகள்! பண்டேஉன் வாயறிதும்!'
'வல்லீர்கள் நீங்களே, நானேதான் ஆயிடுக!'
'ஒல்லைநீ போதராய், உனக்கென்ன வேறுடையை?
'எல்லோரும் போந்தாரோ?' 'போந்தார், போந்தெண்ணிக்கொள்;
வல்லானை கொன்றானை, மாற்றாரை மாற்றழிக்க
வல்லானை, மாயனைப் பாடு - ஏலோர் எம்பாவாய்.

[எல்லே - என்ன. உறங்குதியோ - உறங்குகிறாயோ என்று எழுப்புகிறவர்கள் கேட்க, எழுப்பப்பெற்றவள், நங்கைமீர் - பெண்களில் சிறந்தவர்களே. சில்லென்று அழையேன்மின் - சிலுசிலுவென்று கூப்பிடாதேயுங்கள். போதர்கின்றேன் - (இதோ) வந்து விடுகிறேன். வல்லை - வல்லமை உள்ளவள். பண்டே - முன்னமே. உன்வாய் அறிதும் - உன் வாயை அறிவோம். வல்லீர்கள் - சாமர்த்தியசாலிகள். நானேதான் ஆயிடுக - நீங்கள் சொல்லுகிறபடி நான்தான் சாமர்த்தியசாலியாக இருந்தாலும் இருக்கட்டும். என்ன வேறுடையை - தனியே வேறு என்ன அதிசயம்

Koviloor Digital Library

இருக்கிறது. போந்தாரோ - வந்துவிட்டாரோ. போந்தார் - வந்துவிட்டார்கள். போந்து - வந்து. வல்ஆனை - குவலயாபீடம் என்னும் வலிய யானையை. மாற்றாரை மாறு - எதிரிகளை எதிராக நின்று. ஒல்லை - விரைவாய். போதராய் -எழுந்து வருவாய்.]

இப் பாசுரம் முழுவதும் வினா விடையாக அமைந்திருக்கிறது. 'புள்ளும் சிலம்பின காண்' என்று தொடங்கும் ஆறாவது பாட்டிலிருந்து பதினான்காவது பாட்டளவும் உள்ள ஒன்பது பாசுரங்களும் துயில் எழுப்பு வோரின் பாசுரங்கள் என்பது வெளிப்படை. அப்பாசுரங் களுக்கும் இந்தப் பதினைந்தாவது பாசுரம்போல் வினா விடையாகக் குறிப்பிட்டு, வியாக்கியானம் செய்வதும் உண்டு.

'நானேதான் ஆயிடுக!' : பிறருக்கு உரிய குற்றத்தையும் தன் குற்றமாக ஏற்றுக்கொள்ளும் ஸ்ரீ வைஷ்ணவ லட்சணம் இதன் புதைபொருள். 'இல்லாத குற்றத்தையும் சிலர், ''உண்டு'' என்றால், ''இல்லை'' செய்யாதே, இசைகையிறே வைஷ்ணவ லட்சணம்' என்பர் பெரியவாச்சான் பிள்ளை.

'இளங்கிளியே!' : உறங்குகிறவளின் குரல் இனிமையைக் குறிப்பிடுகிறது.

16

நந்தகோபரின் மாளிகை காப்பானையும், வாசல் காப்பானையும் நோக்கி, கதவைத் திறக்கும்படி வேண்டுவது:

நாயக னாய்நின்ற நந்தகோ பனுடைய
கோயில்காப் பானே! கொடித்தோன்றும் தோரண
வாயில்காப் பானே! மணிக்கதவம் தாள்திறவாய்
ஆயர் சிறுமிய ரோமுக்கு அறைபறை
மாயன் மணிவண்ணன் நென்னலே வாய்நேர்ந்தான்;
தூயோமாய் வந்தோம், துயிலெழப் பாடுவான்;
வாயால் முன்னமுன்னம் மாற்றாதே அம்மா! நீ
நேய நிலைக்கதவம் நீக்கு - ஏலோர் எம்பாவாய்.

[நாயகனாய் நின்ற - தலைவனாயிருக்கும். கோயில் - அரண்மனை. மணிக்கதவம் - அழகிய கதவின் அல்லது மணிகள்

Koviloor Digital Library

கட்டிய கதவின். சிறுமியரோமுக்கு - சிறுமியரான எங்களுக்கு. அறைபறை - ஒலிக்கின்ற பறையைத் தருவாயாக. நென்னலே - நேற்றே. வாய்நேர்ந்தான் - வாக்களித்திருக்கிறான். துயில் எழப் பாடுவான் - அவன் தூக்கத்தை விட்டு எழுந்திருக்குமாறு பள்ளியெழுச்சி பாடுவதற்கு. தூயோமாய் - களங்கம் இல்லாதவராக. அம்மா - ஸ்வாமி. முன்ன முன்னம் - முதல் முதலில். மாற்றாதே - மறுத்துவிடாதே. நேய நிலைக்கதவம் - நேசமாய் ஒன்றோடொன்று சேர்ந்திருக்கும் கதவை. நீக்கு - திறப்பாயாக.]

திருப்பாவையின் ஆறாவது பாசுரம் முதல் பத்துப் பாசுரங்களால் பத்துப் பெண்களை, முன்னமே எழுந்தவர்கள் எழுப்பினார்கள். இதை ஆய்ப்பாடியிலுள்ள பெண்களை எழுப்பியதற்கு உபலட்சணமாகக் கருதலாம்.

இந்தப் பதினாறாவது பாசுரம் முதல், ஏழு பாசுரங்களில் சிறுமியர்கள் எல்லோரும் ஒரே கூட்டமாகத் திரண்டு, கண்ணனை எழுப்ப விரும்பி, மாளிகையில் உள்ளவர் களையும் கண்ணனையும் துயிலெழுப்பப் போகிறார்கள். வெளிப்புறத்து வாசலைக் காப்பவனையும், உட்புறத்து வாசலைக் காப்பவனையும் முதல் முதல் கூப்பிடுகிறார்கள்.

'கோயில் காப்பானே!' என்றும், 'வாசல் காப்பானே!' என்றும் தொழிலை இட்டு அழைப்பது கவனிக்கத்தக்கது. வேறு வகையாக அழைக்க அறியாதவர்கள் இச் சிறுமியர்கள். அறியாச் சிறுவர் சிறுமியரின் மனநிலை, தொண்டர்களின் குழந்தை உள்ளத்திற்கு ஓர் அறிகுறி. தொண்டு காரணமாக வரும் பெயரே ஆத்மாவுக்கு உகந்த பெயராகும் என்பதும் நோக்கத்தக்கது. இதனால்தான் விப்பிரநாராயணர் தொண்டரடிப் பொடியானார்.

17

கண்ணனுடைய தந்தையையும் தாயையும் அண்ணனை யும் எழுப்பிக் கண்ணனையும் எழுப்புவது:

அம்பரமே, தண்ணீரே, சோறே அறஞ்செய்யும்
எம்பெருமான் நந்தகோபாலா! எழுந்திராய்;

Koviloor Digital Library

கொம்பனார்க் கெல்லாம் கொழுந்தே குலவிளக்கே!
எம்பெரு மாட்டி! யசோதாய்! அறிவுறாய்;
அம்பரம் ஊடறுத் தோங்கி உலகளந்த
உம்பர்கோ மானே! உறங்கா தெழுந்திராய்;
செம்பொற் கழலடிச் செல்வா! பலதேவா!
உம்பியும் நீயும் உணர்ந்து - ஏலோர் எம்பாவாய்

[அம்பரமே - ஆடைகளையே. சோறே - சோற்றையே. அறம்செய்யும் - தருமம் செய்கின்ற. கொம்பு அனார்க்கு எல்லாம் - பூங்கொம்பு போன்ற எங்களுக்கெல்லாம். குலவிளக்கே - புகுந்த குலத்துக்கு மங்களதீபம் போன்றவனே. அறிவுறாய் - துயிலுணர்ந்து எழுந்திருப்பாயாக. அம்பரம் ஊடறுத்து ஓங்கி - ஆகாயமெல்லாம் இடம் அறச் செய்து ஓங்கி. செம்பொற் கழல் அடி - செம்பொன்னால் செய்த வீரக்கழல் விளங்கும் திருவடிகளை. உம்பியும் நீயும் - உன் தம்பியான கண்ணனும் நீயும். உணர்ந்து - துயில் உணர்வீராக.]

கண்ணனைக் கொழுந்து என்று குறிப்பிடுகிறார்கள். செடியின் அடிப்பக்கத்தில் ஒரு கேடு வந்தாலும் கொழுந்து வாடும். தாழ்ந்தவர்களுக்கு ஒரு குறை வந்தால், கண்ணன் முகத்திலே வாட்டத்தைக் காணலாம் என்பது குறிப்பு.

அம்பரம் ஊடறுத்து ஓங்கி உலகளந்து : 'உறங்குகிற ப்ரஜை (குழந்தை)யைத் தழுவிக்கொண்டு கிடக்கும் தாயைப் போலே' எல்லோரையும் தழுவி, அருள் செய்யும் தாயுள்ளம் இறைவனுக்கு உரியது, என்பதை உலகம் அளந்த கதையும், அந்தர்யாமியாக இறைவன் இருக்கிறான் என்ற தத்துவமும் புலப்படுத்துகின்றன.

'செம்பொற் கழலடிச் செல்வா! பலதேவா!': லட்சுமணன், ராமனுக்குப் பின்பிறந்து பணி செய்ததுபோல், பலதேவன், கண்ணனுக்கு முன்பிறந்து, பணிபுரியும் பேறுபெற்றான் என்பர். இவன் பெற்ற கைங்கரியச் செல்வத்தைக் குறிப்பாக வெளியிடுவது, 'செல்வா!' என்ற அழைப்பு.

Koviloor Digital Library

'உம்பியும் நீயும் உறங்கேலோர் எம்பாவாய்' என்பது சாதாரணமாக வழங்கும் பாடம். இது தவறு என்பது திருப்பாவைப் பாடல்களின் அமைப்பு முறையை ஊன்றிக் கவனித்தால் புலனாகிவிடும்.

18

நப்பின்னைப் பிராட்டியைத் துயில் உணர்த்துவது:

(ஸ்ரீ ராமனுஜர் உகந்த பாசுரம்)

உந்து மதகளிற்றன், ஓடாத தோள்வலியன்,
நந்தகோ பாலன் மருமகளே, நப்பின்னாய்!
கந்தம் கமழும் குழலீ! கடை திறவாய்;
வந்தெங்கும் கோழி அழைத்தனகாண்; மாதவிப்
பந்தல்மேல் பல்கால் குயிலினங்கள் கூவினகாண்;
பந்தார் விரலி! உன் மைத்துனன் பேர்பாடச்
செந்தா மரைக்கையால் சீரார் வளை ஒலிப்ப
வந்து திறவாய், மகிழ்ந்து - ஏலோர் எம்பாவாய்.

[உந்து மதகளிற்றன் - மதநீரைப் பெருக்குகின்ற யானையை உடையவனும், அல்லது அந்த யானைபோலப் பலமுடையவனும். ஓடாத தோள்வலியன் - எதிரிகளைக் கண்டு பின்வாங்காத தோள் வலிமை உடையவனுமாகிய. கந்தம் கமழும் குழலீ - நறுமணம் கமழும் கூந்தலையுடையவளே. கடை - கதவு. கோழி அழைத்தனகாண் - கோழிகள் கூவின. மாதவிப் பந்தல்மேல் - குருக்கத்திச் செடிகளாலான பந்தலின்மேல். குயிலினங்கள் - குயிலின் கூட்டங்கள். பந்து ஆர்விரலி - பந்து பொருந்திய கைவிரல்களை உடையவளே. உன் மைத்துனன் - உன் கணவனான கண்ணனுடைய. சீரார் வளை ஒலிப்ப - சிறப்புப் பொருந்திய கைவளைகள் குலுங்கும்படி.]

நப்பின்னாய்!: ராதைக்கு வடநாடு அளித்திருக்கும் பதவியைத் தமிழ் இலக்கியம், நப்பின்னைக்கு அளித்திருக்கிறது. இப்பிராட்டியை முன்னிட்டுச் சிறுமியர் கண்ணனை அடைவது குறிப்பு.

Koviloor Digital Library

இது பிரசித்தமான திருப்பாவைப் பாசுரங்களிலும் ஒரு பிரசித்தமான பாசுரம். ஸ்ரீ இராமனுஜர் திருப்பாவையை ஓதிய வண்ணம், தமது துறவறத்திற்கு இணங்கப் பிட்சைக்கு எழுந்தருளுவது வழக்கம். ஒருநாள் இவர், தமது ஆசிரியரான பெரிய நம்பியின் திருமாளிகை வாசலில் நின்று, இப் பாசுரத்தைப் பாட நேர்ந்தது. கதவு தாழிட்டிருந்தது. பெரிய நம்பியின் மகளான அத்துழாய் உள்ளே இருந்து வந்து, கதவைத் திறந்தாள். அதே சமயம் ஸ்ரீ ராமனுஜர், 'செந்தாமரைக் கையால் சீரார் வளை ஒலிப்ப வந்து திறவாய்...' என்ற இறுதி அடிகளை ஓத நேர்ந்தது. அவளை நப்பின்னையாகவே கருதி, மெய்ம்மறந்து வணங்கினார். அத்துழாய் திடுக்கிட்டாள். பெரிய நம்பியோ, 'உந்து மதகளிறு அனுசந்தானம்' என்றார்.

19

நப்பின்னையை மறுபடியும் துயில் உணர்த்துவது; கண்ணனையும் எழுப்புவது:

குத்து விளக்குஎரியக் கோட்டுக்காற் கட்டில்மேல்
மெத்தென்ற பஞ்ச சயனத்தின் மேல்ஏறிக்
கொத்துஅலர் பூங்குழல் நப்பின்னை கொங்கைமேல்
வைத்துக் கிடந்த மலர்மார்பா! வாய்திறவாய்;
மைத்தடங் கண்ணினாய்! நீஉன் மணாளனை
எத்தனை போதும் துயில்எழ ஒட்டாய்காண்,
எத்தனை யேலும் பிரிவுஆற்ற கில்லாயால்;
தத்துவம், அன்று தகவு ஏலோர் எம்பாவாய்.

(கோட்டுக்கால் கட்டில்மேல் - யானைத் தந்தத்தால் செய்த கால்களையுடைய கட்டிலில். மெத்தென்ற - மெத்தென்று மிருது வாயிருக்கும். பஞ்ச சயனத்தின்மேல் ஏறி - பஞ்சுமெத்தையின் மேல் ஏறி. கொத்து அலர் பூங்குழல் - கொத்துக் கொத்தாக மலர்த்தியிருக்கும் பூக்களை அணிந்த கூந்தலையுடைய. நப்பின்னை கொங்கைமேல் வைத்துக் கிடந்த மலர் மார்பா - நப்பின்னைப் பிராட்டியைத் தன்மீது அணைத்துக்கொண்டு உறங்குகின்ற பரந்த மார்பை யுடையவனே. மைத்தடங் கண்ணினாய் - அஞ்சனம் தீட்டிய விசாலமான கண்களையுடைய

Koviloor Digital Library

நப்பின்னையே! எத்தனை போதும் - எவ்வளவு நேரமானாலும். துயில்எழ ஒட்டாய்காண் - துயில் உணர்ந்து எழுந்திருக்கச் சம்மதியாமல் இருக்கிறாய். எத்தனையேலும் - ஒருகணம் என்றாலும். பிரிவு ஆற்றகில்லாய் - பிரிவைப் பொறுக்கும் வல்லமையற்றவளாய் இருக்கிறாய். தத்துவம் அன்று தகவு - இப்படிச் செய்வது உன் ஸ்வரூபத்திற்கும் ஒத்ததில்லை; உன் ஸ்வபாவத்திற்கும் ஒத்தவில்லை.)

முந்திய பாட்டில் நப்பின்னையை எழுப்பினார்கள் அல்லவா? பிராட்டியை முன்னே போகாமல் கண்ணன் தடுக்க, ஆய்ச்சியர் மீண்டும் கண்ணனைக் கூப்பிடுகிறார்கள். பிராட்டியின் விருப்பத்திற்கு இணங்கி, அவன் வாய் திறவாமல் இருக்க, இவர்கள் கண்ணனை எழுப்புமாறு மீண்டும் நப்பின்னையை வேண்டுகிறார்கள்.

பஞ்சசயனம் : பஞ்சு, பட்டு, மென்மையான கம்பளம், மலர், தளிர் என்ற ஐந்து பொருள்களால் செய்த படுக்கை என்றும் அழகு, குளிர்ச்சி, மென்மை, பரிமளம், வெண்மை என்ற ஐந்து அம்சங்களையும் கொண்ட படுக்கை என்றும் கூறுவது உண்டு.

தத்துவம் அன்று தகவு : தத்துவத்தை, 'புருஷகாரபாவம்' என்றும் தகவு என்ற ஸ்வபாவத்தை, 'க்ருபை' என்றும் கொள்ள வேண்டும்.

20

'இப்போதே எம்மை நீராட்டு' என்று நப்பின்னையையும், அதற்கு முன் கண்ணனையும் துயில் எழுப்புதல்:

முப்பத்து மூவர் அமரர்க்கு முன்சென்று
கப்பம் தவிர்க்கும் கலியே! துயில்எழாய்;
செப்பம் உடையாய்! திறல்உடையாய்! செற்றார்க்கு
வெப்பம் கொடுக்கும் விமலா! துயில்எழாய்;
செப்புஅன்ன மென்முலைச் செவ்வாய்ச் சிறுமருங்குல்
நப்பின்னை நங்காய்! திருவே! துயில்எழாய்;
உக்கமும் தட்டொளியும் தந்துஉன் மணாளனை
இப்போதே எம்மைநீர் ஆட்டு - ஏலோர் எம்பாவாய்.

Koviloor Digital Library

[முன்சென்று - துன்பம் வருவதற்கு முன்னமே அவர்கள் நினைத்த இடத்திற்குச் சென்று. கப்பம் தவிர்க்கும் - அவர்களுடைய நடுக்கத்தைத் தடுக்கின்ற. கலியே - மிடுக்குள்ள கண்ணனே. செப்பம் உடையாய், திறல் உடையாய் - பக்தர்களைக் காக்கவும் தீமையை அழிக்கவும் வல்ல நேர்மையும் வல்லமையும் வாய்ந்தவனே. செற்றார்க்கு - பகைவர்களுக்கு. வெப்பம் கொடுக்கும் - பயமாகிய ஜ்வரத்தைக் கொடுக்கின்ற. விமலா - பரிசுத்த சுபாவம் உள்ளவனே. செப்பு அன்ன மென்முலை - பொன்கலசம் போன்றனவாய் மென்மையான ஸ்தனங்களையும். செவ்வாய் - பவளச் செவ்வாயையும். சிறுமருங்குல் - நுண்ணிய இடையையும் உடைய. திருவே - பெரிய பிராட்டியராகிய மகா லட்சுமி போன்றவளே. உக்கமும் தட்டொளியும் தந்து - எங்கள் நோன்பிற்கு வேண்டிய விசிறியும் கண்ணாடியும் தந்து. உன் மணாளனை - உன் மணவாளனாகிய கண்ணபிரானையும் தந்து.]

முந்திய பாட்டில் சிறுமியர், தங்கள் ஆத்திரம் தோன்ற நப்பின்னைப் பிராட்டியைக் குறை கூறத் துணிந்தார்கள். பிராட்டிக்கோ அதனால் சிறிதும் வருத்தமில்லை. பெருமான் திருவுள்ளம் அறிந்து, விண்ணப்பம் செய்யவேண்டும் என்று, தான் பேசாமல் இருந்தாள். சிறுமியரோ, ஆத்திரமாக மீண்டும் கண்ணனையே எழுப்பிப் பார்ப்போம் என்று கருதுகிறார் கள். கண்ணனோ வாய் திறக்கவில்லை. 'ஒகோ! நப் பின்னைப் பிராட்டியை நாம் குற்றம் சொல்லத் துணிந்தோமே, அதனால் கண்ணனுக்குக் கோபம் ஏற்பட்டிருக்கக் கூடும். அவளைப் புகழ்ந்தால் அவனுக்கும் மகிழ்ச்சி ஏற்படும்' என்று ஆய்ச்சியர்கள் கருதுகிறார்கள். எனவே மறுபடியும் நப்பின்னை யைப் புகழ்ந்து, அவள் மூலமாகவே தங்கள் விருப்பத்தைப் பெற முயல்கிறார்கள் என்பது இப் பாசுரத்தின் திரண்ட பொருள்.

21

நப்பின்னை உள்ளிட்ட அனைவரும் கண்ணனைப் புகழ்ந்து துயிலுணர்த்துவது:

ஏற்ற கலங்கள் எதிர்பொங்கி மீதுஅளிப்ப
மாற்றாதே பால்சொரியும் வள்ளற் பெரும் பசுக்கள்

Koviloor Digital Library

ஆற்றப் படைத்தான் மகனே! அறிவுறாய்;
ஊற்றம் உடையாய்! பெரியாய்! உலகினில்
தோற்றமாய் நின்ற சுடரே! துயில்எழாய்;
மாற்றார் உனக்கு வலிதொலைந்துஉன் வாசற்கண்
ஆற்றாது வந்துஉன் அடிபணியு மாபோலே
போற்றியாம் வந்தோம் புகழ்ந்து - ஏலோர் எம்பாவாய்.

[ஏற்ற கலங்கள் - கறந்த பாலை ஏற்றுக்கொண்ட பாத்திரங்களெல்லாம். எதிர் பொங்கி, மீது அளிப்ப - நிறைந்து எதிராகப் பொங்கி மேலே வழியும்படியாக. மாற்றாதே - இடைவிடாமல். வள்ளல் பெரும் பசுக்கள் - வண்மைக் குணம் உள்ள பெரிய பசுக்களை. ஆற்றப் படைத்தான் - மிகுதியாக உடைய. அறிவுறாய் - எழுந்திருப்பாய். ஊற்றம் உடையாய் - அடியாரைக் காப்பதில் சிரத்தை உடையவனே; வேதங்களால் பிரதி பாதிக்கப்படும் திண்மை வாய்ந்தவனே. பெரியாய் - அந்த வேதங்களாலும் காண முடியாத பெரியவனே. தோற்றமாய் - அவதரித்து. சுடரே - தேஜோ ரூபியே. மாற்றார் உனக்கு - பகைவர்கள் உனக்கு எதிரே. வலிதொலைந்து - வலிமை ஒழிந்து. ஆற்றாது வந்து - கதியற்று வந்து. உன் அடி - உன் திருவடிகளில். பணியுமாபோல - வந்து விழுவது போல. போற்றியாம் வந்தோம் புகழ்ந்து - நாங்களும் உன்னைப் புகழ்ந்து, பல்லாண்டு பாடிக்கொண்டு வந்து சேர்ந்தோம்.)

இப்போது நப்பின்னை எழுந்து வந்து, 'உங்கள் விருப் பத்தை நிறைவேற்றி வைக்கிறேன்; நாம் எல்லாரும் சேர்ந்து, கண்ணனை வேண்டிக்கொள்வோம்' என்று சொல்லவே, அனைவரும் கண்ணனைத் துயில் உணர்த்துகிறார்கள், இப் பாசுரத்திலே!

'ஏற்ற கலங்கள் எதிர்பொங்கி மீதளிப்ப': 'கலமிடாதோர் தாழ்வே; இட்ட கலங்கள் எல்லாம் நிறையும்; ஏலாத கலங்கள் நிறையாது ஒழிகிறது பாலின் குறையன்றே!' என்பது வியாக்கியானம். இப் பசுக்கள், 'கிருஷ்ண ஸ்பரிசத்தாலே வளருகையாலே' கண்ணனது அருளை நினைவூட்டுகின்றன. ஆசைப்படாதவர்களின் குற்றமே அல்லது கண்ணனின் அருளுக்குக் குறைவு இல்லையே.

Koviloor Digital Library

இந்தப் பெரும் பசுக்கள் நல்ல ஆசிரியர்களுக்கு அறிகுறி. ஏற்ற கலங்கள், உபதேசத்துக்குப் பாத்திரமான சீடர்களுக்கு அறிகுறி.

22

கண்ணன் மெள்ள மெள்ளக் கடாட்சிக்க வேணும் என்று பிரார்த்தித்தல்:

அங்கண்மா ஞாலத்து அரசர் அபிமான
பங்கமாய் வந்துநின் பள்ளிக்கட் டிற்கீழே
சங்கம் இருப்பார்போல் வந்து தலைப்பெய்தோம்
கிங்கிணிவாய்ச் செய்த தாமரைப் பூப்போலே
செங்கண் சிறுச்சிறிதே எம்மேல் விழியாவோ?
திங்களும் ஆதித்தி யனும்எழுந் தாற்போல
அங்கண் இரண்டும்கொண் டெங்கள்மேல் நோக்குதியேல்
எங்கள்மேல் சாபம் இழிந்து - ஏலோர் எம்பாவாய்.

[அங்கண்மா - அழகிய விசாலமான. ஞாலத்து அரசர் - பெரிய பூமியை ஆண்ட அரசர்கள். அபிமான பங்கமாய் வந்து - 'நமக்கு மேற்பட்டவர் இல்லை' என்னும் அகங்காரம் அடங்கி' வந்து. நின்பள்ளி - நீ பள்ளிகொண்டிருக்கிற. கட்டில் கீழே - கட்டிலுக்குப் பக்கத்தில். சங்கம் இருப்பார்போல் - திரள்திரளாக வந்திருப்பதுபோல். வந்து தலைப்பெய்தோம் - நாங்களும் உன்னை அணுகப் பெற்றோம். கிங்கிணி வாய்ச்செய்த - கிண்கிணியின் வாய்போல் செய்த. செங்கண் சிறுச்சிறிதே - காதலாகிக் கசிந்து சிவந்த கண்கள் சிறிது சிறிதாக. எம்மேல் விழியாவோ - எங்கள் மேல் விழிக்க லாகாதோ. திங்களும் ஆதித்தியனும் - சந்திர சூரியர்கள் ஒரு சேர. எழுந்தாற்போல் - உதயஞ் செய்தாற்போல். அங்கண் இரண்டும் கொண்டு - அழகிய இரண்டு கண்களாலும். எங்கள் மேல் சாபம் இழிந்து - எங்களிடமுள்ள பிரிவுத்துயராகிய பாவம் கழிந்து போகும்படி. எங்கள் மேல் நோக்குதி - எங்களைக் கடாட்சிப்பாயாக.]

அங்கண்மா ஞாலத்து அரசர் அபிமானம் : 'இப் பரப்பெல்லாம் எனது' என்று அகங்கரிப்பது, கடவுளுக்குரிய

Koviloor Digital Library

பூமியை, 'வாமனன் மண் இது' என்று அறிந்துகொள்ளாமல், 'நமது' என்று மயங்கி வீண் பெருமை பாராட்டுவது. இந்த 'அபிமான பங்கம் தூய, நல்லறிவு பெறுவதற்கு இன்றி அமையாத மனநிலையாகும்.'

கண்ணனுடைய வலிமைக்குத் தோற்று, அபிமான பங்கம் அடையலாம்; குணத்துக்குத் தோற்றும் அபிமான பங்கம் அடையலாம். வலிமை தோற்பித்தது அரசர்களை; குணம் தோற்பித்தது ஆய்ச்சியரை. இந்தக் குண அழகிற்கு அறிகுறிதான் இறைவனுடைய சர்வாங்க சௌந்தரியமும்.

கிங்கிணி : வாய்ப்பக்கம் கொஞ்சம் திறந்த ஒரு வகைச் சதங்கை.

23

'சிங்காதனத்தில் வீற்றிருந்து விண்ணப்பம் கேட்பாய்' என்று யசோதை இளஞ்சிங்கத்தை நோக்கி வேண்டுவது

மாரி மலைமுழைஞ்சில் மன்னிக் கிடந்துறங்கும்
சீரிய சிங்கம் அறிவுற்றுத் தீவிழித்து
வேரி மயிர்பொங்க எப்பாடும் போந்துதறி
மூரி நிமிர்ந்து முழங்கிப் புறப்பட்டுப்
போதருமா போலே நீ பூவைப்பூ வண்ணா! உன்
கோயில்நின் றிங்ஙனே போந்தருளிக், கோப்புடைய
சீரியசிங் காசனத் திருந்து யாம்வந்த
காரியம் ஆராய்ந்து அருள் - ஏலோர் எம்பாவாய்.

[*மாரிமலை முழைஞ்சில் - மழைக்காலத்திலே மலைக்குகையில். மன்னிக் கிடந்து உறங்கும் - பொருந்திப் படுத்து உறங்கும். சீரிய சிங்கம் அறிவுற்று - சிறப்பு வாய்ந்த சிங்கம் உறக்கம் தெளிந்து. தீ விழித்து - நெருப்புப் பொறி பறக்கக் கண்களை விழித்துக்கொண்டு. வேரி மயிர் பொங்க - ஒருவகை மணமுள்ள உளைமயிர் பொங்கும்படி. எப்பாடும் பேர்ந்து உதறி - எப்பக்கமும் புடை பெயர்ந்து, அதாவது அசைந்து கொடுத்தும், உடம்பை உதறிக்கொண்டும். முரி நிமிர்ந்து முழங்கி - சோம்பல்*

Koviloor Digital Library

முறித்துப் பெருமை தோன்ற நிமிர்ந்து, கர்ஜித்து. புறப்பட்டுப் போதருமா போலே - குகையிலிருந்து வெளிப்பட்டு வருவதுபோல. பூவைப் பூவண்ணா நீ - காயாம் பூவைப் போன்ற நீல நிறத்தையுடைய நீ. உன் கோயில்நின்று - உன்னுடைய இருப்பிடத்திலிருந்து. இங்ஙனே போந்தருளி - நாங்கள் இருக்கும் இவ்விடத்திற்கு எழுந்தருளி. கோப்புடைய சீரிய - அழகிய வேலைப்பாடுகள் அமைந்த, சிறந்த. யாம் வந்த காரியம் - நாங்கள் வந்த காரியத்தை. ஆராய்ந்தருள் - விசாரித்து அருள் செய்வாயாக.]

கோப்புடைய சீரிய சிங்காசனம் : 'ஏழுலகும் தொழிலாக வகுப்புண்டதாய், நினைப்பிட்ட காரியம் தலைக்காட்டும் படியான சீர்மையையுடைய ஸிம்ஹாஸனம்' என்பது வியாக்கியானம்.

சிங்கத்தின் கம்பீரமான தோற்றமும் புறப்பாடும் கவிச்சுவையுடன் வருணிக்கப்படுகின்றன, இப்பாட்டின் நாலரை அடிகளில். தங்கள் புருஷஸிம்மம், ராஜ சிம்மம்போல் நடையழகு காட்டி வரவேண்டும் என்றும், சீரிய சிங்காசனத்தில் வீற்றிருந்து, தங்கள் காரியத்தைப் பகிரங்கமாக விசாரித்தருள வேண்டும் என்றும் ஆசைப்படுகிறார்கள்.

24

நடையழகும் வடிவழகும் கண்டு, செயல் மறந்து வாழ்த்திப் பிறகு, வேண்டுகோளைத் தெரிவித்தல்:

(அறுவகை வாழ்த்து)

அன்றுஇவ் வுலகம் அளந்தாய்! அடிபோற்றி!
சென்றங்குத் தென்னிலங்கை செற்றாய்! திறல்போற்றி
பொன்றச் சகடம் உதைத்தாய்! புகழ்போற்றி!
கன்று குணிலா எறிந்தாய்! கழல்போற்றி!
குன்று குடையா எடுத்தாய்! குணம்போற்றி!
வென்று பகைகெடுக்கும் நின்கையில்
வேல்போற்றி!

Koviloor Digital Library

என்றுஎன்றுன் சேவகமே ஏத்திப் பறைகொள்வான்
இன்று யாம் வந்தோம் இரங்கு - ஏலோர் எம்பாவாய்.

[அடிபோற்றி - உன்திருவடிகள் பல்லாண்டு வாழ்க. செற்றாய் - அழித்தருளியவனே. திறல் போற்றி - உன் திறமைக்கு மங்களம். பொன்றச் சகடம் - சகடாசுரன் மடிய. கன்று குணிலா எறிந்தாய் - கன்றின் வடிவாக வந்த அசுரனை எறிதடியாக, விளங்கனி வடிவாயிருந்த அசுரன்மேல் எறிந்தருளியவனே. கழல் போற்றி - உன் திருவடிகளுக்கு மங்களம். குன்று குடையா - கோதவர்த்தன மலையைக் குடையாக. குணம் - குணத்திற்கு. வென்று பகை கெடுக்கும் - பகையை வென்று ஒழிக்கும். நின் கையில் வேல் - உன் கை வேலுக்கு. என்று என்று உன் சேவகமே ஏத்தி - என்று இவ்விதமாகப் பலவாறு உன் வீர சரிதத்தையே புகழ்ந்து.]

கண்ணன் இவர்கள் வேண்டுகோளுக்கு இணங்கத் தன் சீலம் தோன்ற, வடிவழகு விளங்கச் சில அடிகள் நடந்து வரும்போது, இவர்கள் மங்களாசாசனம் செய்கிறார்கள்; அதாவது மங்களம் உண்டாகும்படி வாழ்த்துகிறார்கள். கண்ணனுடைய அழகுக்கு இலாக்காகும்போது, வந்த காரியம்கூட அவ்வளவு முக்கியமாகத் தோன்றவில்லையாம்.

தென் இலங்கை செற்றாய் : அழகுக்கு இலக்கு ஆகாதாரை அம்புக்கு இலக்கு ஆக்கின திறலைப் போற்றுகிறார்கள். 'அன்புக்கு, அருளுக்கு இலக்கு ஆகுங்கள், இல்லாவிட்டால் அம்புக்கு (துன்பத்திற்கு) இலக்காவீர்!' என்று இறையழகு பறைசாற்றுவது போலத் தோன்றுகிறதாம்.

குன்று குடையாக எடுத்ததில் இறைவனது லோகோபகார குணம் புலனாகிறது. வென்று பகை கெடுக்கும் நின்கையில் வேல் போற்றி?: இதன் எதிரொலிதான்; 'சுற்றி நில்லாதே போ, பகையே! துள்ளி வருகுது வேல்' என்ற பாரதியார் வாக்கு.

Koviloor Digital Library

25

'பறைதா' என்பதை வியாஜமாகக் கொண்டு எங்களை அங்கீகரித்தருள வேண்டும் என்கிறார்கள்:

(பிரார்த்தனைப் பாட்டு)

ஒருத்தி மகனாய்ப் பிறந்து, ஓர்இரவில்
ஒருத்தி மகனாய் ஒளித்து வளரத்
தரிக்கிலான் ஆகித் தான் தீங்கு நினைந்த
கருத்தைப் பிழைப்பித்துக் கஞ்சன் வயிற்றில்
நெருப்பென்ன நின்ற நெடுமாலே! உன்னை
அருத்தித்து வந்தோம்; பறைதருதி யாகில்,
திருத்தக்க செல்வமும் சேவகமும் யாம்பாடி
வருத்தமும் தீர்ந்து மகிழ்ந்து - ஏலோர் எம்பாவாய்

[தரிக்கிலான் ஆகி - பொறாதவனாகிய. தான் தீங்கு நினைந்த - தானே (இக் குழந்தையைக் கொல்வோம் என்று) தீமை செய்ய நினைத்த. கருத்தைப் பிழைப்பித்து - எண்ணத்தைத் தவறச் செய்து. கஞ்சன் வயிற்றில் - கம்ஸனுடைய வயிற்றிலே. நெருப்பு என்ன நின்ற நெடுமாலே - நெருப்பு என்று சொல்லும்படியாக இருந்த பெருமானே. அருத்தித்து - உன்னையே யாசித்து. பறை தருதியாகில் - எங்கள் வேண்டுகோளைத் தந்தருள்வாயானால். திருத்தக்க செல்வமும் சேவகமும் யாம் பாடி - திருமாமகளாகிய பிராட்டிக்குத்தக்க உனது செல்வத்தையும் வீர பராக்கிரமத்தையும் நாங்கள் பாடி. வருத்தமும் தீர்ந்து, மகிழ்ந்து - உன்னைப் பிரிந்து படும் வருத்தமும், குளிரிலே வந்த வருத்தமும் நீங்கி மகிழ்ச்சியடைந்து வாழ்வோம்.]

ஒருத்தி : ஒப்பற்றவள் என்பது சொல் நயம். கண்ணனைப் பெற்ற பாக்கியவதி தேவகி; வளர்த்த பாக்கிய வதி யசோதை. ஒளித்து வளர: பிறந்த இடத்திலும் பிரகாசமாக இல்லை, கண்ணன் இருப்பு; வந்து சேர்ந்த இடத்திலும் அசுர சக்திகளுக்கு அஞ்சியது போல் ஒளித்துவளர நேர்ந்ததாம்.

கஞ்சன் வயிற்றில் நெருப்பென்ன : கம்ஸனால் ஹிம்சிக்கப்பட்ட ஏழை மக்களின் வயிற்றில் இருந்த

Koviloor Digital Library

நெருப்பையெல்லாம் வாரிக் கஞ்சன் வயிற்றில் எறிந்தது ஸ்ரீ கிருஷ்ண சக்தி என்பது குறிப்பு. 'ஆச்ரிதர் வயிற்றில் நெருப்பைக் கம்ஸன் வயிற்றில் கொளுத்தினவன்' என்பது வியாக்கியானம். 'கெடுவான் கேடு நினைப்பான்' என்ற தமிழ் முதுமொழியில் இந்தத் தத்துவம் புதைபொருளாகக் காணப்படுகிறது.

திருத்தக்க செல்வம் : லக்ஷ்மீபதியாக இருக்கும் செல்வம்; திருமகளும் விரும்பத்தக்க செல்வம்.

26

நோன்பிற்கு வேண்டிய உபகரணங்களையும் வேண்டிக் கொள்வது:

மாலே! மணிவண்ணா! மார்கழிநீர் ஆடுவான்
மேலையார் செய்வனகள் வேண்டுவன, கேட்டியேல்
ஞாலத்தை எல்லாம் நடுங்க முரல்வன
பால்அன்ன வண்ணத்துஉன் பாஞ்ச சன்னியமே
போல்வன சங்கங்கள் போய்ப்பாடு உடையனவே;
சாலப் பெரும்பறையே, பல்லாண் டிசைப்பாரே,
கோல விளக்கே, கொடியே, விதானமே;
ஆலின் இலையாய்! அருள் - ஏலோர் எம்பாவாய்

[*மாலே - அடியவரிடம் மிக்க மோக முள்ளவனே. மணி வண்ணா - நீலமணி போன்ற நீலமேனியனே. ஆலின் இலையாய் - ஆலிலை மேல் பள்ளிக்கொண்டிருப்பவனே. மார்கழி நீராடுவான் - மார்கழி நீராடுவதற்கு. மேலையார் - பெரியோர். செய்வனகள் - அனுஷ்டிக்கும் முறைகளில். வேண்டுவன கேட்டியேல் - எங்களுக்கு வேண்டியவற்றைக் கேட்பாயானால். ஞாலத்தை யெல்லாம் - உலகத்திலுள்ள சத்துருக்கள் எல்லாம். முரல்வன - ஒலிக்கின்றன. பால் அன்ன வண்ணத்து - பால் போன்ற நிறமுடைய தான. உன் பாஞ்ச ஜன்யமே - உனது ஸ்ரீ பாஞ்ச ஜன்யம் என்ற சங்கை. போல்வன சங்கங்கள் - ஒத்தவையுமான சங்கங்கள். சாலப் பெரும்பறை - மிகவும் பெரியவையுமான பறைகளையும். இசைப்பார் - பாடுகிறவர்களையும். கோல விளக்கு, கொடி, விதானம் - அழகிய மங்கள தீபங்களையும் கொடிகளையும் மேற் கட்டிகளையும். அருள் - அருள் செய்து கொடுப்பாய்.*]

Koviloor Digital Library

'உன்னை அருத்தித்து வந்தோம்' என்று சொல்லி விட்டுப் 'பறைதருதியாகில்' என்றும் சொன்னார்கள் அல்லவா? அதற்குக் கண்ணன், 'என்னையே என்னிடம் யாசித்து வருகிறவர், அதாவது 'என்னை விரும்புவோர் வேறொன்றையும் விரும்புவரோ?' என்று ஒரு கேள்வி கேட்டதாக வைத்துக்கொண்டு, அதற்கு விடையாக அமைகிறது இப்பாசுரம் என்று ஊகிக்கலாம். கண்ணனைக் கண்ணாரக்கண்டு, அவன் திருப்பெயர்களை வாயாரச் சொல்வதற்கு ஏதுவாக இருக்கும் நோன்பிலேதான், தாங்கள் இறங்கியிருப்பதாகவும், அந்த நோன்பிற்கு உரிய உபகரணங்களைத் தாங்கள் விரும்புவதும், கண்ணன் மேலே உள்ள விருப்பத்தினாலேதான் என்றும் விடை கூறுகிறார்கள்.

27

'நோன்பு நோற்றபின் நாங்கள் சன்மானம் பெற்று மகிழும்படி அருள்புரிய வேண்டும்' என்று பிரார்த்திப்பது:

கூடாரை வெல்லும்சீர்க் கோவிந்தா! உன்தன்னைப்
பாடிப் பறைகொண்டு யாம்பெறு சம்மானம்:
நாடு புகழும் பரிசினால் நன்றாகச்
சூடகமே, தோள்வளையே, தோடே, செவிப்பூவே,
பாடகமே; என்றனைய பல்கலனும் யாம்அணிவோம்;
ஆடை உடுப்போம்; அதன்பின்னே பாற்சோறு
மூடநெய் பெய்து முழங்கை வழிவாரக்
கூடியிருந்து குளிர்ந்து - ஏலோர் எம்பாவாய்.

[கூடாரை வெல்லும் சீர் - தன்னை அடி பணியாதவர்களை வெல்லுகின்ற குணங்களையுடைய. குளிர்ந்து - உளம் குளிர்ந்து. நாடு புகழும் பரிசினால் - நாட்டார் கொண்டாடும்படியாக. சூடகமே தோள் வளையே, தோடே, செவிப்பூவே, பாடகமே என்று அனைய - சூடகம், தோள்வளை, தோடு, கர்ணப்பூ, பாடகம் என்ற பாதகடகம் என்று சொல்லப்படும் இந்த நகைகள் போன்ற. பல்கலனும்யாம் அணிவோம் - பலவேறு ஆபரணங்களையும் (நீயும் நப்பின்னைப் பிராட்டியும் அணிவிக்க) நாங்கள் அணிந்துகொள்வோம்.

Koviloor Digital Library

பால்சோறு மூட நெய்பெய்து - க்ஷீரான்னம் என்ற பாற்சோறு மறையும்படியாக நெய் பரிமாறி. முழங்கை வழிவார - முழங்கை வழியே பெருக உண்ணுவது. உன் தன்னைப் பாடிப் பறை கொண்டு - உன்னைப் பாடுகையே பயனாகப் புகழ்ந்து பாடி; விரதத்திற்கு வேண்டிய பறைபெற்று, விரதத்தை முடித்துக் கொண்டு. யாம்பெறு சம்மானம் - நாங்கள் பெற விரும்பிய சம்மானம்.)

விரத தினங்களிலே நெய்யுண்ணோம், பாலுண்ணோம் என்று உண்ணா நியமங்கள் அல்லது உணவு நியமங்களை மேற்கொண்டிருந்தார்கள். அதற்குச் சம்மானம், கண்ணனுடன் நெய் பெய்த பால்சோறு உண்பது. 'மையிட்டு எழுதோம்; மலரிட்டு நாம் முடியோம்' என்று அலங்காரம் துறந்தவர்கள், தங்களை ஆடை ஆபரணங்களால் அழகு செய்துகொள்ள விரும்புகிறார்கள்.

கண்ணனும் நப்பின்னைப் பிராட்டியும் உண்பிக்க உண்ணவும் அவர்கள் அழகு செய்யத் தாங்கள் அழகு பெறவும் விரும்புகிறார்கள். விடியும் முன்பே எழுந்து, பனியில் நனைந்து, வீதியில் அலைந்து வந்திருப்பவர்கள், அழகு செய்துகொண்டு, வயிறார விருந்துண்டு, கூடியிருந்து அகம் குளிர்வோம் என்கிறார்கள்.

28

'உபாயம் ஒன்றும் அறியாத பிள்ளைகள்; தயவு செய்வாய்' என்று செய்துகொள்ளும் விண்ணப்பம்:

கறவைகள் பின்சென்று கானம் சேர்ந்துண்போம்,
அறிவுஒன்றும் இல்லாத ஆய்க்குலத்து உன்தன்னைப்
பிறவி பெறுந்தனைப் புண்ணியம் யாம்உடையோம்;
குறைவொன்றும் இல்லாத கோவிந்தா! உன்தன்னோடு
உறவேல் நமக்கிங்கு ஒழிக்க ஒழியாது;
அறியாத பிள்ளைகளோம் அன்பினால் உன்தன்னைச்
சிறுபேர் அழைத்தனவும் சீறி அருளாதே
இறைவா! நீ தாராய் பறை - ஏலோர் எம்பாவாய்.

Koviloor Digital Library

[கானம் சேர்ந்து உண்போம் - காடு சேர்ந்து சரீர போஷணம் செய்து திரிவோம். அறிவு ஒன்றும் இல்லாத - சிறிதளவும் அறிவில்லாத. உன் தன்னைப் பிறவி பெறுந்தனை - உன்னைப் பிறவியாகப் பெறுவதற்குத் தக்க. புண்ணியம் யாம் உடையோம் - புண்ணியம் உடையவர்களாக இருக்கிறோம். உறவேல் - எங்களுக்கு உள்ள உறவோ என்றால். இங்கு ஒழிக்க ஒழியாது - இப்போது உன்னாலும் எங்களாலும் ஒழிக்கவும் ஒழியாது. அறியாத பிள்ளைகளோம் - உலக மரியாதை ஒன்றும் அறியாத சிறு பெண்களான. அன்பினால் உன் தன்னை - நாங்கள் அன்பினால் உன்னை. சிறுபேர் அழைத்தனவும் - சிறிய பெயராலே அழைத்தது குறித்து. சீறி அருளாதே - நீ அருள்கொண்டு கோபியாதிரு. இறைவா - தலைவனே. தாராய் பறை - எங்களுக்குப் பறை தருவாயாக.]

'இறைவனே! நீயே உபாயம்; எங்களிடம் வேறு உபாயம் இல்லை; எங்கள் காரியத்தைத் தயவு செய்து நிறைவேற்றி வைக்க வேணும்' என்பது ஆய்ச்சியர் விண்ணப்பம். வேறு உபாயங்களை நம்புவது, கடவுள் கருணைக்கு இடையூறுதான் என்பது குறிப்பு.

'கறவைகளின் பின்னே குருகுலவாசம் செய்தோம்; வேறு வித்தைகளையோ சித்திகளையோ அறியோம்; ஆசாரங்களையும் அறியோம்' என்கிறார்கள். 'உறவேல் நமக்கு இங்கு ஒழிக்க ஒழியாது' என்ற உண்மையை இவர்கள் ஓதாது உணர்ந்து கொண்டிருக்கிறார்கள். இறைவனோடு தமக்குள்ள உறவை எந்த நாஸ்திகனும் ஒழித்துக் கொள்ள முடியாது; கடவுளாலும் ஒழிக்க முடியாது என்ற ஞானம் பிறந்து விட்டால், வேறு என்ன வேண்டும்?

29

நோன்பை வியாஜமாகக் கொண்டு வந்தவர்கள், கண்ணன் திருவடிகளில் நித்திய கைங்கரியம் செய்வதையே தங்கள் தனிப் பெரு நோக்கமாக வெளியிடுகிறார்கள்:

Koviloor Digital Library

சிற்றஞ் சிறுகாலை வந்துன்னைச் சேவித்து, உன்
பொற்றா மரைஅடியே போற்றும் பொருள் கேளாய்;
பெற்றம்மேய்த் துண்ணும் குலத்தில் பிறந்துநீ
குற்றேவல் எங்களைக் கொள்ளாமல் போகாது;
இற்றைப் பறைகொள்வான் அன்றுகாண் கோவிந்தா!
எற்றைக்கும் ஏழ்ஏழ் பிறவிக்கும் உன்தன்னோடு
உற்றோமே ஆவோம்; உனக்கே நாம் ஆட்செய்வோம்;
மற்றைநம் காமங்கள் மாற்று – ஏலோர் எம்பாவாய்.

[*சிற்றஞ் சிறுகாலை - அருணோதய காலத்தில், இவ்விடத்திலே வந்து. பொருள் - பயன். பெற்றம் மேய்த்து - பசுக்களை மேய்த்து. குற்றவேல் எங்களைக் கொள்ளாமல் போகாது - எங்களிடம் அந்தரங்கக் கைங்கரியம் பெற்றுக் கொள்ளாமல் விட்டுவிடுவது தகாது. இற்றைப் பறை கொள்வான் - இன்று கொடுக்கப்படும் பறைகொள்வதற்காக. அன்று காண் - அன்று; நாங்கள் இங்கு வந்தது. எற்றைக்கும் - எப்போதும். ஏழ்ஏழ் பிறவிக்கும் - நீ எடுக்கும் எந்தப் பிறவி அல்லது அவதாரத்திலும். உற்றோமே ஆவோம் - உறவு உடையவர்களாவோம். நாம் ஆள் செய்வோம் - நாங்கள் கைங்கரியம் செய்வோம். மற்றை நம் காமங்கள் மாற்று - இவற்றோடு முரண்படும் எங்கள் விருப்பங்களை மாற்றியருள்வாய்.*]

இது திருப்பாவையின் தனிப்பெரும் கொள்கையை வெளியிடும் பாசுரம். 'பறை, பறை' என்று கோஷித்து வந்த ஆய்ச்சியர்கள் அப்பறையின் உட்பொருள், இறைவன் உகந்த குற்றேவல் புரிவதுதான் என்கிறார்கள். அதற்கும் அவன் அருள் புரியவேண்டும் என்கிறார்கள்.

சிற்றஞ் சிறுகாலை : சின்னஞ்சிறு பிள்ளை, வெட்டவெளிச்சம் என்பவை போன்ற சொற்றொடர். பனியையும் குளிரையும் கருதாது வந்திருக்கும் தங்கள் ஆற்றாமையை வெளியிடுகிறார்கள். 'சிற்றஞ்சிறு காலே' என்றும் ஓதுவது உண்டு.

Koviloor Digital Library

'உற்றோமே ஆவோம்': எல்லா உறவும் கண்ணனே என்பது குறிப்பு. அதிமுக்கியமான உறவு அவருக்கே ஆட்செய்யும் கைங்கர்ய உறவுதான்.

30

திருப்பாவையின் பல ச்ருதிப் பாட்டு

(திருப்பாவை ஓதுபவர் திருவருள்பெற்று இன்புறுவர்)

வங்கக் கடல்கடைந்த மாதவனைக் கேசவனைத்
திங்கள் திருமுகத்துச் சேயிழையார் சென்றிறைஞ்சி
அங்கப் பறைகொண்ட ஆற்றை அணிபுதுவைப்
பைங்கமலத் தண்தெரியல் பட்டர்பிரான் கோதை சொன்ன
சங்கத் தமிழ்மாலை முப்பதும் தப்பாமே
இங்கிப் பரிசுரைப்பார் ஈரிரண்டு மால்வரைத்தோள்
செங்கண் திருமுகத்துச் செல்வத் திருமாலால்
எங்கும் திருவருள்பெற்று இன்புறுவர் - எம்பாவாய்.

[வங்கக் கடல் கடைந்த - கப்பல்களையுடைய திருப்பாற் கடலைக் கடைந்து அமிர்தம் வழங்கி யருளிய. மாதவனைக் கேசவனை - ஸ்ரீய:பதியான கண்ணபிரானை. திங்கள் திருமுகத்து - சந்திரபிம்பம் போன்ற அழகிய முகமும். சேயிழையார் சென்று இறைஞ்சி - அழகிய ஆபரணங்களும் உடைய கோபிமார் போய் வணங்கி. அங்கு அப்பறை கொண்ட ஆற்றை - அத்திருவாய்ப் பாடியில் தங்கள் புருஷார்த்தத்தைப் பெற்றுக்கொண்ட அந்த வரலாற்றை. அணிபுதுவை - அழகிய ஸ்ரீவில்லிப்புத்தூரில் அவதரித்த. பைங்கமலத் தண் தெரியல் - பசுமை பொருந்திய குளிர்ந்த தாமரை மலர்களால் ஆகிய மாலை. சங்கத் தமிழ் மாலை - திரள் திரளாக அநுபவிக்க வேண்டிய தமிழ் மாலையான இம்முப்பது பாசுரங்களையும். ஈரிரண்டு மால்வரைத்தோள் - நாலு பெரிய மலைகள் போன்ற தோள்களையும். செங்கண் திருமுகத்து - சிவந்த கண்களையும் அழகிய முக மண்டலத்தையும். செல்வத்

Koviloor Digital Library

திருமாலால் - ஐசுவரியத்தையும் உடைய ஸ்ரீய:பதியால். இன்புறுவர் - ஆனந்தம் அடைவர்.]

இப்பிரபந்தம் இயற்றியது 'பட்டர்பிரான் கோதை' (பெரியாழ்வாரின் திருமகளான ஆண்டாள்) என்று பெயரைத் தெரிவிப்பதால், இந்த இறுதிப் பாசுரத்தைத் 'திருநாமப் பாட்டு' என்றும் கூறுவதுண்டு.

திருப்பாவை ஓதுகிறவர்கள் திருமாலின் திருவருளுக்கு எங்கும் எப்போதும் இலக்காகி இன்புறுவர் என்பது இப்பாசுரத்தின் கருத்து. 'கன்று இழந்த தலைநாகு, தோற்கன்றுக்கு இரங்கு மாபோல, இப்பாசுரம் கொண்டு புக, நமக்கும் பலிக்கும்' என்பது பட்டர் வாக்கு.

பாதகங்கள் தீர்க்கும் பரமன் அடிகாட்டும்
வேதம் அனைத்துக்கும் வித்தாகும் - கோதைதமிழ்
ஐயைந்தும் ஐந்தும் அறியாத மானிடரை
வையம் சுமப்பதும் வம்பு.
திருவாடிப் பூரத்துச் செகத்துதித்தாள் வாழியே
திருப்பாவை முப்பதும் செப்பினாள் வாழியே
பெரியாழ்வார் பெற்றெடுத்த பெண்பிள்ளை வாழியே
பெரும்புதூர் மாமுனிக்குப் பின்னானாள் வாழியே
ஒருநூற்று நாற்பத்தொரு மூன்றுரைத்தாள் வாழியே
உயரரங்கற் கேகண்ணி உகந்தளித்தாள் வாழியே
மருவாரும் திருமல்லி வளநாடி வாழியே
வண்புதுவை நகர்க்கோதை மலர்ப்பதங்கள் வாழியே.

நிறைந்தது

KOVILOOR ANDAVAR
A. No. 26738
LIBRARY, KOVILOOR

Koviloor Digital Library

Koviloor Digital Library